தமிழ்ப் பழமொழிகள்



இரண்டாம் தொகுதி

ஜெனரல்

தமிழ்ப் பழமொழிகள்

தொகுதி 2

தொகுத்தவர்
கி. வா. ஜகந்நாதன்

ஜெனரல் பப்ளிஷர்ஸ்

ஜெனரல் பப்ளிஷர்ஸ்

முதற் பதிப்பு – 2001
இரண்டாம் பதிப்பு – 2006

விலை ரூ. 100.00

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, ராமகிருஷ்ண மடம் சாலை,
தபால் பெட்டி நெ. 617,
மயிலாப்பூர், சென்னை–600 004.

தொலைபேசி : 494 1314

Jai Ganesh Offset Printers,
Chennai - 600 004.

முகவுரை

இந்தப் புத்தகத்தில் ஏறத்தாழ 25,000 பழமொழிகள் உள்ளன. இவை கடந்த நாற்பது ஆண்டுகளாக நான் சேகரித்தவை. சொற்பொழிவு செய்யும் பொருட்டு வெளியூர்களுக்குச் சென்ற காலங்களில் அங்கே உள்ள ஆடவர்களிடமும் பெண்மணிகளிடமும் கேட்டுப் பழமொழிகளை எழுதி வந்தேன். பெரும்பாலும் முதிய பெண்மணிகளே பல பழமொழிகளைச் சொன்னார்கள். பழமொழியை முதுமொழி என்றும் வசனம் என்றும் கூறுவர். பழமொழிகள் அடங்கிய பாடல்களைப் பெற்ற நூல்கள் பழமொழி நானூறு, கோவிந்தசதகம், தண்டலையார் சதகம், இரத்தின சபாபதி மாலை, அருணாசல கவி இராம நாடகக் கீர்த்தனை முதலியவை.

இந்தப் பழமொழிகளில் பல்வேறு சாதியினரைக் குறை கூறி உள்ளவை பல உண்டு. அவற்றைக் கண்டு அந்தச் சாதியைச் சேர்ந்த அன்பர்கள் சினம் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். இழித்துக் கூறுவதில் எந்தச் சாதியினரையும் விட்டு வைக்கவில்லை. பார்ப்பனர்களை இழித்துக் கூறும் பழமொழிகள் பல. அத்தகையவற்றை அப்படி அப்படியே காட்டியுள்ளேன். தமிழ் மக்களுடைய எண்ணம் எவ்வாறு படர்ந்தது என்பதை இவை காட்டுகின்றன.

நாடோடி இலக்கியத்தைச் சார்ந்தவை பழமொழிகள். அறிவு தெரிந்த சிறுவர் முதல் முதுமை உடையவர்கள் வரை யாவரும் தாம் பேசும் பொழுது பழமொழிகளை ஆளுவார்கள். அவரவர்களுடைய அனுபவத்துக்கு ஏற்ற வகையில் அவை இருக்கும். உபநிடதம், இலக்கிய இலக்கணங்கள் ஆகியவற்றைப் பற்றிய பழமொழிகளும் உண்டு. விலங்கினங்கள், பறவைகள், நீர்வாழ் பிராணிகள், ஊர்வன, புழுபூச்சிகள் முதலியவற்றைப் பற்றிய பழமொழிகள் பல. இவற்றை ஆராய்ந்து கட்டுரைகளை எழுதலாம். பல பெரியோர்களுடைய வரலாறுகள் சம்பந்தமான பழமொழிகளும்

உண்டு. கம்பன், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களைப் பற்றிய பழமொழிகள் சில உள்ளன.

சில சில ஊர்களைப் பற்றிய பழமொழிகளும் பல உண்டு. அந்த ஊர்களில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களைப் பற்றிய பழமொழிகளும் உள்ளன.

இவ்வாறு பல பல துறைகளில் அமைந்த இந்தப் பழமொழிகள் அறிவைத் தூண்டுகின்றவை.

தமிழ் மக்கள் இந்தப் புத்தகத்தில் உள்ள பழமொழிகளைப் படித்து இன்புறுவார்கள் என்று நம்புகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்

'காந்தமலை'
சென்னை—28
4—5—88

தொகுதி 2

ஒ

ஒக்கச் சிரித்தார்க்கு வெட்கம் இல்லை.
(சிரித்தால்.)
ஒக்கப் பிறந்த தங்கை ஓலமிட்டு அழுதாளாம்; ஒப்பாரி தங்கைக்குச் சிற்றாடையாம். 5840

ஒக்கலிலே பிள்ளையை வைத்து ஊரெல்லாம் தேடினாளாம்.
(தேடினாற் போல.)
ஒச்சியம் இல்லாத ஊரிலே பெண் வாங்கின கதை.
ஒட்ட உலர்ந்த ஊமத்தங்காய் போல.
ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்.
(கொட்டைத் தாழ்ப்பாள்.)
ஒட்டகத்தின் முதுகுக்குச் கோணல் ஒன்றா இரண்டா? 5845

ஒட்டகத்துக்கு உடம்பெல்லாம் கோணல்.
ஒட்டகத்துக்குக் கல்யாணம், கழுதை கச்சேரி.
ஒட்டகத்துக்குத் தொட்ட இடம் எல்லாம் கோணல்.
ஒட்டகமே, ஒட்டகமே, உனக்கு எவ்விடத்தில் செவ்வை.
ஒட்டத்து அப்பம் தின்பாரைப் போலே. 5850

ஒட்டப் பார்த்து மட்ட நறுக்கு.
ஒட்டன் கண்டானா லட்டுருண்டை? போயன் கண்டானா பொரியுருண்டை?
ஒட்டன் குச்சி வைத்துப் பெருக்குகிற விளக்குமாறும் அல்ல; வீட்டைப் பெருக்குகிற விளக்குமாறும் அல்ல.
ஒட்டன் சுவருக்குச் சுண்ணாம்பு அடித்தாற் போல.
ஒட்டன் வீட்டு நாய் கட்டில் ஏறித் தூங்கிற்றாம். 5855

ஒட்டன் வீட்டு நாய் கூழுக்குக் காத்த மாதிரி.
ஒட்டன் வீட்டு நாய் திட்டையில் இருந்தாற் போல.

ஒட்டனுக்குத் தெரியுமா லட்டுருண்டை?

ஒட்டாது பாவம்; கிட்டாது சேவை.

ஒட்டி உலர்ந்து ஊமத்தங்காயாய்ப் போய்விட்டான். 5860
(உலர்ந்த.)

ஒட்டிய உடம்பும் ஒடுக்கிட்ட வாழ்நாளும்.

ஒட்டிய சீதேவி நெட்டியோடே போம்.
(சீதாதேவி.)

ஒட்டின பேரைத் தொட்டிலும் கொள்ளும்; ஒட்டாத பேரைக் கட்டிலும் கொள்ளாது.
(ஒட்டினால் கொள்ளும். ஒட்டினாரை.)

ஒட்டினாலும் உழக்குப் பீச்சுகிறதா?
(உழக்குப் பீர் செல்கிறதா?)

ஒட்டுக் கதை கேட்பவர் செவிட்டுப் பாம்பாய்ப் பிறப்பார். 5865
(யாழ்ப்பாண வழக்கு.)

ஒட்டுத் திண்ணை நித்திரைக்குக் கேடு.

ஒட்டுத் திண்ணையில் பட்டுப் பாய் போட்டவன்.

ஒட்டு மூத்திரத்துக்கு ரக்ஷாபந்தனம் செய்தாளாம்; பட்டறைப் பீயைப் பாயோடு பிடித்தாளாம்.

ஒட்டைக்குக் கரும்பு மெத்தக் கசப்பு.

ஒட்டைக்குச் சுளுவு பட்டாற் போல. 5870
(அளவு மீட்டர் போல்.)

ஒட்டைக்குப் பளுவு ஏற்றுகிறது போல.

ஒடக்கான் முட்டு வைக்காத காடு.

ஒடிந்த கோல் ஆனாலும் ஊன்று கோல் ஆகும்.
(வேண்டும்.)

ஒடுக்கம் சிதம்பரம்.

ஒடுக்கி ஒடுக்கிச் சொன்னாலும் அடங்குமா? 5875

ஒண்ட வந்த எலி உரம் பெற்றது; அண்டியிருந்த பூனை ஆலாய்ப் பறக்கிறது.

ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்தியதாம்.
(ஊர்ப் பிடாரி ஆனதாம்.)

ஒண்டாதே, ஒண்டாதே, ஒரிக்கால் மண்டபமே; அண்டாதே, அண்டாதே ஆயிரங்கால் மண்டபமே என்றாற் போல.

ஒண்டிக்காரன் பிழைப்பும் வண்டிக்காரன் பிழைப்பும் ஒன்று.

ஒண்ணாங் குறையாம் வண்ணான் கழுதைக்கு. 5880

ஒண்ணாந் தேதி சீக்கிருப்பவனும் ஒற்றைக் கடையில் சாமான் வாங்குபவனும் உருப்பட மாட்டான்.
(இலங்கை வழக்கு.)

ஒண்ணுக்குள்ளே ஒண்ணு, எள்ளுக்குள்ளே எண்ணெய்.

ஒண்ணுக்குள்ளே ஒண்ணு, கண்ணுக்குள்ளே மண்ணாகியது.

ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு.

ஒண்ணைப் பெற்றாலும் கண்ணைப் பெறு. 5885

ஒண்ணோ, கண்ணோ?

ஒத்த இடத்தில் நித்திரை கொள்.

ஒத்த கணவனும் ஒரு நெல்லும் உண்டானால் சித்திரம் போலக் குடிவாழ்க்கை செய்யலாம்.

ஒத்தான் ஓரகத்தாள் ஒரு முற்றம்; நாத்தனார் நடு முற்றம்.

ஒத்தி வெள்ளம் வருமுன்னே அணை கோலிக்கொள்ள வேண்டும். 5890

ஒத்துக்கு ஏற்ற மத்தளம்.

ஒத்தைக்கு ஒரு பிள்ளை என்றால் புத்தி கூடக் கட்டையாகப் போகுமா?
(ஒத்திக்கு.)

ஒதி பெருத்தால் உரல் ஆகுமா?

ஒதி பெருத்தாலும் உத்தரத்துக்கு ஆகாது.

ஒதி பெருத்து என்ன? உபகாரம் இல்லாதவன் வாழ்ந்து என்ன? 5895
(உதவாதவன்.)

ஒதி பெருத்துத் தூண் ஆமா? ஒட்டாங் கிளிஞ்சில் காசாமோ?

ஒதிய மரமும் ஒரு சமயத்துக்கு உதவும்.

ஒப்புக்குச் சப்பாணி, ஊருக்கு மாங்கொட்டை.

ஒப்புக்கு மாங்கொட்டை, ஊருக்குச் சப்பாணி.

ஒய்யாரக் கொண்டையாம், தாழம் பூவாம், உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும். 5900

ஒயிலாய்ப் பேசுகிறாள்; ஆனால் கனம் அறிந்த கப்பறையும் அல்ல; கண்டறிந்த நாயும் அல்ல.

ஒரு அச்சிலே உருக்கி வார்த்தாற் போல.

ஒரு அடி அடித்தாலும் பட்டுக் கொள்ளலாம்; ஒரு சொல் மட்டும் கேட்க முடியாது.

ஒரு அப்பம் தின்னாலும் நெய்யப்பம் தின்ன வேணும்.

ஒரு இழவு என்றாள் உள்ளபடி ஆகும். 5905
(ஆகும்.)

ஒரு உறையிலே இரண்டு கத்தியா?

ஒரு ஊர் நட்பு, ஒரு ஊருக்குப் பழிப்பு.

ஒரு ஊரில் இரண்டு பைத்தியக்காரர்களா?

ஒரு ஊருக்கு ஒரு வழியா?

ஒரு ஊருக்கு வழி கேட்க ஒன்பது ஊருக்கு வழி காட்டுகிறான். 5910

ஒரு கட்டு வைக்கோலைத் தண்ணீரில் போட்டு ஒன்பது ஆள் கட்டி இழுத்தாற் போல.
(எட்டு ஆள்.)

ஒரு கண்ணிலே புகுந்து மறு கண்ணிலே புறப்படுகிறான்.
(வருகிறவன்.)

ஒரு கண்ணுக்கு வெண்ணெய்; ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பு.
(ஏன்?)

ஒரு கண் மூடி ஒரு கண் விழிக்கிறவன்.
(விழித்தல்.)

ஒரு கம்பத்தில் இரண்டு ஆனையைக் கட்டினாற் போல். 5915
(ஆட்களை.)

ஒரு கரண்டி எண்ணெய் கொண்டு பலகாரம் சுட்டுப் பந்தி விசாரித்து வந்த பெண்டுகள் வாரி முடித்துப் பெண்டுகளால் பிடிமானம் இல்லாமல் புறக்கடை வழியாய்ப் போய் விட்டது.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்.

ஒரு கல விதையடி உவட்டை மாற்றிட, ஆறு பல வேப்பம்

ஒரு கவளம் சோற்றுக்கு நாய் பல்லை இளிப்பது போல.
ஒரு கழிச்சலில் உட்கார்ந்து மறு கழிச்சலில் மல்லாந்து போக. 5920

ஒரு காசு அகப்படுகிறது குதிரைக் கொம்பு.
ஒரு காசு என்ற இடத்தில் அழுகிறான்.
ஒரு காசுக்கு மூக்கு அரிந்தால் ஒன்பது காசு கொடுத்தால் ஒட்டுமா?
ஒரு காசுக்கு மோர் வாங்கி ஊரெல்லாம் தானம் பண்ணினாளாம்.
ஒரு காசு கொடாதவன் ஒரு வராகன் கொடுப்பானா? 5925

ஒரு காசு பேணின் இரு காசு தேறும்.
ஒரு காதில் வாங்கி ஒரு காதில் விடுவது.
ஒரு கால் செய்தவன் இரு கால் செய்வான்.
ஒரு கால் பார்த்தால் புஞ்சை; இரு கால் பார்த்தால் நஞ்சை.
ஒரு காலிலே நிற்கிறான். 5930

ஒரு காலை செய்த தச்சன் மறு காலும் செய்வான்.
ஒரு குட்டியும் பெட்டையும் போல.
ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை.
ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போதும்.
ஒரு குண்டிலே கோட்டை பிடிக்கலாமா? 5935
(முடியுமா?)

ஒரு குருவி இரை எடுக்க ஒன்பது குருவி வாய் திறக்க.
(திறக்குமாம்.)
ஒரு குலைத் தேங்காய்.
ஒரு குளப்படி நீரைக் கண்டு திரைகடல் ஏங்குமா?
ஒரு கூடை முடைந்தவன் ஒன்பது கூடை முடைவான்.
(கூடு, கூண்டு.)
ஒரு கூடைக் கல்லும் தெய்வமானால் கும்பிடுகிறது எந்தக் கல்லை? 5940

ஒரு கூடைச் செங்கல்லும் பிடாரி.
ஒரு கூன் சர்க்கரையா ஒத்து வாழ்.
ஒரு கை சத்தம் எழுப்புமா?
ஒரு கை தட்டினால் ஓசை கேட்குமா?

ஒரு கை முழம் போடுமா? 5945

ஒரு கோபம் வந்து கிணற்றில் விழுந்தால் ஆயிரம் சந்தோஷம் வந்தாலும் எழும்பலாமா?

ஒரு கோமுட்டியைக் கழுவில் போட்டதற்கு ஒன்பது கல எள் ஆச்சுதே; ஊர்க் கோமுட்டிகளை எல்லாம் கழுவில் போடு என்றானாம்.

ஒரு சந்திப் பானையை நாய் அறியுமா?

ஒரு சாதிக்கு ஏச்சு; ஒரு சாதிக்குப் பேச்சு.

ஒரு சாண் காட்டிலே ஒருமுழத் தடி வெட்டலாமா? 5950

ஒரு சுருட்டைப் பத்து நாள் பிடிப்பான்.

ஒரு சுற்றுச் சுற்றி வயிற்றைத் தடவிப் பார்த்துக் கொண்டது போல.

ஒரு கூடைச் செங்கலில் அத்தனையும் வேகாத செங்கல்.

ஒரு செடியிலே விளைந்தாற் போல்.

ஒரு செவியில் வார்த்தாற் போல. 5955

ஒருத்தர் போன வழி ஒருத்தர் போகிறது இல்லை.
(ஒருத்தர் போக.)

ஒருத்தன் ஜோலிக்குப் போகவும் மாட்டேன்; என் காலை மிதித்தால் விடவும் மாட்டேன்.

ஒருத்திக்கு ஒரு மகன்.
(திருவிளையாடற் புராணம்.)

ஒரு தட்டில் ஓர் ஆனை; மறுதட்டில் ஆயிரம் பூனை.

ஒரு தம்படி மிச்சப்படுத்தியது ஒரு தம்படி சம்பாதித்தது ஆகுமா? 5960

; தரம் விழுந்தால் தெரியாதா?

; தலைக்கு இரண்டு ஆக்கினையா?

ற் தலை வழக்கு நூலிலும் செவ்வை.
(செம்மை.)

ஒரு தாய் அற்ற பிள்ளைக்கு ஊர் எல்லாம் தாய்.
(அற்றவருக்கு.)

ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை. 5965

ஒரு துட்டு ஒரு ருபாயாய் இருக்கிறது.

ஒரு துரும்பு பழுதை ஆகுமா?
(துரும்பும்.)

ஒரு துஷ்டனுக்கும் ஒரு துஷ்டனுக்கும் ஒரே வழி; ஒரு துஷ்டனுக்கும் ஒரு நல்லவனுக்கும் இரண்டு வழி; இரண்டு நல்லவர்களுக்கு மூன்று வழி.

ஒரு தையல் ஒன்பது தையலைத் தவிர்க்கும்.

ஒரு தொழிலும் இல்லாதவர் நாடகக்காரர் ஆனார். 5970

ஒரு தொழுமாடு முட்டிக் கொள்ளவும் செய்யும்; நக்கிக் கொள்ளவும் செய்யும்.

ஒரு நன்றி செய்தாரை உள்ளளவும் நினை.

ஒரு நாக்கா, இரண்டு நாக்கா?

ஒரு நாய் ஊளையிட ஊர் எல்லாம் நாய் ஊளை.

ஒரு நாய்க்குத் தலை வலித்தால் ஒன்பது நாய்க்குத் தலை வலிக்கும். 5975

ஒரு நாய் குரைத்தால் எல்லா நாயும் குரைக்கும்; ஒரு நாய்க்கு வலித்தால் எல்லா நாய்க்கும் வலிக்கும்.

ஒரு நாய் குரைத்தால் பத்து நாய் பதில் கொடுக்கும்.

ஒரு நாய் வீட்டில் இருந்தால் பத்துப் பேர் காவல் காத்தது போல் ஆகும்.

ஒரு நாள் ஆகிலும் திருநாள்.

ஒரு நாள் ஒரு யுகமாக இருக்கிறது. 5980

ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைத்தானாம்.
(தலையைச் சிரைத்தானாம்.)

ஒரு நாள் பஞ்சத்தை உற்றாரிடம் காட்டினாளாம்.

ஒரு நாளும் இல்லாத திருநாள்.

ஒரு நாளும் இல்லாமல் திருநாளுக்குப் போனால் திருநாள் எல்லாம் வெறு நாள் ஆச்சு.

ஒரு நாளும் சிரிக்காதவன் திருநாளிலே சிரித்தான்; திருநாளும் வெறு நாள் ஆச்சு. 59

ஒரு நாளும் நான் அறியேன், உள்ளே விளக்கெரித்து.

ஒரு நாளைக்கு இறக்கிறது கோடி; பிறக்கிறது கோடி.

ஒரு பக்கம் பெய்தால் ஒரு பக்கம் காயும்.

ஒரு பசியும் இல்லை என்பாள்; ஒட்டகத்தையும் விழுங்கி விடுவாள்

ஒரு பணம் இரண்டு பாளை; ஒன்று கள்; ஒன்று நுங்கு. 5990

ஒரு பணம் கொடுத்து அழச் சொல்லி ஒன்பது பணம் கொடுத்து ஓயச் சொன்னது போல.

ஒரு பணம் கொடுப்பானாம்; ஓயாமல் அழைப்பானாம்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்.
(ஒன்றே மாதிரி.)

ஒரு பிள்ளை என்று ஊட்டி வளர்த்தாளாம்; அது சொரிமாந்த குணம் பிடித்துச் செத்ததாம்.

ஒரு பிள்ளை பிள்ளை ஆகுமா? ஒரு மரம் தோப்பு ஆகுமா? 5995
(பிள்ளையும் பிள்ளை அல்ல.)

ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உள்ளங்கையில் சோறு; நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுச் சந்தியிலே சோறு.

ஒரு பிள்ளை பெற்றவருக்கு உறியிலே சோறு; நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு.
(ஒரு பெண் பெற்றவளுக்கு, நடுத்தெருவிலே ஓடு.)

ஒரு பிள்ளை பேளவும் ஒரு பிள்ளை நக்கவும்.

ஒரு புடலங்காயை நறுக்கிப் பாதி கறிக்கும் பாதி விதைக்கும் வைத்துக் கொள்ள முடியுமா?

ஒரு புத்திரன் ஆனாலும் குருபுத்திரன் ஆவானா? 6000
(குரு புத்திரன் சிலாக்கியம்; புத்திரன் வாக்கியம்,)

ஒரு பூனை மயிர் ஒடிந்தால் ஒன்பது பிராமணனைக் கொன்ற பாவம்.
(யாழ்ப்பாண வழக்கு.)

ஒரு பெட்டை நாய்க்கு ஒன்பது ஆண் நாயா?

ஒரு பெண் என்று ஊட்டி வளர்த்தாள்; அது ஊர்மேலே போச்சுது.

ஒரு பொய்க்கு ஒன்பது பொய்.

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டும். 6005

ஒரு பொருள் ஆகிலும் எழுதி அறி.
ஒரு பொழுது சட்டி; அதன்மேல் கவிச்சுச் சட்டி.
ஒரு மயிர் போனாலும் கவரிமான் வாழாது.
ஒரு மரத்துக் கொம்பு ஒரு மரத்தில் ஒட்டாது.
ஒரு மரத்துப் பட்டை ஒரு மரத்திலே ஒட்டுமா? 6010

ஒரு மரத்துப் பழம் ஒரு மரத்தில் ஒட்டுமா?
ஒரு மரத்துப் பழமா ஒருமிக்க?
ஒரு மரத்தை அதன் கனியால் அறியலாம்.
ஒரு மரம் இரண்டு பாளை; ஒன்று நுங்கு; ஒன்று கள்; அறிவுடன் பார்க்கும் போது அதுவும் கள்ளே; இதுவும் கள்ளே.
ஒரு மரம் தோப்பு ஆகுமா? 6015

ஒரு மனப்படு; ஓதுவார்க்கு உதவு.
(ஒருவர்க்கு உதவு.)

ஒரு மிளகுக்கு ஆற்றைக் கட்டி இறைத்த செட்டி.
ஒரு மிளகும் நாலு உப்பும் போதும்.
ஒரு மிளகைப் போட்டு விட்டுப் பொதி மிளகு என்னது என்றாற் போல.
ஒரு முத்தும் கண்டறியாதவனைச் சொரிமுத்துப் பிள்ளை என்றானாம். 6020

ஒரு முருங்கையும் ஓர் எருமையும் உண்டானால் வருகிற விருந்துக்கு மனம் களிக்கச் செய்வேன்.
ஒரு முழுக்காய் முழுகிவிட வேண்டும்.
ஒரு முழுக்கிலே மண் எடுக்க முடியுமா?
(முத்து எடுக்க. எடுக்கிறதா?)

ஒரு முறை செய்தவன் ஒன்பது முறை செய்வான்.
ஒருமைப்பாடு இல்லாத குடி ஒருமிக்கக் கெடும். 6025

ஒரு மொழி அறிந்தவன் ஊமை; பல மொழி அறிந்தவன் பண்டிதன்.
ஒரு ரோமம் போனாலும் கவரிமான் வாழாது.
ஒருவர் அறிந்தால் ரகசியம்; இருவர் அறிந்தால் பரசியம்.
(அகசியம்.)

ஒருவர் கூறை எழுவர் உடுக்க.

ஒருவர் துணியை இருவர் உடுத்தினால் இருவரும் அம்மணமாம். 6030
(நிர்வாணம்.)

ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்.
(ஆழ்வார்கள் கூற்று).

ஒருவர் பொறை, இருவர் நட்பு.

ஒருவராய்ப் பிறந்தால் நன்மை; இருவராய்ப் பிறந்தால் பகைமை.

ஒருவருக்கு இடுக்கண் வந்தால் அடுக்கடுக்காய் வரும்.

ஒருவருக்கு நிறைவும் குறைவும் ஊழ்வினைப் பயன். 6035

ஒருவரும் அறியாத உச்சித ராமன்.

ஒருவன் அறிந்த ரகசியம் உலகத்தில் பரவும்.

ஒருவன் அறிந்தால் ரகசியம்; இருவர் அறிந்தால் அம்பலம்.

ஒருவன் குழியிலே விழுந்தால் எல்லாரும் கூடி அவன் தலையில் கல்லைப் போடுகிறதா?
(மண்ணை அள்ளிப் போடுகிறதா?)

ஒருவன் செய்த தீமை அவன் காலைச் சுற்றி வேரை அறுக்கும். 6040

ஒருவன் தலையில் மாணிக்கம் இருக்கிறதென்று வெட்டலாமா?

ஒருவன் துணையாக மாட்டான்; ஒரு மரம் தோப்பாக மாட்டாது.

ஒருவனாய்ப் பிறந்தால் தனிமை; இருவராய்ப் பிறந்தால் பகைமை.

ஒருவனாய்ப் பிறப்பது-ஒரு பிறப்பாமா? ஒன்றி மரம் தோப்பாமா?
(பிறப்பா? தோப்பா?)

ஒருவனுக்கு இருவர் துணை. 6045

ஒருவனுக்குத் தாரம்; மற்றவனுக்குத் தாய்.
(ஒருவனுடைய தாரம்.)

ஒருவனேனும் உயிருடன் உளனோ?

ஒருவனை அறிய இருவர் வேண்டும்.

ஒருவனைக் கொன்றவன் உடனே சாவான்; பல பேரைக் கொன்றவன் பட்டம் ஆள்வான்.

ஒரு வார்த்தை வெல்லும்; ஒரு வார்த்தை கொல்லும். 6050

ஒரு விரல் நொடி இடாது.

ஒரு விரல் முடி இடாது.

ஒருவிலே இருந்தாலும் இருக்கலாம்; ஒழுக்கிலே இருக்க முடியாது.

ஒரு விளக்கைக் கொண்டு ஓராயிரம் விளக்கை ஏற்றலாம்.

ஒரு வீடு அடங்கலும் பிடாரி. 6055

(பஜாரி.)

ஒரு வேலைக்கு இரு வேலை.

(புத்தி கெட்டவன் வேலை.)

ஒரு வேலைக்கு இரு வேலை, ஓதி வைத்தார் வாத்தியார்.

(பண்டாரம்.)

ஒரு வேளை உண்போன் யோகி; இருவேளை உண்போன் போகி; மூவேளை உண்போன் ரோகி.

ஒரே காலில் நிற்கிறான்.

(இருக்கிறான்.)

ஒரே துறையில் குளித்த உறவு. 6060

ஒல்லி நாய்க்கு ஒட்டியாணம் வேண்டுமாம்.

ஒலி இருந்த சட்டி, இன்ன சட்டி என்று தெரியாது.

ஒவ்வாக் கட்டிலும் தனிமை அழகு.

ஒவ்வாப் பேச்சு வசையோடு ஒக்கும்.

ஒவ்வொரு நாய்க்கும் அதன் நாள் உண்டு. 6065

ஒவ்வொருவனும் தன் தன் பாட்டைத் தானே அனுபவிக்கவேண்டும்.

ஒவ்வொன்றாய் நூறா? ஒரேயடியாய் நூறா?

ஒழிந்த இடம் பார்க்கிறதா?

ஒழிந்த இடமும் தாவாரமும் தேடுகிறதா?

ஒழுக்கத்தைக் காட்டிலும் உயர்வில்லை. 6070

(பழமொழி நானூறு.)

ஒழுக்கம் உயர் குலத்தில் நன்று.

(உயர் குலம்.)

ஒழுக்கிலே முக்காடா?

ஒழுக்குக்கு வைத்த சட்டி போல.

ஒழுக்குக்கு வீட்டிலே வெள்ளம் வந்தது போல.
(ஒழுக்கு வீட்டிலே.)

ஒழுகாத வீடு உள்ளங்கையத்தனை போதும். 6075

ஒழுகிற வீட்டில் ஒன்றுக்கு இருந்தால் வெள்ளத்தோடு வெள்ளம்.

ஒழுங்கு ஒரு பணம்; சளுக்கு முக்காற் பணம்.
(சழக்கு.)

ஒழுங்கு கணக்கப்பிள்ளை; இடுப்பு இறக்கவில்லை.

ஒள்ளியர் தெள்ளியராயினும் ஊழ்வினை பைய நுழைந்து விடும்.

ஒளி இல்லா விட்டால் இருளையும் இருள் இல்லா விட்டால் ஒளியையும் காணலாம். 6080

ஒளிக்கத் தெரியாமல் விதானையார் வீட்டில் ஒளித்துக் கொண்டானாம்.
(யாழ்ப்பாண வழக்கு.)

ஒளிக்கப் போயும் இடம் இடைஞ்சலா?

ஒளிக்கப் போயும் தலையாரி வீட்டில் ஒளிந்தது போல்.
(வீட்டிலா ஒளிப்பது?)

ஒளிக்கும் சேவகனுக்கு முகத்தில் ஏன் மீசை?

ஒளிகிற சேவகனுக்கு மீசை எதற்கு? 6085

ஒற்றியும் சீதனமும் பற்றி ஆள வேண்டும்.

ஒற்றுமை இல்லாத குடி ஒருமிக்கக் கெடும்.
(குடும்பம். ஒரு சேரக் கெடும்.)

ஒற்றுமையே வலிமை.

ஒற்றை ஆளுக்கு விளையாட்டு இல்லை.

ஒற்றைக் காலில் நிற்கிறான். 6090

ஒற்றைக் காலும் ஓரியுமாய்ச் சம்சாரம் செய்கிறான்.

ஒற்றைப் பாக்கு எடுத்தால் உறவு முறியும்.

ஒன்றரைக் கண்ணன் ஓரைக் கண்ணனைப் பழித்தானாம்.

ஒன்றாம் குறைவு வண்ணான் கழுதைக்கு.

ஒன்றால் ஒன்று குறைவு இல்லை; முன்னாலே கட்டத் துணி இல்லை. 6095

ஒன்றான தெய்வம் உறங்கிக் கிடக்கும் போது பிச்சைக்கு வந்த தெய்வம் ததியோதனத்துக்கு அழுகிறதாம்.

ஒன்றான தெய்வம் ஒதுங்கிக் கிடக்கச்சே, மூலை வீட்டுத் தெய்வம் குங்கிலியம் கேட்குமாம்.
(குங்கிலியத்துக்கு அழுததாம்.)

ஒன்றான தெய்வம் ஒதுங்கிக் கிடக்க ஹனுமந்தராயனுக்குத் தெப்பத் திருநாளாம்.

ஒன்றான தெய்வம் ஒதுங்கி நிற்கிறதாம்; சுற்றுப்பட்ட தெய்வம் ததியோதனத்துக்கு அழுகிறதாம்.

ஒன்றான பிரபு உறங்கிக் கிடக்கையில் பிச்சைக்கு வந்தவன் ததியோதனத்துக்கு அழுகிறானாம். 6100

ஒன்று இருந்தால் இன்னொன்று இல்லை.

ஒன்று ஒன்றாய் நூறோ? ஒருமிக்க நூறோ?

ஒன்றுக்கு இரண்டாம் வாணிபம் இல்லை.

ஒன்றுக்கு இரண்டு; உபத்திரவத்துக்கு மூன்று.

ஒன்றுக்குப் பத்து; உரைக்குப் பதினாறு.

ஒன்றுக்கும் அற்ற தங்காளுக்குக் களாக்காய்ப் புல்லாக்கு. 6105

ஒன்றுக்கும் ஆகாத ஊர்ப்பறை.

ஒன்றுக்கும் ஆகாதவன் உபாத்தியாயன் ஆகட்டும்.

ஒன்றுக்கு வாங்கி எட்டுக்கு விற்றால் லாபம்.

ஒன்று கட்டி விதை; ஒன்று வெட்டி விதை.

ஒன்று குறைந்தது கார்த்திகை; ஒக்கப் பிறந்தது மார்கழி. 6110
(ஒக்கப் பிறந்தது சங்கராந்தி.)

ஒன்று செய்தாலும் உருப்படியாகச் செய்ய வேண்டும்.

ஒன்று தெரிந்தவனுக்கு எல்லாம் தெரியாது.

ஒன்று நினைக்க ஒன்று ஆயிற்று.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
(பாரதியார்.)

ஒன்றும் அற்ற தங்காளுக்கு ஒன்பது நாள் சடங்கா? 6115

ஒன்றும் அற்ற நாரிக்கு ஒன்பது நாள் சடங்கு; அதுவும் அற்ற நாரிக்கு ஐந்து நாள் சடங்கு.

ஒன்றும் அறியாத கன்னி, அவளைப் பிடித்தது சனி.
ஒன்றும் அறியாளாம் கன்னி; ஓடிப் பிடித்ததாம் ஆறு மாத ஜன்னி.
(அவளைப் பிடித்ததாம்.)
ஒன்றும் இல்லாத தங்கைக்கு ஒன்பது நாள் சடங்காம்.
ஒன்றும் இல்லாததற்கு ஒரு பெண்ணையாவது பெற்றாளாம். 6120

ஒன்றும் இல்லாத தாசனுக்கு ஒன்றரைத் தோசை.
(ஒன்றரை முழத் தோசை.)
ஒன்றும் இல்லாவிட்டால் அத்தை மகள் இருக்கிறாள்.
ஒன்றும் இல்லை என்று ஊதினான்; அதுதானும் இல்லை என்று கொட்டினான்.
ஒன்றும் தெரியாத சின்னக் கண்ணு, பானை தின்னுவாள் பன்றிக் கறி.
ஒன்றும் தெரியாத பாப்பா, போட்டுக் கொண்டாளாம் தாழ்ப்பாள். 6125

ஒன்றும் தெரியாதவனுக்கு எதிலும் சந்தேகம் இல்லை.
ஒன்றே ஆயினும் நன்றாய் அறி.
ஒன்றே குதிரை; ஒருவனே ராவுத்தன்.
ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்.
(திருமந்திரம்)
ஒன்றே செய்க; இன்றே செய்க; இன்னே செய்க. 6130
(கபிலர் அகவல்.)

ஒன்றே செயினும் நன்றே செய்.
ஒன்றே பிறப்பு, ஒன்றே சிறப்பு.
ஒன்றே ராசா, ஒன்றே குதிரை.
ஒன்றைத் தொடினும் நன்றைத் தொடு.
ஒன்றைப் பத்தாக்கு. 6135

ஒன்றைப் பத்தாகவும், பத்தை ஒன்றாகவும் சாதிக்கிறான்.
ஒன்றைப் பிடித்தால் உடனே சாதிக்க வேண்டும்.
ஒன்றைப் பெற்றால் நன்றே பெற வேண்டும்.
ஒன்றைப் பெற்றாலும் கடுகப் பெறு.
ஒன்றைப் பெற்றாலும் கன்றைப் பெறு. 6140

ஓ கெடுவானுக்கு வாழ்க்கைப்பட்டு ஓட்டமே ஒழிய நடை இல்லை.
(ஓ கெடுப்பானுக்கு, ஓ கொடுப்பானுக்கு.)

ஓங்கி அறைந்தால் ஏங்கி அழச் சீவன் இல்லை.

ஓங்கில் அறியும் உயர்கடலின் ஆழம்; பாங்கி அறிவாள் தன் பர்த்தாவின் வலிமை.

ஓங்கின கை நிற்காது.

ஓங்கின கோடரி நிற்காது. 6145

ஓங்கு ஒன்று; அடி இரண்டு.

ஓசிக்கு அகப்பட்டால் எனக்கு ஒன்று; எங்கள் அண்ணனுக்கு ஒன்று

ஓசை காட்டிப் பூசை செய்.

ஓசை பெறும் வெண்கலம்; ஓசை பெறாது மண்கலம்.

ஓட்டத்துக்குப் பாக்குப் பிடிக்கிறான். 6150

ஓட்டம் உள்ளவரை ஆட்டமும் அதிகம்.

ஓட்டமும் ஆட்டமும் உடம்புக்கு நல்லது.

ஓட்டி ஓட்டி மிளகு அரைக்கப் பாட்டி வந்தாளாம்; பையனுக்குச் சோறு போடக் குட்டி வந்தாளாம்.

ஓட்டின சீமான் ஓட்டினான்; பழமுள்ள காட்டில் ஓட்டினான்.

ஓட்டுகிறவன் சரியாய் இருந்தால் எருது மச்சான் முறை கொண்டாடாது. 6155

ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி.

ஓட்டைக் குடத்திலும் சர்க்கரை நிற்கும்; கருப்பட்டியிலும் கல் இருக்கும்.

ஓட்டைக் குடத்திலேதான் சர்க்கரை இருக்கும்.

ஓட்டைக் கோயிலுக்குச் சர்க்கரை கசக்குமா?
(ஓட்டைக் கோதிலுக்கு.)

ஒட்டைச் சங்கு ஊது பரியாது. 6160
(சங்கால் ஊத முடியாது.)

ஒட்டைச் சட்டி ஆனாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி.
(வேக உதவும்.)
ஒட்டைத் தோண்டியும் அறுந்து போன தாம்புக் கயிறும் சரி.
(தோண்டிக்கு.)
ஒட்டை நாழிக்குப் பூண் கட்டுவது போல.
(கட்டி ஆவதென்ன?)
ஒட்டைப் பானைச் சர்க்கரை கசக்குமா?
ஒட்டைப் பானையில் உலையிட்டாற் போல். 6165

ஒட்டைப் பானையில் கொழுக்கட்டை வேகுமா?
ஒட்டைப் பானையில் சர்க்கரை இருக்கும்.
ஒட்டைப் பானையில் நண்டை விட்டாற் போல.
ஒட்டைப் பானையில் விட்ட தண்ணீர் போல,
ஒட்டை மணி ஆனாலும் ஓசை நீங்குமா? 6170

ஒட்டை மதகிலே தண்ணீர் போனால் தோட்டிக்கு என்ன வாட்டம்?
ஒட்டை வீட்டிலே மூத்திரம் பெய்தால் ஒழுக்கோடு ஒழுக்கு.
ஓடக்காரனிடம் கோபித்துக் கொண்டு ஆற்றோடு போன மாதிரி.
ஓடம் கட்டின தூலம்.
ஓடம் கடந்தால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு. 6175

ஓடம் கவிழ்த்த பிரமசாரியைப் போல.
ஓடம் வண்டியிலே; வண்டி ஓடத்திலே.
(வண்டிமேலே, ஓடத்து மேலே.)
ஓடம் விட்ட ஆற்றிலும் அடி சுடும்.
(ஆறும்.)
ஓடம் விட்ட ஆறே அடி சுடும் என்பது அறியாயா?
ஓடம் விட்ட இடம் அடி சுடும்; அடி சுட்ட இடத்தில் ஓடப்படும். 6180

ஓடம் விட்டு இறங்கினால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு.
ஓட மாட்டாதவன் திரும்பிப் பார்த்தானாம்.
ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறியே ஆக வேண்டும்.

ஓடவும் மாட்டேன்; பிடிக்கவும் மாட்டேன்.
ஓடவும் முடியவில்லை; ஒதுங்கவும் முடியவில்லை. 6185

ஓடி ஆடி உள்ளங்காலும் வெளுத்தது.
ஓடி உழக்கு அரிசி சாப்பிடுவதைவிட உட்கார்ந்து ஆழாக்கு அரிசி சாப்பிடலாம்.
ஓடி ஒரு கோடி தேடுவதிலும் இருந்து ஒரு காசு தேடுவது நலம்.
ஓடி ஒன்பது பணம் சம்பாதிப்பதிலும் உட்கார்ந்து ஒரு பணம் சம்பாதிப்பது மேல்.
ஓடி ஓடி உடையவன் வீட்டில் ஒளிந்தாற் போல். 6190

ஓடி ஓடி உள்ளங்கால் வெளுத்தது.
ஓடி ஓடி நூறு குழி உழுவதைவிட அமர்ந்து அமர்ந்து ஆறு குழி உழுவதே நன்று.
ஓடி ஓடிப் பறந்தாலும் ஓடக்காரன் தாமசம்.
ஓடி ஓடி வேலை செய்தாலும் நாய் உட்காரப் போவதில்லை.
ஓடிப் போகிறவன் பாடிப் போகிறான். 6195
(போனவன்.)

ஓடிப் போன ஊரில் ஆதரித்தவன் கவுண்டன்.
ஓடிப் போன புருஷன் வந்து கூடிக் கொண்டானாம்; உடைமைமேல் உடைமை போட்டு மினுக்கிக் கொண்டாளாம்.
ஓடிப் போன முயல் எல்லாம் ஒரே முயல்.
ஓடிப் போன முயல் பெரிய முயல்.
ஓடிப் போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் ராஜா; அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி. 6200
(ராஜா-குரு.)

ஓடிப் போனால் உமிக்காந்தல்; உள்ளே வந்தால் செந்தணல்.
ஓடி மேய்ந்த சிறுக்கிக்கு ஒன்றியிருக்க மனம் வருமா?
ஓடியம் ஆகிலும் ஊடுருவக் கேள்.
ஓடிய முயல் பெரிய முயல் அல்லவோ?
ஓடியும் கிழவிக்குப் பிறகேயா? 6205

ஓடி வந்து உமிக்காந்தலை மிதித்தாளாம்; திரும்பி வந்து தீக்காந்தலை மிதித்தாளாம்.
ஓடி வரும் பூனை; ஆடி வரும் ஆனை.

ஓடி வரும் போது தேடி வருமாம் பொருள்.

ஓடின மாட்டைத் தேடுவாரும் இல்லை; மேய்த்த கூலி கொடுப்பாரும் இல்லை.

ஓடினால் மூச்சு, நின்றால் போச்சு. 6210

ஓடு இருக்கிறது, நான் இருக்கிறேன்.

ஓடுக ஊர் ஓடுமாறு.
(பழமொழி நானூறு.)

ஓடுகள் விதையைக் கேடறக் காக்கும்.

ஓடுகாலிக்கு வீடு மரம்.

ஓடுகாலி வீடு மறந்தாள். 6215

ஓடுகிற ஆறு ஓடிக் கொண்டே இருக்குமா?

ஓடுகிற கழுதையை வாலைப் பிடித்தால் உடனே கொடுக்கும் உதை.
(பலன்.)

ஓடுகிற தண்ணீரை ஓங்கி அடித்தாலும் அது கூடுகிற பக்கம்தான் கூடும்.

ஓடுகிறது பஞ்சையாய் இருந்தாலும் சிமிட்டுவது இரண்டு முழம்.

ஓடுகிற நாய்க்கு ஒரு முழம் விட்டுக் கல் எறி. 6220

ஓடுகிற நாயைக் கண்டால் துரத்துகிற நாய்க்கு எளிது.

ஓடுகிற நீரில் எழுதிய எழுத்தைப் போல.

ஓடுகிற பாம்புக்குக் கால் எண்ணுகிறவன் சாமர்த்தியசாலி.

ஓடுகிற பாம்பைக் கையால் பிடிக்கிற பருவம்.
(வயசு.)

ஓடுகிற பாம்பைக் கையினால் பிடித்து, உண்ணுகிற வாயில் மண்ணைப் போட்டுக் கொள்கிற காலம். 6225

ஓடுகிற பாம்பை மிதிக்கிற பருவம்.
(வயசு.)

ஓடுகிற மாட்டைக் கண்டால் துரத்துகிற மாட்டுக்கு எளிது.

ஓடுகிற மாடு விழுந்து விடும்.

ஓடுகிற முயலுக்கு ஒரு முழம் தள்ளி எறிய வேண்டும்.

ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு எளிது. 6230
(லேசு, இன்பம்.)

ஓடுகிறவனை விரட்டுகிறது எளிது.
ஓடுகிற வெள்ளம் அணையில் நிற்குமா?
ஓடுபவனும் அம்மணம்; துரத்துகிறவனும் அம்மணம்.
ஓடும் இருக்கிறது; நாடும் இருக்கிறது.
ஓடும் நாயைக் கண்டால் குரைக்கும் நாய்க்கு இளக்காரம். 6235

ஓடோடிப் போனாலும் ஓடக்காரன் தாமசம்.
ஓணத்து மழை நாணத்தைக் கெடுக்கும்.
ஓணான் ஓட்டம் எவ்வளவு தூரம்?
ஓணான் கடித்தால் ஒரு நாழிகையில் சாவு; அரணை கடித்தால் அரை நாழிகையில் சாவு.
ஓணான் தலை அசைத்தால் ஒன்பது கலம் நெல் மசியும். 6240

ஓணான் விழுங்கிய கதை போல.
ஓணான் வேலிக்கு இழுக்கிறது; தவளை தண்ணீருக்கு இழுக்கிறது.
ஓணானுக்கு வேலி சாட்சி; வேலிக்கு ஓணான் சாட்சி.
ஓணானை அடித்தால் உழக்குப் புண்ணியம்.
(ஓணானைக் கொன்றால்.)
ஓதப் பணம் இல்லை; உட்காரப் பாய் இல்லை; உனக்கு என்ன வாய்? 6245

ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்.
ஓதின மஞ்சள் உறியிலே இருக்கும் போது வேதனை என்ன செய்யும்?
ஓதும் வேதம் பேதம் அகற்றும்.
ஓதுவார் எல்லாம் உழுவார் தலைக்கடையில்.
(+ உழுவார் எல்லாம் கருமான் தலைக் கடையில்.)
ஓதுவார்க்கு உதவு. 6250

ஓதுவானுக்கு ஊரும் உழுவானுக்கு நிலமும் இல்லையா?
(நிலமுமா கிடையாது?)
ஒந்தி வேலிக்கு இழுக்கிறது; தவளை தண்ணீருக்கு இழுக்கிறது.
ஓநாய்க்கு அதிகாரம் வந்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்.

ஓம் என்ற தோஷம் வயிற்றில் அடைத்தது.
ஓம பிண்டத்தை நாய் இச்சித்தாற் போல். 6255

ஓமல் இட்ட பண்டம் உள்ளே வந்து சேரவில்லை.
ஓமலுக்குப் பிள்ளை அன்றி உறுதிக்குப் பிள்ளை இல்லை.
ஓய்ச்சலும் இல்லை; ஒழிவும் இல்லை.
ஓய்ந்ததடி பனங்காடு; உட்கார்ந்தாளடி சாணாத்தி.
ஓய்ந்ததாம் பானை; உட்கார்ந்தாளாம் சாணாத்தி. 6260

ஓய்ந்த முழுக்கு ஒரே முழுக்கு.
ஓய்ந்த வேளையில் அவிசாரி ஆடினால் உப்புப் புளிக்கு ஆகும்.
ஓய்வு இலா நேசமே, ஓலமே சரணம்.
ஓயாக் கவலை தீரா வியாதி.
ஓயாது சிரிப்பவள் உன்னையே கெடுப்பாள். 6265

ஓயாமல் அழு, நோவாமல் அடிக்கிறேன் என்ற கதை.
ஓயா மழையும் ஒழியாக் காற்றும்.
ஓர் ஆடு நீர் விட்டால் எல்லா ஆடும் நீர் விடும்.
ஓர் ஆடு மேய்த்தவனே என்றாலும் அதுவும் கெட்டவனே என்றானாம்.
ஓர் ஆண்டி பசித்திருக்க உலகமெல்லாம் கிறுகிறு என்று சுழலுகிறது. 6270
(சுற்றுகிறது.)

ஓர் ஆறு தாண்டமாட்டாதவன் ஒன்பது ஆறு தாண்டுவானா?
ஓர் உறையில் இரண்டு கத்தியா?
ஓர் ஊர் நடப்பு; ஒரூர் பழிப்பு.
ஓர் ஊர்ப் பேச்சு ஒரூருக்கு ஏச்சு.
ஓர் ஊருக்கு ஒரு பேர் இட்டுக் கொள்ளலாமா? 6275

ஓர் ஊருக்கு ஒரு வழியா?
ஓர் எருமை, ஒரு முருங்கமரம், கால் காணி இருந்தால் பஞ்சம் போகும்.
(வட ஆர்க்காட்டு வழக்கு.)

ஓர் ஏர்க்காரன் உழுது கெட்டான்; நாலு ஏர்க்காரன் நிறுத்திக் கெட்டான், பத்து ஏர்க்காரன் பார்த்துக் கெட்டான்.

ஓர் ஏரை விரைவில் மறி.

ஓர்ப்படியாள் பிள்ளை பெற்றாள் என்று ஒக்கப் பிள்ளை பெறலாமா? 6280

ஓரக் கண்ணனைப் பழிக்கிறான் ஒன்றரைக் கண்ணன்.
(ஒற்றைக் கண்ணன்.)

ஓரக் கண்ணும் காகக் கண்ணும் ஆகா.

ஓரண்டைக் காடும் காடு அல்ல; ஓரேர் உழவு உழவும் அல்ல.

ஓரம் சொன்னவன் ஆருக்கும் ஆகான்.

ஓரம் வெளுத்து ஒரு பக்கம் செல் அரிக்க. 6285

ஓராம் கண்ணியா, ஒருத்தன் ஆள?

ஓலை டப்பாசு உதறிக் கடாசு.

ஓலைப் பாயில் நாய் மோண்டாற்போல.
(பேண்டாற் போல.)

ஓலைப் பாயில் பேண்ட நாயைப்போல ஏன் சள சள என்கிறாய்?

கக்கரிக்குப் பந்தல், கத்தரிக்குக் கொத்து.
(கொத்துதல்.)
கக்கித் தின்னும் குக்கல்.
(குக்கல்-நாய்.)
கக்கின பிள்ளை தக்கும். 6300

கங்கணம் கட்டிக் கொள்ளுதல்.
கங்கா ஸ்நானம், துங்கா பானம்.
(துங்கா-துங்கபத்திரை.)
கங்கை ஆடப் போன கடாவைக் கட்டி உழுதானாம்.
கங்கை ஆடப் போனவன் கடாவைக் கட்டி அழுதானாம்.
கங்கை ஆடி மங்கை பார். 6305
(மங்கை-திருக்கண்ண மங்கை.)

கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தில் போவேனாக.
கங்கைக்கு நிகரான நதியும் இல்லை; காசிக்கு நிகரான பதியும் இல்லை.
கங்கைக்குப் போன கடாவைப் போல.
கங்கைக்குப் போனாலும் கர்மம் தொலையாது.
கங்கையில் ஆடினாலும் கணமும் விடாமல் செய்த பாவம் தீராது. 6310

கங்கையில் ஆடினாலும் கர்மம் தொலையாது.
(முழுகினாலும் செய்த கர்மம்.)
கங்கையில் ஆடினாலும் பாவம் தீராது.
கங்கையில் நீராடுபவன் குட்டையில் முழுக வேணுமோ?
கங்கையில் படர்ந்தாலும் பேய்ச் சுரைக்காய் நல்ல சுரைக்காய் ஆகாது.
(படிந்தாலும் ஆகிவிடுமா?)
கங்கையில் பிறந்த நத்தை சாளக்கிராமம் ஆகாது. 6315

க்கரிக்குப் பந்தல், கத்தரிக்குக் கொத்து.
(கொத்துதல்.)
க்கித் தின்னும் குக்கல்.
(குக்கல்-நாய்.)
க்கின பிள்ளை தக்கும். 6300

ங்கணம் கட்டிக் கொள்ளுதல்.
ங்கா ஸ்நானம், துங்கா பானம்.
(துங்கா-துங்கபத்திரை.)
ங்கை ஆடப் போன கடாவைக் கட்டி உழுதானாம்.
ங்கை ஆடப் போனவன் கடாவைக் கட்டி அழுதானாம்.
ங்கை ஆடி மங்கை பார். 6305
(மங்கை-திருக்கண்ண மங்கை.)

கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தில் போவேனாக.
கங்கைக்கு நிகரான நதியும் இல்லை; காசிக்கு நிகரான பதியும் இல்லை.
கங்கைக்குப் போன கடாவைப் போல.
கங்கைக்குப் போனாலும் கர்மம் தொலையாது.
கங்கையில் ஆடினாலும் கணமும் விடாமல் செய்த பாவம் தீராது. 6310

கங்கையில் ஆடினாலும் கர்மம் தொலையாது.
(முழுகினாலும் செய்த கர்மம்.)
கங்கையில் ஆடினாலும் பாவம் தீராது.
கங்கையில் நீராடுபவன் குட்டையில் முழுக வேணுமோ?
கங்கையில் படர்ந்தாலும் பேய்ச் சுரைக்காய் நல்ல சுரைக்காய் ஆகாது.
(படிந்தாலும் ஆகிவிடுமா?)
கங்கையில் பிறந்த நத்தை சாளக்கிராமம் ஆகாது. 6315

கங்கையில் முழுகினாலும் கடன்காரன் விடான்.
கங்கையில் முழுகினாலும் பாவம் போகாது.
கங்கையில் முளைத்தாலும் பேய்ச் சுரைக்காய் நல்ல சுரைக்காய் ஆகாது.
கங்கையில் மூழ்கினாலும் கறுப்புக் காக்கை வெள்ளை ஆகுமா?
கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா? 6320

கச்ச திலமானாலும் கை சேர்க்கை.
கச்சல் கருவாடு மோட்சத்துக்குப் போனாலும் பிச்சைக்காரன் மோட்சத்துக்குப் போக மாட்டான்.
கச்சான் பெண்களுக்கு மச்சான்.
(மட்டக்களப்பு வழக்கு.) (கச்சான்-ஆனி ஆடி ஆவணியில் வீசும் வறண்ட காற்று.)
கச்சினம் குளப்பாடு கண்டவர்க்கெல்லாம் சாப்பாடு.
(கச்சினம்-திருக்கைச்சினம் என்ற தலம், குளப்பாடு-அதன் அருகில் உள்ள ஊர்.)
கச்சேரிக்கு முன்னே போகாதே; கழுதைக்குப் பின்னே போகாதே. 6325

கசக்கி மோந்து பார்க்கலாமா?
கசடருக்கு இல்லை கற்றோர் உறவு.
கசடருக்கு யோகம் வந்தால் கண்ணும் மண்ணும் தெரியாது; காதும் கேளாது.
கசடான கல்வியிலும் கல்வியீனம் நலம்.
கசடு அறக் கல்லார்க்கு இசை உறல் இல்லை. 6330

கசந்தாலும் பாகற்காய்; காறினாலும் கருணைக் கிழங்கு.
கசந்து வந்தவன் கண்ணைத் துடை.
(கசிந்து வந்தவன்.)
கசாப்புக் கடைக்காரன் தர்ம சாஸ்திரம் பேசுவது போல.
கசாப்புக் கடைக்காரனைக் கண்ட நாய் போல.
கசாப்புக் கடையில் ஈ மொய்த்தது போல. 6335

கசாப்புக் கடையை நாய் காத்த மாதிரி.
கஞ்சனுக்குக் காசு பெரிது; கம்மாளனுக்கு மானம் பெரிது.
(கஞ்சன்-உலோபி.)

கஞ்சனுக்குக் கொள்ளை பஞ்சம் இல்லை.

கஞ்சி ஊற்ற ஆள் இல்லை என்றாலும் கச்சை கட்ட ஆள் உண்டு.

கஞ்சிக் கவலை, கடன்காரர் தொல்லை சொல்லத் தொலையுமோ? 6340

கஞ்சிக்குக் காணம் கொண்டாட்டம்.
(காணம்-கொள்ளுத் துவையல்.)

கஞ்சிக்குப் பயறு போட்டாற் போல.
(கலந்தாற்போல. கொஞ்சமாகப் போடுவார்.)

கஞ்சிக்கு லாட்டரி, கைக்குப் பாட்டரியா?

கஞ்சி கண்ட இடம் கைலாசம்; சோறு கண்ட இடம் சொர்க்கம்.

கஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி. 6345

கஞ்சி குடித்தது கழுக்காணி; கூழ் குடித்தது குந்தாணி.

கஞ்சி குடித்த மலையாளி சோற்றைக் கண்டால் விடுவானா?
(நாஞ்சில் நாட்டு வழக்கு.)

கஞ்சி குடித்தாலும் கடன் இல்லாமல் குடிக்க வேணும்.

கஞ்சித் தண்ணீருக்குக் காற்றாய்ப் பறக்கிறான்.

கஞ்சியைக் காலில் கொட்டிக் கொள்ளும் அவசரம். 6350

கஞ்சி வரதப்பா என்றால் எங்கே வரதப்பா என்றானாம்.

கஞ்சி வார்க்க ஆள் இல்லாமல் போனாலும் கச்சை கட்ட ஆள் இருக்கிறது.

கட்கத்தில் நிமிண்டுகிற கை நமன் கை.
(அல்லவா?)

கட்கத்தில் வைப்பார்; கருத்தில் வையார்.

கட்டக் கருகுமணி இல்லாமற் போனாலும் பேர் என்னவோ பொன்னம்மாள். 6355
(கரி மணி. பொன்னம்பலம், முத்து மாலை.)

கட்டச் சங்கிலி வாங்கியாகிவிட்டது; ஆனைதான் பாக்கி.

கட்டத் துணி இல்லை; கூத்தியார் இரண்டு பேர்.

கட்டத் துணியும் இல்லை; நக்கத் தவிடும் இல்லை.

கட்டப்பாரை பறக்கச்சே எச்சிற்கலை எனக்கு என்னகதி என்கிறதாம்.

கட்டப்பாறையை விழுங்கிவிட்டுச் சுக்குக் கஷாயம் குடிப்பதா? 6360

கட்டப்பாலை முற்றப் பழுக்குமோ?

கட்டாணித் தனமாய்க் கல்யாணம் செய்தான்.

கட்டாந்தரை அட்டை போல.

கட்டாந்தரை அட்டை போலக் கட்டிக்கொண்டு புரளுகிறதா? (இராம நாடகம்.)

கட்டாந்தரையில் தேள் கொட்டக் குட்டிச்சுவரில் நெறி கட்டினதாம். 6365

கட்டாந்தரையில் முக்குளிக்கிறது.

கட்டி அடித்தால் என்ன? விட்டு அடித்தால் என்ன?

கட்டி அழுகிற போது கையும் துழாவுகிறதே! (துழாவுமாம்.)

கட்டி அழுகையிலே, என்மகளே, உனக்குப் பெட்டியிலே கை என்ன?

கட்டி இடமானால் வெட்டி அரசாளலாம். 6370

கட்டிக் கறக்கிற மாட்டைக் கட்டிக் கறக்க வேண்டும்; கொட்டிக் கறக்கிற மாட்டைக் கொட்டிக் கறக்க வேண்டும்.

கட்டிக் கிடந்தால்தான் உள் காய்ச்சல் தெரியும்.

கட்டிக் கொடுத்த சோறும் கற்றுக் கொடுத்த வார்த்தையும் எவ்வளவு நாளைக்கு? (சொல்லிக் கொடுத்த. நாளைக்குச் செல்லும்.)

கட்டிடம் கட்டச் சங்கீதம் பாடு.

கட்டிடம் கட்டியவன் முட்டாள்; வாழுகிறவன் சமர்த்தன். 6375

கட்டித் தங்கம் ஆனால் கலீர் என்று ஒலிக்குமா? (கல என்று.)

கட்டிப் படுத்தால் அல்லவோ உட்காய்ச்சல் தெரியும்?

கட்டிப் பீ எல்லாம் கூழ்ப் பீயாய்க் கரைந்தது.

கட்டிப் பீ எல்லாம் தண்ணீர்ப் பீ ஆச்சுது.

கட்டிமகள் பேச்சு, கல்லுக்குக்கல் அண்டை கொடுத்தது போல். 6380

கட்டிய கட்டிலிருந்து கின்னரி வாசிக்கிறது போல.

கட்டில் உள்ள இடத்தில் பிள்ளை பெற்று சுக்குக் கண்ட இடத்தில் காயம் தின்பாள்.
(கஷாயம் குடிப்பாள்.)

கட்டிலின்மேல் ஏறியும் முறைபார்க்கிறது உண்டா?
(முறையா?)

கட்டிலைத் திருப்பிப் போட்டால் தலைவலி போகுமா?
(போகும்.)

கட்டி வழி விட்டால் வெட்டி அரசாளலாம். 6385

கட்டி விதை, வெட்டி விதை.

கட்டி வைத்த பணத்தைத் தட்டிப் பறித்தாற் போல.

கட்டி வைத்த பூனையை அவிழ்த்துவிட்டு, வாபூஸ் வாபூஸ் என்றால் வருமா?

கட்டிவைத்த முதல் அழியக் கச்சவடம் பண்ணாதே.
(கச்சவடம்-வியாபாரம். குமரி வழக்கு.)

கட்டின கோவணத்தைக் காற்றில் விட்டவன். 6390

கட்டின பசுப் போல்.

கட்டின பெண்சாதி இருக்கக் காத்தாயியைக் கண் அடித்தானாம்.

கட்டின பெண்டாட்டி பட்டி மாடு மாதிரி.

கட்டின பெண்டாட்டியையும் உடுத்தின துணியையும் நம்பாதவன்.

கட்டின மாட்டை அவிழ்ப்பாரும் இல்லை; மேய்த்த கூலியைக் கொடுப்பாரும் இல்லை. 6395

கட்டினவனுக்கு ஒரு வீடு; கட்டாதவனுக்கு ஆயிரம் வீடு.
(பல வீடு.)

கட்டினவனுக்கு ஒரு வீடு; கட்டாதவனுக்கு ஊரெல்லாம் வீடு.

கட்டின விதை வெட்டின விதை.

கட்டின வீட்டுக்கு எட்டு வக்கணை.

கட்டின வீட்டுக்குக் கருத்துக் கருத்துச் சொல்லுவார். 6400
(வாய்க்குச் சுளுவு.)

கட்டின வீட்டுக்குப் பணிக்கை சொல்லாதவர் இல்லை.

கட்டின வீட்டுக்குப் பழுது சொல்வது எளிது.
(வக்கணை சொல்வார் பலர்.)

கட்டினான் தாலி; காட்டினாள் கோலம்.

கட்டு அறிந்த நாயும் அல்ல; கனம் அறிந்த கப்பரையும் அல்ல.

கட்டுக் கட்டு விளக்குமாறு கப்பலிலே வருகிறது என்றால் ஒரு காசு விளக்குமாறு இரண்டு காசு. 6405

கட்டுக் கலம் காணும்; கதிர் உழக்கு நெல் காணும்.
(முக்கலம்.)

கட்டுக் காடை இடமானால் குட்டிச் சுவரும் பொன் ஆகும்.

கட்டுக்கு அடங்காக் காளை போல.

கட்டுக்கு அடங்காப் பிடாரியைப் போல.

கட்டுக்குக் கட்டு மாற்றிக் கட்ட வேண்டும். 6410

கட்டுக் குலைந்தால் கனம் குலையும்.

கட்டுச் சோற்று மூட்டையில் எலியை வைத்துக் கட்டினது போல.
(கட்டுச் சாதத்தில்.)

கட்டுச் சோற்று மூட்டையில் பெருச்சாளியை வைத்துக் கட்டின மாதிரி.

கட்டுச் சோற்று மூட்டையையும் கைக்குழந்தையையும் எடுக்கல் ஆகாது.
(கைப் பிள்ளையையும்.)

கட்டுச் சோறு எத்தனை நாளைக்கு? 6415

கட்டுத் தறியை விட்டு மேய்ச்சற் காட்டில் பிடிப்பது.

கட்டுத் துறை சரியாக இருந்தால் கன்றுக்குட்டி துள்ளி விளையாடும்.

கட்டுப் பட்டாலும் கவரிமான் மயிரால் கட்டுப்பட வேண்டும்; குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்.

கட்டுப் படாத பெண் சொட்டுக் கொண்டு போயிற்று.
(கொட்டு.)

கட்டுப் பானை ஊற்று எட்டு நாளைக்கே. 6420
(பனை.)

கட்டு மரத்தைச் சென்னாக்குனி அரிக்கிறது போல.
(சென்னக் குன்னி.)

கட்டுருட்டிக் காளை போல.

கட்டெறும்பு இட்டலியைத் தூக்கினது போல.

கட்டை இருக்கிற மட்டும் கஷ்டம் உண்டு.
(கவலை உண்டு.)

கட்டைக் கலப்பையும் மொட்டைக் காளையும் காணிக்கு உதவாது. 6425

கட்டைக்குப் போகும்போது காலாழி பீலாழியா?

கட்டைக் கோணல் அடுப்பில் நிமிர்ந்தது.

கட்டை கிடக்கிற கிடையைப் பார்; கழுதை குதிக்கிற குதியைப் பார்.

கட்டை போனால் அடுப்போடு.

கட்டை போனால் வெட்டை. 6430

கட்டையிலே வைக்க.
(கட்டையிலே போவான்.)

கட்டையைச் சுட்டால் கரி ஆகுமா? மயிரைச் சுட்டால் கரி ஆகுமா?

கட்டை விளக்கு மாற்றுக்குப் பட்டுக் குஞ்சலம் கட்டினாற் போல.
(பட்டுக் கச்சு.)

கட்டோடே போனால் கனத்தோடே வரலாம்.

கடகச் சந்திர மழை கல்லையும் துளைக்கும். 6435

கடந்த நாள் கருதினால் வருமா?

கடந்தவர்க்குச் சாதி இல்லை.
(சாதி ஏது?)

கடந்து போன காலம் கதறினாலும் வராது.

கடந்து போனது கரணம் போட்டாலும் வராது.
(வருமா?)

கடப்பாரையை விழுங்கிவிட்டுச் சுக்குக் கஷாயம் குடிக்கலாமா? 6440

கடல் உப்பும் மலை நாரத்தங்காயும் போலே.

கடல் உப்பையும் மலை நெல்லையும் கலந்தாற் போல.

கடல் கொதித்தால் விளாவ நீர் எங்கே?
(நீர் ஏது?)

கடல் தண்ணீர் வற்றினாலும் பள்ளிச்சி தாலி வற்றாது.

கடல் தாண்ட மனம் உண்டு; கால்வாய் தாண்டக் கால் இல்லை. 6445
(ஆசை இல்லை, மனம் இல்லை.)

கடல் திடல் ஆகும்; திடல் கடல் ஆகும்.

கடல் நீர் நிறைந்து ஆவதென்ன? காஞ்சிரை பழுத்து ஆவதென்ன?

கடல் பாதி, கடம்பாக்குளம் பாதி.
(கடம்பாக்குளம் - திருநெல்வேலி மாவட்டத்தில் சச்சனாவிளைக்கு அருகில் உள்ளதோர் ஊர்.)

கடல் பெருகினால் கரை ஏது?

கடல் பெருகினால் கரையும் பெருகுமா? 6450

கடல் போயும் ஒன்று இரண்டாம் வாணிகம் இல்.
(பழமொழி நானூறு.)

கடல் மடை திறந்தது போல.

கடல் மணலை எண்ணக் கூடுமா?

கடல் மீனுக்கு நீச்சம் பழக்க வேணுமா?

கடல் மீனுக்கு நுளையன் இட்டதே பேர். 6455
(சட்டம்.)

கடல் முழுவதும் கவிழ்ந்து குடிக்கலாமா?

கடல் வற்றினால் கருவாடு தின்னலாம் என்று உடல் வற்றிச் செத்ததாம் கொக்கு.

கடலில் அகப்பட்ட மரத்துண்டு போல.

கடலில் அலையும் துரும்பு போல.

கட்லில் இருக்கும் கள்ளியைக் கொள். 6460

கடலில் ஏற்றம் போட்ட கதை.

கடலில் கரைத்த புளி போல.

கடலில் கரைத்த பெருங்காயம் போல.
(இட்ட பெருங்காயம் மணக்குமா?)

கடலில் கிடக்கும் துரும்புகளை அலைகளோடு தூக்கித் தரையில் தள்ளுகிறது போல.

கடலில் கையைக் கழுவி விடுகிறதா? 6465

கடலில் துரும்பு கிடந்தாலும் கிடக்கும்; மனசிலே ஒரு சொல் கிடவாது.

கடலில் பிறக்கும் உப்புக்கும் மலையில் விளையும் நாரத்தங் காய்க்கும் தொந்தம்.
(உறவுண்டு.)

கடலில் பெருங்காயம் கரைத்தது போல.
(உரசிய காயம் போல.)

கடலில் போட்டு விட்டுச் சாக்கடையில் தேடுகிறதா?

கடலில் மூழ்கிப் போனாலும் கடனில் மூழ்கிப் போகாதே 6470

கடலிலும் பாதி கடம்பாக்குளம்.

கடலின் ஆழத்தை அளந்தாலும் மனசின் ஆழத்தை அளக்க முடியாது.

கடலிறுள் நா வற்றினது போல.
(திருவாசகம்.)

கடலுக்குக் கரை போடுவார் உண்டா?
(போட்டவர்கள்.)

கடலை அடைக்கக் கரை போடலாமா? 6475

கடலைக்காய்ப் பானையிலே கையை விட்டாற்போல.

கடலைத் தாண்ட ஆசை உண்டு; கால்வாயைத் தாண்டக் கால் இல்லை.
(கடலைத் தாண்டக் கால் உண்டு.)

கடலைத் தாண்டினவனுக்கு வாய்க்கால் தாண்டுகிறது அரிதா?

கடலைத் தூர்த்தாலும் காரியம் முடியாது.

கடலைத் தூர்த்தும் காரியத்தை முடிக்க வேண்டும். 6480

கடலை விதைத்தால் கடுத்த உரம்.

கடலை விதைப்பது கரிசல் நிலத்தில்.
(கரிசல் காட்டில்.)

கடவுள் இருக்கிறார்.
கடவுள் சித்தத்துக்கு அளவேது?
கடவுளுக்குத்தான் வெளிச்சம். 6485

கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.

கடற்கரைத் தாழங்காய் கீழே தொங்கி என்ன? மேலே தொங்கி என்ன?

கடற்கரையில் தாழங்காய் அக்கரையில் கிடந்தால் என்ன? இக்கரையில் கிடந்தால் என்ன?

கடன் ஆச்சு; உடன் ஆச்சு; வீட்டு மேலே சீட்டு ஆச்சு; அடித்து விடடா தேவடியாள் தெருவிலே பல்லக்கை.

கடன் இல்லாத கஞ்சி கால் வயிறு போதும். 6490

கடன் இல்லாத சோறு கால் வயிறு போதும்.

கடன் இல்லாவிட்டால் காற்றுப் போல.

கடன் இழவுக்கு அழுகிறாய்.

கடன்காரனுக்குக் கடனும் உடன்பிறந்தானுக்குப் பங்கும் கொடுக்க வேண்டும்.

கடன்காரனுக்குக் கடனும் பழிகாரனுக்குப் பழியும் கொடுத்துத் தீர வேணும். 6495
(கொடுக்க வேண்டும்.)

கடன்காரனுக்கு மயிரும் எமனுக்கு உயிரும்.

கடன்காரனை வைத்த கழு உண்டா?
(வதைத்த.)

கடன், காலச் சனியன்.

கடன் கேட்காமல் கெட்டது; வழி நடக்காமல் கெட்டது.

கடன் கொடுத்துப் பொல்லாப்பு அடைவதைவிடக் கடன் கொடுக்காமல் பொல்லாப்பு அடையலாம். 6500

கடன் கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்.
(தனிப்பாடல்.)

கடன் கொண்டும் செய்வன செய்.

கடன் கொண்டும் செய்வார் கடன்.
(பழமொழி நானூறு.)

கடன் சிறிது ஆனாலும் கடமை பெரிது.
கடன் நெஞ்சைக் கலக்கும். 6505

கடன் பட்ட சோறு கால் வயிறு நிரம்பாது.
கடன் பட்டவன் சோறு காற் சோறு.
கடன் பட்டார் நெஞ்சம் போல.
கடன் பட்டாயோ, கடை கெட்டாயோ?
(பட்டையோ, கடைபட்டையோ?)

கடன் பட்டு உடன் பட்டு அம்மை கும்பிட, நீயார் கூத்தி கும்பிட. 6510
(கடன் வாங்கி.)

கடன் பட்டு உடன் பட்டு உடம்பைத் தேற்று மகனே, கடன்காரன் வந்தால் தடியைத் தூக்கு மகனே!

கடன் பட்டும் பட்டினியா?
(கடன் கொண்டும் பட்டினி கிடப்பதா?)

கடன் படுகிறவன் எப்போதும் சஞ்சலப் படுகிறவனே.

கடன் வாங்கி உடன் வாங்கிச் சாமி கும்பிட, நீயாரடா கூத்திமகன் விழுந்து கும்பிட?

கடன் வாங்கிக் கடன் கொடாதவனும் கெட்டான்; வட்டியிலே சாப்பிடாதவனும் கெட்டான். 6515

கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான்; மரம் ஏறிக் கை விட்டவனும் கெட்டான்.

கடன் வாங்கிச் செலவு செய்தவனும் மரம் ஏறிக் கைவிட்டவனும் சரி.

கடன் வாங்கித் தின்றவன் கடைத்தேற மாட்டான்.

கடன் வாங்கிப் பயிர் இட்டவனும் மரம் ஏறிக் கைவிட்டவனும் ஒன்று.

கடன் வாங்கியும் கல்யாணம் செய். 6520

கடன் வாங்கியும் பட்டினி; கல்யாணம் ஆகியும் பிரமசாரி.
(சந்நியாசி.)

கடன் வாங்கினவன் மடியில் கல நெருப்பு.

கடன் வாங்குகிறபோது இனிப்பு; கடன் கொடுக்கிறதென்றால் கசப்பு,

கடன் வாங்குகிறவன் கடைத்தேற மாட்டான்.

கடனாகக் கிடைக்கிறதானாலும் ஆனையை வாங்கிக் கட்டிக் கொள்வதா? 6525

கடனா உடனா வாங்கிக் காரியத்தை முடி.

கடனோடு கடன் ஆகிறது; அண்டை வீட்டில் மேல் சீட்டு ஆகிறது; பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணு.

கடனோடு கடன் கந்தப் பொடி காற்பணம்.
(கதம்பப் பொடி.)

கடனோடே கடன்; உடனோடே உடன்.

கடா ஆனாலும் உழக்குப் பால் கறக்காதா என்கிறான். 6530

கடா இடுக்கில் புல் தின்கிறது போல.

கடா கடா என்றால் கால் ஆழாக்குப் பீச்சு என்கிறாயே!

கடா கடா என்றால் உழக்குப் பால் என்று கேட்கிறாயே!

கடா கடா என்றால் கன்றுக்கு உழக்குப் பாலா என்கிறான்.

கடா கடா என்றால் மருந்துக்கு ஒரு பீர் என்கிறான். 6535

கடா கன்று போட்டது; கொட்டகையிலே பிடித்துக் கட்டு.

கடாச் சண்டையில் உண்ணி நசுங்கின கதை.

கடா பின் வாங்குவது எல்லாம் பாய்ச்சலுக்கு இடம்.
(அடையாளம்.)

கடா பொலிகிறது வண்டி பால் குடிக்கவா?

கடா மிடுக்கிலே புல்லுத் தின்கிறதா? 6540

கடா மேய்க்கிறவன் அறிவானோ, கொழுப் போன இடம்?

கடாரங் கொண்டான் கிணற்றில் கல்லைப் போட்டது போல.
(கடாரங் கொண்டான், செம்பொன்னார் கோயிலுக்கு அருகில் கிழக்கே உள்ள ஊர்.)

கடாவின் சந்தில் புல்லைத் தின்னுகிறது போல.

கடாவும் கடாவும் சண்டை போடுகிறபோது உண்ணி நசுங்கினாற் போல.

கடிக்க ஓர் எலும்பும் இல்லை. 6545

கடிக்க மாட்டாத பாக்கு உத்தம தானம்.

கடிக்க வந்த நாய்க்குத் தேங்காய்க் கீற்றுப் போட்டாற் போல.

கடிக்கிற நாகம் கலந்து உறவாகுமா?
(கடித்த நாகம்.)

கடிக்கிற நாய்க்குக் கழுத்திற் குறுங்கயிறு.

கடிக்கிற பாம்பை நல்ல பாம்பு என்ற கதை. 6550

கடிகோலிலே கட்டின நாய்.

கடித்த நாய்க்குக் காடியைக் கொடு.

கடித்த நாயைக் கொன்றாலும் பயன் உண்டாகாது.

கடித்த நாயை வெறி நாய் என்பது போல.

கடித்த நாயைப் பைத்தியம் கொண்டது என்பார்கள். 6555

கடித்த பாக்குக் கொடாத சிற்றன்னை கடற்கரை மட்டும் வழியனுப்பினாளாம்.

கடித்த பாக்கும் கொடாத சிற்றப்பன் கடைத்தெரு வரையில் வழி விட்டானாம்.
(காத வழி வந்தானாம்.)

கடித்த பாம்புக்குப் பால் வார்த்தால் அது விஷத்தைத்தான் தரும்.
(கக்கும்.)

கடித்த பாம்புக்குப் பால் வார்த்தால் கடித்தே தீரும்.

கடித்த மூட்டை, கடியாத மூட்டை, எல்லா மூட்டையும் சரிதான். 6560

கடித்த மூட்டையும் சரி, கடியாத மூட்டையும் சரி.

கடித்த வாய் துடைத்தாற் போல.
(வாய் துடித்தாற் போல.)

கடித்தால் நாய்; மிதிபட்டால் வாய் இல்லா ஜந்து.

கடித்தாலும் கடிக்கட்டும்; நீ சொல்லாதிரு.
(சும்மாயிரு.)

கடித்த பாக்குக் கொடுக்காத சிற்றப்பன் கடைத்தெரு வரையில் வழித்துக் கொண்டு வழிவிடுவான். 6565
(சிற்றன்னை; வழிவிடுவாள்.)

கடிதான சொல் அடியிலும் வலிது.
(பெரிது.)

கடிதான பிள்ளை பெற்றோருக்கு உதவுமா?
கடிந்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்மை.
கடி நாய் எலும்புக்குப் பறந்தாற் போல.
கடிப்பதற்கு ஓர் எலும்பும் இல்லை; காதில் மினுக்க ஓலையும் இல்லை. 6570

கடிய மாட்டுக்குக் கம்பு உடையும், கொடிய மாட்டுக்குக் கொம்பு உடையும்.
கடியாத மூட்டை என்று விட்டு விடுவார்களா?
கடியும் சுருக்குத்தான்; அடியும் சுருக்குத்தான்.
கடிவாளம் இல்லாத குதிரை போல.
கடுக்கன் இட்ட நேற்றுக்குள் காது அறுந்த சுருக்கு. 6575

கடுக்கன் ஜோடியும் காளைமாட்டு ஜோடியும் அமைவது கடினம்.
கடுக்காய்க்கு அகணி நஞ்சு; சுக்கிற்குப் புறணி நஞ்சு.
கடுகிலும் கால் திட்டம் கரண்டி; அதிலும் கால் முட்டை எண்ணெய் கடன் வாங்கி என் தலை சீவிக் கட்டி, மகள் தலை வாரிக் கட்டி, மருமகன் தலை கோதிக் கட்டி, குறை எண்ணெய் வைத்த இடத்தில் அயல் வீட்டுக்காரி வந்து இடறி விட்டாள்; அது ஏரி பெருகினாற் போலப் போயிற்று.
(என்றான்.)
கடுகிற்று, முடுகிற்று, வடுகச்சி கல்யாணம்.
கடுகு அத்தனை நெருப்பு ஆனாலும் போரைக் கொளுத்தி விடும். 6580

கடுகு அளவும் களவுதான்; கர்ப்பூரக் களவும் களவுதான்.
(கடுகு அளவு எடுத்தாலும், கர்ப்பூரம் எடுத்தாலும்.)
கடுகு சிந்தினால் கலகம் வரும்.
கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.
(போகுமா?)

கடுகு செத்தாலும் கறுப்புப் போகாது.
கடுகு செத்தும் காரம் போகாது. 6585
(செங்கற்பட்டு வழக்கு.)

கடுகு போகிற இடத்தில் தடி எடுத்துக் கொண்டு திரிவான்; பூசணிக்காய் போவது தெரியாது.

கடுகு மலை ஆச்சு; மலை கடுகு ஆச்சு.
கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டினது போல.
(திருவள்ளுவ மாலை.)
கடுஞ் சிநேகிதம் கண்ணுக்குப் பொல்லாதது.
(கடும் நட்பு, பகை.)
கடு நட்பும் பகை விளைப்பு. 6590

கடும் காற்று மழை காட்டும்; கடு நட்புப் பகை காட்டும்.
(கடும் சிநேகம்.)
கடும் கோபம் கண்ணைக் கெடுக்கும்.
கடும் சிநேகம் கண்ணைக் கெடுக்கும்.
(நட்பு. கண்ணுக்குப் பகை. கண்ணுக்கு-பொல்லாப்பு.)
கடும் செட்டுக் கண்ணைக் கெடுக்கும்.
(கடும் தேட்டு.)
கடும் செட்டுக் காரியக் கேடாம். 6595

கடும் செட்டுத் தயவைக் கெடுக்கும்.
கடும் சொல் கேட்டால் காதுக்குக் கொப்புளம்.
கடும் பசி கல்மதில் உடைத்தும் களவு செய்யச் சொல்லும்.
(உடைத்தாவது.)
கடும் போரில் கைவிடலாமா?
கடு முடுக்கடா சேவகா, கம்பரிசியடா சம்பளம். 6600

கடுவெளியைக் கானல் ஜலமாய்க் கண்டது போல.
கடை அரிசி கஞ்சிக்கு உதவுமா?
கடை ஓடித் தாவும் நிலத்துக்குக் கரையடி மேட்டு நிலம் எளிது.
கடைக்குக் கடை ஆதாயம்.
கடைக்குக் கடை ஆள் இருப்பார்கள். 6605

கடைக்குக் கடை ஆள் தாவியென.
(ஆள்தான்.)
கடைக்குட்டி கட்டி மாம்பழம்.
கடைக்குப் போகக் கண்ணிக்குப் போக.
கடை காத்தவனும் காடு காத்தவனும் பலன் அடைவார்.
கடை கெட்ட நாய் கல்யாணத்துக்குப் போனதாம்; எச்சில் இலை
கிடைக்காமல் எட்டி எட்டிப் பார்த்ததாம். 6610

கடை கெட்ட மூளிக்குக் கோபம் கொண்டாட்டம்.
கடை கெட்ட மூளி சூல் ஆனாலும் காற்பணத்துக் காசு செல்லும்.
கடை கெட்ட வாழ்வு, தலை கட்ட நேரம் இல்லை.
கடைச் சோற்றுக்கு மோரும் கால் மாட்டுக்கு அணையும்.
கடைசிச் சோற்றுக்கு மோரும் கால் மாட்டிற்குப் பாயும்
வேண்டும். 6615

கடைசிப் பிடி கட்டி மாம்பழம்.
கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்
தானாம்.
கடைத் தேங்காயை எடுத்து விநாயக பூஜை செய்த கதை.
கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுப்பாள்.
(எடுக்கிறது.)
கடைந்து எடுத்த பேர் வழி. 6620

கடைப் பிறப்பு கழுதைப் பிறப்பு.
கடையச்சே வாராத வெண்ணெய் குடையச்சே வரப் போகிறதா?
கடையில் அரிசி கஞ்சிக்கு உதவுமா? அண்டை வீட்டுக்காரி புருஷன்
ஆபத்துக்கு உதவுவானா?
கடையில் அரிசி கஞ்சிக்கு உதவுமா? அவிசாரி புருஷன் ஆபத்துக்கு
உதவுவானா?
கடையில் இருக்கும் கன்னியைக் கொள். 6625

கடையில் வந்ததும் அரிசியோ? நடையில் வெந்ததும் சாதமோ?
கடையிலே கட்டித் தூக்கினாலும் அழுகற் பூசணிக்காய் அழுகலே.
கடையிலே கொண்டு மனையிலே வைக்கிறான்.
கடையிலே தேளைக் கண்டு கை அசக்கினால் நிற்குமா?
கடையும் போது வராத வெண்ணெய் குடையும் போது திரண்டு
விடுமா? 6630

கடைவாயில் ஆனை ஒதுக்கினாற் போல.
கடைவாயில் ஒட்டின பீயைப் போல.
கண் அளக்காததைக் கை அளந்து விடுமா?
கண் அறிந்தும் அயல் மனையில் இருக்கிறதா?
கண் இமை, கை நொடி அளவே மாத்திரை. 6635

கண் இமை போலக் காக்கிறான் கடவுள்.
கண் இமை போலே கரிசனமாய்க் காக்கிறது.

கண் இமையா முன்னே பறந்து போனான்.
கண் இரண்டும் இல்லாதவன் வீட்டுக்கு வைத்த விளக்கு.
கண் இருக்கிற போதே காக்கை பிடுங்குகிறது போல. 6640

கண் இருந்தும் கண்டமங்கலத்தில் பெண் கொடுப்பார்களா?
கண் இருந்தும் கிணற்றில் விழுந்ததுபோல.
கண் இருந்தும் குழியில் விழலாமா?
கண் இல்லாக் குருடனுக்கு மூக்குக் கண்ணாடி ஏன்?
கண் உள்ள போதே காட்சி; கரும்புள்ள போதே ஆலை. 6645

கண் ஊனன் கைப் பொருள் இழப்பான்.
கண் ஒளி பெரிதா? கதிர் ஒளி பெரிதா?
கண் கட்டி மந்திரமா காட்ட வந்தாய்?
கண் கட்டி வித்தை காட்ட வந்தாயோ?
கண் கட்டின புழுவைப் போல. 6650

கண் கண்ட தெய்வம்.
கண் கண்டது கை செய்யும்.
கண் கண்டு வழி நட.
கண் காணாமல் கடும் பழி சொல்கிறதா?
கண்குத்திப் பாம்பு போல் இருந்தாலும் கண்ணில் மண்ணைப் போடுகிறான். 6655
(பாம்பு போல் கண்ணில். கண் மூடிப் பார்த்திருந்தேன்.)

கண் குருட்டுக்கு மருந்து இட்டால் தெரியுமா?
கண் குருடு ஆனாலும் நித்திரையிலே குறைவில்லை.
(குறையா?)
கண் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா?
கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா?
கண் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது. 6660
(சுந்தர மூர்த்தி நாயனார் வரலாறு.)

கண் கொண்டு அல்லவோ வழி நடக்க வேண்டும்?
கண்ட இடத்தில் கத்தரி போடுவான்.
கண்ட இடத்தில் திருடன் கண் போகிறது.

கண்ட இடம் கைலாசம்.

கண்ட கண்ட கோயிலெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டேன்.
காணாத கோயிலுக்குக் காணிக்கை நேர்ந்து வைத்தேன். 6665

கண்ட தண்ணீருக்கு நிறை வேளாண்மை.

கண்டது எல்லாம் ஓடித் தின்னும் ஆடு; நின்று நின்று மேய்ந்து போகும் மாடு.

கண்டதில் பாதி சவுசிகம்; சீமையில் பாதி ஸ்ரீவத்ஸம்; பாதியில் பாதி பாரத்துவாஜம்.
(இவை அந்தணர்களினுடைய கோத்திரங்கள்.)

கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்.
(கேட்கப் பண்டிதன் ஆவான்.)

கண்டது காட்சி; பெற்றது பேறு. 6670

கண்டது கை அளவு, காணாதது உலகளவு.
(கைம் மண் அளவு)

கண்டது சொன்னால் கொண்டிடும் பகை.
(மூள்வது பகை.)

கண்டது பாம்பு; கடித்தது கருக்குமட்டை.

கண்டது பாம்பு; கடித்தது சோளத்தட்டை

கண்டது பாம்பு; கடித்தது மாங்கொட்டை. 6675

கண்டதும் மருதாணியைக் காலில் இட்டுக் கொண்டால் கொண்டவனுக்கு முன்னால் குதித்தோடிப் போகலாம்.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம்.
(கொண்டதே கொள்கை, உண்டதே மிச்சம்.)

கண்டதைக் காலை வாரி அடிக்கிறதா?
(கண்டதைக் கொண்டு.)

கண்டதைக் கேட்டதைச் சொல்லாதே; காட்டு மரத்திலே நில்லாதே.

கண்டதைக் கேளா விட்டால் கொண்டவன் அடிப்பான். 6680

கண்டதைக் கொண்டு கரை ஏற வேண்டும்.

கண்ட பாவனையா கொண்டை முடிக்கிறது?

கண்டம் இல்லாத எருமை தண்டம்.

கண்டம் ஒருத்தன்; கழுத்து ஒருத்தன்; துண்டம் ஒருத்தன்; துடை ஒருத்தன்.

கண்ட மங்கலத்து அஞ்சு பெண்களும் ஒருத்தர் போன வழி ஒருத்தர் போகார். 6685

கண்ட மாப்பிள்ளையை நம்பிக் கொண்ட மாப்பிள்ளையைக் கைவிட்டாற் போல.

கண்டர மாணிக்கத்துக் கட்டுத் தறியும் வேதம் சொல்லும்.

கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்.

கண்டவன் எடுக்கானா?

கண்டவன் எடுத்தால் கொடுப்பானா? 6690

கண்டவன் கொள்ளையும் கணியாகுளப் போரும்.
(கணியாகுளம் குமரிமாவட்டம்; 1685 நாயக்கர் படைதங்கிப் போரிட்டது.)

கண்டவன் விலை சொன்னால் கொண்டவன் கோடி உடான்.
(யாழ்ப்பாண வழக்கு.)

கண்டார் கண்டபடி பேசுகிறது.
(பேசுகிறார்கள்.)

கண்டாரைக் கேட்டாரைச் சொல்லாதே.

கண்டால் அல்லவோ பேசுவார் தொண்டைமான்? 6695

கண்டால் ஆயம்; காணா விட்டால் மாயம்.
(ஆயம்-வரி.)

கண்டால் ஒரு பேச்சு; காணா விட்டால் ஒரு பேச்சு.

கண்டால் ஒன்று; காணா விட்டால் ஒன்று.

கண்டால் கரிச்சிருக்கும்; காணா விட்டால் இனித்திருக்கும்.

கண்டால் காமாட்சி நாயக்கர்; காணா விட்டால் காமாட்டி நாயக்கன். 6700
(கவரை வடுகன். காணா விட்டால் மீனாச்சி நாயக்கன்.)

கண்டால் காயம்; காணாவிடில் மாயம்.

கண்டால் சரக்கறியேன்; காணாமல் குருக்கறியேன்.

கண்டால் கீச்சுக் கீச்சு; காணா விட்டால் பேச்சுப் பேச்சு.
(கிளி.)

கண்டால் தண்டம்; வந்தால் பிண்டம்.
(சந்நியாசிகளுக்கு.)

கண்டால் துணை; காணா விட்டால் மலை. 6705

கண்டால் தெரியாதா, கம்பளி ஆட்டு மயிரை?

கண்டால் முறை சொல்கிறது; காணா விட்டால் பெயர் சொல்கிறது.

கண்டால் ரங்கசாமி; காணா விட்டால் வடுகப்பயல்.

கண்டால் வத்தி; காணா விட்டால் கொள்ளி.

கண்டி ஆயிரம், கப்பல் ஆயிரம், சிறு கம்பை ஆயிரம். 6710
(சிறு கம்பை-தேவகோட்டையிலிருந்து கிழக்கே 12 மைல்; கப்பலூர், சிறு கம்பையூருக்கு அருகில் உள்ளது. கண்டியூர் நிலம் மாவில் ஆயிரம் கலம் விளையும். பிற ஊர் நிலப்பரப்பு அதிகம்.)

கண்டிப்பு இருந்தால் காரியம்.

கண்டியிலே ஆனைகுட்டி போட்டால் உனக்காச்சா? எனக்காச்சா?

கண்டிருந்தும் மலத்தைக் கவிழ்ந்திருந்து தின்பார்களா?

கண்டு அறிந்த நாயும் அல்ல; கனம் அறிந்த பேயும் அல்ல.

கண்டு அறிய வேண்டும் கரும்பின் சுகம்; உண்டு அறிய வேண்டும் உடல். 6715

கண்டு அறியாதவன் பெண்டு படைத்தால் காடு மேடு எல்லாம் இழுத்துத் திரிவானாம்.
(கட்டி இழுப்பானாம்; விட்டடிப்பான், காடு மேடெல்லாம் தவிடு பொடி.)

கண்டு எடுத்தவன் கொடுப்பானா?
(கொடான்.)

கண்டு எடுத்தானாம், ஒரு சுண்டு முத்தை.

கண்டு கழித்ததைக் கொண்டு குலாவினான்.

கண்டு செத்த பிணமானால் சுடுகாட்டுக்கு வழி தெரியும். 6720
(சுடுகாட்டில் எரியும்.)

கண்டு நூல் சிடுக்கெடுத்தாச்சு; வண்டி நூல் இருக்கிறது.

கண்டு பேசக் காரியம் இருக்கிறது; முகத்தில் விழிக்க வெட்கமாய் இருக்கிறது.

கண்டும் காணவில்லை, கேட்டும் கேட்கவில்லை என்று இருக்க வேண்டும்.

கண்டும் காணாதது போல் விட்டுவிட வேண்டும்.

கண்டும் காணாமலும் கேட்டும் கேட்காமலும் இருக்க வேண்டும். 6725

கண்டும் காணவில்லை, கேட்டும் கேட்கவில்லை என்று இருக்க வேண்டும்.

கண்டும் காணாததுபோல் விட்டுவிட வேண்டும்.

கண்டு முட்டு; கேட்டு முட்டு.
(முட்டு-தீட்டு.)

கண்டேன் சீதையை என்றாற் போல.

கண்ணாடி, பித்தன், கருங்குரங்கு, காட்டானை, மண்ணாளும் வேந்தனோடு ஐந்தும் பித்து. 6730

கண்ணாடியில் கண்ட பணம் கடன் தீர்க்க உதவுமா?
(கண்ணாடி நிழலில்.)

கண்ணாரக் கண்டதற்கு ஏன் அகப்பைக் குறி?

கண்ணாரக் காணாதது மூன்றில் ஒரு பங்கு.
(மூன்று பங்கு.)

கண்ணால் கண்டதற்குச் சாட்சியா?
(சாட்சி ஏன்?)

கண்ணால் கண்டது பொய்; அகப்பைக்குறி மெய். 6735
(கண்ணாரக் கண்டது. அகப்பைக்கூறு பார்த்தது.)

கண்ணாலே கண்டது பொய்; கருதி விசாரித்தது மெய்.

கண்ணாலே கண்டது பொய்; காதாலே கேட்டது மெய்.

கண்ணாலே கண்டதும் பொய்; காதாலே கேட்டதும் பொய்; ஆராய்ந்து பார்ப்பது மெய்.
(தீர விசாரித்தது மெய்.)

கண்ணாலே கண்டதை எள்ளுக்காய் பிளந்ததுபோல் சொல்ல வேண்டும்.

கண்ணாலே கண்டதைக் கையாலே செய்வான். 6740

கண்ணாலே கண்டாலும் மண்ணாலே மறைக்க வேண்டும்.

கண்ணாலே சீவன் கடகடவென்று போனாலும் வண்ணானுக்கு மழை நஞ்சு.

கண்ணாலேயும் கண்டதில்லை. காதாலேயும் கேட்டதில்லை.

கண்ணான பேர்களை மண் ஆக்குகிறான்.

கண்ணான பேரை எல்லாம் புண் ஆக்கிக் கொண்டு, கரும்பான பேரை எல்லாம் வேம்பாக்கிக் கொண்டான். 6745

கண்ணான மனசைப் புண் ஆக்குகிறான்.

கண்ணுக்கு ஆனால் புண்ணுக்கு ஆகாது.

கண்ணுக்கு இமை காதமா?
(புருவம் காதமா?)

கண்ணுக்கு இமை; பெண்ணுக்கு நாணம்,

கண்ணுக்கு என்ன கரிப்பு? 6750

கண்ணுக்குக் கண் அருகே காணலாம்.

கண்ணுக்குக் கண்ணாய் இருந்தும் கடைப் பெண்ணுக்கு வழி பார்க்கிறதா?
(பார்க்கிறான்.)

கண்ணுக்குக் கலம் தண்ணீர் விடுகிறது.

கண்ணுக்குப் புண்ணும் அல்ல; காண்பார்க்கு நோவும் அல்ல.
(நோயும்.)

கண்ணுக்கு மூக்குக் காத தூரம் இல்லை. 6755

கண்ணுக்கும் மூக்குக்கும் காலம் இப்படி வந்ததே!

கண்ணுக்கும் மூக்குக்கும் நேராகப் பார்.

கண்ணுக்குள் சம்மணம் கொட்டுவான்; கம்பத்தில் ஐந்தானை கட்டுவான்.

கண்ணும் கருத்தும் உள்ள போது இல்லாமல், கண் பஞ்சு அடைந்த பின் என்ன கிடைக்கும்?
(கிடைக்காத போது.)

கண்ணும் கலத் தண்ணீர் விடும். 6760

கண்ணும் கருத்தும் உள்ள போதே காணோம்; அவை போனபின் என்ன கிடைக்கும்?

கண்ணும் நமது; விரலும் நமது; கண்ணைக் குத்துவதா?

கண்ணும் புண்ணும் உண்ணத் தீரும்.

கண்ணும் மூக்கும் வைத்தான்; காரமும் கொஞ்சம் சேர்த்தான்.
கண்ணே. கண்ணே என்றால் உச்சி குளிருமா? 6765

கண்ணே, காதே, நமஸ்காரம்; கண்டதைக் கேட்டதைச் சொல்லாதே.

கண்ணை அலம்பி விட்டுப் பார்க்க வேண்டும்.
(கண்ணைக் கழுவி.)

கண்ணை இமை காப்பது போல.

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல.

கண்ணைக் கண்ணைக் காட்டுது, அண்ணி கழுத்துக் கருகுமணி. 6770

கண்ணைக் காட்டினால் வராதவள் கையைப் பிடித்து இழுத்தால் வருவாளா?
(காட்டி அழைத்தால்.)

கண்ணைக் குத்திய விரலைக் களைந்து எறிவார் உண்டோ?

கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது.
(சுந்தரர் வரலாறு.)

கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்தது.
(கழுத்தைக் கொடுத்தது.)

கண்ணைக் கொசு மொய்க்கக் கடை வாயை ஈ மொய்க்கப் புண்ணைப் புழு அரிக்கப் பெண்ணைப் போக விட்டாள் புங்காத்தை. 6775

கண்ணைக் கொண்டு நடந்தது போல உன்னைக் கண்டு நடந்தேன்.

கண்ணைத் தின்ற குருடனும் நியாயத்தை ஒத்துக் கொள்ள வேணும்.

கண்ணைப் பிடுங்கி முன்னே எறிந்தாலும் கண்கட்டு வித்தை என்பார்கள்.

கண்ணைப் பிதுக்கிக் காட்டியும் வித்தையா?

கண்ணை மூடிக் குட்டுகிறதா? 6780

கண்ணை மூடிக் கொண்டு காட்டில் நடப்பது போல.

கண்ணை விறைச்சுக் கொண்டு எங்கே போனாய்? கவுண்டன் செத்தான்; இழவுக்குப் போனேன்.

கண்ணோடே பிறந்த காவேரி ஆனாலும் உதட்டைச் சுட்டு உறவாடுவேன்.
கண்ணோடே பிறந்த காவேரி ஆனாலும் நம் எண்ணம் சரி ஆகுமா?
கண்ணோ, புண்ணோ? 6785

கண்ணோ புண்ணோ என்று கலங்கி மனம் திடுக்கிடுகிறது.
கண் தெரிந்து நடப்பவர்கள் பள்ளத்தில் விழ மாட்டார்கள்.
கண் தெரிந்து வழி நடக்கும்படி நினை.
கண் தெரியாமல் வழி நடக்கிறது போல.
கண் படைத்தும் குழியில் விழலாமா? 6790
(கண் படைத்தும் குழியில் விழக் கணக்கும் உண்டோ?-திருவருட்பா.)

கண் பறிகொடுத்துக் கலங்கினாற் போல.
கண் பார்த்தால் கை செய்யும்
(பார்த்ததை.)
கண் பார்த்துக் கையால் எழுதாதவன் கசடனாவான்.
கண் புண்ணிலே கோல் இட்டது போல.
கண் பெருவிரலைப் பார்க்கும் போதே கடைக்கண் உலகமெல்லாம் சுற்றும். 6795

கண் மூடர் கைப் பொருளை அழிப்பர்.
கண் மூடித் துரைத்தனம் ஆச்சே?
கண் மூடிப் பழக்கம் மண் மூடிப் போகும்.
(போக வேணும்.)
கணக்கதிகாரத்தைப் பிளக்கும் கோடாலி.
கணக்கப் பிள்ளை எல்லாம் எழுத்துப் பிள்ளையா? 6800
(எழுத்துப் பிள்ளை அல்ல.)

கணக்கப் பிள்ளை கொடுக்கைத் தூக்கி, கண்டவளெல்லாம் செருப்பைத் தூக்கி,
கணக்கப் பிள்ளை பெண்சாதி கடுக்கன் போட்டுக் கொண்டாள் என்று காரியக்காரன் பெண்சாதி காதை அறுத்துக் கொண்டாளாம்.
(மனைவி கம்மல் போட்டுக் கொண்டாள்.)
கணக்கப் பிள்ளை பெண்டாட்டி குணுக்கைப் போட்டு ஆடினாளாம்.
கணக்கன் கண் வைத்தால் கால் காணி பொட்டை.

கணக்கன் கணக்கு அறிவான்; தன் கணக்கைத் தான் அறியான். 6805

கணக்கன் கணக்கைத் தின்னா விட்டாலும் கணக்கனைக் கணக்குத் தின்று விடும்.

கணக்கன் கெட்டால் பள்ளிக்கூடம்.

கணக்கன் கணக்கைத் தூக்கி; கண்டவனெல்லாம் செருப்பைத் தூக்கி.

கணக்கன் மனைவி கடுக்கன் அணிந்தாளென்று காரியக்காரன் மனைவி காதை அறுத்துக் கொண்டாளாம்.

கணக்கன் வீட்டுக் கல்யாணம் விளக்கெண்ணெய்க்குக் கேடு. 6810

கணக்கனுக்குக் கைக் கூலி கட்டிக் குடியிருக்கக் கடன் என்றாராம்.

கணக்கனுக்குப் பட்டினி உடன் பிறப்பு.

கணக்கனுக்கு மோட்சம் இல்லை; ஒட்டனுக்கு நரகம் இல்லை.

கணக்கனைக் கண்ட இடத்தில் கண்ணைக் குத்து.

கணக்கனைப் பகைத்தாயோ? காணியை இழந்தாயோ? 6815

கணக்கனோ, குணக்கனோ?

கணக்கிலே கயிறு கோத்திருக்கிறது.

கணக்கு அதிகாரத்தைப் பிளக்கும் கோடாலி.

கணக்கு அரைக்கால், முக்காலே அரைக்கால், கணக்கன் பெண்டாட்டி தாலி அறுத்தாள்.

(கணக்கன் முக்காலே அரைக்கால்.)

கணக்கு அறிந்த பிள்ளை வீட்டில் இருந்தால் வழக்கு அறாது. 6820

கணக்கு அறிவான், காலம் அறிவான்.

கணக்குக் குஞ்சையும் காக்கைக் குஞ்சையும் கண்ட இடத்திலே கண்ணைக் குத்து.

கணக்கிலே கயிறா கோத்திருக்கிறது?

கணக்கைப் பார்த்தால் பிணக்கு வரும்.

கணபதி பூஜை கைமேலே பலன். 6825

கணவன் இல்லாத கற்புடைய பெண்ணின் கட்டழகு பயன் படாதது போல.

கணவனுக்கு மிஞ்சித் தெய்வம் இல்லை.

கணவனுக்கு மிஞ்சின கடவுள் இல்லை; கடலுக்கு மிஞ்சின ஆழம் இல்லை.
கணவனைப் பிரிந்து அயல் வீட்டில் இருக்கிறதா?
கணவனை வைத்துக் கொண்டு அல்லவோ கள்ள மாப்பிள்ளையைக் கொள்ள வேண்டும்? 6830

கணிகாலங்காரம் போல.
(கணிகா - தேவடியாள்.)

கணிசத்துக்கு இவள்; காரியத்துக்கு அவள்.
கணுக் கணுவாகக் கரும்பானாலும் ஆனைக்கு என்னவோ கடை வாய்க்குத்தான்.
கணுக்கால் பெருத்தால் கணவனைத் தின்பாள்.
கணை முற்றினால் கட்டையிலே. 6835

கணையாழி கண்டான் ஆறு கொண்டது பாதி; தூறு கொண்டது பாதி.
(கணையாழி கண்டான்-ஓரூர்.)

கத்தரிக்காய் என்று சொன்னால் பத்தியம் முறிந்து போகுமா?
கத்தரிக்காய்க்குக் காம்பு ருசி; வெள்ளரிக்காய்க்கு விதை ருசி.
கத்தரிக்காய்க்குக் கால் முளைத்தால் கடைத்தெருவுக்கு வந்தால் தெரிகிறது.
கத்தரிக்காய்க்குக் கையும் காலும் முளைத்தாற் போல். 6840

கத்தரிக்காய் சொத்தை என்றால் அரிவாள் மணை குற்றம் என்கிறாள்
(குற்றமா?)
கத்தரிக்காய் நறுக்குகிற கையும் காலும் பார்த்தால் பூசணிக் காய் வழி போகாதே, போகாதே என்கிறதாம்.
கத்தரிக்காய் வாங்கப் பூசணிக்காய் கொசுரா?
கத்தரிக்காய் விதை சுரைக்காயாய் முளைக்காது.
கத்தரிக்காய்க்குக் காலும் தலையும் முளைத்தது போல். 6845

கத்தரிக்காய் விற்ற பெட்டி காசுப் பெட்டி; வெள்ளரிக்காய் விற்ற பெட்டி வெறும் பெட்டி.
கத்தரிக்காயை நறுக்கிக் காலும் கையும் வெட்டிக் கொண்ட பெண்ணே, நீ பூசணிக்காய்ப் பக்கம் போகாதே.
கத்தரிக் கொல்லையிலே கூத்து வேடிக்கை பார்த்தது போல,

கத்தரித் தோட்டக்காரனுக்குக் கண் தெரியாது;வெள்ளரித்தோட்டக் காரனுக்குக் காது கேளாது.

கத்தரித் தோட்டத்துக் களை பிடுங்கினாற் போலும் இருக்க வேண்டும்; கன்றுக் குட்டிக்குப் புல் பிடுங்கினாற் போலும் இருக்க வேண்டும். 6850

கத்தி இருக்கும் இடத்துக்கு மறை காவுகிறதா?

கத்தி எட்டின மட்டும் வெட்டும்; பணம் எட்டாத மட்டும் வெட்டும்.
(பாயும்; பணம் பாதாளம் மட்டும் பாயும்.)

கத்தி கட்டி பெண்சாதி எப்போதும் கைம்பெண்டாட்டி.

கத்தி கூர் மழுங்கத் தீட்டுகையில் அது இரட்டைக் கூர் பட்டது போல.

கத்திப் பிடிக்குப் பிடித்தால் அரிவாள் பிடிக்கு ஆகட்டும். 6855

கத்தியும் கடாவும் போல.

கத்தியும் வெண்ணெயும் காய்ச்சித் துவைத்துக் கடை.

கத்தியைப் பார்க்கிலும் கனகோபம் கொலை செய்யும்.

கத்து, கத்து என்றால் கழுதையும் கத்தாது; சொல் சொல் என்றால் புலவனும் சொல்லான்.
(பாடு பாடு என்றால் பாடான்.)

கத்துகிற மட்டும் கத்திவிட்டுப் போகச்சே கதவைச் சாத்திக் கொண்டு போ. 6860

கதலீனாம் முதலீனாம் பலகாலே வக்ர கதி.

கதவின் கீழே நின்று கொண்டு காலைக் காலைக் காட்டினாளாம்.

கதவைச் சாத்தினால் நிலை புறம்பு.

கதி இருவர் கன்னித் தமிழுக்கு.
(கதிகம்பரும் திருவள்ளுவரும்.)

கதி கெட்ட மாப்பிள்ளைக்கு எரு முட்டை பணியாரம். 6865
(கணவனுக்கு.)

கதிர் களைந்தும் களை எடு.

கதிர் நூல் குறைந்தாலும் கள்ளச்சி கழுத்து நூல் குறையாது.

கதிர் போல இளைத்துக் குதிர் போல் பெருப்பது

கதிர் முகத்தில் என்ன ராசி முழக்கம் வேணும்?

கதிரவன் சிலரைக் காயேன் என்னுமோ? 6870
(கபிலர். அகவல்.)

கதிரிலே ஒடிக்காதே என்றால் கணுவிலே ஒடித்துப் போடுகிறாயே!
கதிருக்கு முந்நூறு நெல் இருந்தால் முழு வெள்ளாண்மை.
(விளைச்சல்.)

கதிரைக் களைந்தும் களையைப் பிடுங்கு.
கதிரைப் பார்க்கிறதா? குதிரைப் பார்க்கிறதா?
கதை அளக்கிறான். 6875

கதைக்குக் கண் இல்லை; காமத்திற்கு முறை இல்லை.
கதைக்குக் கால் இல்லை; கண்ட புருஷனுக்கு முறை இல்லை.
கதைக்குக் கால் இல்லை; கொழுக்கட்டைக்குத் தலை இல்லை; கூத்தாடிக்கு முறை இல்லை.
கதைக்குக் கால் இல்லை, பேய்க்குப் பாதம் இல்லை.
(பிட்டம் இல்லை.)

கதைக்குக் காலும் இல்லை; கத்தரிக்காய்க்கு வாலும் இல்லை. 6880

கதைக்குக் காலும் இல்லை; தலையும் இல்லை.
கதை கதையாம் காரணமாம்; காரணத்தில் ஒரு தோரணமாம்.
கதை கேட்ட நாயைச் செருப்பால் அடி.
கதை பண்ணுகிறான்.
கதை முடிந்தது; கத்தரிக்காய் காய்த்தது. 6885

கதையை நிறுத்திக் காரியத்தைப் பேசு.
கதையோ பிராமணா, கந்தையோ பொத்துகிறாய்? அல்லடி பேய் முண்டை, சீலைப்பேன் குத்துகிறேன்.
கந்தப்பூர் சிற்றப்பா நமஸ்காரம்; பாதி பொச்சை மூடிக்கொண்டு பாக்கியசாலியாய் இரு.
கந்தப் பொடிக் கடைக்காரனுக்குக் கடுகு வாசனை தெரியுமா?
கந்த புராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை. 6890

கந்த புராணம், நம் சொந்தப் புராணம்.
கந்தர் அந்தாதியைப் பாராதே; கழுக்குன்ற மாலையை நினையாதே.
(கழுக்குன்றம் மலை வழி போகாதே, தொடாதே.)
கந்தலில் கால் இட்டது போல,

கந்தன் களவுக் கல்யாணத்துக்குக் கணபதி சாட்சி.

கந்தனுக்குப் புத்தி கவட்டிலே. 6895

கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு; கூழ் ஆனாலும் குளித்துக் குடி.

கந்தை உடுத்துக் கடைவீதி போனாலும் கண்ணாடி கண்ணாடியே.

கந்தைக்கு ஏற்ற பொந்தை; கழுவுக்கு ஏற்ற கோமுட்டி.
(தகுந்த.)

கந்தைக்குச் சரடு ஏறுகிறது எல்லாம் பலம்.
(சரடு ஓட்டுகிறது.)

கந்தைத் துணி கண்டால் களிப்பாள்; எண்ணெய்த் தலை கண்டால் எரிவாள். 6900

கந்தைத் துணியும் கரி வேஷமும் ஆனான்.
(கரிக் கோலமும்.)

கந்தையை அவிழ்த்தால் குட்டி வெளிச்சம் தெரியும்.

கந்தையை அவிழ்த்தால் சிந்தை கலங்கும்.

கந்தையைக் கட்டி வெளியே வந்தால் கண்ணாட்டி; வெள்ளையைக் கட்டி வெளியே வந்தால் வெள்ளாட்டி.

கப்பரையிலே கல் விழுகிறது. 6905
(இடுவார் உண்டோ?)

கப்பல் அடிப்பாரத்துக்குக் கடற்கரை மண்ணுக்குத் தாவு கெட்டாற் போல.

கப்பல் உடைந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே.
(கவிழ்ந்தாலும்.)

கப்பல் ஏற்றிக் கடலில் கவிழ்த்தது போல.

கப்பல் ஏறிப் பட்ட கடன் கொட்டை நூற்றுப் போகுமா?
(ஓடிப்பட்ட.)

கப்பல் ஏறிய காகம் போலக் கலங்குகிறது. 6910

கப்பல் ஏறிவிட்ட காகம் கலங்குமா?

கப்பல் ஓட்டிய வாழ்வு காற்று அடித்தால் போச்சு.

கப்பல் போம்; துறை கிடக்கும்.
(நிற்கும்.)

கப்பலில் ஏற்றிக் கடலில் கவிழ்த்தது போல.
கப்பலில் ஏறிய காகம் போல. 6915

கப்பலில் பாதிப் பாக்கு.
(இட்டது போல, திருமங்கையாழ்வார் வரலாறு.)
கப்பலில் பாதிப் பாக்கைப் போட்டுவிட்டுத் தேடுவது போல.
கப்பலில் பெண் வருகிறது என்றானாம்; அப்படியானால் எனக்கு ஒன்று என்றானாம்.
கப்பலை விற்றுக் கப்பல் விற்றான், கொட்டை வாங்கித் தின்றானாம்.
கப்பற்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி; கப்பல் உடைந்தால் பிச்சைக்காரி. 6920

கப்பற்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சு.
(கப்பற்காரன் பேச்சு.)
கப்பி என்றால் வாயைத் திறக்கிறது குதிரை; கடிவாளம் என்றால் வாயை மூடிக் கொள்கிறது.
கபடச் சொல்லிலும் கடிய சொல்லே மேல்.
(கபடன் சொல்லிலும்.)
கபடாவும் இல்லை; வெட்டுக் கத்தியும் இல்லை.
கபடு இருந்த நெஞ்சும் களை இருந்த பயிரும் உருப்படா. 6925

கபடு சூது கடுகாகிலும் தெரியாது.
கபாலக் குத்துக் கண்ணைச் சுழிக்கும்.
கம்பங் கொல்லையில் மாடு புகுந்தது போல.
கம்ப சூத்திரமோ? கம்ப சித்திரமோ?
கம்பத்தில் ஏறி ஆடினாலும் கீழ் வந்துதான் தியாகம் வாங்க வேணும். 6930

கம்பத்தில் கொடுத்த பெண்ணும் வாணியனுக்குக் கொடுத்த பாரும், விளங்கா. (கம்பத்தில் நெடுந்தூரம் சென்று தண்ணீர் கொண்டு வர வேண்டும்.)
கம்பப் பிச்சையோ? கடைப் பிச்சையோ?
கம்பமே காவேரி; ரங்கனே தெய்வம்.
கம்பர் போன வழி.
கம்பர் போன வழி கண்டு கழித்தது. 6935

கம்பராமாயணம் போல்.
கம்பளி மூட்டை என்று கரடி மூட்டையை அவிழ்த்தானாம்.
(கரடியைப் பிடித்தாற் போல்.)
கம்பளி மேல் பிசின்.
கம்பளியிலே ஒட்டின கூழைப் போல.
கம்பளியிலே ஒட்டின பீ மாதிரி. 6940
(விடாது.)
கம்பளியிலே சோற்றைப் போட்டு மயிர் மயிர் என்கிறதா?
கம்பளி வேஷம்,
கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்.
(அடுப்புக் கட்டியும்.)
கம்பன் வீட்டு வெள்ளாட்டியும் கவி பாடுவாள்.
(வெள்ளாட்டி-வேலைக்காரி.)
கம்பனோ, வம்பனோ? 6945
கம்பி நீட்டினான்.
கம்புக்குக் களை பிடுங்கினாற் போலவும் தம்பிக்குப் பெண் பார்த்தாற் போலவும் ஆகும்.
கம்புக்குக் கால் உழவு.
கம்பு கொண்டு வந்து நாயை அடிப்பதா? கம்பு கிடக்கும் இடத்துக்கு நாயைத் தூக்கிக்கொண்டு போவதா?
கம்பு மாவு கும்பினால் களிக்கு ஆகுமா? 6950
(கூழுக்கு ஆகுமா?)
கம்மரீகமோ, ராஜரீகமோ?
கம்மாளப் பிணம் விறைத்தாற் போல.
கம்மாளன் இருந்த இடமும் கழுதை இருந்த இடமும் சரி.
கம்மாளன் எடுக்காத சிக்கலை வாணியன் எடுப்பான்.
கம்மாளன் குடித்தனம் பண்ணாதே. 6955
கம்மாளன் துணி வாங்கினால் கால்மயிர் தெரிய வாங்குவான்.
அதைச் சலவைக்கும் போடும் போது அடுப்பிலே போட்டாலும் வேகாது.
(சலவைக்குப் போட்டாலும் வேகாது.)
கம்மாளன் நாய் பட்டி ஒலிக்கு அஞ்சுமா?
(தொனிக்கு.)

கம்மாளன் பசுவைக் காது அறுத்துக் கொண்டாலும் உள்ளே செவ்வரக்குப் பாய்ச்சியிருப்பான்.
கம்மாளன் பசுவை காதறுத்துக் கொள்.
கம்மாளன் பசுவைக் காது அறுத்து வாங்கு. 6960
(கொள்வானாம்.)

கம்மாளன் பசுவைக் காது அறுத்துக் கொள்ள வேண்டும்.
கம்மாளன் பணம் கரியும் பொறியுமாய்ப் போய் விட்டது.
கம்மாளன் பல்லக்கு ஏறினால் கண்டவர்க்கு எல்லாம் இறங்க வேண்டும்.
கம்மாளன் பிணத்தைக் காது அறுத்தாலும் ரத்தம் வராது.
கம்மாளன் வீட்டிற் பிள்ளை பிறந்தால் தேவடியாள் வீட்டில் சர்க்கரை வழங்குவாள். 6965
(விலை மகள் தெருவில்.)

கம்மாளன் வீட்டு நாய் சம்மட்டிக்கு அஞ்சுமா?
கம்மாளன் வீட்டுப் பசுவை காதறுத்துப் பார்த்தாலும் அங்கும் செவ்வரக்குப் பாய்ந்திருக்கும்.
கமரில் ஊற்றிய பால்.
கமரில் கவிழ்த்த பால், அமரர்க்கு அளித்த அன்னம். 6970
கயா கயா.

கயிற்றுப் பிள்ளை, கைப்பிள்ளை.
(கயிற்றுப் பிள்ளை-மனைவி.)
கயிற்றைப் பாம்பு என்று எண்ணிக் கலங்குகிறது போல.
கயிறு அறுந்த பட்டம் போல.
கயிறு இல்லாப் பம்பரம் போல. 6975

கயிறு திரிக்கிறான்.
கர்ணன் கொடை பாதி, காவேரி பாதி.
கர்ணனுக்குப் பட்டினி உடன் பிறப்பு.
(கர்ணன்-கணக்கப்பிள்ளை.)
கர்த்தனைக் குருடன் கண்தான் வேண்டுவான்.
கர்த்தா, போக்தா, ஜனார்த்தனா. 6980

கர்த்தாவின் செயல் உள்ளபடி.

கர்த்தாவைக் குருடன் வேண்டுவது கண் பெறத்தானே?
கர்ப்பத்துக்குச் சுகம் உண்டானால் சிசுவுக்குச் சுகம்.
கர்ப்பிணியின் பேரில் துர்ப்பலம்.
கர்ப்பூர மலையில் ஆக்நேயாஸ்திரம் பிரயோகித்தது போல.
கர்மத்தினாலே வந்தது தர்மத்தினாலே போக வேண்டும். 6985
(தொலைக்க.)

கர்மம் முந்தியா? ஜன்மம் முந்தியா?
கர்விக்கு மானம் இல்லை; கோபிக்குப் பாபம் இல்லை.
கரகத்துத் தண்ணீர் காத வழி.
கரகத்து நீர் காதம் காக்கும்.
(கரகத்துக்கு நீர் காகம் காக்கும்.)
கரட்டுக் காட்டுக்கு முரட்டு மண் வெட்டி. 6990

கரடிக்கு உடம்பெல்லாம் மயிர்.
கரடிக்குப் பயந்து ஆனையிடம் தஞ்சம் புகுந்தாற் போல.
கரடிக்குப் பிடித்த இடம் எல்லாம் மயிர்.
கரடி கையில் அகப்பட்டவனுக்கு கம்பளிக்காரனைக் கண்டாலும் பயம்.
(உதை பட்டவனுக்கு.)
கரடி துரத்தினாலும் கைக்கோளத் தெருவில் போக இடம் இராது. 6995
(வழி இராது, இருக்குமா?)

கரடி பிறையைக் கண்டது போல.
கரடியைக் கைவிட்டாலும் கரடி கையை விடவில்லை.
கரண்டி ஆபீஸ்காரனுக்குக் காதிலே கடுக்கன் என்ன?
கரண்டி பிடித்த கையும் கன்னக்கோல் பிடித்த கையும் சும்மா இருக்குமா?
கரணம் தப்பினால் மரணம். 7000
(கரணம்-திருமணம்.)

கரதலாமலகம் போல் காண்கிறது.
கரம் கொண்டவன் அறம் வழுவலாகாது.
கரம் பற்றிய கன்னியைக் கதற அடிக்கக் கூடாது.
கரம் மாறிக் கட்டினால் கனம் குறையாது.
கரிக்காலி முகத்தில் விழித்தால் கஞ்சியும் கிடையாது. 7005

கரிக்குருவியார் கண்ணுக்குக் காக்கையார் பொன்னொத்துத் தோன்றும்.
(சீவக சிந்தாமணி.)

கரிச்சுக் கொட்டினால் எரிச்சல் வராதா?
கரிசனப்பட்ட மாமியார் மருமகளைப் பார்த்து ஏக்கம் உற்றாளாம்.
கரிசனம் உள்ள கட்டியம்மா, கதவைத் திற பீப்பெய்ய.
கரிசனம் உற்ற சிற்றாத்தே, நீ கம்பங்கொல்லையில் வாடி கட்டி அழ. 7010

கரிசனம் எல்லாம் கண்ணுக்குள்ளே; வஞ்சனை எல்லாம் நெஞ்சுக்குள்ளே.
கரியாய் உமியாய்க் கட்டை விளக்குமாறாய்.
கரியை வழித்து முகத்தில் தடவினாள்.
கரி விற்ற பணம் கறுப்பாய் இருக்குமா?
(விற்ற காசு கரியாய் இருக்குமா? கறுக்குமா?)
கரு இல்லாத முட்டையும் குரு இல்லாத வித்தையும். 7015
(சிஷ்யனும்.)

கருக்கலில் எழுந்தாலும் நறுக்கென்று சமைக்க மாட்டாள்.
கருக்கலில் கயிற்றைப் பாம்பு என்ற கதை.
கருக்கி உருக்கி நெய் வார்த்தாலும் கண்ட நியாயந்தான் சொல்லுவான்.
கருங்கண்ணி பட்டாலும் கரையான் கண்ணாலும் திரும்பிப் பாரான்.
கருங்கல்லில் ஈரம் ஏறாத் தன்மை போல. 7020

கருங்கல்லில் எழுதிய எழுத்தைப் போல.
கருங்கல்லிலே நார் உரிப்பான்.
கருங்காலி உலக்கைக்கு வெள்ளிப் பூண் கட்டினது போல.
கருங்காலிக் கட்டைக்கு வாய் நாணாத கோடாலி இளவாழைத் தண்டுக்கு வாய் நாணும்.
(கோணாத கோடாலி, கதலித்தண்டுக்குக் கோணி விடும்.)
கருங்குரங்கு போல மலங்க விழிக்காதே. 7025

கருங்கொல்லன் உலைக்களத்தில் நாய்க்கு என்ன வேலை?
கருடன் இடம் போனால் எவன் கையில் பொருளும் தன் கையில் சேரும்.
(பிறன் கைப்பொருள், தன் கைப்பொருள்.)

கருடன் காலில் கெச்சை கட்டினது போல.
(சதங்கை.)
கருடன் பறக்க ஒரு கொசு பறந்தாற் போல.
கருடனுக்கு முன் ஈ ஆகுமா? 7030

கருடன் முன்னே கொசு பறந்த கதை.
கருடனுடன் ஊர்க்குருவி பறந்தது போல.
கருடனைக் கண்ட பாம்பு போல.
(சர்ப்பம்.)
கருடி கற்றவன் இடறி விழுந்தால் அதுவும் ஒரு வித்தை.
கருப்பங்கட்டி ஆதாயத்தை எறும்பு இழுத்துக் கொண்டு போச்சுதாம். 7035

கருப்பங்கட்டியிலும் கல் இருக்கும்.
கருப்பங் கொல்லையிலே நெருப்புப் பொறி விழுந்தாற்போல்.
கருப்பட்டி என்றவுடனே சளப்பட்டி என்று நக்கக் கூடாது.
(என்றவன் வாயைக் கருப்பட்டி என்று.)
கருப்பட்டியிலும் கல் இருக்கும்.
(உண்டு.)
கருப்பட்டியைக் கொடுத்துக் கட்டிக்கொண்டு அழுதாலும் கசக்குது என்று சொல்கிறான். 7040

கருப்பட்டி லாபம் என்று புழுத்துப் போன கதை.
கருப்பிலே பிள்ளை விற்றாற்போல.
(விற்ற கதை. கருப்பு-பஞ்சம்.)
கருப்புக் கட்டி ஆதாயத்தை எறும்பு இழுத்துக் கொண்டு போயிற்றாம்.
கருப்புக் கட்டிக்கு எறும்பு தானே வரும்.
கருப்புக் கட்டியிலும் கல் கிடக்கும். 7045

கருப்புக்கு இருந்து பிழை; கலகத்துக்கு ஓடிப் பிழை.
கருப்பூர் மத்யஸ்தம் போல.

கருப்பூர் வழக்குப் போல.
கரும்பில் எறும்பு இருந்தால் ஆனைக்கு என்ன?
கரும்பிலும் தேன் இருக்கும். 7050

கரும்பிலும் தேன் இருக்கும்; கள்ளியிலும் பால் இருக்கும்.
கரும்பு ஆலையில் பட்ட எறும்பு போல.
(அகப்பட்ட.)
கரும்பு இருக்க இரும்பு கடித்து எய்த்தாற்போல்.
(தேவாரம்.)
கரும்பு உள்ள போதே ஆலை ஆட்டிக்கொள்.
(ஆலையிடு. ஆட்டவேணும்.)
கரும்புக் கட்டாலே கழுதையை அடித்தால் கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி? 7055

கரும்புக் கட்டுக்கு எறும்பு தானே வரும்.
கரும்புக்கு உழுத புழுதி காயச்சின பாலுக்குச் சர்க்கரை ஆகுமா?
கரும்புக்குக் கணு இருந்தாலும் கசக்குமா?
கரும்புக்குப் பழமும் கற்றவருக்குப் பணமும் பொன்னுக்கு மணமும் இல்லை.
கரும்புக் கொல்லையைக் காக்க ஆனையை விட்டது போல. 7060

கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தன்னோடு வரும்.
கரும்பு கசத்தல் வாய்க் குற்றம்.
கரும்பு கசந்தால் வாய்க்குப் பொல்லாப்பு.
கரும்பு கசந்தது காலத்தோடே; வேம்பு தித்தித்தது வேளையோடே.
கரும்பும் எள்ளும் கசக்கினால்தான் பலன். 7065

கரும்பு முறித்துக் கழுதையை அடித்த கதை.
கரும்பும் வேம்பு ஆகும் காதல் போதையிலே.
கரும்பும் வேம்பு ஆச்சே.
கரும்பு ருசி என்று வேரோடு பிடுங்கலாமா?

கரும்பு லாபம் எறும்பு கொண்டு போகும். 7070

கரும்பு வைப்பது காணி நிலத்தில்.
கரும்பைக் கழுதை முன் போட்டால் அதற்குத் தெரியுமோ கரும்பு ருசி?
கரும்பைக் கையில் பிடித்தவன் எல்லாம் மன்மதன் ஆகிவிடுவானா?
கரும்பை நறுக்கிப் பிழிந்தாற் போல.
கரும்பை முறித்தாற் போல. 7075

கரும்பை முறித்துக் கழுதையை அடித்த கதை.
கரும்பை விரும்ப அது வேம்பு ஆயிற்று.
கரும்பை விரும்ப விரும்ப வேம்பு.
கரும்பை வேம்பு ஆக்கினாற் போல.
கரும ஒழுங்கு பெருமைக்கு அளவு. 7080
(அழகு.)

கருமத்தை முடிக்கிறவன் அருமை பாரான்.
(ஒன்றும் பாரான்.)
கருமத்தை முடிக்கிறவன் கடலை ஆராய்வான்.
கருமம் தொலையாது.
கருமான் இருந்த இடமும் கழுதை புரண்ட களமும் சரி.
கருமான் உலைக்களத்தில் நாய்க்கு என்ன வேலை? 7085

கருமான் வீட்டு நாய் சம்மட்டித் தொனிக்கு அஞ்சுமா?
கருவளையும் கையுமாய்.
கருவேல மரத்திற்கு நிழல் இல்லை; கன்னானுக்கு முறை இல்லை.
கருவை உரு அறியான், கண்டாரைப் பேர் அறியான்.
கரைக்கும் கரைக்கும் சங்கிலி; நடுவிலே இருக்கிறவன் நாய் விட்டை. 7090

கரை காணாத தோணிபோலத் தவிக்கிறது.
(கப்பலைப் போல.)
கரை தட்டின கப்பலைப் போல.
(கப்பற்காரன் போல.)

கரைப் பக்கம் பாதை இருக்கக் கப்பல் ஏறினவனும், சொல்லாததை மனையாளுக்குச் சொன்னவனும் பட்ட பாடுபோல.
கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.
(கலைப்பார்.)
கல் அடிச் சித்தன் போனவழி (காடு) வீடெல்லாம் தவிடு பொடி. 7095

கல் அடி பட்டாலும் கண் அடி படக் கூடாது.
கல் ஆனாலும் கணவன்; புல் ஆனாலும் புருஷன்.
கல் ஆனாலும் தடி ஆனாலும் பல் போகிறது ஒன்று.
கல் உள்ளதே கிணறு; கரை உள்ளதே தோட்டம்.
கல் எடுத்தால் நாய் ஓடும்; கம்பு எடுத்தால் பேய் ஓடும். 7100

கல் எல்லாம் மாணிக்கக் கல் ஆமோ?
கல் எறிக்குத் தப்பினாலும் கண் எறிக்குத் தப்பிக்க முடியாது.
(கூடாது.)
கல் என்றாலும் கணவன்; புல் என்றாலும் புருஷன்.
கல் ஒன்று, கணக்கு ஒன்று, குதிரை ஒன்று, கூத்தியாள் ஒன்று.
(கொங்கு நாட்டுக் குருக்களுக்கு உள்ளவை.)
கல் கிணற்றுக்கு ஏற்ற இரும்புத் தோண்டி. 7105

கல் கிள்ளிக் கை உய்ந்தார் இல்.
(பழமொழி நானூறு.)
கல் பிறவாத காடே உழு.
கல்மேல் எழுத்துக் கலைமான்.
கல்மேல் எழுத்துப் போல.
கல்மேல் நெல் விளையும் கல்யாணம் முடி. 7110

கல்யாணச் சந்தடியில் தாலி கட்ட மறந்த கதை போல.
கல்யாணத்தில் பஞ்சம் இல்லை.
கல்யாணத்திலும் பஞ்சம் இல்லை; களத்திலும் பஞ்சம் இல்லை.
கல்யாணத்துக்கு உதவாத பூசணிக்காய் பந்தலிலே கட்டி ஆடுகிறது.
கல்யாணத்துக்கு வந்த பெண்டுகளிடத்தில் போனால் போவேன்; இல்லாவிட்டால் கல்லிலே வைத்து நறுக்குவேன். 7115

கல்யாணத்தை நிறுத்தச் சீப்பை ஒளித்து வைத்தது போல.
கல்யாணப் பஞ்சமும் களப்பஞ்சமும் இல்லை.
(கல்யாணப் பஞ்சம் உண்டு.)
கல்யாணப் பந்தலிலே கட்டின ஆடு போல.
கல்யாணப் பந்தலிலே தாலி கட்ட மறந்தது போல்.
கல்யாணம் ஆகாதவனுக்கு ஒரு கவலை; கல்யாணம் ஆனவனுக்கு ஆயிரம் கவலை. 7120

கல்யாணம் எங்கே? காசுப் பையிலே.
கல்யாணம் என்றால் கிள்ளுக் கீரையா?
கல்யாணம் கழிந்தால் கைச்சிமிழ் கிட்டாது.
கல்யாணம், கார்த்திகை, சீர், செனத்தி.
கல்யாணம் செய்கிறதும் கதவைச் சாத்துகிறதும். 7125

கல்யாணம் செய்தும் சந்நியாசியா?
கல்யாணம் பண்ணவில்லையென்று களிப்பு; ஊர்வலம் வரவில்லையென்று உளப்பு.
(ஓளப்பு.)
கல்யாணம் பண்ணாமல் பைத்தியம் தீராது; பைத்தியம் தீராமல் கல்யாணம் ஆகாது.
கல்யாணம் பண்ணிக்கொள் என்றால், நீயே பெண்டாட்டியாய் இரு என்றது போல.
கல்யாணம் பண்ணியும் சந்நியாசி; கடன் வாங்கியும் பட்டினி. 7130

கல்யாணம் பண்ணின வீட்டில் ஆறு மாசம் கருப்பு;
(கருப்பு-பஞ்சம்.)
கலயாணம் பண்ணும் வரையில் பிள்ளை; கண்ணை மூடும் வரையில் பெண்.
கல்யாணம் போவதும் கட்டி அழுவதும் வட்டியில்லாக் கடன்.
கல்யாணம் முடிந்த பிறகு பந்தலில் வேலை என்ன?
கல்யாணமும் வேண்டாம்; கல்லெடுப்பும் வேண்டாம். 7135

கல்யாண வீட்டில் ஆறு மாதம் கருப்பு.
கல்யாண வீட்டில் கட்டி அழுகிறவள் இழவு வீட்டில் விட்டுக் கொடுப்பாளா?
கல்யாண வீட்டிலே கட்டி அழலாமா?
கல்யாண வீட்டிலே பந்தற்காலைக் கட்டி அழுகிறவன் செத்த வீட்டில் சும்மா இருப்பாளா?
கல்யாண வீட்டிலே பிள்ளை வளர்த்தாற்போல். 7140

கல்யாண வீட்டிற்குப் போய் அறியான்; மேளச்சத்தம் கேட்டு அறியான்.
கல்யாண வீட்டுக் கறி அகப்பை; சாவு வீட்டுச் சோற்று அகப்பை.
கல்யாணி என்கிற பெண்ணுக்குக் கல்யாணமும் வேண்டுமோ?
கல்லடி சித்தன் போன வழி காடு மேடு எல்லாம் தவிடுபொடி.
கல்லன் கரியும் கொல்லன் குசவுமாய்ப் போச்சு. 7145

கல்லா ஒருவன் குல நலம் பேசுதல் நெல்லுடன் பிறந்த பதராகும்மே!
(வெற்றி வேற்கை.)
கல்லாடம் படித்தவனோடு சொல்லாடாதே.
(மல்லாடாதே.)
கல்லாதவரே கண் இல்லாதார்.
கல்லாதார் செல்வத்திலும் கற்றார் வறுமை நலம்.
கல்லாமல் குல வித்தை பாதி வரும். 7150

கல்லார் உறவிலும் கற்றார் பகை நலம்.
கல்லார் உறவு அகல்; காமக் கடல் கட.
கல்லாலே கட்டிச் சாந்தாலே பூசியிருக்கிறதா?
கல்லில் நார் உறிப்பவன்.
கல்லில் நெல் முளைத்தாற்போல. 7155
(அருமைப்பாடு.)

கல்லிலும் வன்மை கனமூடர் நெஞ்சு.
கல்லிலே நார் உரிக்கிறது போல.

கல்லிலே வெட்டி நாட்டினது போல.
கல்லின்மேல் இட்ட அம்புகளைப் போல.
கல்லின்மேல் இட்ட கலம் 7160

கல்லினுள் தேரையையும் முட்டைக்குள் குஞ்சையும் ஊட்டி வளர்ப்பது யார்?
கல்லுக் கிணற்றுக்கு ஏற்ற இருப்புத் தோண்டி.
கல்லுக்கும் முள்ளுக்கும் அசையாது வெள்ளிக்கிழமைப் பிள்ளையார்.
கல்லுக்குள் இருக்கிற தேரையையும் முட்டைக்குள் இருக்கிற பறவைக் குஞ்சையும் ஊட்டி வளர்க்கிறவர் யார்?
கல்லுக்குள் தேரையைக் காப்பாற்றவில்லையா? 7165

கல்லுப் பிள்ளையாரைக் கடித்தால் பல்லுப் போம்.
கல்லும் கரியும் கொல்லன் குசுவுமாய்ப் போச்சு.
கல்லும் கரைய மண்ணும் உருக அழுதாள்.
கல்லும் கரையுமே, கற்றூணும் இற்றுப் போமே!
கல்லும் காவேரியும் உள்ள மட்டும் வாழ்க! 7170

கல்லும் தேங்காயும் சந்தித்தது போலப் பேசுகிறான்.
கல்லுளிச் சித்தன் போன வழி காடு மேடெல்லாம் தவிடுபொடி.
கல்லுளி மங்கா, கதவைத் திற.
கல்லே தலையணை, கானலே பஞ்சு மெத்தை.
கல்லை ஆகிலும் கரைக்கலாம்; கல்மனத்தைக் கரைக்கலாகாது. 7175

(மூர்க்கன் மனத்தை.)

கல்லை இடறினாலும் கணக்கனை இடறாதே.
(கல்லோடு, கணக்கனோடு.)

கல்லை எதிர்த்தாலும் கணக்கனை எதிர்க்காதே.
கல்லைக் கட்டிக் கொண்டு கசத்தில் இறங்குவது போல.
கல்லைக் கட்டி முத்தம் கொடுத்தாற்போல.
கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம். 7180

கல்லைக் கிள்ளிக் கை இழந்தது போலாம்.
கல்லைக் கிள்ளினால் கை நோகும்.
கல்லைக் குத்துவானேன்? கைநோகுதென்று அழுவானேன்?

கல்லைப் பிளக்கக் காணத்தை விதை.
(பிளந்து.)
கல்லைப்போல் அகமுடையான் இருக்கக் கஞ்சிக்கு அழுவானேன்? 7185

கல்லைப் போலக் கணவன் இருக்க நெற்சோற்றுக்கு அழுவானேன்?
கல்லைப் போலப் பெண்டாட்டி இருக்கக் கடப்பை அரிசிச் சோற்றுக்கு நிற்பானேன்?
கல்லோடு இடறினாலும் கணக்கனோடு இடறாதே.
(முரணினாலும்.)
கல் வருகிற விசையைக் கண்டால் பல்லைச் சிக்கென மூட வேண்டும்.
கல்வி அழகே அழகு. 7190
(நாலடியார்.)

கல்வி இல்லாச் செல்வம் கற்பில்லா அழகு.
(அழகி. கடுகளவும்பிரகாசிக்கா.)
கல்வி உள்ள வாலிபன் கன கிழவனே.
(கற்றவன் கன கிழவன்.)
கல்வி என்ற பயிருக்குக் கண்ணீர் என்ற மழை வேண்டும்.
கல்வி ஒன்றே அழியாச் செல்வம்.
கல்விக்காரப் பெண்ணாள் களைவெட்டப் போனாள்; களைக்கொட்டு இல்லையென்று மெனக்கெட்டுப் போச்சு. 7195

கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்.
கல்விக்கு இருவர், களவுக்கு ஒருவர்.
கல்வி கரை இல; கற்பவர் நாட் சில.
(நாலடியார்.)
கல்வி கற்கிறதைவிடக் கருத்தை ஆராய்கிறது நன்மை.
(தன் கருத்தை.)
கல்வி கற்றும் கழுநீர்ப் பானையில் கை இடுகிறது. 7200
(விடுவது போல.)

கல் விதைத்து நெல் அறுத்தவர் யார்?
கல்வியிற் பெரியவன் கம்பன்.
கல்வியும் குலமும் வெல்வது வினவின்.
கல் விழுந்தாலும் விழும்; காய் விழுந்தாலும் விழும்.

கல் வீட்டில் இருக்கும் கடனும் தெரியாதாம்; கறுப்புப் புடைவையில்
இருக்கும் அழுக்கும் தெரியாதாம். 7205

கல்வீட்டுக்காரி போனால் கழுக்கம்; கூரை வீட்டுக்காரி
போனால் கூச்சம்.
கல உமி நின்றால் ஓர் அரிசி தட்டாதா?
(ஓர் அவிழ்.)
கல உமி தின்றால் ஓர் அவல் கிடைக்காதா?
கலக்கத்தில் கலக்கம் கடன் கொண்டார் நெஞ்சக் கலக்கம்.
கலக்கந்தை கட்டிக் காணப் போனால் இருகலக் கந்தை கட்டி
எதிரே வந்தாள். 7210

கலக்கம் இல்லா நெஞ்சுக்கு இனக்காப்பு என்ன?
கலக்கம்பு தின்றாலும் காடை காட்டிலே.
கலக்கம்பு போட்டு வளர்த்தாலும் காடை காட்டிலே.
கலக்க விதைத்தால் களஞ்சியம் நிறையும்; அடர விதைத்தால்
போர் உயரும்.
கலக்கிய தண்ணீரில் செளிற்று மீன் வாய் திறந்து தவிப்பது
போல. 7215

கலக்கினும் தண் கடல் சேறு ஆகாது.
கலத்தில் இட்டாயோ, வயிற்றில் இட்டாயோ?
கலத்தில் சாதம் போட்டதும் காசிக்குப் போனவனும் வருவான்.
க்லகத்திலே புளுகாதவன் நரகத்திலே போவானாம்.
(புகாதவன்.)
கலகத்திலே புளுகாதவர் இல்லை. 7220

கலகத்திலே போயும் கால்மாடு தலைமாடா?
(போன பிற்பாடு.)
கலகம் கலந்தால் உலகம் கலங்கும்.
கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.
கலகமே மெய்யானால் புளுகாதவன் பாவம்.
கலத்தில் இட்டுக் கையைப் பிடிக்காதே. 7225
(பிடிக்கிறதா.)

கலத்தில் சோற்றை இட்டுக் கையைப் பிடித்தாற்போல.
கலத்துக்குத் தெரியுமா, கர்ப்பூர வாசனை?
கலந்த விதைப்புச் சிறந்த பலனைத் தரும்.
கலப் பணத்தைக் காட்டிலும் ஒரு கிழப் பிணம் நல்லது.
கலப் பயறு விதைத்து உழக்குப் பயிர் விளைந்தாலும் புதுப் பயறு புதுப் பயறுதான். 7230

கலப் பால் கறக்கலாம்; துளிப் பால் முலைக்கு ஏற்றலாமா?
(உழக்குப் பால் ஏற்ற முடியுமா?)
கலப் பால் கறந்தாலும் கன்று முதலாகுமா?
கலப் பால் குடித்த பூனை ஆழாக்குப் பால் குடியாதா?
(உழக்குப் பால்)
கலப் பால் குடித்த பூனை ஓர் உழக்காகிலும் கறக்கத் தருமா?
கலப் பால் கூடி ஒரு கன்று ஆகுமா? 7235

கலப் பாலில் ஒரு துளி விஷம் கலந்தாற் போல.
கலப் பாலுக்குத் துளி பிரை.
கலப் பாலை ஒருமிக்கக் குடித்த பூனையை உழக்காகிலும் கறக்கச் சொன்னால் கறக்குமா?
கலப் பாலைக் காலால் உதைத்துவிட்டு விலை மோருக்கு வெளியே அலைகிறதா?
(விலை மோருக்கும் கூழுக்கும் வெளியே தவிக்கிறதா?)
கலப்பு ஆனாலும் பூசப் பூசப் பொன் நிறம். 7240

கலப்புல் தின்றாலும் காடை காட்டுக்குள்ளே.
கலப்புழுவை நீக்கின கர்ணன்.
கலம் கந்தை கொண்டு காண வந்தாள்; இருகலக் கந்தை கொண்டு எதிரே வந்தாள்.
கலம் கலந்தால் குலம் கலக்கும்.
கலம் கிடக்கிறது கழுவாமல்; கல நெல் கிடக்கிறது குத்தாமல். 7245

கலம் குத்தினாலும் பதர் அரிசி ஆகாது.
கலம் குத்துகிறவள் காமாட்டி; கப்பி குத்துகிறவள் சீமாட்டி.
கலம் பதரைக் குத்தினாலும் அரிசி ஆகாது.

கலம் பாலுக்குத் துளிப் பிரை.
கலம் போனதும் அல்லாமல் கண்ணுக்கும் மூக்குக்கும் வந்ததுபோல. 7250

கலம் மா இடித்தவள் பாவி; கப்பி இடித்தவள் புண்ணியவதியா?
கலவன் கீரை பறிப்பது போலப் பேசுகிறாள்.
(கலவைக்கீரை.)
கலிக்குப் புதுமையான காரியம் இருக்கிறது.
கலிக்கும் கிலிக்கும் கந்தனை எண்ணு.
கலி காம தேனு. 7255

கலி காலத்திலே கண்ணுக்கு முன் காட்டும்.
கலியன் பாற்சோறு கண்டது போல.
கலெக்டரோடு வழக்குக்குப் போனாலும் கணக்கனோடு வம்புக்குப் போகக் கூடாது.
கலை பல கற்றாலும் மலைப்பது போல இருக்கும்.
கலையும் மப்பைக் கண்டு கட்டி இருந்த விதையை வட்டிக்கு விட்டானாம். 7260

கலையும் மப்பைக் கண்டு கரைத்த மாவை வட்டிக்கு விட்டதுபோல.
கவ்வை சொல்லின் எவ்வர்க்கும் பகை.
கவடு இருந்த நெஞ்சும் களை இருந்த பயிரும் கடைத்தேறா.
கவண் எறி நிலை நில்லாது; கண்டவன் தலையை உடைக்கும்.
கவண் எறி நெறியில் நில்லாதே; கண்டவன் தலையை உடைக்கும்? 7265

கவரைச் செட்டி மேலே கழுதை புரண்டு ஏறினாற் போல.
கவலை இல்லாக் கஞ்சி கால் வயிற்றுக்குப் போதும்.
கவலை உடையாருக்குக் கண் உறக்கம் வராது.
(இல்லை.)
கவி அறியாவிடில் ரவியும் அறியான்.
கவி கண் காட்டும். 7270

கவி கொண்டாருக்குக் கீர்த்தி; அதைச் செவி கொள்ளாருக்கு அபகீர்த்தி.
கவி கொண்டாருக்கும் கீர்த்தி; கலைப்பாருக்கும் கீர்த்தியா?

கவிதை எழுதின கை கணக்கு எழுதுகிறது.
கவிழ்ந்த பால் கலம் ஏறாது.
கவீந்திராணாம் கஜேந்திராணாம் ராஜாவே நிர்பயோகி. 7275

கவுண்டன் கல்யாணம் ஒன்று இரண்டாய் முடிந்து போச்சு.
கவுண்டன் வீட்டு எச்சில் இலைக்கு கம்பன் வீட்டு நாய்கள் எல்லாம் அடித்துக் கொள்கின்றன.
கவைக்கு உதவாத காரியம்.
கவைக்குக் கழுதையையும் காலைப் பிடி.
கவைக்குத் தகாத காரியம் சீமைக்குத் தகுமா? 7280

கவையை ஓங்கினால் அடி இரண்டு.
கவையைப் பற்றிக் கழுதையின் காலைப் பிடி.
கழனிக்கு அண்டை வெட்டிப் பார்; கண்ணுக்கு மை இட்டுப் பார்.
கழனியில் விழுந்த கழுதைக்கு அதுவே கைலாசம்.

(புரண்ட.)

கழி இருந்தால் கழுதையை மேய்த்துக் கொள்ளலாம். 7285

கழிச்சலும் விக்கலும் சேர்ந்தால் நம்பப் படாது.
கழித்த பாக்குக் கொடுக்காத பெரியாத்தாள் கடற்கரை வரை வந்து வழி விட்டாளாம்.

(செட்டிநாட்டு வழக்கு.)

கழு ஏறத் துணிந்த நீலி கையில் மை இட்டதற்குக் கரிக்கிறது என்றாளாம்.

(கண்ணில் மை கரிக்கிறது என்றாளாம்.)

கழு ஒன்று, களவு ஆயிரம்.
கழுக்கு மொழுக்கு என்று இருக்கிறான். 7290

கழுக்கு மொழுக்கு என்று கட்டுருக் காளை போல.
கழுகாய்ப் பிடுங்குகிறான்.

(கழுகுபோல்.)

கழுகுக்கு மூக்கிலே வேர்த்தாற் போல.
கழுத்தில் இருக்கிறது ருத்திராட்சம்; கையிலே இருக்கிறது கொடிய நகம்.
கழுத்தில் இருக்கிறது ருத்திராட்சம்; மடியில் இருப்பது கன்னக் கோல். 7295

(கட்கத்தில். கையில்.)

கழுத்திலே கரிமணி இல்லை; பெயர் முத்துமாலை.

கழுத்திலே குத்துகிறது கண் கெட்டவனுக்குத் தெரியாதா?

கழுத்திலே தாலி ஏறினால் நாய்மாதிரி வீட்டில் கிடக்க வேண்டியது தானே?

கழுத்துக்குக் கருகுமணி இல்லை; பெயர் முத்தாபரணம்.

கழுத்திலே தாழி வடம்; மனத்திலே கரவடம். 7300
(அவகடம்.)

கழுத்து அறுக்கக் கத்தி கையில் கொடுத்தது போல.

கழுத்துக்குக் கீழே போனால் கஷ்டம்.

கழுத்துக்குமேல் கத்தி வந்திருக்கச்சே செய்ய வேண்டியது என்ன?

கழுத்துக்குமேல் சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன?

கழுத்து மாப்பிள்ளைக்குப் பயப்படாவிட்டாலும் வயிற்றுப் பிள்ளைக்குப் பயப்பட வேண்டும். 7305

கழுத்து வெளுத்தாலும் காக்கை கருடன் ஆகுமா?

கழுத்தைக் கொடுத்தாச்சு; கைவிலங்கு போட்டாச்சு; பத்து நாள் சிறையில் பதுங்கிக் கிடக்க வேணும்.

கழுத்தைக் கொடுத்தாலும் எழுத்தைக் கொடாதே.

கழுதை அறியுமா, கந்தப்பொடி வாசனை?
(கர்ப்பூர வாசனை.)

கழுதை உழவுக்கு வராது. 7310

கழுதை உழுகிறவன் குடியானவனா?

கழுதை உழுது கம்பு விளையுமா? கண்டியான் உழுது நெல் விளையுமா?

கழுதை உழுது குறவன் குடி ஆனானா?

கழுதை உழுது வண்ணான் குடி ஆனானா?

கழுதைக் காமம் கத்தினால் தீரும்; நாய்க் காமம் அலைந்தால் தீரும். 7315

கழுதைக்கு உபதேசம் காதில் ஏறுமா?
(உபதேசம் செய்தால்.)

கழுதைக்கு உபதேசம் காதிலே ஓதினாலும் காள் காள் என்ற புத்தியை விடாது.

கழுதைக்கு உபதேசம் காதிலே சொன்னாலும் அபயக் குரலன்றி அங்கொன்றும் இல்லை.
(அங்கேதும்.)

கழுதைக்கு உபதேசம் காதிலே சொன்னாலும் அவயக் குரலே ஒழியச் சுவைக்குரல் இல்லையாம்.
(உரைத்தாலும்.)

கழுதைக்கு உபதேசம் பண்ணினால் அபத்தக் குரலைத் தவிர நல்ல குரல் இல்லை. 7320

கழுதைக்கு ஏன் கடிவாளம்?
(ஏன் கலினம்?)

கழுதைக்குக் காது அறுந்து, நாய்க்கு வால் அறுந்தது போல.

கழுதைக்குச் சேணம் கட்டினால் குதிரை ஆகுமா?
(ஜீனி கட்டினால்.)

கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி?
(கஸ்தூரி வாசனை.)

கழுதைக்குப் பரதேசம் குட்டிச் சுவர். 7325

கழுதைக்குப் பின்னால் போகாதே; எஜமானுக்கு முன்னால் போகாதே.

கழுதைக்கு வரி கட்டினால் குதிரை ஆகுமா?

கழுதைக்கு வாழ்க்கைப்பட்டு உதைக்கு அஞ்சலாமா?

கழுதை கத்து என்றால் கத்தாதாம்; தானாகக் கத்துமாம்.

கழுதை கெட்டால் குட்டிச் சுவர்; நாய் கெட்டால் குப்பைத் தொட்டி. 7330

கழுதை தப்பினால் குட்டிச் சுவர்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல.

கழுதை நினைத்ததாம் கத்தலும் கதக்கலும்.

கழுதை நினைத்ததாம் கெண்டை போட்ட முண்டாசு.

கழுதைப் பாரம் வண்ணானுக்கு என்ன தெரியும்? 7335

கழுதைப் பால் குடித்தவன் போல் இருக்கிறான்.

கழுதைப் புட்டை ஆனாலும் கைநிறைய வேண்டும்.
(விட்டை. லத்தி.)
கழுதைப் புண்ணுக்குத் தெருப்புழுதி மருந்து.
கழுதைப் பொதியில் உறை மோசமா?
(மாறாட்டமா?)
கழுதைப் பொதியில் ஐங்கலம் மாறாட்டமா? 7340

கழுதை புரண்ட களம் போல.
கழுதை புரண்டால் காடு கொள்ளாது.
கழுதை புவியில் இருந்தால் என்ன? பாதாளத்தில் இருந்தால் என்ன?
கழுதை மயிர் பிடுங்கித் தேசம் கட்டி ஆள்கிறதா?
கழுதை மூத்திரத்தை நம்பிக் கட்டுச் சோற்றை அவிழ்க்கிறதா? 7345

கழுதைமேல் ஏறி என்ன? இறங்கி என்ன?
கழுதைமேல் ஏறியும் பெருமை இல்லை; இறங்கியும் சிறுமை இல்லை.
கழுதையாகப் போய்க் கட்டெறும்பாய்த் திரும்பி வந்தது.
கழுதையாய்ப் பிறந்தாலும் காஞ்சீபுரத்திலே பிறக்க வேணும்.
கழுதையின் எறியைக் கழுதைதான் தாங்க வேணும். 7350

கழுதையின் காதிலே கட்டெறும்பை விட்டாற் போல.
(பிட்டத்தில்.)
கழுதையும் குதிரையும் சரி ஆகுமா?
கழுதையும் நாயும் சேர்ந்து கத்தினாற்போல.
கழுதையும் பணமும் சேர்ந்து வந்தால் பணத்தை வாங்கிக் கொண்டு கழுதையைத் துரத்தி விடு.
கழுதையைக் கட்டி ஓமம் வளர்த்தது போல. 7355
(வளர்க்கலாமா?)

கழுதையைக் கொண்டு உழுது குறவன் உழவன் ஆனான்.
கழுதையையும் குதிரையையும் பிணைத்தாற் போல.
கழுதை லத்தி கை நிறைய.

கழுதை வளையற்காரன் கிட்டப் போயும் கெட்டது; வண்ணான் கிட்டப் போயும் கெட்டது.
கழுதை வாலைப் பிடித்துக் கரை ஏறுகிறதா? 7360

கழுதை விட்டை ஆனாலும் கைநிறைய வேண்டும்.
கழுதை விட்டை கை நிரம்பினால் போதும் என்ற கதை.
கழுதை விட்டையிலே மேல் விட்டை வேறே; அடி விட்டை வேறேயா?
(முன் விட்டை, பின் விட்டை.)
கழுதை விட்டையைக் கைநிறையப் பொறுக்கினது போல.
கழுநீர்த் தொட்டி நாய் போல. 7365

கழுநீர்ப் பானையில் விழுந்த பல்லியைப் போல.
கழுநீருக்கு அண்டை வீட்டைப் பார்; கண்ணுக்கு மையிட்டுப் பார்.
கழுவிக் கழுவி ஊற்றினாலும் கவிச்சு நாற்றம் போகாது.
கழுவிக் கழுவிப் பின்னும் சேற்றை மிதிக்கிறதா?
கழுவிக் குளித்தாலும் காக்கை நிறம் மாறாது; உருவிக் குளித்தாலும் ஊத்தை நாற்றம் போகாது. 7370

கழுவிய காலைச் சேற்றில் வைக்கிறதா?
கழுவில் இருந்து கை காட்டுவான்.
கழுவிலே நெய் உருக்குகிற கள்ளி முண்டை.
கழுவுக்கு ஏற்ற கோமுட்டி.
கழுவுகிற மீனிலும் நழுவுகிற மீன். 7375

கழைக் கூத்து ஆடினாலும் காசுக்குக் கீழேதான் வரவேணும்.
கழைமேல் ஏறி ஆடினாலும் கீழே வந்துதான் பிச்சை கேட்க வேணும்.
(இறங்கித்தான் காசு.)
கள் உண்ட குரங்கு போல.
கள் உண்ட நாய் போல.
கள் கலப்பணத்திலும் கர்ப்பூரம் கால் பணத்திலும். 7380

கள் குடித்தவன் பேச்சு, பொழுது விடிந்தால் போச்சு.
கள் குடித்தவனுக்குக் கள் ஏப்பம்.
கள் விற்ற காற்காசிலும் அமிர்தம் விற்ற அரைக் காசு நேர்த்தி.

கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதை விடக் கர்ப்பூரம் விற்றுக் கால் பணம் சம்பாதிப்பது மேல்.
(ஆயிரம் பணம் சம்பாதிப்பதை விட. கஸ்தூரி விற்று.)
கள்ளத்தனம் எல்லாம் சொல்லத்தானே போகிறேன்? 7385

கள்ள நெஞ்சம் துள்ளிக் குதிக்கும்.
கள்ள நெஞ்சு காடு கொள்ளாது.
கள்ளப் பிள்ளையிலும் செல்லப் பிள்ளை உண்டா?
கள்ளப் பிள்ளையும் செல்லப் பிள்ளையும் ஒன்றா?
கள்ளப் புருஷனை நம்பிக் கணவனைக் கைவிடலாமா? 7390

கள்ளம் பெரிதா? காப்புப் பெரிதா?
கள்ளம் போனால் உள்ளது காணும்.
கள்ள மனம் துள்ளும்.
(துள்ளிப் பாயும்; துள்ளி யடிக்கும்.)
கள்ள மாடு சந்தை ஏறாது.
கள்ள மாடு துள்ளும். 7395

கள்ள மாப்பிள்ளைக்குக் கண்ணீர் முந்தும்.
கள்ள வாசலைக் காப்பானைப் போல.
கள்ள விசுவாசம், கழுத்தெல்லாம் செபமாலை.
கள்ளன் அச்சும் காடு கொள்ளாது.
கள்ளன் ஆனால் கட்டு; வெள்ளன் ஆனால் வெட்டு, 7400

கள்ளன் உறவு உறவு அல்ல; காசா விறகு விறகு அல்ல.
கள்ளன் கொண்ட மாடு எத்துறை போய் என்ன?
கள்ளன் செய்த சகாயம் காதை அறுக்காமல் கடுக்கனைக் கழற்றிக் கொண்டான்.
கள்ளன் பிள்ளைக்குக் கள்ளப் புத்தி.
(பிள்ளைக்கும்.)
கள்ளன் பின் போனாலும் குள்ளன் பின் போகக் கூடாது. 7405

கள்ளன் புத்தி கன்னக் கோலிலே,
(புத்தி திருட்டு மேலே.)
கள்ளன் பெண்சாதி கைம்பெண்டாட்டி.
(பெண்.)
கள்ளன் பெரியவனா? காப்பான் பெரியவனா?
கள்ளன் போன மூன்றாம் நாள் கதவை இழுத்துச் சாத்தினானாம். 7410

கள்ளன் மறவன் கலந்த அகம்படியான், மெல்ல மெல்ல வந்த வெள்ளாளன்.
(கனத்ததோர் அகம்படியன், வெள்ளாளன் ஆனான்.)
கள்ளன் மனையாளைக் களவுப் பொருளைக் குறி கேட்கலாமா?
கள்ளன் மனைவி கைம்பெண் என்றும்.
கள்ளனுக்கு ஊர் எல்லாம் பகை.
கள்ளனுக்குக் களவிலே சாவு. 7415

கள்ளனுக்குக் காண்பித்தவன் பகை.
கள்ளனுக்குக் கூ என்றவன் பேரிலே பழி.
கள்ளனுக்குத் தெரியும் களவு முறை.
கள்ளனுக்குத் தோன்றும் திருட்டுப் புத்தி.
கள்ளனுக்குப் பாதி, கறிக்குப் பாதி. 7420

கள்ளனுக்கும் பாதி, வெள்ளனுக்கும் பாதி.
கள்ளனுக்குள் குள்ளன் பாய்ந்தது போல.
கள்ளனும் ஆகி விளக்கும் பிடிக்கிறான்,
(கள்ளனாயிருந்து பிடிக்கிறதா?)
கள்ளனும் உண்டு, பயமும் இல்லை என்கிறது போல.
கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்று கூடினால் விடியுமட்டும் திருடலாம். 7425
(சேர்ந்தால்.)

கள்ளனும் வெள்ளனும் ஒன்று.
கள்ளனை ஆரும் நள்ளார் என்றும்.
கள்ளனை உள்ளே விட்டுக் கதவைச் சார்த்தினாற் போல.
(உள்ளே வைத்து.)
கள்ளனைக் காட்டிக் கொடுத்தவன் பகை.
கள்ளனைக் காவல் வைத்தது போல. 7430

கள்ளனைக் குள்ளன் கிள்ளியது போல.
கள்ளனைக் குள்ளன் பிடித்தான்.
கள்ளனைக் கொண்டுதான் கள்ளனைப் பிடிக்க வேணும்.
கள்ளனைத் தேடிய கள்ளப் பசுப் போல.
கள்ளனை நம்பினாலும் நம்பலாம்; குள்ளனை நம்பக்
கூடாது. 7435

கள்ளனையும் தண்ணீரையும் கட்டி விட வேணும்,
கள்ளனையும் புகையிலையையும் கட்டித் தீர்.
கள்ளனையும் வெள்ளனையும் கட்டி விடு.
கள்ளா வா, புலியைக் குத்து.
கள்ளி என்னடி கல் இழைப்பது? காதில் இருப்பது பித்தளை. 7440

கள்ளிக்கு ஏன் முள் வேலி? கழுதைக்கு ஏன் கடிவாளம்?
கள்ளிக்குக் கண்ணீர் முந்தும்; கொள்ளிக்கு வாய் முந்தும்.
கள்ளிக்குக் கண்ணீர் முந்தும்; அவள் கணவனுக்குக் கை முந்தும்.
கள்ளிக்குக் கல நீர் கண்ணிலே.
கள்ளிக்குத் தண்ணீர் கண்ணீர்; நீலிக்குத் தண்ணீர்
நிமையிலே. 7445

கள்ளிக்கு நாடு எல்லாம் காடு.
கள்ளிக்கும் கற்றாழைக்கும் களை வெட்டுவதா?
கள்ளிக்கு முள்வேலி இடுவானேன்?
கள்ளிக்கு வேலி ஏன்? சுள்ளிக்குக் கோடாலி ஏன்?
கள்ளிக் கொம்புக்கு வெள்ளிப்பூண் கட்டினது போல. 7450
(கட்டினானாம்.)

கள்ளிகள் எல்லாம் வெள்ளிகள் ஆவார்; காசு பணத்தாலே;
வெள்ளிகள் எல்லாம் கள்ளிகள் ஆவார், விதியின் வசத்தாலே.
கள்ளிச் செடிக்கு மகாவிருட்சம் என்று பெயர் வைத்தது போல.
கள்ளி நீண்டு வளர்ந்தால் காய் உண்டோ? கனி உண்டோ?
(வளர்ந்தால் என்ன?)

கள்ளிப் பூவைக் கட்டிச் சூட்டினது போல.
கள்ளி பெருத்து என்ன? காய் ஏது? பழம் ஏது? 7455
(காய் உண்டா? நிழல் உண்டா?)

கள்ளியிலும் சோறு; கற்றாழையிலும் சோறு.
கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்.
கள்ளி வேலியே வேலி; கரிசல் நிலமே நிலம்.
கள்ளுக் குடித்தவன் கொள்ளுப் பொறுக்கான்.
கள்ளுக் குடியனுக்கு வாய் என்றும் பிட்டம் என்றும்
தெரியாது. 7460

கள்ளுக் கொள்ளா வயிறும் இல்லை; முள்ளுக் கொள்ளா வேலியும்
இல்லை.
(யாழ்ப்பாண வழக்கு.)

கள்ளும் சூதும் இருக்கும் இடத்தில் விலை மகளும் கள்ளனும்
கண்டிப்பாய் இருப்பார்கள்.
கள்ளை ஊற்றி உள்ளதைக் கேள்.
கள்ளைக் காலால் உதைத்தது தவறா?
கள்ளைக் குடித்தவன் உள்ளதைக் கக்குவான். 7465

கள்ளைக் குடித்தவனுக்குக் கள் ஏப்பம்;பாலைக் குடித்தவனுக்குப்
பால் ஏப்பம்.
கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்வான்.
கள்ளைக் கொடுத்துக் காரியத்தை அறி.
கள்ளை விட்டுக் காட்டுத் தேனைக் குடித்தது போல.
களக்காடு. 7470
(-பைத்தியம்.)

களக்காடு மடக்ராமம், அன்ன வஸ்த்ரம் ஜலம் நாஸ்தி; நித்யம் கலக மேவச.
களஞ்சியத்தில் பெருச்சாளி சாப்பிடுவது போல.
களம் காக்கிறவனை மிரட்டுவானாம், போர் பிடுங்குகிறவன்.
களர் உழுது கடலை விதை.
களர் கெடப் பிரண்டை இடு. 7475

களர் நிலத்தில் கரும்பு வை.
களர் நிலத்திலே சம்பா விளையுமோ?
களர் முறிக்க வேப்பந் தழை.
களரை ஒழிக்கக் காணம் விதை.
(காணம்-கொள்.)
களரை நம்பிக் கெட்டவனும் இல்லை; மணலை நம்பி வாழ்ந்தவனும் இல்லை. 7480

களவாண்டு பிழைப்பதிலும் கச்சட்டம் கழுவிப் பிழைக்கலாம்.
களவு ஆயிரம் ஆனாலும் கழு ஒன்று,
களவுக்கு ஒருவர்; கல்விக்கு இருவர்.
களவு கற்றாலும் தன்னைக் காக்க வேண்டும்.
களவு கொண்டு ஆபரணம் பூண்டாற் போல. 7485

களவும் கற்று மற.
(கத்து மற.)
களி கிளறிக் கல்யாணம் செய்தாலும் காளியண்ணப் புலவனுக்குப் பத்துப் பணம்.
(பூந்துறைப் பகுதி வழக்கு.)
களியப் பேட்டை களக்ராமம்.
(செட்டிபாளையத்துக்கு அக்கரை.)
களிறு பிளறினால் கரும்பைக் கொடு.
களிறு வாயில் அகப்பட்ட கரும்பு மீளுமா? 7490

களை எடாப் பயிர் கால் பயிர்.
களை எடாப் பயிரும் கவடுள்ள நெஞ்சும் கடைத்தேறா.

களை எடாதவன் விளைவு எடான்.
களை எடுக்காதவன் கபோதி.
களை எடுத்தவன் கைமுடி உள்ளான். 7495

களை கிளைத்தால் போச்சு; பயிர் கிளைத்தால் ஆச்சு.
களைத்தவன் கம்பைத் தின்ன வேண்டும்.
களைந்த பழம் தானே விழும்.
(கனிந்த பழம்.)
களை பிடுங்காப் பயிர் கால் பயிர்.
களை முடிக்கொண்டது போல, 7500

களையக் கூடாததைக் கண்டால் அடிபெயர்ந்து அப்புறம் போ.
களையக் கூடாததைக் கண்டியாமல் சகித்துக் கொள்.
களையை முளையிலே கிள்ளு.
கற்க கசடு அறக் கற்க.
கற்க கசடு அற; கற்றபின் அதுவே இனிப்பு. 7505

கற்கண்டால் செய்த எட்டிக் கனியும் கசக்குமா?
கற்கையில் கல்வி கசப்பு; கற்றபின் அதுவே இனிப்பு.
கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமுதம் உண்ணும்.
கற்பகத்தைச் சார்ந்தும் காஞ்சிரங்காய் கேட்கலாமா?
கற்பக விருட்சத்தண்டை போயும் காஞ்சிரங்காய் வாங்கினாற் போல். 7510

கற்பனை கல்லைப் பிளக்கும்.
கற்பாறையில் அடிக்கும் முளைக் கச்சானது அப்பாறையில் இறங்காதது போல.
கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்.
கற்பித்தவன் காப்பாற்றுவான்.
(உயிரை.)
கற்பித்தவனுக்குக் காக்கக் கடன். 7515

கற்பித்தவனுக்குக் காக்க வல்லமை இல்லையா?

கற்பு இல்லா அழகு வாசனை இல்லாப் பூ.

கற்பு எனப்படுவது சொல் தவறாமை.

(திறம்பாமை.)

கற்ற இடத்திலா வித்தையைக் காட்டுகிறது?

கற்றது எல்லாம் வித்தை அல்ல; பெற்றது எல்லாம் பிள்ளை அல்ல. நட்டது எல்லாம் பயிர் அல்ல. 7520

(மரம் அல்ல.)

கற்றது கடுகளவு; கல்லாதது கடல் அளவு.

(கற்றது கை அளவு.)

கற்றது கை மண் அளவு; கல்லாதது உலகளவு.

கற்றது சொல்வான்; மற்று என்ன செய்வான்?

கற்றதைக் காய்ச்சியா குடிக்கப் போகிறாய்?

(பார்க்கிறாய்.)

கற்றலிற் கேட்டலே நன்று. 7525

(பழமொழி நானூறு.)

கற்றவர் கோபம் நீர்ப்பிளவு போல் மாறும்.

கற்றவன் உண்பான்; பெற்றவளும் உண்பாள்.

கற்றவனிடத்திலா வித்தையைக் காட்டுவது?

கற்றவனுக்கு எந்த வித்தையும் கால் நாழிகையில் வரும்.

(கற்றவனுக்கு வித்தை கால் நாழிகை.)

கற்றவனுக்கு மயிர் அத்தனை; கல்லாதவனுக்கு மலை அத்தனை. 7530

கற்றவனும் உண்பான்; பெற்றவனும் உண்பான்.

(பெற்றவளும்.)

கற்ற வித்தையைக் காய்ச்சிக் குடிக்கிறவன் போல.

கற்ற வித்தையைப் பெற்ற தாயிடம் காட்டுவதா?

(காட்டாதே.)

கற்றறி மூடன்.

(மோழை.)

கற்றறிவு இல்லாத மாந்தர் கதிகெட்ட மடையர் ஆவார். 7535

கற்றாழை காய்ச்சியா குடிக்கப் பார்க்கிறாய்?
கற்றாழைச் சோறும் வெண்டைக்காய்க் குழம்பும் விளக்கெண்ணெய்த் தாளிதமும் சேர்ந்தாற் போல.
கற்றாழை சிறுத்தாலும் ஆனை அடி வைக்காது.
கற்றாழை நாற்றமும் பித்தளை வீச்சும் போகா.
கற்றது அறிந்தார் கண்டது அடக்கம். 7540

கற்றுக் கற்றுச் சொல்லியும் காரியத்தின்மேல் கண்.
கற்றுக் கற்றுப் பேசாதே.
(கத்திக் கத்திப் பேசாதே.)
கற்றுக் கொடுத்த சொல்லும் கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாள் நிற்கும்?
(நிலையா?)
கற்றும் கற்றறி மோழை; கண் இருந்தும் குருடு.
கற்றோர் அருமை கற்றோர் அறிவர். 7545
(பெற்றோர் அறிவர்.)

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
(புகழ் உண்டு.)
கறக்க ஊறும் ஆவின் பால். கற்க ஊறும் மெய்ஞ்ஞானம்.
(கறக்கக் கறக்க ஊறும் பசுவின்பால். படிக்கப் படிக்க ஊறும் மெய்ஞ் ஞானம்.)
கறக்கிறது நாழிப் பால்; உதைக்கிறது பல்லுப் போக.
(உழக்குப் பால்.)
கறக்கிற பசுவையும் கைக் குழந்தையையும் கண்ணாரப் பார்க்க வேண்டும்.
கறக்கிற மாட்டைக் கள்ளன் கொண்டு போனால் வறட்டு மாடு மகாலட்சுமி ஆகும். 7550

கறந்த பால் கறந்த படியே பேசு.
கறந்த பால்போல் பேசுகிறான்.

கறந்த பால் முலைக்கு ஏறுமா?
(காம்புக்கு ஏறுமா? முலைப் புகா.)

கறந்த பாலும் எச்சில்; பிறந்த பிள்ளையும் எச்சில்,
கறந்த பாலைக் காக்கையும் தொடாது. 7555

கறந்த பாலைக் காய்ச்சாமல் குடித்தால் காச வியாதி தானே வரும்.
(காச நோய்.)

கறந்த மேனியாய்ப் பேசுகிறது.
கறவை உள்ளான் விருந்துக்கு அஞ்சான்.
கறவை மாடு கண்ணுக்குச் சமானம்.
கறிக்கு அலைந்தவன் பீர்க்குப் போடு. 7560

கறிக்கு இல்லாத வாழைக்காய் கட்டித் தொங்குகிறதாம்.
கறிக்கு இல்லாத வாழைக்காய் பந்தலிலே கட்டித் தொங்கிற்றாம்.
(தொங்கவோ? பந்தலில் தோரணம் கட்டினானாம்.)

கறிக்கு உழக்கு நெய் வார்த்தாலும் கண்ணாரக் கண்டதைச் சொல்.
கறிக்குக் கலநெய் வார்த்தாலும் கணக்கோடே வார்க்க வேண்டும்.
கறிக்குக் கறி நெய் விட்டாலும் கணக்குக் கணக்காய் இருக்க வேணும். 7565

கறி மீனுக்காகக் குளத்தை வெட்டி விடுவதா?
கறியிலே உயர்த்தி கத்தரிக்காய்; உறவிலே உயர்த்தி சின்னாயி.
கறியிலே கத்தரிக்காய்; உறவிலே சிற்றம்மை.
கறி வேப்பிலை கண்போல்.
(கறி வேப்பிலை கன்று போல்.)

கறுத்தது எல்லாம் தண்ணீர்; வெளுத்தது எல்லாம் பால். 7570

கறுத்த பார்ப்பானையும் வெளுத்த பறையனையும் நம்பாதே.
கறுத்த மூஞ்சியும் வெளுத்த சோறும்.
கறுப்பாய் இருந்தாலும் சந்திரன் சந்திரன்தான்.
(கறை இருந்தாலும்.)

கறுப்பிலும் குறிப்பு அழகு.
கறுப்புக்கு நகை பூட்டிக் கண்ணாலே பார். 7575

கறுப்புக்கு நகை போட்டுக் காதவழி நின்று பார்; சிவப்புக்கு நகை போட்டுச் செருப்பால் அடி.
கறுப்பு நாய் வெள்ளை நாய் ஆகுமா?
கறுப்புப் பார்ப்பானையும் சிவப்புப் பறையனையும் நம்பக் கூடாது.
(வெளுத்த பறையனையும்.)
கறுப்பும் வெள்ளையும் கண்ணுக்குத் தெரியாவா?
கறுப்பு மாடு கால் மாடு. 7580

கறுப்பு வெளுப்பு ஆகாது; கசப்பு இனிப்பு ஆகாது.
கறுப்பே ஓர் அழகு; காந்தலே ஒரு ருசி.
கறுப்பைக் கண்டு சிரிக்காதே.
கறுமுறு காந்தப்படலம் வாசிக்கிறார் கவிராயர்.
கறையான் புற்றில் அரவம் குடிகொண்டது போல. 7585
(பாம்பு புகுந்தது போல.)

கறையான் புற்று எடுக்கப் பாம்பு குடி புகுகிறது போல.
கறையான் புற்றுப் பாம்புக்கு உதவாது.
கறையானும் வாய் ஈரம் கொண்டு பிழைப்பது போல.
கன்மத்தினால் சாதியன்றிச் சன்மத்தினால் இல்லை.
(சாதியா?)
கன்மத்தினால் வந்தது தன்மத்தினால் போக வேண்டும். 7590

கன்யாகுமரி முதல் கருக்கரை வரை.
கன்றின் கீழேயும் கடன்காரன் கீழேயும் நிற்காதே.
கன்றும் ஆடும் களத்தில் படுத்தால் வைக்கோலும் இல்லை; செத்தையும் இல்லை.
கன்று இருக்கக் காசு அத்தனை பால் கறவாப் பசு, கன்று செத்த பிறகு கலப்பால் கறக்குமா?
கன்று இருக்கச்சே கரண்டிப் பால் இல்லை; கன்று செத்த பிறகா கலப் பால் கறக்கும்? 7595

கன்று இருக்கையில் கறவாத பசு கன்று செத்த பிறகு கறக்குமா?
கன்று உள்ளபோதே காணோம்; செத்த பிறகா கொட்டப் போகிறது?
கன்றுக் குட்டி களம் படுக்குமா?
கன்றுக்குட்டி கிட்டவும் கடன்காரன் கிட்டவும் இருக்கக் கூடாது.
கன்றுக் குட்டி பயம் அறியாது. 7600

கன்றுக்குட்டி மன்றைத் தின்று மன்று மன்றாய்ப் பேன்றது.
கன்றுக் குட்டியை அவிழ்க்கச் சொன்னார்களா? கட்டுத் தறியைப் பிடுங்கச் சொன்னார்களா?
(பிரிக்க.)

கன்றுக்குப் புல் பிடுங்கியது போலவும் தென்னைக்குக் களை எடுத்தது போலவும்.
கன்றுகளாய்க் கூடிக் களம் பறிக்கப் போனால் வைக்கோல் ஆகுமா? செத்தை ஆகுமா?
கன்று கூடிக் களம் அடித்தால் வைக்கோலும் ஆகாது; கற்றையும் ஆகாது. 7605
(செத்தையும் ஆகாது, களை பறிக்க)

கன்று கெட்டால் காணலாம் தாய் அருகே.
கன்று செத்தது கமலம்; மாடு செத்தது நிமிளம்
கன்று செத்துக் கைமேலே கறக்கலாமா?
கன்றும் தாயும் காடு ஏறி மேய்ந்தால் கன்று ஒரு பக்கம், தாய் ஒரு பக்கம்.
கன்று தின்னப் போரும் பசங்கள் தின்னப் பந்தியும். 7610

கன்றும் பசுவும் காடு ஏறி மேய்ந்தால் கன்று கன்று வழியே; பசு பசு வழியே.
(கன்று வார்க்கும் பசு வயிற்றுக்கு.)
கன்றை இழந்த பசுவைப் போல.
கன்றைக் கண்டு ஓடிவரும் பசுவைப் போல.
(நாடி வரும்.)
கன்றைத் தேடிப் பசு தவிக்கிறது போல.
கன்றைப் பார்த்துப் பசுவைக் கொள். 7615

கன்றைப் பிரிந்த பசுவைப் போல.
கன்றை விட்டுக் கட்டுத்தறியைப் பிடித்தது போல.
கன்றை விட்டுக் கல்யாணம் போவதா?
கன்றை விட்டு மாட்டை முட்ட விடுகிறது.
கன்னக் கோலை மறைத்துக் கொண்டு கைச் செபமணியைச் செபிக்கிறது போல. 7620

கன்னத்தில் அடித்தாலும் கதறி அழச் சீவன் இல்லை.
கன்னவாசல் கரிப் பானை போல்.

கன்னா பின்னா என்று பிதற்றுகிறான்.
கன்னான் கொண்டது கடை கொண்டது.
கன்னான் நடமாடக் குயவன் குடிபோவான். 7625

கன்னானுக்கும் குயவனுக்கும் ஜன்மப் பகை.
கன்னானுக்கு முன்னே கழுதை பரதேசம் போனாற் போல.
கன்னி அறிவாளோ காம ரசம்?
கன்னி இருக்கும் பொழுது காளை மணை ஏறக் கூடாது.

(மணம் பேசலாமா? கன்னி இருக்க.)

கன்னிக் காற்றுக் கடலும் வற்றும். 7630

கன்னிச் செவ்வாய் கடலும் வற்றும்.
கன்னிச் சேற்றைக் காய விடாதே; கண்ட மாட்டைக் கட்டி உழு.

(கன்னி-புரட்டாசி. புரட்டாசியில் வெயில் கொடூரம்; மழையும் உண்டு. வயலில் சேறாக உழுதாலும் உடனுக்குடன் காய ஆரம்பிக்கும். அம் மாதங்கள் வெயில் மழை இரண்டும் தாங்கிக் கடினமான வேலை செய்ய எருமைக் கடாவே தகுதி. அதைக் கட்டித்தான் ஏர் ஓட்டுவார்கள்.)

கன்னி நிலவிலே கட்டி ஓட்டடா கடா மாட்டை.
கன்னிப் பூ மலரவில்லை.
கன்னியாகுமரிக் கடலறியார்; சுசீந்திரம் தேரறியார். 7635

(விருந்தினர்களைக் கவனிப்பதனால்.)

கன்னியும் துக்கமும் தனிவழிப் போகா.
கன்னி வளரக் காடு எரிய.
கன ஆசை, கன நஷ்டம்.
கன எலி வளை எடாது.
கன எலி விளையாடாது. 7640

கனக மாரி பொழிந்தது போல.
கனத்த உடைமைக்கு அனர்த்தம் இல்லை.
கனத்தால் இனம் ஆகும்; மனத்தால் ஜனம் ஆகும்.
கனத்திற்கு நற்குணம் சுமைதாங்கி.
கனத்தைக் கனம் அறியும்; கருவாட்டுப் பொடியை நாய்
அறியும். 7645

கனத்தைக் கனம் காக்கும்; கருவாட்டுச் சட்டியைப் பூனை காக்கும்.
(பார்க்கும்.)

கனத்தைக் கனம் காக்கும்; கருவாட்டை ஈ காக்கும்.
(கருவாட்டுப் பானையைப் பூனை காக்கும்.)

கனத்தைக் கனம் காக்கும்; கறிச் சட்டியை நாய் காக்கும்.

கனத்தைக் கனம் தேடும்; கருவாட்டுத் தலையை நாய் தேடும்.
(யாழ்ப்பாண வழக்கு.)

கனதாராளம்; மனசு குறுகல். 7650

கனபாடிகள் வீட்டுக் கட்டுத்தறியும் வேதம் சொல்லும்.

கன நேசம் கண்ணைக் கெடுக்கும்.

கனம் கனத்தைப் பார்க்கும்; கருவாட்டுப் பானையைப் பூனை பார்க்கும்.

கனம் செய்தால் இஷ்டம்; கன ஈனத்தால் நஷ்டம்.

கன மழை பெய்தாலும் கருங்கல் கரையுமா? 7655

கனமழை பெய்து காடு தளிர்த்தது போல.

கனமூடன் கைப் பொருள் இழப்பான்.

கனவில் உண்ட சோறு பசி தீர்க்குமா?
(கண்ட சோறு.)

கனவில் கண்ட கத்தரிக்காய் கறிக்கு ஆகுமா?

கனவில் கண்ட பணம் கைச் செலவுக்கு உதவுமா? 7660
(கடன் தீர்க்க.)

கனவில் கண்ட பணம் கடனைத் தீர்க்குமா?

கனவில் கண்ட பொருள் கானில் கண்ட புல்.
(கானலில் கண்ட புனல்.)

கனவில் கண்ட பொருள் கைக்கு எட்டுமா?

கனவில் கண்டவனுக்குப் பெண் கொடுத்த கதை.
(பெண் போன.)

கனவிலும் காக்கைக்கு மலம் தின்கிறதே நினைப்பு. 7665

கனவோ, நனவோ என்று ஐயுற்றான்.

கனா முந்துறாத வினை இல்லை.
(பழமொழி நானூறு.)

கனி இருக்கக் காய் கவர்வது போல.
(தேவாரம்.)

கனிந்த பழம் தானே விழும்.
கனிந்த பழம் நீர் தின்றீர்; காயை உலுக்கி விட்டீர். 7670

கனிந்த பொங்கலில் கரும்புச் சாறும் கலந்ததாம்.
கனிந்த மரத்தில் கல்லடி கில்லடி.
கனியாத கனியை அடித்துப் பழமாக.
கனியிலே முள் ஏறினது போல.
கனியை விட்டுக் காயைத் தின்கிறதா? 7675

கஜ கரணம்.
கஜ கரணம் கோ கரணம் போட்டுப் பார்க்கிறான்.
கஜ கர்ப்பம்.
கஜப் புளுகு.
கஷ்கம் தெரியாமல் நெல்லுக் குத்தலாமா? 7680

கஷ்டத்திற்கு நஷ்டம் அதிகம்.
கஷ்டத்தின் அந்தியத்தில் சுகம்.
கஷ்டப் படலாம்; துக்கப்படல் ஆகாது.
கஷ்டப் படாவிட்டால் லாபம் இல்லை.

காக்கனுக்கும் பூக்கனுக்கும் பூத்தாயோ புன்னை? கண்ணாளன்
வரும் வரையில் பொறுக்கவில்லையே புன்னை? 7685

காக்கனும் பூக்கனும் சேர்ந்து ராக்கன் வீட்டு நெல்லுக்கு வினை
வைத்தார்கள்.

காக்கை இருந்த கொம்பு அசையாது.

காக்கை ஏறப் பனம்பழம் விழுந்தது போல.
(காகதாளிக நியாயம்.)

காக்கை ஏறின கொம்பு அசையாதா?

காக்கைக் கழுத்தில் சீட்டுக் கட்டினது போல. 7690

காக்கைக்கு இருட்டில் கண் தெரியாது.

காக்கைக்கு ஐந்து குணம்.

காக்கைக்கு ஒரு கீர்த்தி; நரிக்கு ஓர் அபகீர்த்தி.

காக்கைக்குக் கொண்டாட்டம்; எருதுக்குத் திண்டாட்டம்.

காக்கைக் குஞ்சையும் கணக்கன் குஞ்சையும் கண்ட இடத்தில்
குத்தவேண்டும். 7695

காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு.

காக்கைக்குப் பயந்திருப்பாள்; கழுகுக்குத் துணிந்திருப்பாள்.

காக்கைக்குப் பயந்து அழுவாள்; கழுகுக்குத் துணிந்து எழுவாள்.

காக்கைக்குப் புடுக்கு உண்டானால் பறக்கிற போது தெரியாதா?

காக்கைக்குப் போடு என்றால் நாய்க்குப் போட்டாற் போல. 7700

காக்கைக்கும் காக்கையிலும் கன சிறப்பு.

காக்கைக் கூட்டம் போலக் கட்டுக் கோப்பு.

காக்கைக் கூட்டில் குயிற் குஞ்சு வளர்வது போல.
காக்கை கண்ணுக்குப் பீர்க்கம் பூப் பொன் நிறம்.
காக்கை கதறப் பயந்து கணவனைக் கட்டிக் கொண்டாளாம். 7705

காக்கை கர் என்றதாம்; அகமுடையானை இறுகக் கட்டிக் கொண்டாளாம்.
(அப்பா என்று போய்க் கட்டிக் கொண்டாளாம்.)
காக்கை கரிச் சட்டியைப் பழித்ததாம்.
காக்கை கரைந்தால் ஆரோ வருவார்.
காக்கை கரைந்து உண்ணும்.
காக்கை குசுவினாற் போல் இருக்கிறது. 7710

காக்கை குருவி மூக்காலே கொரிக்கிறது போல.
காக்கை குளிக்கிறது போல.
காக்கை நோக்கு அறியும்; கொக்கு உப்பு அறியும்.
காக்கை பிடிக்கி போல் இருக்கிறான்.
காக்கை பிடிக்கிறவருக்குக் காலம். 7715
(கால் கை பிடிக்கிறவருக்கு.)

காக்கை பிடிக்கிறவனை நம்பாதே.
காக்கை பிடித்தல்.
(கால் கை பிடித்தல்.)
காக்கை மிளகாய்ப்பழம் கொத்தினாற் போல்.
காக்கை மூக்கு நிழலிலே கண்டாலும் கம்மாளன் கண்ணிலே எழுபது கோடி பசும் பொன் படும்.
காக்கையிற் கரிது களம் பழம். 7720

காக்கையின் கண்ணுக்குப் பீர்க்கம்பூப் பொன் நிறம்.
காக்கையின் கழுத்தில் பனம்பழம் கட்டினது போல.
(பனங்காயை,)
காக்கையினும் கன சிவப்பு.
காக்கையும் கத்திப் போகிறது; கருவாடும் உலர்ந்து போகிறது.

காக்கையும் காற்றும் போக்கு உண்டானால் வரும். 7725

காக்கையும் குயிற்குஞ்சைத் தன் குஞ்சு போல் வளர்க்கும்.
(காக்கும்.)

காக்கையைக் கண்டு அஞ்சுவான்; கரடியைப் பிடித்துக் கட்டுவான்.
(அஞ்சுவான்.)

காக்கையைக் கண்டு அஞ்சுவான்; காவேரி ஆற்றை நீந்துவான்.
காக்கையைக் கண்டு பயப்படுவான்; கள்ளன் கூடப் புறப்படுவான்.
காக்கையை விடக் கரியது களாப்பழம். 7730

காக்கை விரும்பும் கனி வேம்பு.
காகத்திலே வெள்ளை உண்டா?
காகத்தின் கழுத்துக் கறுத்தென்ன? வெளுத்தென்ன?
காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போல.
காகம் இல்லாத ஊர் சோனகன் இல்லாத ஊர். 7735
(சோனகன்-முகம்மதியன்.)

காகம் இல்லாத ஊர் பாவி இல்லாத ஊர்.
(பாவம் இல்லாத ஊர்.)
காகம் உட்கார்ந்த கிளை ஆடாமல் இருக்குமா?
(ஆடாமலா?)

காகம் ஏறிப் பனங்காய் உதிருமா?
(பனம்பழம் விழுமா?)

காசா லேசா?
காசி இரண்டு எழுத்துத்தான்; காண எத்தனை நாள் செல்லும்? 7740

காசிக்குத் திருவையாறு அதிகம்.
காசிக்குப் போய்த் தயிர் கொண்டு வந்ததைப் போல்.
காசிக்குப் போயும் கருமம் தொலையவில்லை.
காசிக்குப் போயும் மூடத் தவசி காலில் விழுகிறதா?
காசிக்குப் போன கடா மாடு போல. 7745
(அங்கும் உழுவான்.)

காசிக்குப் போனால் கால் ஆட்டலாம்; கால் ஆட்டக் கால் ஆட்டத்
தோள் ஆட்டலாம்.

காசிக்குப் போனாலும் அகப்பை அரைக்காசு.

காசிக்குப் போனாலும் கட்கத்தில் மூட்டையா?
(கம்பளி மூட்டையா?)

காசிக்குப் போனாலும் கதி பெற வழி இல்லை.

காசிக்குப் போனாலும் கருமம் தொலையாது. 7750

காசிக்குப் போனாலும் தன் பாவம் தன்னோடே.

காசிக்குப் போனான்; கங்கை கொணர்ந்தான்.

காசிக்குப் போனான்; காவடி கொண்டு வந்தான்.

காசிக்கு வீசம் அதிகம் திருப்பூவணம்.

காசி முதல் ராமேசுவரம் வரையில். 7755
(+ தெரிந்தவன்.)

காசியில் இருக்கிறவன் கண்ணைக் குத்தக் காஞ்சீபுரத்திலிருந்து கையை நீட்டிக் கொண்டு போகிறதா?
(போனானாம்.)

காசியில் இறக்க முக்தி; கமலையில் பிறக்க முக்தி.
(கமலை-திருவாரூர்.)

காசியில் தண்டம்; பிரயாகையில் முண்டம்; கயையில் பிண்டம்.

காசியில் பாதி கல்பாத்தி.

காசியில் வாசி அவிநாசி. 7760

காசியிலே கலமானால் நமக்கு என்ன?

காசி வாசி கண்ணைக் குத்தக் காஞ்சியிலிருந்து கை நீட்டிப் போனானாம்.

காசி விசாலாட்சி, கஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி.

காசு இருந்தால் பெட்டியிலே; பவிசு இருந்தால் மூஞ்சியிலே; எனக்கு என்ன ஆச்சு?

காசு இல்லாதவன் முழுவதும் போட்டது போல. 7765

காசு இல்லாதவனுக்கு வராகன் பேச்சு என்ன?

காசு இல்லாதவனை வேசியும் துப்பமாட்டாள்.

காசுக்கு இரண்டு ஆனை வேணும்; காற்றைப் போல் பறக்கவும் வேணும்.

காசுக்கு இரண்டு: பீசுக்கு நான்கு.
(பிசுக்கு இரண்டு.)

காசுக்கு இரண்டும் பீசுக்கு ஒன்றும். 7770

காசுக்கு எட்டுச் சட்டி வாங்கிச் சட்டி எட்டுக் காசுக்கு விற்றாலும் வட்டிக்குக் கட்டாது.

காசுக்கு ஒரு குஞ்சு விற்றாலும் கணக்கன் குஞ்சு ஆகாது.

காசுக்கு ஒரு குஞ்சு விற்றாலும் கம்மாளன் குஞ்சு ஆகாது.

காசுக்கு ஒரு குட்டி ஆனாலும் கரூர்க் குட்டி ஆகாது.

காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும்; அது காற்றைப் போல் பறக்கவும் வேண்டும். 7775

காசுக்கு ஒரு தம்பி ஆனாலும் கள்ளத் தம்பி ஆகாது.

காசுக்கு ஒரு படி என்றால் பணத்துக்குப் பத்துப் படி என்கிறாயே!

காசுக்கு ஒரு புடைவை விற்றாலும் நாய்க்கு லாபம் என்ன?

காசுக்கு ஒரு முழம் விற்றாலும் நாய் அம்மணந்தான்.

(ஒரு புடைவை.)

காசுக்குக் கம்பன். 7780

(காசுக்குப் பாடுவான் கம்பன்.)

காசுக்குப் பத்துப் பெண்டாட்டி; கொசுவுக்கு ஒரு குத்து.

காசுக்குப் போன மானம் கோடி கொடுத்தாலும் வராது.

காசுக் கூடு கரிக் கூடாய்ப் போயிற்று.

காசுக்கு லோபி கழுதையினிடத்தில் போனாற் போல.

காசு கண்ட இடம் கைலாசம்; சோறு கண்ட இடம் சொர்க்கம். 7785

காசு கிடைப்பது குதிரைக் கொம்பாய் இருக்கிறது.

காசு கொடுத்தவனே கணவன்.

காசு கொடுத்தால் வேசி வருவாள்; கலம் நெல் கொடுத்தால் அவள் ஆத்தாளும் வருவாள்.

காசுப் பையோடே களவு போனால் கடையிலே செட்டிக்குக் காரியம் என்ன?

காசைக் கரி ஆக்காமல் சீனி வெடி வாங்கிச் சுடு. 7790

(வாணம் வாங்கி.)

காசைக் கொடுத்தால் தாசி வருவாள்; கலம் நெல்லைக் கொடுத்தால் அவள் தாயும் வருவாள்.

காசைக் கொடுத்து நோயை விலைக்கு வாங்காதே.

காசைக் கொடுத்துக் குத்து மாடு தேடுகிறதா?

காசைப் பார்த்தால் ஆசையாய் இருக்கிறது; கண்ணைப் பார்த்தால் போதையாய் இருக்கிறது.

காசையும் கொடுத்து தேளையும் கொட்டிக் கொண்டதுபோல். 7795

காஞ்சிக்குப் போனாலும் மஞ்சத்தின் கால் நான்கு.

காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி.

காஞ்சிரங் கனி கடுஞ்சிவப்பாய் இருந்தால் கடிதாக உயிர் மாய்க்கும்.
(மாய்க்க.)

காஞ்சீபுரத்து உபசாரம்.

காஞ்சீபுரத்துக்குப் போனால் காலை ஆட்டிக் கொண்டு சாப்பிடலாம். 7800
(நெசவு செய்து. தின்னலாம், பிழைக்கலாம்.)

காஞ்சீபுரம் குடை அழகு.

காஞ்சீபுரம் குடை, திருப்பதி வடை, சீரங்கத்து நடை.

காட்சிகள் காணக் கண்ணுக்கு அலுப்பா?

காட்டக் கொடுத்த பணத்தை எடுத்துக் கொண்டு குமர கண்ட வலிப்பு வருகிறது.

காட்ட முடியுமே தவிர ஊட்ட முடியுமா? 7805

காட்டாளுக்கு ஒரு நீட்டாள்; நீட்டாளுக்கு ஒரு முடக்கான்; முடக்காளுக்கு ஒரு நொண்டிக் குதிரை.
(செங்கற்பட்டு வழக்கு.)

காட்டாளுக்கு ஒரு மோட்டாள்; மோட்டாளுக்கு ஒரு மொண்டி ஆள்.
(ஒரு துடைப்பைக் கட்டை.)

காட்டாற்றுச் சரசரப்புக் காட்டானைக்குப் பரபரப்பா?

காட்டாற்று வெள்ளம் போலே.

காட்டான் மோட்டான் சண்டைக்கு இளைச்சான். 7810

காட்டானை உண்ட கனி போல் இருக்கும், தேட்டாளன் திரவியம்.

காட்டானை தின்ற கனிபோலே.

காட்டானைக்கு வீட்டு ஆனையைக் கண்டால் இளப்பம்.

காட்டானை கனவில் நாட்டுச் சிங்கம் வந்தது போல.

காட்டானையைக் காட்டி வீட்டுப் பெண்ணைத் தள்ளுகிறது. 7815

காட்டானையைப் பிடிக்க வீட்டானை வேண்டும்.
காட்டானை ராஜாவுக்கு எலிக்குஞ்சு மந்திரியாம்.
காட்டானை விட்டாலும் கவியானை விடாது.
காட்டிக் கொடுத்தாலும் கூட்டிக் கொடுக்காதே.
காட்டிக் கொடுத்துக் கடக்கப்போய் நிற்கலாமா? 7820

காட்டில் அழுத குரல்.
காட்டில் ஆனையைக் காட்டி வீட்டில் பெண்ணைக் கொடுக்கிறது போல.
காட்டில் உள்ள ஆனையைக் காட்டி வீட்டில் உள்ள பெண்ணைக் கடத்து.
காட்டில் எரித்த நிலாவும் கசட்டுக்குச் செய்த நன்றியும் வீண்.
காட்டில் எரித்த நிலாவும் கானலில் பெய்த மழையும். 7825

காட்டில் கடுவாய்; கடலில் கொடுவாய்.
காட்டில் செத்தாலும் வீட்டில்தான் தீட்டு.
காட்டில் செய்த சபதம் வீட்டில் மறந்தது போல.
காட்டில் புதைத்த கனதனமும் பாட்டில் புதைத்த பழம் பொருளும் வீட்டில் மனையாள் மனமும் நாட்டில் அறிவது அரிது.
காட்டில் புலி கொல்லும்; நாட்டில் புளி கொல்லும். 7830

காட்டில் யானையைக் காட்டி வீட்டில் பெண்ணைக் கொடுப்பது போல.
காட்டிலே மேயுதடி காடை; அவன் காட்டுகிறானடி பெண்ணை ஜாடை.
காட்டு எரு முட்டை பொறுக்கி மட்கலம் சுட்ட புகை போய் மேற்கே மேகம் கிளம்ப, மின்னிக் குமுறி மழை பொழிய, ஆற்றில் வெள்ளம் பெருகி அடித்துப் போன பலசரக்கை ஊரார் இழுப்பது வழக்கு; குயவன் இழுப்பது கணக்கு.
காட்டுக் கட்டைக்கு ஏற்ற முரட்டுக் கோடாலி.
காட்டுக் களாக்காயும் கண்கெட்ட தயவு இல்லாத ஓணானும் கோத்துக் குலாவுவது போல. 7835
(சேர்ந்து குலாவுவது.)

காட்டுக் காடையைப் பிடிக்க வீட்டுக் காடை வேணும்.

காட்டுக்காரன் சும்மா இருந்தாலும் பூட்டைப் பிடுங்கி சும்மா இருக்க மாட்டானாம்.

காட்டுக்கு எறித்த நிலாவும் கசட்டுக்குச் செய்த நன்றியும் வீண். (கசத்துக்கு.)

காட்டுக்கு எறித்த நிலாவும் கானலுக்குப் பெய்த மழையும். (கானல்-கடற்கரை.)

காட்டுக்கு ஒரு தெய்வம்; வீட்டுக்கு ஒரு தெய்வமா? 7840

காட்டுக்குப் புலி ஆதரவு; புலிக்குக் காடு ஆதரவு.

காட்டுக்குப் பெய்த மழை, கானலுக்கு எறித்த நிலா.

காட்டேரி உடைமை இராத் தங்காது.

காட்டேரிக்கும் கணக்கனுக்கும் அடிக்கடி கொடுக்க வேணும்.

காட்டைக் காத்த நரியும் வீட்டைக் காத்த நாயும் வீண் போகா. 7845

காட்டைக் காத்தவனும் கடையைக் காத்தவனும் வீண் போவது இல்லை.

காட்டை வெட்டிச் சாய்த்தவனுக்குக் கம்பு பிடுங்கப் பயமா?

காட்டை வைத்துக் கொண்டு அல்லவோ வேட்டை ஆட வேணும்?

காடிக் கஞ்சி ஆனாலும் மூடிக் குடி.

காடிக்குப் போய்த் தயிர் கொண்டு வந்தது போல. 7850

காடு அழிந்தால் நாடு அழியும்.

காடு அறியாதவன் கல்லாங் காட்டை உழுவான். (உழ வேண்டும்.)

காடு ஆறு மாசம்; நாடு ஆறு மாசம்.

காடு எரியும் பொழுது வீடு எரியக் கூடாது.

காடுகள் இருப்பின் நாடுகள் செழிக்கும். 7855

காடு காத்த நாயும் வீடு காத்த நாயும் வீண் போகுமா?

காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்.

காடு கெட ஆட்டை விடு.

காடு கெட வீடு கெடு.

காடு திருத்திப் பருத்தி விதைக்கப் போகிறேன் என்றானாம் அப்பன்; அதற்குள் மகன் அந்த நூலில் தனக்குத் துப்பட்டி நெய்து தர வேணும் என்றானாம். 7860

காடும் செடியும் அவளாகத் தோன்றுகின்றன என் கண்களுக்கே.

காடும் செடியும் இல்லாத ஊருக்குக் கழுதை முள்ளி கற்பக விருட்சம்.
(ஊரில்.)

காடு வளம் குண்டை வளம், குண்டை வளம் குடி வளம், குடி வளம், கோல் வளம், கோல் வளம் கோன் வளம்.
(குடிவளம் கோயில் வளம்.)

காடு வா வா என்கிறது; வீடு போ போ என்கிறது.

காடு விளைந்தாலும் ஒரு மேடு விளைந்தாலும் கடன் கழிந்துவிடும். 7865

காடு விளைந்து என்ன மச்சானே, நம் கையும் காலுந்தானே மிச்சம்?

காடு விளையாவிட்டாலும் கடமை போகுமா?

காடு வெட்டிச் சாய்த்தவனுக்குக் கம்பு வெட்டப் பயமா?

காடு வெட்டி நஞ்சை பண்ணு; மாடு கட்டி வைக்கோல் போடு.

காடு வெந்தால் சந்தன மரமும் வேகாதோ? 7870

காடை இடம் ஆனால் நாட்டை ஆளலாம்.

காடை கத்தினால் பாடை கட்டும்.
(காடை கட்டினால்.)

காண்பாரைக் கண்டு கழுதையும் பரதேசம் போயிற்றாம்.

காண ஒரு தரம், கும்பிட ஒரு தரமா?

காணக் கிடைக்காத தங்கம். 7875

காணக் கிடைக்குமோ? காண என்றால் கிட்டுமோ?

காணக் கிடைத்தது, கார்த்திகைப் பிறை போல.

காணப் பட்டன எல்லாம் அழியப் பட்டன.
(அழியத் தக்கன.)

காணம் என்றால் வாயைத் திறக்கிறது; கடிவாளம் என்றால் வாயை மூடிக் கொள்கிறது.

காணம் விற்று ஓணம் கொண்டாட வேண்டும். 7880

காணலாம், கேட்கக் கூடாது; கேட்கலாம், காணக்கூடாது; காணவும் காணலாம், கேட்கவும் கேட்கலாம்.
(சகுன வகை.)

காண வேண்டி இருப்பாரைக் கிள்ள வேண்டி இருக்குமாம்.

காணாத கனவு கண்டால் ஒருவரோடும் சொல்லாதே.

காணாததை எல்லாம் காணலாம் கந்த புராணத்திலே.
(பொருளெல்லாம், புளுகெல்லாம்.)

காணாத நாயைக் கண்ட மனிதன் போல. 7885

காணாத மூளி கஞ்சியைக் கண்டால் ஓயாமல் கூட்டரைப்பாளாம்.

காணாதவன் கஞ்சியைக் கண்டானாம்; ஓயாமே ஓயாமே ஊதிக் குடித்தானாம்.

காணாதவன் கண்டால் கண்டதெல்லாம் கைலாசம்.

காணாது கண்ட கம்பங் கூழைச் சிந்தாது குடியடா சில்லி மூக்கா.
(குடியடி சில்லி மூக்கி.)

காணாது கண்டாற் போல. 7890
(கண்டார்.)

காணாப் பால் கலப் பால்.
(காணாப் பால் மாடு அடக்கும் பால்.)

காணாப் பீ கழுவாமல் போம்.

காணாமல் கண்டேனே கம்பங்கதிரை.

காணாமல் கோணாமல் கண்டு கொடு.
(சந்தியா வந்தன அர்க்கியம்.)

காணாமல் போன முயல் பெரிய முயல். 7895

காணார் என மாணாவினை செய்யார்.
(பழமொழி நானூறு.)

காணி அறுத்தாலும் கோணி கொள்ளவில்லை.

காணி ஆசை கோடி கேடு.

காணி ஏறக் கோடி அழியும்.

காணிக்கு ஒத்தது கோடிக்கு. 7900
(ஏற்றது.)

காணிக்குச் சோம்பல், கோடிக்கு வருத்தம்,
காணி கவிழ்ந்து போகிறதா?
காணி காணியாய்ச் சம்பாதித்துக் கோடி கோடியாய்ச்
செலவழிக்கிறது.
(கோணி கோணியாய்.)
காணிச் சோம்பல் கோடி கேடு.
(கோடி வருத்தம். காணி- 1/64.)
காணி தேடிக் கோடி அழிப்பதா? 7905
(அழிக்கிறது.)

காணி தேடினும் கரிசல் தேடு.
காணி நாணம், ஊண் நாணம் உயிர்க்கே சேதம்.
காணி மந்தம், கோடி துக்கம்,
காணியாளன் வீடு வேகும் போது காலைப் பிடித்து இழுத்த கதை.
காணியில் இல்லாததா கோடியில் வரப் போகிறது? 7910

காணியை நட்டபின் களத்தில் நிற்பதே நன்மை.
காணி லாபம், கோடி நஷ்டம்.
காத்திருந்த நாய்க்குக் கல்லெறிதான் மிச்சம்.
காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன்
கொண்டு போனான்.
காதம் ஓடினும் முயலுக்குக் கைத்தூக்கு. 7915

காதம் கொடுத்து இரு காதம் வாங்குகிறது போல.
காதம் போனாலும் கண்ணுக்கு உரியவர் வேண்டும்.
காதம் விட்டு இரு காதம் சுற்றுவது போல.
காதலரோடு ஆடார் கவறு.
காத வழிதான் குத்தும் வெட்டும்; அப்புறம் ராமராஜ்யம். 7920

காத வழி பேர் இல்லாதவன் கழுதைக்குச் சமானம்.
(தண்டலையார் சதகம்.)
காத வழி போய் அறியாதவன் மாதம் எல்லாம் நடந்தானாம்.
காத வழி போய் அறியான் கழுதைப் பிறப்பு.
காதில் கடுக்கன் இட்டால் முகத்தினுக்கு அழகு.
காதில் கேட்டதும் பொய்; கண்ணில் கண்டதும் பொய்; தீர
விசாரிப்பதே மெய். 7925

காதில் சிலந்தி, ஓதடி ஆனந்தி.

காதில் நாராசம் காய்ச்சி விட்டது போல.

காது அற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே.
(கூட வராது, பட்டினத்தார் பாடல்.)

காது அறுத்த கூலி கை மேலே.

காது அறுத்தாலும் அறுக்கும், பேன் எடுத்தாலும் எடுக்கும் குரங்கு. 7930

காதுக்கு இட்டால் முகத்துக்கு அழகு.

காதுக்குக் கடுக்கன் இட்டு ஆட்டிக் கொண்டு திரிகிறான்.

காதுக்குக் கடுக்கன் முகத்துக்கு அழகு.

காதுக்குக் கம்மல் அழகு.

காது காது என்றால் செவிடு செவிடு என்கிறான். 7935

காது காது என்றால் நாதி நாதி என்கிறான்.
(நாதி-என்னுடையது. தெலுங்கு.)

காது காது என்றால் வேது வேது என்கிறான்.
(வேது வேது.)

காது குத்த மனம் பொறுக்காதா?

காது குத்துகிறான்.

காதும் காதும் வைத்தாற் போல. 7940
(காதோடு காதோடு.)

காதுரா காதுரா என்றால் நாதிரா நாதிரா என்கிறான்.
(இரு பொருள்.)

காதை அறுத்தவன் கண்ணைக் குத்தாமல் விட்டானே!

காதை அறுத்தவன் கண்ணைக் குத்தினாலும் குத்துவான்.

காதை அறுத்தவன் கண்ணையும் குத்துவானா?

காதை அறுத்தாலும் அறுக்கும்; பேனை எடுத்தாலும் எடுக்கும் குரங்கு. 7945

காதை அறுத்தாலும் அறுத்தது; பேனைப் பார்.

காதைக் கடிக்கிறான்.

காதோடு காது வைத்தாற்போல் இருக்க வேண்டும்.

காந்தத்தின்முன் ஊசி கம்பித்தாற் போல.
காந்தம் இழுத்த ஊசியைப் போல. 7950

காந்தமும் இரும்பும் போல.
காந்தமும் ஊசியும் போல.
காந்தலே ருசி; கறுப்பே அழகு.
காந்தாரி கண் பட்டால் கல்லும் கரிந்து விடும்.
காந்தூர் நாயும் களத்தூர்ப் பேயும். 7955
(மிகுதி. செங்கற்பட்டுப் பகுதி.)

காப்பானுக்குக் கள்ளம் இல்லை.
காப்புச் சொல்லும் கை மெலிவை.
காப்பு இட அத்தை இல்லை; கலகமிட அத்தை உண்டு; தண்டை இட அத்தை இல்லை; சண்டை இட அத்தை உண்டு.
காப் பொன்னிலும் மாப் பொன் திருடுவான்.
காமத்துக்குக் கண் இல்லை. 7960
(கண் தெரியாது.)

காமனுக்குக் கண் இல்லை.
(திருவாலவாய்ப் புராணம், 45:7.)
காமாட்டிப் பையனுக்கு ஒரு சீமாட்டி கிடைத்தது போல.
காமாலைக் கண்ணனுக்குக் கண்டது எல்லாம் மஞ்சள்.
கா மாறிக் கட்டினால் கனம் குறையுமா?
(யாழ்ப்பாண வழக்கு.)
காமிக்கு முறை இல்லை. 7965

காமுகனுக்குக் கண்ட இடத்தில் கண்.
காய்க்கு அலைந்தவன் பீர்க்குப் போடு.
காய்க்குக் கொடி இளைக்குமா?
காய் கொடிக்குக் கனமா?
காய்ச்சல் இல்லா நிலம் கடுகளவும் பயன் கொடாது. 7970

காய்ச்சலும் கழிச்சலும் சேர்ந்து விட்டால் நம்பப் படாது.
காய்ச்சிக் காய்ச்சித்தானே நீட்ட வேண்டும்?

காய்ச்சிக் குடிக்கிறதையும் கெடுத்தான், கன்னாரப் பட்டு விழுவான்.
(கன்னாரச் சொட்டன்.)
காய்ச்சித் தோய்த்த தயிரைக் கண்ணை மூடிக்கொண்டு சாப்பிட்டாயே!
காய்ச்சி வார்த்த பெண்ணுக்குப் பேச்சு மூச்சு அற்றது. 7975

காய்ச்சின கஞ்சி வார்க்க ஆள் இல்லாமல் போனாலும், கச்சை கட்ட ஆள் இருக்கிறது.
காய்ச்சினவள் காய்ச்சினால் கழுதை மூத்திரமும் ருசியாய் இருக்கும்
காய்த்த கொம்பு பணியும்.
காய்த்த மரத்தில் கல் எறிபடும்; காயாத மரத்தில் எறிபடுமா?
காய்த்த மரத்திலே கல் எறியும் சில் எறியும். 7980
(கல்லடியும் சில்லடியும்.)

காய்த்த மரம் கல் அடிபடும்.
காய்த்த மரம் வளைந்து நிற்கும்; நற்குணமுடையவர் தணிந்து நிற்பார்.
(பணிந்து.)
காய்த்த மரம் வளையாத கணக்கும் உண்டோ?
(அருட்பா.)
காய்த்த மரம் வளையும்.
காய்த்த இரும்பு குடித்த நீரை விடாது. 7985

காய்ந்த ஓட்டிலே தண்ணீரை ஊட்டினாற் போல.
காய்ந்த ஓட்டுக்குச் சேதம் இல்லை.
காய்ந்த கொம்பு பணியும்.
காய்ந்த சுண்ணாம்பையும் வதங்கின வெற்றிலையையும் இளைத்த ராஜாவையும் விடக் கூடாது.
காய்ந்த புலி ஆட்டு மந்தையில் விழுந்தது போல. 7990

காய்ந்த புலி ஆவிலே விழுகிறது.
காய்ந்த மரம் தளிர்க்குமா?
காய்ந்த மாடு கம்பில் புகுந்தாற் போல.
(கம்பங் கதிரில்.)

காய்ந்த வானம் பெய்தால் விடாது,
காய்ந்த வித்துக்குப் பழுது இல்லை. 7995

காய்ந்த வெள்ளத்தில் விழுந்த பூனை பச்சை வெள்ளத்தைக் கண்டாலும் பேடிக்கும்.
(வெள்ளம்-நீர், பேடிக்கும்-அஞ்சும்.)
காய்ந்த வெற்றிலையையும் மெலிந்த ராஜாவையும் கைவிடாதே.
காய்ந்தால் காயும் கார்த்திகை.
காய்ந்தாலும் கவலை; பேய்ந்தாலும் கவலை.
காய்ந்தாலும் வெந்நீர் அவம் போமோ? 8000

காய்ந்து கெட்டது பிசானம்; காயாமல் கெட்டது கார்.
காய்ந்து போன கார்த்திகை வந்தால் என்ன? தீய்ந்து போன தீபாவளி வந்தால் என்ன?மகாராஜன் பொங்கல் வந்தால் மார்பு முட்டும் சோறு.
காய்ந்தும் கெடுத்தது வெயில்; பேய்ந்தும் கெடுத்தது மழை.
காய்ப் பாரத்தைக் கொடி தாங்காதா?
(தாங்கும்.)
காய் பறிக்கக் கத்தரி நடு. 8005

காய் மகாரன் நெஞ்சிலே கொள்ளிக் கட்டையால் சுடவேண்டும்.
காய சித்தி பெற்றோர் சட்டை கழற்றுவது போல.
காயத்திரி ஜபத்துக்குச் சமர்த்தியும் சமைக்க மாட்டாள்.
காயம் என்ன கற்கண்டா? உயிர் என்ன தித்திப்பா?
(உயிர் என்ன வெல்லமா?)
காயாகக் காய்த்துப் பூவாகப் பூத்ததாம். 8010

காயா? பழமா?
காயிலே கெட்டது கத்தரிக்காய்.
காயும் கனியும் உண்டானால் கார்த்திகை மாதம் கல்யாணம்.
(காயும் கறியும்.)
காயும் பயிருக்குப் பெய்யும் மழை போல.
காயும் பழமும் கலந்தது போல். 8015

காயும் புழுவுக்குச் சாயும் நிழல் போல
காயேனவாசா-கறி என்ன சமைச்சாள்?
கார் அரிசிச் சாதம், கருணைக் கிழங்குத் துவையல். அத்தையைச் சமைக்கச் சொன்னாளாம்: அகப்பையை எடுத்துக் காட்டினாளாம்.
கார் அறுக்கட்டும்; கத்தரி பூக்கட்டும்.
கார்த்திகை அகத்தி கரம்பெல்லாம் நெல்-வழியும். 8020

கார்த்திகை ஆத்தி காம்பு எல்லாம் ருசி.
கார்த்திகை எண்ணெயும் கனுவுப் பழையதும் ஆர் இடுவார் அம்மா என்று அழுதாளாம்.
கார்த்திகைக் கார் கடை விலை; தைச் சம்பா தலை விலை.
கார்த்திகைக் கீரை கணவனுக்குக் கொடாதே.
கார்த்திகைக்குப் பின் மழை இல்லை: கர்ணனுக்குப் பின் கொடை இல்லை. 8025

கார்த்திகை கண்டு களம் இடு.
கார்த்திகை கன மழை.
கார்த்திகை கார்த்திகை என்று கழுத்தறுத்த பிராமணா, கார்த்திகைக்குப் பின் இந்த அகமுடையாள்தானா?
(நீ தானா அகமுடையான்?)
கார்த்திகை கால் கோடை.
கார்த்திகை நண்டுக்குக் கரண்டி நெய். 8030

கார்த்திகைப் பனியைப் பாராதே; கட்டி ஓட்டடா ஏர் மாட்டை.
கார்த்திகைப் பிறை போல.
(பிறை கண்டவன் போல.)
கார்த்திகைப் பிறையைக் கண்ட கண்ணால் கைப்பிடி நாற்றைப் போட்டுக் கரை ஏறு.
(பிறகு மழை இல்லை என்றபடி.)
கார்த்திகைப் பொரியும் கனுவுப் பழஞ் சோறும்.
கார்த்திகை மழை கல்லை உடைக்கும். 8035

கார்த்திகை மாசத்தில் உழுதால் கடுகு மிளகு காணாது.
கார்த்திகை மாசத்தில் கடு மழை பெய்தால் கல்லின் கீழ் இருக்கிற புல்லும் கதிர் விடும்.

கார்த்திகை மாசத்தில் கால் கொள்ளு விதைத்தால் மேல் கொள்ளு முதலாகாது.

கார்த்திகை மாசத்தில் தண்ணீர்ப் பந்தல் வைத்தது போல.

கார்த்திகை மாசத்துக் கர்க்கட சந்திர யோகம் கல்லைத் துளைக்கும். 8040

கார்த்திகை மாசத்து நாய் படும் பாடு போல.

கார்த்திகை மாசத்துப் பூமா தேவியைப் போல.

கார்த்திகை மாசத்து மழை கலம் கழுவுகிறதற்கு முன்னே வந்து போகும்.

கார்த்திகை மாசம் கல்லுக்குள் இருக்கும் நெல்லும் கதிராகும்.

கார்த்திகை மாசம் கலம் கழுவப் போது இல்லை. 8045

கார்த்திகை மாசம் கலம் கழுவ மழை விடாது.

கார்த்திகை மாசம் கையிலே; மார்கழி மாசம் மடியிலே.
(அவரைக் காய்.)

கார்த்திகையில் கருக்கல் கண்ட இடத்தில் மழை.

கார் நடவைக் கலக்க நட்டது போல.

கார்ப் பயிர் கலந்து கெட்டது; பிசானப் பயிர் நெருங்கிக் கெட்டது. 8050

கார்ப்பயிரைக் கண்ணைக் கட்டி அறு.

கார் மின்னிக் கெட்டது; பருவம் மின்னாமல் கெட்டது.

கார் மேக மழையில் காற்றடித்தால் போச்சு.

காரண குருவே காரிய குரு.

காரணம் அடா கல்லுக் கொத்தா; சாகிற கிழவி பிள்ளை பெற்றாள். 8055

காரணம் இல்லாமல் நாய் குரைக்காதே.

காரணம் இன்றிக் காரியம் இல்லை.

காராம் பசுவுக்குப் புல் ஆனால் நந்தவனத்துக்குக் களையும் ஆம்.
(நந்தவனத்துக்குக் காளையும் ஆம்; மழையும் ஆம்.)

காரிகை கற்றுக் கவி பாடுவதிலும் பேரிகை அடித்துப் பிழைப்பது நன்று.
(பேரிகை கொட்டி.)

காரியக்காரன் கொல்லையிலே கழுதை வந்து மேய்கிறது. 8060

காரியத்தில் வருகிற போதுதான் மாடு படுத்துக் கொள்கிறது.

காரியத்திலே கண் அல்லாமல் வீரியத்திலே இல்லை.

காரியத்திலே கப்பல்.

காரியத்துக்குக் கழுதையின் காலைப் பிடி.

காரியத்துக்குச் சோம்பினவர்களுக்குக் கைக் குழந்தை ஒரு சாக்கு. 8065

காரியத்துக்கு வாசுதேவர் கழுதையின் காலைப் பிடித்தார்.

காரியத்தைப் பற்றிக் கழுதையையும் காலைப் பிடி.
(காரியத்தை வேண்டிக் கழுதையின்.)

காரியப் பைத்தியம்.

காரியம் ஆகிற வரையில் கழுதையையும் காலைப் பிடி.
(கழுதைக் காலையும் பிடி, கும்பிடு.)

காரியம் ஆகிறவரையில் காலைப் பிடி; பின்னே கழுத்தைப் பிடி. 8070
(மென்னியை.)

காரியம் ஆகுமட்டும் காலைப் பிடி; காரியம் ஆன பிறகு குடுமியைப் பிடி.
(கழுத்தைப் பிடி.)

காரியம் ஆகுமானால் தலையைப் பிடி; காரியம் ஆகாவிட்டால் காலைப் பிடி.

காரியம் இல்லாத மாமியாருக்குக் கல்லும் நெல்லும் கலந்து வைத்தாள்.
(மாமியார் வைத்தாளாம்.)

காரியம் உண்டானால் கழுதையையும் காலைப் பிடி.

காரியம் உள்ளவரை காலைப் பிடி; இல்லாவிட்டால் பல்லைப் பிடி. 8075

காரியம் செய்துவிட்டுக் கழுநீர்ப் பானையில் கைவிட்டாளாம்.

காரியம் பெரிதா? வீரியம் பெரிதா?
(பிரதானமா?)

காரியம் முடிந்தால் கம்மாளன் புறத்தே.

காரியும் வெள்ளையும் கருதிப் பயிரிடு.
(காரி-எள். வெள்ளை-பருத்தி.)
காருக்கு ஒன்று; சம்பாவுக்கு ஒன்று. 8080

காருக்குக் களை எடுத்தாற் போல்.
காருக்குப் பட்டம் இல்லை.
காருக்குப் பின் பட்டம் இல்லை; கார்த்திகைக்குப் பின் மழையும் இல்லை.
காருக்கும் கத்தரிக்கும் காலம் இல்லை.
காருக்கு வயலும் மோருக்குச் சாதமும் அதிகமாக வைக்கக் கூடாது. 8085

காரும் கம்பும் கதிரிலே.
காரைக்காட்டானோ? ஊரைச் சுட்டானோ?
காரைக் கிள்ளி நடு; சம்பாவை அள்ளி நடு.
காரையும் எள்ளையும் கருதிப் பயிர் இடு.
காரையை வெட்டிக் கரணை போட்டால் எடையும் பணமும் காணும். 8090

கால் அடிபட்ட நாயும் காது அறுந்த செருப்பும் கவைக்கு உதவுமா?
கால் அடி வைக்கச்சே நீச்சானால் கரை ஏறுகிறது எப்படி?
(வைக்கச்சே நீரானால்,)
கால் அணாக் கொடுக்கிறேன் என்றால் காத வழி நடப்பான்.
(கால் அரை கொடுக்கிறேன்.)
கால் அளவே ஆகுமாம் கப்பலின் ஓட்டம்; நூல் அளவே ஆகுமாம் நுண் சீலை.
(நூற் சீலை.)
கால் ஆட்டக் கால் ஆட்டத் தூணாட்டம் வீங்கிப் போயிற்று. 8095

கால் ஆட்டி வீட்டில் வாலாட்டி இருக்காது.
கால் ஆட்டுகிறவர் வீட்டில் வாலாட்டி நாய் தங்காது.
கால் ஆடக் கோல் ஆடும்; கோல் ஆடக் குரங்கு ஆடும்.
(கால் ஆடப் பாம்பு ஆடும்.)
கால் இல்லா முடவன் கடலைத் தாண்டுவானா?

கால் எட்டினால் காகுழியில் போடு. 8100
(நெசவாளர் வழக்கு.)

கால் ஒடிந்த கோழிக்கு உரற்குழியே கைலாசம்.

கால் காசுக்குக் குதிரை வாங்க வேணும்; அது காற்றாகவும் பறக்க வேணும்.
(கால் துட்டுக்கு.)

கால் காசு தாலி கட்டாதவனும் காலில் விழாத பிள்ளையும் பிரயோசனம் இல்லை.

கால் காசுப் பூனை முக்காற் காசுத் தயிரைக் குடித்தது.

கால் காசு பெறாது. 8105

கால் சிறிது ஆகில் கண் ஊறும்; கன்னியர்மேல் மால் சிறிது ஆகில் மனம் ஊறும்.
(ஊறும்.)

கால் துட்டுக்குப் பசு வாங்க வேணும்; அது கால்படி பால் கறக்க வேணும்.

கால் தூக்குகிற கணக்கப் பிள்ளைக்கு மாசம் பத்து ரூபாய்.

கால் தூசு பெற மாட்டார்கள்.

கால் நடைக்கு இரண்டு காசு; கைவீச்சுக்கு ஐந்து காசு. 8110

கால் படி அரிசி இருந்தால் கஞ்சி; அரைப் படி அரிசி இருந்தால் அன்னம்.

கால் படி அரிசிக்காரன் உள்ள மட்டுந்தான்.

கால் பணத்துக் குரங்கு முக்கால் பணத்து வாழைப்பழம் தின்றதாம்.

கால் பாடகம் கழன்று விடுமோ?

கால் போகா இடத்தில் தலையிட்டுக் கொள்ளாதே. 8115
(கொள்ளுகிறதா?)

கால்மாடு, தலைமாடு தெரியாதவன்.

கால் மாறிக் கட்டினால் கனம் குறையுமா?

கால் வந்து சூழக் கரி வந்து சூழ்ந்தது.

கால்வாயைத் தாண்டாதவன் கடலைத் தாண்டுவானா?

கால கதியை ஆரும் கடக்க மாட்டார்கள். 8120

கால சக்கரம் சுழல்கிறது.

காலத்தில் ஓட்டை அடைக்கப்படாவிட்டால் கப்பலும் முழுகிவிடும்.

காலத்தில் பயிர் செய்தால் கடன் வாங்க வேண்டாம்.

காலத்தில் பிறந்த பிள்ளை கைக்கு உதவும்.
காலத்தில் பெய்த மழை போல. 8125

காலத்தில் போனாலும் சூலத்தில் போகாதே.
காலத்தினால் செய்த நன்றி.
(குறள்.)
காலத்துக்கு ஏற்ற கோலம்.
(தக்க கோலம்.)
காலத்துக்கு ஏற்றபடி பெருச்சாளி காவடி எடுத்து ஆடிற்றாம்.
காலத்துப் பயிர் கரம்பிலே. 8130

காலத்து விதை கரம்பிலே.
காலத்தே பயிர் செய்.
கால தாமதம் காரியம் நஷ்டம்.
காலப் பயிர் கடக்க நிற்கும்.
காலப் புழுதி இல்லாதவன் கைம்முதல் இழப்பான். 8135

காலம் அல்லாத காலத்தில் கடல் ஏறிக் கதிர்காமா, கதிர்காமா என்றால் கைகொடுக்குமா?
காலம் அல்லாத காலத்தில் கப்பல் ஓட்டி.
காலம் அல்லாத காலத்தில் காய்த்ததாம் பேய்ச் சுரைக்காய்.
காலம் அறிந்து ஞாலம் ஒழுகு.
காலம் அறிந்து பிழையாதவன் வாலறுந்த குரங்கு ஆவான். 8140

காலம் அறிந்து பெய்யாத மழையும், நேரம் அறிந்து உண்ணாத உணவும் வீண்.
காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை.
காலம் கண்ட கூனி.
காலம் கலி காலம் அல்லவா?
காலம் கலி காலம்; கறுப்புக் கோழி வெள்ளை முட்டை இடும். 8145
(இடுகிறதாம்.)

காலம் கெட்ட கேட்டிற்குக் கருத்தான் என்ன செய்வான்?
காலம் கெட்டுக் கிடக்கிறது; ஜாக்கிரதையாய் இரு.
காலம் கெட்டுக் கைப்பிச்சை எடுத்தாற் போல.
காலம் செய்கிறது ஞாலம் செய்யாது.
(செய்வதைக் கோலம் செய்யாது.)
காலம் செய்த கோலத்துக்கு ஆரை வெறுப்பது? 8150

காலம் செய்வதைக் காலன் செய்வான்.

காலம் செய்வதைக் கோலம் செய்யாது.
(செய்யுமா?)

காலம் துக்கத்தை மாற்றும்.

காலம் போம்; வார்த்தை நிற்கும். கப்பல் போம்; துறை நிற்கும்.

காலம் போன காலத்தில் மூலம் வந்து குறுக்கிட்டது போல. 8155

காலம் வரும் வரைக்கும் யமன் காத்திருப்பான்.
(பழமொழி நானூறு.)

காலமே எழுந்திருந்து காக்கை பார்க்கிறது ஆகாது.

காலமே எழுந்திருந்து காக்கை முகத்தில் விழித்தல் ஆகாது.

காலனுக்கு விளைச்சல் கூடுதல்.
(நாஞ்சில் நாட்டு வழக்கு.)

கால க்ஷேபத்துக்குக் கூலிக்குக் குத்தினாலும் கமுக்கட்டு மயிர் வெளியே தெரியக் கூடாதாம். 8160

காலா காலத்தில் செபம் பண்ணினால் மேல் ஒரு பாவமும் இல்லை.

காலால் இடுவதைத் தலையால் செய்கிறான்.
(இட்ட வேலையை.)

காலால் காட்டினதைக் கையால் செய்கிறது.
(காலால் ஏவியதை.)

காலால் நடக்காமல் காற்றாய்ப் பறக்கிறது.

காலால் நடந்தால் காத வழி? தலையால் நடந்தால் எவ்வளவு தூரம்? 8165

காலால் முடிந்ததைக் கையால் அவிழ்க்கக் கூடாது.
(தள்ள முடியாது. அவிழ்க்கப்படாது.)

காலில் அழுக்கு இருந்தால் தலையில் அமேத்தியம் என்பார்.

காலில் கட்டினால் விருது; குப்பையில் கிடந்தால் துணி.

காலில் தைத்தது கண்ணிலே தைத்தது போல.

காலில் நகம் முளைத்த நாள் முதலாக. 8170

காலில் பட்டது கண்ணில் பட்டது போல.
(தைத்தது போல.)

காலில் பட்டது கையிலும் படும்; மூக்கிலும் படும்.

காலில் பட்ட பிறகு கிரகசாரம் போய் விடாது.
(போகாது.)

காலில் பட்ட பீ மூஞ்சிக்கு வந்தாற் போலே.
காலில் விழுகிறது நல்லது; மேலில் விழுகிறது கெட்டது. 8175

காலுக்கு ஆகாத செருப்பைக் கழற்றி எறி.
(உதவாத செருப்பை.)
காலுக்கு ஆகிற செருப்புத் தலைக்கு ஆகுமா?
காலுக்கு என்றால் தலைக்கு இடுவான்.
காலுக்குக் கடுப்பே தவிரக் கண்ட பலன் ஒன்றும் இல்லை.
காலுக்குக் கண் வேண்டுமா? 8180

காலுக்குக் கை உதவி; கைக்குக் கால் உதவி.
காலுக்குச் சேராத செருப்பைக் கழற்றி எறிய வேண்டும்.
காலுக்குத் தக்க செருப்பும் கூலிக்குத் தக்க உழைப்பும்.
காலுக்குப் போட்டால் தலைக்குப் போடுகிறான்.
காலும் இல்லாமல் தலையும் இல்லாமல் பேசுகிறான். 8185

காலும் தலையும் சாமி குடுமியும் போல.
காலை இஞ்சி, கடும் பகல் சுக்கு, மாலை கடுக்காய் மண்டலம் தின்றால் கோலை ஊன்றிக் குறுகி நடந்தவர் கோலை விட்டுக் குலாவி நடப்பரே.
காலை உப்பலும் கடும்பகல் வெயிலும் மாலை மேகமும் மழைதனில் உண்டு.
காலைக் கடம்பர், மத்தியான்னச் சொக்கர், அந்தித் திருவேங்கி நாதர், அர்த்தஜாமம் சிம்மபுரீசுவரர்.
(கருப்பத்தூர்.)
காலைக் கல், மாலைப் புல். 8190

காலைக் குளி மாதம் தாங்கும்; நடுப்பகல் குளி வாரம் தாங்கும்; அந்திக் குளி அன்றைக் குளி.
(எண்ணெய் தேய்த்துக் கொள்ள.)
காலைக் கடன் வாங்கச் சொல்லும்; அந்தி ஆனை கட்டச் சொல்லும்.
(பயிரின் நிலை. காலையில் வாட்டம். மாலையில் செழிப்பு.)
காலைக் கூழைத் தள்ளாதே; கம்மாளன் வரவைக் கொள்ளாதே.
(காயைலக் குழையது. காலைப் பழையது.)
காலைக் கேட்டுக் கொண்டா நடக்கிறது?
காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் ஒழிய விடாது. 8195
(கடியாமல் விடாது.)

காலைச் செவ்வானம் கடலுக்குப் பெய்யும்.

காலைச் செவ்வானம் கரம்பில் கட்டு; அந்திச் செவ்வானம் ஆற்றில் கட்டு.

காலைச் செவ்வானம் காலத்திலும் மழை இல்லை; அந்திச் செவ்வானம் அப்பொழுதே மழை.

காலைச் செல் பூத்தால் அடுத்த மழை அடங்கும்.
(அடர்த்த மழை.)

காலைத் தூக்குகிற கணக்கப்பிள்ளைக்கு மாசம் பத்து ரூபாய். 8200

காலைத் தென்றல் மழையைக் காட்டும்; மாலைத் தென்றல் மழையை விலக்கும்.

காலை துயில்வானும் மாலை இருப்பானும் பதர்.

காலைப் பனிக்கும் கண் விழிக்கும் ஒத்தது செல்வம்.

காலைப் பிடி என்றால் கழுத்தைப் பிடித்தாளாம்.

காலைப் பிடித்த சனி நடந்தால் ஒழிய விடாது. 8205

காலைப் பிடித்த சனியன் ஊரைச் சுற்றியடிக்கும்.

காலைப் புல்லும் மாலைக் கல்லும் ஆளைக் கொல்லும்.

காலை மிதித்தால் தலையை மிதிப்பான்.

காலை மேகமும் கருந்தனி வெயிலும் மாலை உப்பலும் மழைதனில் இல்லையே.

காலை மோட்சமும் வாலை ஞானமும் நிலைக்காது. 8210
(ஆகாது.)

காலையில் எழுந்து காக்கை முகத்தில் விழிக்காதே.

காலையில் தயிர், கடும் பகலில் மோர், மாலையில் பால்.

காலையில் பூத்த மலர் மாலையில் வாடுவதைப் போல.

காலை வாடை, மாலை உப்பு, மழை அப்புறம்.

காலை விருந்தைத் தட்டாதே; கசடருடன் கூடித் திரியாதே. 8215

காவடிப்பாரம் சுமக்கிறவனுக்குத்தான் தெரியும்.

காவல் காக்க வந்த குரங்கு கைத்துப்பாக்கி கேட்டதாம்.

காவல்தானே பாவையர்க்கு அழகு.

காவேட்டி ரங்கனுக்கு மேல் வெட்டி இரண்டாம்.

காவேட்டி ரங்கனுக்கு மேல் வேட்டி வெள்ளை. 8220

காவேட்டி ரங்கனுக்கு வைப்பாட்டி இரண்டாம்.
காவேரிக் கரைப் பசுப் போல் அலைகிறான்.
காவேரி கடவாக் கந்தாடை அண்ணன்.
(காவிரி.)
காவேரித் தண்ணீர் குடித்தவனுக்குச் சாவேரி ராகம் கஷ்டமா?
காவேரி ஆறு கரை புரண்டு போனாலும் வீராணத் தேரி விதை முதலுக்குக் கட்டாது. 8225

காவேரி ஆற்றை மறிப்பாய்; கார்த்திகை மாதத்துக் கர்க்கடகச் சந்திரனையும் மறிப்பாயா?
காவேரி கஞ்சியாய்ப் போனாலும் நாய் நக்கித்தான் குடிக்க வேண்டும்.
காவேரி பாதி, கர்ணன் பாதி.
காவேரியைப் போல நதி இல்லை; சாவேரியைப் போல ராகம் இல்லை.
காவோலை விழுந்ததென்று குருத்தோலை சிரித்ததாம். 8230

காழி பாதி, வீழி பாதி
(தேவாரம் வீடு திருவீடுமிழலை)
காளை தேட, சோமன் அழிக்க, சுந்தரன் சுகிக்க.
(காளையார் கோயிலில் 3 கோயில்கள். காமேசுவரர், சொர்ணவல்லி இவர் மேல், சோமேசுவரர் சௌந்தரிய நாயகி அலங்கார விசேஷம், சுந்தரேசர், மீனாட்சி நிவேதன விசேஷம்.)

காளவாய்க்கு மழையும் கைம்பெண்டாட்டிக்குப் பிள்ளையும்.
காளி தோட்டத்துக் கற்பக விருட்சம் ஆருக்கும் உதவாது.
காளிப் பட்டம் போனாலும் மூளிப் பட்டம் போகாது. 8235

காளியோடு பிறந்த மூளி, மூளியோடு பிறந்த காளி.
காளை ஈன்றதென்று கேட்குமுன்னே கயிறு எடு என்றானாம்.
காளை கட்டிக் கார் உழவை ஓட்டு.
காளை போன வழியே கன்று போகும்.
(கயிறு போகும்.)
காளை மாடு ஆனாலும் கன்றுக்கு உழக்குப் பால் தா என்றானாம். 8240

காளையைக் கட்டுத் தறியில் விட்டுவிட்டு மேயும் இடத்தில் பிடிக்க முடியுமா?
காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சு போல.

காற்றில் அகப்பட்ட கப்பல் போல அலைகிறது மனம்.

காற்றின் இடைப்பட்ட கயவர் மனம் போல.

காற்று அடிக்கக் காற்று அடிக்க நாற்று முடி தூக்குகிறாயா?
வேர்த்து வேர்த்துவிட உம்மாச்சி பண்ணுகிறாயா? 8245

காற்றில் ஆடினதாம் கம்பங்கதிர்; அதற்குப் பயந்ததாம் சிட்டுக்குருவி.

காற்றிலே கருப்பிலே கண்டதில்லை.

காற்றடிக்கக் காற்றடிக்க நாற்றுக் கட்டு சுமக்கிறாயா?
கரிவடியக் கரிவடியச் சிவபூஜை செய்கிறாயா?
(காற்றடிக்கக் கலம் நெல்லுக் குத்துகிறாயா? கரிவடியக் கரிவடியச் சமையல் செய்கிறாயா?)

காற்றடிக்கத் தாழை பூத்தது போல். 8250

காற்று உள்ள போதே தூற்றிக்கொள்.

காற்றுக்கா, மழைக்கா, போர்த்துக் கொள்ளத் துணிக்கா?

காற்றுக் காற்றோடே போயிற்று.

காற்றுக்கு எதிர் ஏற்றிய விளக்குப் போல.

காற்றுக்கு எதிரில் துப்பினால் முகத்தில் விழும். 8255
(எதிரே. முகத்துக்கு நேரே.)

காற்றிலே அகப்பட்ட கப்பல் போல் அலைகிறது மனம்.

காற்றுக்கு எதிரே ஏற்றின விளக்கைப் போல.

காற்றிலே கருப்பிலே கண்டது இல்லை.

காற்று இல்லாமல் தூசி பறக்குமா?

காற்றுக்கு எதிரே சுற்றினால் முகத்துக்கு நேரே விழும். 8260

காற்றுக்குத் தகுந்தாற் போல் பாயை மாற்றிக் கட்டு.

காற்றுக்குத் தோணி எதிர்த்து ஓடாது.

காற்றுக்கோ மழைக்கோ போர்த்திக் கொள்ளத் துணி இருக்கிறதா?

காற்று காற்றோடு போயிற்று.

காற்றுப் படாமல் காப்பாற்றுகிறேன். 8265

காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
(கபிலர் அகவல்.)

காற்றும் மழையும் கலந்து அடித்தது போல்.
காற்றைப் பார்த்துக் கப்பல் நாட்டு.
காற்றைப் பிடித்துக் கரகத்தில் அடைத்த கதை.
(அடைத்துக் கொள்ளலாமா? அடைத்தது போல.)
காற்றைப் பிடித்துக் கையினில் அடக்க முடியுமா? 8270

கானகத்து உக்க நிலா.
(பழமொழி நானூறு.)
கானல் நீர் போல.
கானலைத் தண்ணீராய்க் கண்டதைப் போல.
கானலை நீர் என்று எண்ணும் மான் போலே.
கானலைச் சலமாய்க் கண்டது போல. 8275

காஷ்மீர்க் கண்டமோ?
காஷ்மீரம் முதல் கன்யாகுமரிவரை.
காஷ்மீருக்குப் போனால் காசு மீறாது.

கிங்கிணிக்குக் கிங்கிணியும், மங்கிணிக்கு மங்கிணியும் கெட்டது.
கிட்ட உறவு முட்டப் பகை.
(+ தூர இருந்தால் நீள உறவு.)
கிட்டக் கிட்ட வந்தாலும் எட்ட எட்டப் போகிறான். 8280

கிட்ட நெருங்க முட்டப் பகை.
கிட்ட வா நாயே, என்றால் எட்டி மூஞ்சியை நக்க வந்தாற் போல.
கிட்டாதாயின் வெட்டென மற.
(கிட்டாத ஒன்றை.)
கிட்டிற்று, முட்டிற்று, வடுகச்சி கல்யாணம்.
கிட்டினால் ராமா, கோவிந்தா; கிட்டாவிட்டால்
ஒன்றும் இல்லை. 8285

கிடக்கிறது எல்லாம் கிடக்கட்டும்; கிழவனைத் தூக்கி
மணையில் வை.
(கிழவியை, கிழவனை எடுத்து மடியில் வைத்துக்கொள்.)
கிடக்கிறது எல்லாம் கிடக்கக் கிழவியைத் தூக்கி மணையில்
வைத்தாளாம்.
கிடக்கறது ஒட்டுத் திண்ணை; கனவு காண்கிறது மச்சு வீடு.
கிடக்கிறது கிடக்கட்டும்; கிழவனையும் கிழவியையும்
உள்ளே விடுங்கள்.
கிடக்கிறது குட்டிச்சுவர்; கனாக் காண்கிறது மச்சு வீடு. 8290
(மச்சு மாளிகை.)

கிடந்த கிடைக்கு நடந்த நடை மேல்.
கிடந்த பசியைக் கிள்ளிக் கிளப்பினானாம்.
கிடாக் கன்று போட்டது என்றால் பிடித்துக் கட்டு என்றானாம்.
கிடாரம் உடைந்தால் கிண்ணிக்கு ஆகும்; கிண்ணி உடைந்தால்
என்னத்துக்கு ஆகும்?
கிடாவும் காளையும் பிணைத்தாற் போல. 8295

கிடைக்காத சரக்குக் கிடைத்ததைப் போல.
(கிடையா.)
கிடைக்குத் கிடை ஆடுதான்.
கிடை கிடந்த இடத்தில் மயிர் கூடக் கிடையாது.
கிடைப்பது குதிரைக் கொம்பு.
கிண்ட்யாய நம: 8300

கிண்டக் கிண்ட அம்பட்டன் குப்பையிலே மயிரே புறப்படும்.
கிண்டக் கிண்டக் கீரையும் மயிரும்.
கிண்டி விட்டுக் கிளறி வைக்கிறது.
(கிளறி விடு.)
கிண்டி விட்டு வேடிக்கை பார்க்கிறது.
கிண்ணி பட்டாலும் பட்டது; கிடாரம் பட்டாலும் பட்டது. 8305

கிண்ணி வைத்துக் கிண்ணி மாற்றுகிறது.
கிணற்றில் அகப்பட்டது போல.
கிணற்றில் இருக்கும் ஆமைபோல் இருப்பவனுக்கு உலகம் தெரியுமோ?
கிணற்றில் கல்லைப் போட்டது போல.
(கிணற்றில் தள்ளிக் கல்லையும் போட்டான்.)
கிணற்றில் தண்ணீர் உதித்தது. 8310

கிணற்றில் போட்ட கல் மாதிரி.
கிணற்றில் போட்டாலும் எண்ணிப் போடு.
கிணற்றில் விழுந்தவன் மறுபடியும் விழுவானா?
கிணற்றின் ஆழமும் கயிற்றின் நீளமும் பார்க்க வேண்டும்.
கிணற்று ஆழத்தைக் கண்டாலும் காணலாம்; நெஞ்சு ஆழத்தைக் காண முடியுமா? 8315

கிணற்றுக்குத் தப்பித் தீயில் பாய்ந்தான்.
(விழுந்தது போல.)
கிணற்றுக்குள் இருந்து பேசுகிறவனைப் போல் பேசுகிறான்.
கிணற்றுக்குள் இருப்பவனை விளக்கிட்டுத் தேடினாற்போல.
கிணற்றுக்குள்ளே கங்கை குதித்தாற் போல.
கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா கொண்டு போகும்? 8320

கிணற்றுத் தவளைக்குக் கிணறுதான் சமுத்திரம்.
கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?
கிணற்றுத் தவளை தண்ணீர் குடித்ததைக் கண்டது யார்? கேட்டது யார்?
(குடியாததை.)
கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகுமா?
கிணற்றைக் கண்டு கடல் ஒதுங்கிப் போகுமா? 8325

கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கும்.
கிணற்றைத் தூர்த்தால் வயிற்றைத் தூர்க்கும்.
கிணறு இருக்க மலை தோண்டாதே.
(கிடக்க மலை கல்லாதே.)
கிணறு இறைக்க இறைக்கச் சுரக்கும்.
கிணறு தப்பித் துரவில் விழலாமா? 8330

கிணறு மெத்தினால் கீழ்வரை பொசியும்.
கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற் போல.
கிணறு வெட்டித் தவளையையும் பிடித்து விடுகிறதா?
கிணறு வெட்டித் தாகம் தீர்க்கலாமா?
கிரக சாந்திக்கு க்ஷவரம் செய்து கொள்கிறதா? 8335

கிராக்கி மொச்சைக் கொட்டை; வராகனுக்கு இரண்டு கொட்டை.
(பத்துக் கொட்டை.)
கிராம சாந்திக்காகத் தலையைச் சிரைத்துக் கொண்டானாம்.
கிராமத்தைப் பார்க்கச் சொன்னால் சேரியைப் பார்க்கிறான்.
கிராம தேவதை முதல் க்ஷாம தேவதை வரை ராம தேவனுக்குச் சரியாமோ?
கிரிசை கெட்டு வரிசை மாறுகிறது. 8340

கிரியை அற்றோன் மறை சாற்றுவது ஏன்?
கிரியை அறிந்து சொன்னால் கிழித்துக் கொள்கிறதா?
கிருக சாந்திக்கு க்ஷவரம் பண்ணுவதா?
கிருபா நிதியே கருணா நிதி.
(சருவா நிதி.)
கிருஷ்ண பட்சத்துச் சந்திரனைப் போல். 8345

கிருஷ்ண வாத்தியார் திவசம் பண்ணுகிறதற்கும் கிழக்கு வெளுக்கிறதற்கும் சரியாய்ப் போகும்.

கிருஷ்ணா, ராமா, கோவிந்தா, கிழக்கு எப்போது வெளுக்குமடா?

கிலி பிடித்ததோ? புலி பிடித்ததோ?

கிழ ஓணான் மரம் ஏறாதா?

கிழக் கிடாவைப் புகழ்கிறது இகழ்ச்சி அல்லவா? 8350

கிழக்கிலும் மேற்கிலும் கருவிலும் கடன் படாதே.
(கொடாதே.)

கிழக் குடலுக்குச் சோறும் இடி சுவருக்கு மண்ணும் இடு.

கிழக் குரங்கு குட்டி போட்டாற் போல.

கிழக் குரங்குபோல விழிக்கிறதைப் பார்.

கிழக்கே கடன் கொடாதே. 8355
(செங்கற்பட்டு வழக்கு.)

கிழட்டுக் குதிரைக்குச் சவுக்கடி கொடுத்து போல்.

கிழத்துக்குச் சாதமும் முறத்துக்குச் சாணியும்.

கிழ நாய் குரைப்பதற்கும் காரணம் உண்டோ?

கிழப் பேச்சுக் கவைக்கு உதவுமா?

கிழம் ஆனாலும் கெட்டு ஆனாலும் கட்டிக் கொண்டவன் பிழைப்பான். 8360

கிழமைக்கு வைத்து அழுவது.
(8ஆம் நாளில் திருநெல்வேலி வேளாளர் இறந்தவன் விரும்பிய பொருள்களை வைத்து அழுவார்கள்.)

கிழவன் கொடுத்த பணத்துக்கு நரை உண்டா?

கிழவன்தான் நரை; கிழவன் கொடுத்த பணமுமா நரை?

கிழவன் பேச்சுக் கிண்ணாரக்காரனுக்கு ஏற்குமா?
(கிழவி பேச்சு. கேட்குமா?)

கிழவனுக்கு வாழ்க்கைப் படுவதிலும் கிணற்றில் விழலாம். 8365

கிழவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் கடைசி வரையில் சாப்பாடு.

கிழவி இருந்த வீடும், கிளி இருந்த காடும் ஈடேற முடியா.

கிழவி கிண்ணாரம் போடுகிறாள்.

கிழவி சொல்லக் குமரி கேளாள்.
(யாழ்ப்பாண வழக்கு.)

கிழவி தலை நரைத்தது என்ன? அதை மழுங்கச் சிரைத்தது என்ன? 8370

கிழவி திரண்டாளாம்; பஞ்சாங்கக்காரன் பிட்டுக்கு அழுதானாம்.
கிழவி பாட்டைக் கிண்ணாக்காரன் கேட்பானா?
(கிழவி பேச்சைக் கின்னரக்காரன்.)
கிழவி போன போது சுவர் இடிந்து விழுந்ததாம்.
கிழவியும் காதம் குதிரையும் காதம்.
(ஔவையார் கூற்று.)
கிழவியும் காலை மடக்க மாட்டாள். 8375

கிழவியை அடித்தால் வழியிலே பேளுவாள்.
கிழவியை எடுத்து மணையிலே வைத்தாற் போல.
கிழவியைப் பாட்டி என்பதற்குக் கேட்க வேண்டுமா?
கிழிஞ்சாப்பிள்ளை மணியத்திலே நீட்டின விரல் அற்றுப் போம்.
கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான். 8380

கிழிந்த சேலை காசுக்கு இரண்டு.
கிழிந்த சேலையும் பேச்சுக் கற்ற வாயும் சும்மா இரா.
கிழிந்தது கிருஷ்ணன் வேட்டி; தைத்தது தாசன் வேட்டி.
கிழிந்த பம்பரம் காசுக்கு இரண்டு,
(கிழிந்த பட்டு.)
கிள்ளப் பழுக்குமாம்; கிளி இருந்து கொஞ்சுமாம். 8385

கிள்ளாவுக்குச் செல்லும் கெடி மன்னர் போல.
கிள்ளி எடுக்கச் சதை இல்லை; பேர் தொந்தியா பிள்ளை.
கிள்ளுக் கீரை போல் உள்ளத்தில் எண்ணாதே.
கிள்ளுக் கீரையா?
கிள்ளுகிறவனிடத்தில் இருந்தாலும் அள்ளுகிறவனிடத்தில் இருக்கக் கூடாது. 8390

கிள்ளுவார் கீழே இருந்தாலும் இருக்கலாம்; அள்ளுவார் கீழே இருக்க முடியாது.
கிள்ளை பழுக்குமாம்; கிளி வந்து கொஞ்சுமாம்.
கிளர்த்தும் கல்வி தளர்ச்சி படாது.
கிளி அருமையைப் பூனை அறியுமா?
கிளி அழுதால் பூனை விடுமா? 8395

கிளி போலப் பெண்டாட்டி இருந்தாலுல் குரங்குபோலக் கூத்தியாள் வேணுமாம்.
கிளியைப் போலப் பேச்சும் மயிலைப் போல நடையும்,
கிளியை வளர்த்துக் குரங்கு கையில் கொடுத்தது போல.

கீர்த்தி பெற்றும் கிலேசம் என்ன?
கீர்த்தியால் பசி தீருமா? 8400

கீர்த்தியும் அபகீர்த்தியும் வந்தால் போகா.
கீரிக்கும் பாம்புக்கும் தீராப் பகை.
கீரி கடித்த பாம்பு போல.
கீரி கீரி நண்டு பிடி, வாய்க்கால் கீரி நண்டு பிடி, வயலுக் கீரி நண்டு பிடி.
(கையை மூடித் திறக்கும் விளையாட்டு.)
கீரியும் பாம்பும் போல: 8405

கீரி வாய்ப் பாம்பு போல.
கீரை இல்லாச் சோறும் கிழவன் இல்லா பட்டணமும் பாழ்.
கீரைக் கட்டை வெட்டச் சொன்னால் தோரணம் கட்டுவதற்கா?
(கட்டுகிறதா?)
கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
(வைப்பது போல.)
கீரைக்குக் கழுவின தண்ணீர் கிண்டி அவிக்கப் போதும். 8410

கீரைக்குப் புல்லுருவி கீழே முளைத்தாற் போல்.
கீரைக்குப் புழு வேரில்.
கீரை, கீரைத்தண்டு, கீரைப் புளிக் குழம்பு என்றானாம்.
கீரைத்தண்டு பிடுங்க ஏலேலப் பாட்டு ஏன்?
(பாட்டா?)
கீரை நல்லதானால் கழுவின தண்ணீரே போதாதா? 8415
(கழுவின தண்ணீரிலே வெந்துவிடும்.)

கீரை மசித்த வாணாயில் ரசம் வைத்த உறவு.
கீரையும் இரண்டு கறி பண்ணாதே.
கீரையும் மயிரும் விரவியது போல.

கீரையும் மாவும் கெட்ட புளிச்சாறும்.
(கட்ட.)
கீரை விற்ற தானியம் போல. 8420

கீழ் அகத்து மன்னி குளித்தால் கிழக்கு வெளுக்கும்.
கீழ் எலி போலத் தோண்டிக் கிளறுகிறது.
கீழ் ஏழ் உலகமும் மேல் ஏழ் உலகமும் பார்த்தவன் போல் பேசுகிறான்.
கீழ் ஏழு லோகமும் மேல் ஏழு லோகமும் கண்ட காட்சியா?
கீழ்க்காது மூளி, மேற்காது மூளி, சண்டைக்கு ரணபத்திர காளி. 8425

கீழ்க்குலத்தான் ஆனாலும் கற்றவன் கற்றவன்தான்.
கீழ்க் குலத்தான் ஆனாலும் கற்றவன் மேற்குலத்தான்.
கீழக் கரை நாய் அடிபட்டாற் போல் அடிபடுகிறாயே.
கீழே பாம்பு என்றால் மேலே பார்க்கின்றான்.
கீழே போட்டு உதைக்கச்சே மீசையில் மண் படவில்லை என்ற கதை. 8430

கீழே போனால் பிணம்; மேலே வந்தால் பணம்.
(கோலார் தங்க வயலில்.)
கீழே விழுகிற மாப்பிள்ளைக்கு அரிவாள் மணையை முட்டுக் கொடுத்தது போல.
கீழே விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை என்றானாம்.
கீழைத்தெருக் கிழவி அவிசாரி போனாள் என்று மேலைத் தெருக் கிழவன் கோவணத்தில் கிட்டியைக் கட்டி அடித்தானாம்.
கீழைத் தெருவிலே பல்லக்குக் கொடுத்து மேலைத் தெருவிலே பிடுங்கிக் கொள்கிறது. 8435
(கீழைத் தெருவிலே கொடுத்து.)

கீழோர் ஆயினும் தாழ உரை.
கீற்றிலே கனவிலே தெரியுமா?
கீற்றிலே வேண்டாம்; காற்றிலே வாரு.
கீறி ஆற்றினால் புண் ஆறும்.

குங்குலியத் தூபம் காட்டிச் சன்னதமும் குலைந்தால் கும்பிடு எங்கே? 8440
(காட்டியும்.)

குங்குமக் கோதைக்கும் அஞ்சு பணம்; குருட்டுக் கண்ணிக்கும் அஞ்சு பணமா?
குங்குமம் இட்ட நெற்றியும் குசு விட்ட குண்டியும் சரியாகுமா?
குங்குமம் சுமந்த கழுதை வாசனை அறியுமா?
(பரிமளம்.)
குச்சத்திரம் குசுவாகப் போக.
குச்சத்திரம் குடியைக் கெடுக்கும். 8445

குச்சு நாய்க்கு மச்சு வீடா?
குச்சு வீடு கட்டி அல்லவா மச்சு வீடு கட்ட வேண்டும்?
குசத்தாதனும் இடை ஆண்டியும் இல்லை.
குசத்தி நாக்கை அறுத்தாலும் குண்டு மூன்று காசு என்பாள்.
குசத்தி நாக்கைக் குட்டம் போட்டு நறுக்கினாலும் குடம் தோண்டி இரண்டு காசு என்பாள் 8450
(கூழ் கூழாய் அறுத்தாலும் கூழையாய் அறுத்தாலும்.)

குசவனுக்கு ஆறு மாதம் வேலை; தடிகாரனுக்கு அரை நாழிகை.
(தடியனுக்கு ஆறு நாழிகை வேலை.)
குசவனுக்குப் பல நாள் வேலை; தடிகாரனுக்கு ஒரு நிமிஷ வேலை.
(ஒரு க்ஷண வேலை, அரை நாழிகை வேலை.)
குசு கும்பிடப் போனால் தெய்வம் திருடுக்கென்றதாம்.
குசு கொண்டு வந்திருக்கிறேன், கதவைத் திற, கொட்டி வைக்க இடம் இல்லை.
குசு புடைக்க வெறும் முறம் ஆச்சு. 8455

குசும்புக்கும் கவுண்டிக்கும் மருந்து ஏது?
(பொறாமைக்கும் வழுக்கைக்கும். நாஞ்சில் நாட்டு வழக்கு.)
குசு விடாமல் இருந்தால் குங்கிலியம் மணக்கும்.
குசுவுக்குப் பயந்து குடி ஓடிப் போனாளாம்.
குஞ்சிரிப்புக்கு மருந்து சாப்பிட உள்ள சிரிப்பும் போனாற் போல.
குஞ்சு செத்த காக்கை சிறகு அடித்துக் கொள்வது போல. 8460

குஞ்சுடன் மேய்ந்த கோழியைப் போல.
குட்டக் குட்டக் குனிகிறவனும் முட்டாள்; குனியக் குனியக் குட்டுகிறவனும் முட்டாள்.
(மடையன்.)
குட்டங்கோனி தட்டான் குறைக்கும் வரி வைத்தான்.
குட்ட நாடு கெட்டால் எட்டு நாடும் கெட்டன.
குட்டி ஆடு கொழுத்தாலும் வழுவழுப்புப் போகாது. 8465
(குறையாது.)

குட்டி ஆடு செத்ததென்று கோனாய் குந்தி அழுததாம்.
குட்டி ஆனைக்குக் கொம்பு முளைத்தது; பட்டணமெல்லாம் பறந்தோடிப் போச்சு.
குட்டி ஆனையும் குளத்தைக் கலக்கும்.
குட்டி இட்ட நாய்க்குக் குப்பை மேடு கோபுரம்.
குட்டிக் கரணம் போட்டாலும் கொடுப்பது அரிது. 8470

குட்டிக் கரணம் போட்டாலும் மட்டி புத்தி போகாது.
(மட்ட.)
குட்டிக் கரணம் போட்டாலும் லோபி கொடான்.
(காசு கொடான்.)
குட்டிக் கரணம் போட்டாலும் வட்டில் சோற்றுக்கு வழி இல்லை.
குட்டிக் கலகம் பண்ணுகிறவன் குட்டுப்பட்டுச் சாவான்.
(செய்பவன்.)
குட்டிக் கிடையிலே ஓநாய் புகுந்தது போல. 8475

குட்டிக்கும் பட்டிக்கும் குடிபோகச் சந்தோஷம்.
(குட்டிக்கும் நாய்க்கும், பட்டி-நாய். குடிபோகக் கொண்டாட்டம்.)
குட்டிக குரங்கானாலும் கெட்டிப் பிடி.
குட்டிக் கொழுந்தனும் கோள் சொல்லி நாத்தனாரும்.
குட்டிக் கொள்ளும் போதே கண்ணில் குட்டிக் கொண்டான்.
(கொண்டால்.)
குட்டிக் கொள்ளும் போதே முட்டிக் கொண்டானாம். 8480

குட்டி குரைத்து நாயின் தலையிலே வைத்தது போல.
குட்டி கொழுத்தாலும் வழுக்கை வழுக்கைதான்.
குட்டிச் சுவரில் முட்டிக் கொள்ள வெள்ளெழுத்தா?
குட்டிச் சுவரிலே தேள் கொட்டக் கட்டுத் தறியிலே நெறி ஏறுமா?
(இடுமா?)
குட்டிச் சுவரிலே தேள் கொட்டத் தண்ணீர் மிடாவிலே
நெறி கட்டினது போல. 8485

குட்டிச் சுவரிலே தேள் கொட்ட நெடுஞ் சுவரிலே நெறி கட்டியதாம்.
குட்டிச் சுவரும் குரங்கு இருந்த மாளிகையும் பாழ்.
(மாளிகையும் போல.)
குட்டிச் சுவரே; கூறை இல்லா வீடே!
குட்டி செத்ததுமல்லாமல் குழி தோண்ட இரண்டு பணம்.
குட்டி செத்தாலும் குரங்கு விடாது. 8490

குட்டி நரை குடியைக் கெடுக்கும்.
குட்டி நாய்க்குப் பல் முளைத்தது போல.
குட்டி நாய்க்கும் குழந்தைப் பிள்ளைக்கும் இடம்
கொடுக்கக் கூடாது.
குட்டி நாய் குரைக்கிறது போல.
குட்டி நாய் குரைத்துப் பட்டி நாய்க்குக் கேடு வந்தது. 8495
(உதை வந்தது.)

குட்டி நாய் கொண்டு வேட்டை ஆடினது போல.
(நாயை.)
குட்டி நாய் வேட்டை நாயை விரட்டினாற் போல.
குட்டி நாயும் குழந்தைப் பிள்ளையும் இட்ட கையைப் பார்க்கும்.
குட்டி நாயை விட்டு வேட்டை ஆடினாற்போல.
குட்டிப் பாம்பை அடித்தாலும் குற்றுயிராக விடக்கூடாது. 8500
(விடாதே.)

குட்டி பெருத்தாலும் வழுக்கை வழுக்கைதான்.
குட்டி போட்ட நாய் கூனி உட்கார்ந்தது போல.
குட்டி போட்ட நாய் போலக் குரைக்கிறது.
குட்டி போட்ட நாய் போல வள்ளென்று விழுகிறான்.
குட்டி போட்ட நாய் முடங்கினாற் போல. 8505

குட்டி போட்ட நாய் முணுமுணுத்தாற் போல.
குட்டி போட்ட நாயைப் போல் ஏன் உறுமுகிறாய்?

குட்டி போட்ட பூனைபோல அலைகிறான்.
குட்டி மானம் விட்டுக் குசவனோடு பேசினால் சட்டையும் பண்ணான்; சட்டியும் கொடான்.
(சட்டியும் கொடான், சட்டையும் பண்ணான் மானம் தப்பி.)
குட்டியின் கையைப் பிடித்துக் குரங்கு கொள்ளிக் கட்டைச் சூடு பார்த்தாற் போல. 8510

குட்டி வேதாந்தம் குடியைக் கெடுக்கும்.
குட்டின குட்டும் குண்டிற் பாய்ந்த தண்ணீரும் வருமா?
(குழியிற் பாய்ந்த.)
குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்.
குட்டை ஏறிக் குரைத்த நாயே, சதை வீங்கிச் செத்த நாயே!
குட்டை குழப்பினால் சேறுதான் மிஞ்சும். 8515

குட்டை குழப்புகிறான்.
குட்டைத் தாதன் குட்டையிலே விழுந்தான்.
குட்டைத் தாதன் மகன் மட்டைத்தாதன் குளத்திலே விழுந்து செத்தான்.
குட்டை மரம் குலை குலையாய்க் காய்த்திருக்கிறது.
குட்டையில் ஊறிய மட்டை. 8520

குட்டையைக் கலக்கிப் பருந்து இரை இட்டதுபோல.
(இரை தேடுவது.)
குட்டையைக் குழப்பி மீனைப் பிடிக்கிறது போல.
குட்டை வால் நாய்க்கு நெஞ்சில் அறிவு.
குடத்தில் பாக்குப் போடு; மிளகாய்ப் பொடிக்கு உப்புப் போடாதே.
குடத்தில் பொன் கூத்தாடுமா? 8525

குடத்தில் விளக்கை இட்டுக் கோபுரத்தின் மேல் வைத்தாற் போல.
குடத்து விளக்குக்கும் குன்றி மணிச் சாதத்துக்கும் இருக்கிறேன்.
குடத்துள் ஏற்றிய விளக்குப் போல.
(குடத்தில்.)
குடத்தைக் கவிழ்த்துப் பழத்தைச் சொரிந்த கதை.
குடப் பாம்பினிடைச் சிறு தேரை. 8530

குடப்பால் கறந்தாலும் குதிரை யோட்டம் ஓட மாட்டாது.
குடப்பால் கறந்தாலும் கூரை பிடுங்குகிற மாடு ஆகாது.
(கூரைபிடுங்கித் தின்னுமாம் மாடு.)
குடப்பாலில் கையைவிட்டுச் சத்தியம் செய்.

குடம் தண்ணீரில் கொள்ளி வைத்தாற் போல.
குடல் அறுந்த கோழி எங்கே போகும்? 8535

குடல் அறுந்த நரி எவ்வளவு தூரம் ஓடும்?
(எந்த மட்டும்.)
குடல் ஏற்றத்துக்குக் கோடி வைத்தியம்.
குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்.
குடல் காய்ந்தால் நாய்க்கு நாற்றம் நறுமணம்.
குடல் காய உண்டால் உடல் காயம் ஆகும். 8540

குடல் கூழுக்கு அழுகிறதாம்; கொண்டை பூவுக்கு அழுகிறதாம்.
குடலில் கண்ட தினவு போல்.
குடலும் கூந்தலும் கொண்டது மட்டும் கொள்க.
(கொள்கை.)
குடலைப் பிடுங்கிக் காட்டினாலும் அதுவும் கஜகர்ண வித்தை என்கிறான்.
குடலைப் பிடுங்கிக் காட்டினாலும் வாழைநார் என்பார். 8545
(உருவிக் காட்டினாலும்.)

குடலைப் பிடுங்கி மாலையாய்ப் போட்டுக் கொள்வேன்.
குடலைப் பிடுங்குகிறது ஓக்காளம்.
குடி இருக்க வந்தாயோ? கொள்ளி வைக்க வந்தாயோ?
குடி இருந்த வீட்டிலே கொள்ளி வைக்கிறவன்.
(வீட்டுக்கே வைப்பதா?)
குடி இருந்து அறி; வழி நடந்து அறி. 8550

குடி இருந்து பார்; கூட்டுப் பயிர் இட்டுப் பார்.
குடி இருப்பது குச்சு வீடு; கனாக் காண்பது மச்சு மாளிகை.
(மச்சு வீடு.)
குடி இல்லா ஊரிலே அடியிடல் ஆகாது.
குடி இல்லா ஊரிலே ஒற்றைப் பணக்காரன்.
(ஒற்றை விர்த்தகன்.)
குடி இல்லா ஊரிலே குருவியும் பறக்காது. 8555

குடி இல்லா ஊருக்குக் குள்ள நரியே அரசன்.
குடி இல்லா விட்டால் குண்டுப் பெருச்சாளி உலவும்.
(குடியில்லா வீட்டில்.)
குடி உடையானே முடி உடையான்.

குடி உயரக் கோல் உயரும்.
குடி உயர முடி உயரும். 8560

குடிக்கக் கஞ்சி இல்லை; கொப்புளிக்கப் பன்னீராம்.
குடிக்கச் செம்பும் எரிக்க விளக்கும் வேண்டாமா?
குடிக்கச்சேகுமட்டினால் எடுக்கும்.
குடிக்கத் தண்ணீர் கேட்டால் குளிப்பாட்டக் கொண்டு வருவான்.
குடிக்கத் தெரியாதவன் கவிழ்த்துக் கொட்டினானாம். 8565

குடிக்கா விட்டால் கொட்டிக் கவிழ்.
(குடிக்கத் தெரியாவிட்டால்.)
குடிப்பது எருமை மூத்திரம்; கடித்துக் கொள்வது இஞ்சிப் பச்சடி.
குடிக்கிறது காடி நீர்; அதற்குத் தங்க வட்டிலா?
குடிக்கிறது கூழ; இருக்கிறது சிங்காசனம்.
குடிக்கிறது கூழ்; கொப்புளிக்கிறது பன்னீர். 8570
(குடிக்கிறது நீர்.)

குடிக்கிறது பழங் கஞ்சி; கொப்புளிக்கிறது பன்னீர்.
குடிக்கிறது வெந்நீர்; கொப்புளிப்பது பன்னீர்.
குடிக்கிற பாலை வெடிப்பிலே வார்க்கிறதா?
குடிக்கிற முலையும் சரி, பிடிக்கிற முலையும் சரியா?
(ஒன்றுதானா?)
குடிக்கிறவன் கையைச் சுற்றிச் சூடு போட்டாலும் குடியை விடான். 8575

குடிக்கிற வீடு விடியுமா?
குடிக்குச் சகுனியும் கொல்லைக்குப் பல்லியும் கூடா.
குடிகாரன் புத்தி விடிந்தால் தெரியும்.
குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு.
(பொழுது விடிந்தால்.)
குடிகாரன் வீட்டில் விடிய விடியச் சண்டை. 8580

குடி கெடுத்த குஷியிலே குரங்கைக் கட்டிக்கொண்டு அழுதானாம்.
குடி, சூது, விபசாரம் குடியைக் கெடுக்கும்.
குடித்த மருந்து குடித்தாற் போல எடுத்தால் பரிகாரி வாயிலே மண்ணுதான்.
(பரிகாரி- வைத்தியன்.)
குடித்த மறி கூட்டில் கிடைக்காது.

குடித்தனம் என்று பண்ணினால் நன்மையும் வரும்; தீமையும் வரும். 8585

குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்.
குடித்தனம் மேலிட வேண்டிப் பிடாரியைப் பெண்டு வைத்துக் கொண்டான்.
குடித்தனமே துரைத் தனம்.
(குடித்தனமோ, துரைத்தனமோ?)
குடிப்பது கூழ்; ஏறுவது தந்தப் பல்லக்கு.
குடிப்பது கூழ்; கொப்புளிப்பது பன்னீராம். 8590

குடிப்பது மல ஜலம்; கொப்புளிப்பது பன்னீர்.
குடிப் பெண் வயிறு எரிய, கொடிச் சீலை நின்றெரிய.
குடி போகிற வீட்டுக்கு வரச் சொன்ன கதை.
குடி போன வீட்டிலே வறட்டு நாய் காத்தது போல.
குடி மக்கள் துரைத்தனம் செய்கிறது போல். 8595

குடி மதம் அடிபடத் தீரும்.
(அடிபட்டால்.)
குடியனும் வெறியனும் அடிபடாமல் குணப்பட மாட்டார்கள்.
குடியனும் வெறியனும் சரி.
குடியாத வீடு விடியாது.
குடியில் பிறந்து குரங்காட்டம் ஆடுகிறான். 8600

குடியில் பிறந்து செடியில் விழுந்தான்.
குடியில் பெண் வயிறு எரிந்தால் கொடியிற் சேலை நின்று எரியும்.
குடியில்லா ஊரில் ஒற்றைப் பணக்காரன் வர்த்தகன்,
குடியிலே குரங்கானாலும் கொள்.
குடியும் கெட்டுக் குடிக்கிற ஓடும் கெட்டது. 8605

குடியும் சூதும் குடியைக் கெடுக்கும்.
குடியே குடியைக் கெடுக்கும்.
குடி வரி உயர்த்திக் கொள்ளை அடிக்காதே.
குடி வைத்த வீட்டில் கொள்ளி வைக்கலாமா?
குடி வைத்துக் கொண்டாயோ? கொள்ளி வைத்துக் கொண்டாயோ? 8610

குடு குடு என்று ஓடிக் குடுமியைச் சிரைத்தானாம்.
(ஓடி வந்தானாம்.)

குடும்பத்தில் இளையவனும், கூத்தாடியில் மூத்தவனும் உதவார்.
(கூத்தாடியில் சோம்பேறியும்.)
குடும்பா என்றால் கொத்து வேண்டாம்.
குடுமிக்கு ஏற்ற கொண்டை.
(தக்க.)
குடுமித் தலையின் வீறாப்பைக் கொண்டைத் தலையா பாரடா. 8615
(பார்த்தாயா?)

குடுமித் தலையும் மொட்டைத் தலையும் கூடுமா?
குடுமித் தலையும் மொட்டைத் தலையுமாய்க் கட்டுகிறது.
குடுமியானுக்குக் குறுணி கொடுக்கிறதா என்று புற்றின்மேல் படுத்த கதை.
குண்டன் கூடினால் சண்டை வரும்; குமரி கூடினால் நகர் பாழாகும்.
குண்டா கரணம் போட்டாலும் பிண்டச் சோற்றுக்கு வழி இல்லை. 8620

குண்டி அறுந்த பருந்து போல.
குண்டி எத்தனை கோணல் கோணினாலும் சுமை வீட்டில் போய்ச் சேர்ந்தால் சரி.
குண்டி எத்தனையோ குளம்; குளம் எத்தனையோ குண்டி.
குண்டி எத்தனையோ துணிகளைக் கண்டது; குந்தாணி எத்தனையோ உரலைக் கண்டது.
குண்டி காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும். 8625

குண்டித் துணியும் குடிக்கக் கூழும் இன்றிக் கண்டிக்குச் சென்றும் கவலையே கொண்டாற் போல்.
குண்டி மறைக்கத் துணி இல்லை; கொண்டை பூவுக்கு அழுகிறதாம்.
குண்டி மினுக்கி அரிவாள் தீட்டுமுன் உள்ள பதநீர் கள் ஆகிவிடும்.
குண்டி வற்றினால் குதிரையும் வைக்கோல் தின்னும்.
குண்டு குண்டு என்று ஓடினாலும் குட்டி ஆனை குதிரை ஆகுமா? 8630

குண்டு சட்டிக்குள்ளே குட்டி யானை நுழைந்தாற் போல்.
குண்டு சட்டியிலே குதிரை ஓட்டுகிறான்.
(ஓட்டுகிறது.)

குண்டுணிக் குப்பன்.
குண்டுணி சொல்கிறவர்களுக்கு இரு நாக்கு; கட்டு விரியனுக்கும் இரு நாக்கு.
(கடு நாக்கு.)
குண்டுப் பெருச்சாளியும் வண்டும் போல. 8635

குண்டு பட்டுச் சாகாதவன் வண்டு கடித்துச் செத்தானாம்.
குண்டு போன இடத்தில் குருவி நேர்ந்தது.
குண்டும் இல்லாமல் மருந்தும் இல்லாமல் குருவி சுடலாமா?
குண்டு மாற்று, குழி மாற்று.
(கச்சிதமான அளவு.)
குண்டை இணைத்தால் குடி இளைக்கும். 8640

குண்டை சாவு கொடுத்தவனும் பெண்டைச் சாவு கொடுத்தவனும் ஒன்று.
குண்டை பலத்தால் குடி பலக்கும்.
குண்டை பலமோ, குடி பலமோ?
குண்டை பெருத்தால் குடி பெருக்கும்.
(விளங்கினால் விளங்கும்.)
குண்டோட்டம் குதிரை ஓட்டம். 8645

குணக்கு எடுக்க நாய் வால் நிமிருமா?
(குணக்கெடுக்க நாய் வாலைக் கூடுமா?)
குணச்சிறப்பைக் குலத்தில் பார்.
குணத்திற்கு அழுகிறதா? பிணத்திற்கு அழுகிறதா?
குணத்தைச் சொல்; குலத்தைச் சொல்லாதே.
குணத்தை மாற்றக் குரு இல்லை. 8650

குணம் இல்லாக் கல்வி பாழ்.
குணம் இல்லா வித்தை எல்லாம் அவித்தை.
குணம் உள்ள இடத்திலே மணம் உண்டு.
(நிறைவு உண்டு.)
குணம் உற்றவன் மனம் உற்றவன்; குணம் அற்றவன் மனம் அற்றவன்.
குணம் கெட்ட இடத்திலே குன்றியும் இராது. 8655

குணம் கெட்ட மாப்பிள்ளைக்கு மணம் கெட்ட பணியாரம்.
குணம் கெட்டால் குரங்கு.

குணம் பாதி; கொண்ட நோவு பாதி.
குணம் பெரிதே அன்றிக் குலம் பெரிதல்ல.
குணம் போல வாழ்வு. 8660

குத்தக் கூலியும் கொடுத்து எதிர் மூச்சும் போட்டானாம்.
(போடுகிறது.)
குத்தாக் குறும்பி, குடுமி இல்லாப் பத்தங்கி.
(குறும்பி, பத்தங்கி என வைணவர்களில் இரு வம்சம். குறும்பியர் உபநயனத்தில் காது குத்துவர்;பத்தங்கி சாமகர் மொட்டையடிப்பர்.)
குத்தாத காதுக்கு ஊனம் இல்லை; குரைக்காத நாய்க்கு உதையும் இல்லை.
குத்திக் கெட்டது பல்; குடைந்து கெட்டது காது.
குத்திக் கொண்டு வா என்றால் வெட்டிக் கொண்டு வருகிறான். 8665

குத்திரம் குடியைக் கெடுக்கும்.
குத்தி வடித்தாலும் சம்பா; குப்பையிலே போட்டாலும் தங்கம்.
(மாணிக்கம்.)
குத்தி விட்டு வேடிக்கை பார்க்கிறது.
குத்தின அரிசி கொழியலோடு இருக்க, இந்தாடா மாமா என் தாலி என்றாளாம்.
குத்துக்கு முன்னே குடுமியைப் பிடி. 8670

குத்துகிற உரல் பஞ்சம் அறியுமா?
குத்துப் பட்டவனும் தூங்க மாட்டான். குறை வயிற்றுக்காரனும் தூங்க மாட்டான்.
குத்துப்பட்டுப் பொறுத்தாலும் குறை வயிறு பொறுக்காது.
(பொறுக்குமா?)
குதிக்கும் முன் பார்த்துக் குதி.
குதி குதி என்பார்கள் எல்லாரும் கூடக் குதிப்பார்களா? 8675

குதித்துக் குதித்து மா இடித்தாலும் குண்டனுக்கு ஒரு கொழுக் கட்டை.
குதித்துக் குதித்து மா இடித்தாலும் குந்தாணிக்கு ஒரு கொழுக்கட்டையும் கிடையாது.
குதித்துக் குதித்து மா இடித்தாலும் புழுக்கைக்கு ஒரு கொழுக்கட்டையே.

(கூழைச்சிக்கு இரண்டு கொழுக்கட்டையே.)
குதிரை இருப்பு அறியும்; கொண்ட பெண்டாட்டி குணம் அறிவாள்.
(கொண்டவன் குணம் அறிவாள் பெண்டாட்டி.)
குதிரை இல்லாத ஊருக்குக் கழுதை தம்பிரான். 8680

குதிரை உதைத்தாலும் உதைக்கலாம்; கழுதையா உதைக்கிறது?
(கழுதை உதைக்கலாமா?)
குதிரை எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்.
குதிரை ஏற அதிருஷ்டம் இருந்தால் கொண்டு ஏற வேண்டுமா?
(குண்டை ஏறவேண்டுமா?)
குதிரை ஏறாமல் கெட்டது; கடன் கேளாமல் கெட்டது.
குதிரை ஏறி என்ன? கோணல் கொம்பு ஊதி என்ன?
வீணர்க்கும் கீர்த்திக்கும் வெகு தூரம். 8685

குதிரைக்குக் குர்ரம் என்றால் ஆனைக்கு அர்ரம் என்கிறான்.
(குர்ரம்- குதிரை; தெலுங்கு.)
குதிரைக்குக் குளம்பு கொடுத்தவன் கொம்பு கொடுக்கவில்லை.
குதிரைக்குக் கொம்பு முளைத்தாலும் நாய்க்கு வால் நிமிராது.
குதிரைக் குணம் அறிந்தல்லவோ தம்பிரான்
கொம்பு கொடுக்கவில்லை.
குதிரைக்குப் படை கட்டினாற் போல. 8690
(பட்டை.)

குதிரைக்கும் நாய்க்கும் குடி போகச் சந்தோஷம்.
குதிரைக்கு வால் இருந்தால் குண்டி மட்டும்.
குதிரைக் கொம்பு
(+ ஆகிவிட்டது.)
குதிரை கீழே தள்ளியதோடு குழியையும் பறித்ததாம்.
குதிரை குட்டி போடுகிறது, குட்டி போடுகிறது என்று
லத்தி போட்டதாம். 8695
(ஆனை குட்டி போடுகிறது.)

குதிரை குருடாக இருந்தாலும் கொள்ளுத் தின்கிறதில்
குறைச்சல் இல்லை.
(தின்னும் கொள் முக்குறுணி.)
குதிரை குருடாக இருந்தாலும் நித்திரையிலே குறை இல்லை.
குதிரை செத்ததும் அல்லாமல் குழி தோண்ட மூன்று பணம்.
(பத்துப் பணம்.)

குதிரை செத்ததும் அல்லாமல் சேணம் சுமக்க வேலை ஆயிற்று.
குதிரை தூக்கிப் போட்டதன்றியும் குழியும் பறித்ததாம். 8700
(தோண்டுகிறதாம்.)

குதிரை நடக்காவிட்டால் ராவுத்தர் கொக்காய்ப் பறப்பாரோ?
குதிரை நடந்தால் அல்லவா ராவுத்தன் கொக்காய்ப் பறக்கலாம்?
குதிரை நடைவராமல் கொக்காய்ப் பறப்பானாம் ராவுத்தன்.
குதிரை நல்லது தான்; சுழி கெட்டது.
குதிரை நொண்டி ஆனாலும் கொள்ளுத் தின்ன ராஜா. 8705

குதிரை பிடிக்கச் சம்மட்டி அடிக்கக் கூப்பிட்டுக் குரலுக்கு ஏனென்று கேட்க
குதிரை முட்டை.
(அவிவேக பூரண கதை.)
குதிரையான குதிரையெல்லாம் கூரையைப் பறித்துத் தின்கிற போது, குருட்டுக் குதிரை கோதுமை மாவுக்கு அழுததாம்.
குதிரையின் குணம் அறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொடுக்கவில்லை?
குதிரையின் கொழுப்பு அறிந்து சுவாமி கொம்பு கொடாமற் போனார். 8710

குதிரையும் ஏறிக் குதிரைக் குட்டியும் ஏறுவதா?
குதிரையும் கழுதையும் ஒன்றாகுமா?
குதிரையும் காதம், கிழவியும் காதம்.
(ஔவையார் பாடல்.)
குதிரையைத் தண்ணீரண்டை இழுத்துச் செல்லலாமே தவிரக் குடிக்கச் செய்ய முடியாது.
குதிரையைப் போல நாயை வளர்த்து ரெட்டிச்சி, நீ குரை. 8715

குதிரை ராவுத்தனைத் தள்ளினதும் அல்லாமல் குழியும் தோண்டுகிறதாம்.
(பாகனை, பறிக்கிறதாம்.)
குதிரை வாங்கியபின் லகானுக்கு வழக்கா?
(வழக்கு.)
குதிரை வால் இருந்தால் எட்டின மட்டுந்தானே வீசும்?

குதிரை வால் படைத்தால் தன் மட்டும் வீசுகிறது.
குதிரை வால் வீச்சுக் குதிரை மட்டும். 8720

குதிரை விற்ற குச்சிலியன் போல.
குந்திக் கொண்டு தின்றால் குன்றும் கரையும்.
(குந்தியிருந்து.)
குந்தினால் எழுந்திருக்க மாட்டேன்; குஞ்சு பொரித்தால் பேர் பாதி.
குந்தினாயே குரங்கே, உன் சந்தடி அடங்கே.
குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்றானாம். 8725

குப்புற விழுந்து தவம் செய்தாலும் குருக்களுக்கு மோட்சம் இல்லை.
குப்புற விழுந்தும் முதுகில் மண் படவில்லை என்றானாம்.
குப்பை யில்லா வேளாண்மை சப்பை.
(இல்லாப் பயிர்.)
குப்பையின்றிப் பயிர் விளையாது.
குப்பை உயர்ந்தது; கோபுரம் தாழ்ந்தது. 8730

குப்பை உயர்ந்தால் குடி உயரும்.
(குப்பை உயர.)
குப்பை உயர்ந்தால் கோபுரம் ஆகுமா?
குப்பை உயர்ந்து என்ன? கோபுரம் தாழ்ந்து என்ன?
குப்பை ஏறிக் குடை பிடிக்க மாட்டாதவன் வானம் ஏறி வைகுந்தம் பார்த்தானாம்.
குப்பை ஏறிக் கூவாத கோழி, கோபுரம் ஏறி வைகுண்டம் காட்டுமா? 8735

குப்பை ஏறிக் கோணற் சுரைக்காய் அறுக்காதவன் வானில் ஏறி வைகுண்டம் பார்த்தானாம்.
குப்பைக் கீரை.
குப்பைக் கீரைத் தண்டு கப்பலுக்குப் பாய்மரம் ஆகுமா?
(காலாகுமா?)
குப்பைக்குள் இருந்தாலும் குன்றிமணி குன்றாது.
குப்பை கொட்ட முடியாது. 8740

குப்பை சீக்கும் நாயே, உனக்குக் கொற்றத் தவிசும் உண்டோ?
குப்பைத் தொட்டி தாய் எருக்கிடங்கு நாயை ஏளனம் செய்ததாம்.

குப்பைத் தொட்டியாய் இருந்தாலும் நாய்க்குத் தன் தொட்டி பொன் தொட்டியே.
குப்பை நாய்க்குச் சுவர்க்க ஞாபகம்.
குப்பை மேட்டில் இருக்கும் நாய் பூர்வோத்தரங்களை எண்ணியது போல. 8745

குப்பை மேடு உயர்ந்தது; கோபுரம் தாழ்ந்தது.
குப்பையில் இருந்தாலும் குன்றிமணி; செப்பிலே இருந்தாலும் மாணிக்கம்.
குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி நிறம் மாறாது.
(கிடந்த குன்றிமணி போல, நிறம் குன்றாது, மாறாது.)
குப்பையில் கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கந்தான்.
(இருந்தாலும்.)
குப்பையில் கீரை முளைத்தால் கப்பலுக்குக் கால் ஆகுமா? 8750

குப்பையில் கோடி தனம்.
குப்பையில் புதைத்தாலும் குன்றிமணியின் நிறம் மாறாது.
குப்பையில் போட்டாலும் குண்றிமணி குண்றிமணிதான்.
குப்பையில் போட்டாலும் குறிப் பேட்டில் பதிந்து விட்டுப் போடு.
(செட்டி நாட்டு வழக்கு.)
குப்பையில் முளைத்த கீரை கப்பலுக்குக் கால் ஆகுமா? 8755

குப்பையில் முளைத்த கொடி கூரையில் ஏறினது போல.
(ஏறும்.)
குப்பையும் கோழியும் போலக் குருவும் சீடனும்.
குபேரப் பட்டணம் கொள்ளை போகிறதா?
குபேரன் பட்டணத்தில் கொள்ளை போயிற்றாம்; ஒருவனுக்கு ஊசி கிடைத்ததாம்.
குபேரன் பட்டணத்திலும் கோவணாண்டி உண்டு. 8760

குபேரன் பட்டணத்திலும் விறகு சுமக்கிறவன் உண்டு.
(பதியிலும் விறகு தலையன்.)
குபேரன் பட்டணம் கொள்ளை போனாலும் கொடுத்து வையாத பாவிக்கு ஒன்றும் இல்லை.
கும்பகோணத்தில் காவேரி தாண்டக் கொட்டையூரில் கச்சம் கட்டினானாம்.
கும்பகோணத்தில் மூட்டையைத் தூக்கக் குத்தாலத்தில் முண்டாசு கட்டினானாம்.

கும்பகோணத்துக்கு வழி என்ன என்றால் கொட்டைப் பாக்குக்கு விலை சொன்னானாம். 8765

கும்பகோணத்துப் பள்ளன் கொள்ளை கொண்டு போகத் தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டம் கொடுத்தான்.

கும்பகோணம் கோபுரத் தழகு; தஞ்சாவூர் தடி அழகு.

கும்பகோணம் கோயில் அழகு.

கும்பகோணே க்ரதம்பாபம் கும்பகோணே விநக்யதி.

கும்பகோணே க்ரதம்பாபம், கொட்டையூரே விநக்யதி; கொட்டையூரே க்ரதம்பாபம் கும்பகோணே விநக்யதி. 8770

கும்பத்தில் மழை பெய்தால் குப்பை மேடு எல்லாம் நெல்.

கும்பத்து வெள்ளி குடம் கொண்டு சாய்க்கும்.

கும்பலிலே கோவிந்தா போடுகிறான்.

கும்பி கூழுக்கு அழுகிறது; கொண்டை பூவுக்கு அழுகிறது. (எண்ணெய்க்கு.)

கும்பிட்ட கையை வெட்டியது போல. 8775

கும்பிட்ட கோயில் தலை மேல் இடிந்து விழுந்தது போல.

கும்பிட்ட தெய்வம் குல தெய்வம்.

கும்பிட்டுக் கடன் கொடாதே; கும்பிட்டுக் கடன் வாங்காதே. (கும்பிட்டு.)

கும்பிட்டுக் கடன் வாங்குகிறதா?

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல. 8780

கும்பிடுகிறவனைத் தான் கேட்குமாம் கோழிக் குஞ்சுக் காவு.

கும்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்கு. (வாங்க வேண்டும்.)

கும்பிடு போட்டுக் குடியைக் கெடுக்காதே.

கும்பிடும் கள்ளர், குழைந்திடும் கள்ளர்.

கும்பியிலே கல்லை விட்டு எறிந்தால் கூடத் தெறிக்கும். 8785 (மேலே தெறிக்கும்.)

கும்பினிக் கோழி முட்டை அம்மிக் கல்லையும் உடைக்கும். (கும்பினி-ஈஸ்ட் இந்தியா கம்பெனி.)

குமர் முற்றிக் குரங்காகிறது. (யாழ்ப்பாண வழக்கு.)

குமரிக்கு ஒரு பிள்ளை; கோடிக்கு ஒரு வெள்ளை.

குகரிக்குக் கொண்டாட்டம்; கிழவனுக்குத் திண்டாட்டம்.
குமரிக்கும் நாய்க்கும் குடிபோகக் கொண்டாட்டம். 8790

குமரிக்கு முதுகில் பிள்ளை.
குமரிக்குள்ள தளுக்கு, குட்டி போட்டால் லொடக்கு.
குமரி தனியாகப் போனாலும் கொட்டாவி தனியாகப் போகாது.
(தனி வழி.)
குமரிப் பால் குமட்டுமா?
குமரிப் பெண்ணைத் தாசி வீட்டில் அடகு வைத்தது போல. 8795

குமரியாக இருக்கையில் கொண்டாட்டம்; கிழவியாக இருக்கையில் திண்டாட்டம்.
குமரியைக் கொண்டவனை விட்டுக் கூட வந்தவனோடு கூட்டி அனுப்புவது போல.
குமரீசுவரரே, குமரீசுவரரே, கொட்டு மேளம் முழங்குவதேன்? அக்கினீசுவரரே, அக்கினீசுவரரே அவரவர் தலைவிதி.
(குமரீசுவரர்-போகனூர்ச் சிவபெருமான்-அக்கினீசுவரர் -நெரூர்ச் சிவபெருமான்,)
குயத்தி நாக்கை அறுத்தாலும் குண்டு சட்டி இரண்டு காசுதான் என்பாள்.
குயத்தி நாக்கைக் குட்டம் போட்டாலும் குடம் மூன்று காசுதான் என்பாள். 8800

குயவன் வீட்டில் பானை இருந்தால் வர மாட்டார்களா? பெண் இருந்தால் கேட்க மாட்டார்களா?
குயவனில் தாதன் இல்லை; ஆயரில் ஆண்டி இல்லை.
குயவனுக்கு ஆறு மாதம்; தடிகாரனுக்கு அரை நாழிகை.
(குயவனுக்கு ஒரு நாள்.)
குயவனுக்கு ஒரு மாச வேலை; தடியனுக்கு ஒரு நாழிகை வேலை.
குயவனுக்குப் பல நாள் வேலை; தடியடிக்காரனுக்கு ஒரு நாள் வேலை. 8805
(அரை நாழிகை வேலை.)

குயவா கலசம் கொண்டு வா, இடையா பால் கொடு என்றாற் போல.
குயில் குரலும் மயில் அழகும் போல.
குயில் கூவிக் கெடுகிறதாம்; மயில் ஆடிக் கெடுகிறதாம்.
குயில் கூவினாற் போல.

குயில் போலப் பெண்டாட்டி இருந்தாலும் குரங்கு போல் ஒரு
வைப்பாட்டி வேணும். 8810

குயில் முட்டை இடக் காகம் கண்டு களிக்க.
குயிலைப் போலக் கூவுகிறான்.
குரங்காட்டிக்கு அவன் குரங்குதான் பெரிது.
குரங்கின் கைக் கொள்ளி கொடுத்து விடல்.
(பழமொழி நானூறு.)
குரங்கின் கைப் பூமாலை. 8815

குரங்கின் கையில் கொள்ளி அகப்பட்டது.
(கொடுக்கலாமா?)
குரங்கின் கையில் சிக்கிய பாம்பு போல.
குரங்கின் தலையில் கரகம் வைத்துக் காளி கும்பிட்டது போல
குரங்கின் மலத்தை மருந்துக்குக் கேட்டால் சொப்புக்களை
யெல்லாம் தத்திப் பாயும்.
குரங்கின் மூத்திரம் துளி ஆயிரம் பொன். 8820

குரங்கின் வயிற்றில் குஞ்சரம் பிறக்குமா?
குரங்கின் வாயில் அடக்கம் போட்டாற் போல.
குரங்கினிடம் பேன் அகப்பட்டாற் போல.
குரங்கினுள் நன் முகத்த இல்.
(பழமொழி நானூறு.)
குரங்கு ஆடினாலும் ஆடாவிட்டாலும் குரங்காட்டி ஆடுவான். 8825

குரங்கு ஆனாலும் குலத்திலே கொள்ள வேண்டும்.
குரங்கு உடம்பில் புண் வந்தால் கோவிந்தாதான்.
குரங்கு எல்லாம் கூட்டம் கூட்டமாக இருக்கும்.
குரங்கு எறி விளங்காய்.
குரங்கு என்றாலும் குலத்திலே கொள். 8830

குரங்கு ஏறாத கொம்பு உண்டோ?
குரங்கு ஓடம் கவிழ்த்த கதை ஆகி விட்டது.
குரங்குக்கு ஏணி வைத்துக் கொடுத்தது போல,
குரங்குக்குக் கள் வார்த்தாற் போல.
குரங்குக்குக் குல்லாய் போட்டு அழகு பார்த்ததுபோல. 8835

குரங்குக்குச் சாவு சிரங்கிலே.
குரல்குக் குட்டிக்குத் தாவக் கற்றுக் கொடுக்க வேண்டுமா?
குரங்குக் குட்டிக்கு மரம் ஏறக் கற்றுக் கொடுத்தானாம்.
குரங்குக் குட்டி கையைத் தேய்க்கிறது போல.
குரங்குக்குத் தன் மணம் நறுமணமாம். 8840

குரங்குக்குத் தேள் கொட்டினாற் போல.
குரங்குக்குத் தேள் கொட்டினால் மரத்துக்கு மரம் தாவுமாம்.
குரங்குக்குப் பிய்க்கத் தெரியும்; கட்டத் தெரியாது.
குரங்குக்குப் புண் வந்த கதை.
குரங்குக்குப் புண் வந்தால் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டே இருக்குமாம். 8845

குரங்குக்குப் புத்தி சொல்லித் தூக்கணாங்குருவி கூண்டு அறுந்தது.
(தன் கூண்டை இழந்தது.)
குரங்குக்குப் புத்தி சொன்னால் குடியிருப்புப் பாழ்தான்.
குரங்குக்குப் பொரி போட்டுத் தடி வெட்டிக் கொடுத்தது போல.
குரங்குக்கும் தன் குட்டி பொன் குட்டி.
குரங்குக்கு வால் வைப்பதற்குள் விடிந்து விட்டது. 8850

குரங்கு கள்ளும் குடித்துப் பேயும் பிடித்துத் தேளும் கொட்டினால் என்ன கதி ஆகும்?
குரங்கு காது அறுத்தாலும் அறுக்கும்; பேன் எடுத்தாலும் எடுக்கும்.
குரங்கு கால் பணம்; விலங்கு முக்காற் பணம்.
குரங்கு குட்டி கையை நெருப்பில் தோய்க்கிறது போல.
குரங்கு கைப் பூனை போல. 8855

குரங்கு கையில் குட்டிக்குக் கள் வார்த்தாற் போல.
குரங்கு கையில் கொடுத்த கொள்ளி போல.
(கொள்ளி அகப்பட்ட கதை.)
குரங்கு கையில் பூமாலை அகப்பட்டது போல.
குரங்குச் சேஷ்டை.
குரங்கு சாகக் கொடுத்த ஆண்டி போல. 8860

குரங்கு செத்த குறவன்.
(மலையாள வழக்கு.)
குரங்கு செய்கிற தொல்லை அப்பப்பா, அது செத்தால் சமாதி கட்ட வேணும்.

குரங்கு சொறிந்தால் புண் ஆகும்.
குரங்கு தன் அழகைப் பார்க்கக் கண்ணாடி தேடியதாம்.
குரங்கு தன் குட்டியின் கையைக் கொண்டு பதம் பார்க்கிறது போல. 8865
(அடுப்பின் தீயைச் சோதித்தது போல.)

குரங்கு தாவுகிற தாவிலே குட்டியை மறக்குமா?
குரங்கு தீவட்டி பிடித்தாற் போல.
குரங்கு நியாயம்.
குரங்குப் பிடி, கரும்புப் பிடி.
குரங்குப் பிடிபோல் பிடிக்க வேண்டும். 8870
(குரங்குப் பிடியாய்ப் பிடிக்கிறது.)

குரங்குப் பிடி போன்ற பிடிவாதம் பிடிக்காதே.
குரங்குப் பிடியும் குழந்தைப் பிடியும்.
குரங்குப் பிணமும் குறப்பிணமும் கண்டவர் இல்லை.
(குறவன் சுடுகாடும்.)
குரங்குப் பீயை மருந்துக்குக் கேட்டால் கொம்புக்குக் கொம்பு தாவுமாம்.
குரங்குப் புண் ஆறாது. 8875
(பிரம்மாண்டம்.)

குரங்குப் புத்தி.
குரங்கு பிடித்த பிடியை விடாது; நாய் கடித்த கடியை விடாது.
குரங்கு பேன் பார்த்தாலும் பார்க்கும்; காதைப் பிய்த்தாலும் பிய்க்கும்.
குரங்கும் உடும்பும் பிடித்தது விடா.
குரங்கு மரத்தில் ஏறும்; குழந்தை இடுப்பில் ஏறும். 8880

குரங்கு மழையில் நனைந்தாலும் நனையும்; குடிசையில் போய் ஒண்டாது.
குரங்கு முகத்துக்குப் பொட்டு எதற்கு?
குரங்கு முகம் எல்லாம் ஒரு முகம்; கூத்தாடி பேச்செல்லாம் ஒரு பேச்சு.
குரங்கு வாழைப்பழத்தை கண்டால் சும்மா விடுமா?
குரங்கு விழுந்தால் கூட்டத்துடன் சேராது. 8885

குரங்கை அழைத்துக் கொண்டு கூத்துப் பார்க்கப் போனானாம்!
குரங்கைக் கண்ட நாயைப் போல.
குரங்கைத் தாங்காத கொம்பு உண்டா?
குரங்கைப் பறி கொடுத்த ஆண்டி போல.
குரங்கைப் பிடித்தாலும் பிடித்து விடலாம்; காக்கையைப் பிடிக்க முடியாது. 8890

குரப்பம் இட்டுத் தேய்த்தாலும் கழுதை குதிரை ஆகுமா?
குரல் இல்லாதவனுக்கு விரல்.
குரு இல்லாச் சிக்ஷையும், கரு இல்லா வித்தும் பாழ்.
குரு இல்லாச் சீடன் உண்டா?
குரு இல்லார்க்கு வித்தையும் இல்லை; முதல் இல்லார்க்கு லாபமும் இல்லை. 8895
(ஊதியமும்.)

குரு இல்லா வித்தை பயன் இல்லை.
குரு இல்லா வித்தையும் முதல் இல்லா வாணிகமும்.
குரு என வந்தான்; திருஉரை தந்தான்.
(சிறு உரை.)
குருக்கள் குசு விட்டால் குற்றம் இல்லை.
(யாழ்ப்பாண வழக்கு.)
குருக்கள் நின்று பெய்தால் சிஷ்யன் ஓடிப் பெய்வான். 8900

குருக்கள் பிழைத்தது மறு பிறப்பு.
குருக்கள் பீயை அரைப்பென்று தேய்த்துக் கொள்கிறதா?
குருக்கள்மேல் ஆணை; இந்தக் கழியை விழுங்கு.
குருக்கள் வீட்டுச் சோமன் கொடி கண்டதே ஒழிய அரை கண்டதில்லை.
குருக்களைக் கடித்த நாய் சொர்க்கத்துக்குப் போகுமா, நரகத்துக்குப் போகுமா என்றது போல. 8905

குருக்களைக் கடித்த நாய் புழுத்துச் சாகும்.
குருக்களைக் கடித்த நாய் புழுத்துச் செத்தாலும் குருக்கள் வலிக்கு என்ன செய்வது?
குரு கடாட்சம் கூட்டுவிக்கும்.
குருட்டுக் கண்ணுக்குக் குறுணி மை எதற்கு?
(மை இட்டு ஆவதென்ன?)
குருட்டுக் கண் தூங்கி என்ன? விழித்து என்ன? 8910

குருட்டுக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.
குருட்டுக் கொக்குக்கு ஊர்க்குளமே சாட்சி.
குருட்டுக் கோழி தவிட்டுக்கு வீங்கினது போல்.
குருட்டு நாய்க்கு அதிருஷ்டம் வந்த மாதிரி.
குருட்டு நாய்க்கு இருட்டுள் வறட்டுப் பீ அகப்பட்டாற் போல. 8915

குருட்டு நாய்க்குத் திருட்டுப் புத்தி எதற்கு?
குருட்டு நாய்க்கு வறட்டு மலம் கிடைத்தது போல.
குருட்டுப் பூனை விட்டத்தில் தாவினாற் போல.
குருட்டுப் பெண்ணுக்கு வறட்டு ஜம்பம்.
குருட்டு மாட்டைத் தெய்வம் காக்கும். 8920

குருடர்கள் ஊரிலே ஒற்றைக் கண்ணன் ராஜா.
குருடன் கூடி ஆனையைக் கண்ட கதை.
குருடன் அளந்ததும் கோணியில் கொண்டதும் போல.
குருடன் ஆடு மேய்க்க எட்டு ஆளுக்கு வேலையா?
குருடன் ஆனையைப் பார்த்தாற் போல. 8925

குருடன் கூட வழி போனாலும் செவிடன் கூடப் போகக் கூடாது.
குருடன் கூத்துப் பார்க்கப் போனால் பயன் என்ன?
(பார்த்தது போல.)

குருடன் கைக் கோலைப் பிடுங்கினாற் போல.
குருடன் கையில் விலாங்கு அகப்பட்டது போல.
(விலாங்கு-ஒருவகை மீன்.)

குருடன் சந்தைக்குப் போக எட்டாள் மெனக்கிடு. 8930
(வினைக் கேடு.)

குருடன் தண்ணீருக்குப் போனால் பின்னோடு எட்டாள் மெனக்கீடு.
குருடன் தூங்குவதும் ஒன்றுதான்; விழித்திருப்பது ஒன்றுதான்.
குருடன் பரத நாட்டியம் ஆடினது போல.
குருடன் பழுதை திரித்தது போல.
குருடன் பெண்டாட்டி கூனனோடு உறவாடினாள். 8935

குருடன் பெண்டிரை அடித்தாற் போல.
குருடன் மாங்காய் எறிந்தாற் போல.
குருடன் ராஜ விழி விழித்தாற் போல.
(விழித்த கதை.)

குருடன் வேண்டுவது கண் பெறத்தானே?
(வேண்டுவதெல்லாம் கண்தான்.)
குருடனுக்கு என்ன, கோல்தான் வேண்டும். 8940

குருடனுக்குக் கண்ணாடி காட்டின கதை.
குருடனுக்குக் கண் வேண்டுமென்றுதான் சொல்லுவான்; வேண்டாமென்று சொல்லுவானா?
குருடனுக்குக் குருடன் கோல் பிடிக்க முடியுமா?
குருடனுக்குக் குருடன் வழி காட்டினால் இருவரும் குழியில் விழுவார்கள்.
குருடனுக்குக் கோல் கொடுத்தாற் போல. 8945

குருடனுக்குக் கோல் பிடிக்க முடியுமா?
குருடனுக்குத் தெய்வம் கண் கொடுத்தாற் போல.
குருடனுக்குத் தொட்டால் **கோபம்**; முடவனுக்கு விட்டால் கோபம்.
குருடனுக்குப் பால் கொக்குப் போன்றது.
குருடனுக்குப் பால் சோறு இட்டது போல? 8950

குருடனுக்கு விட்ட இடத்தில் கோபம்.
(பகை.)
குருடனுக்கு வேண்டியது கண்.
குருடனும் செவிடனும் கூத்துப் பார்க்கப் போய்க் குருடன் கூத்தைப் பழித்தான்; செவிடன் பாட்டைப் பழித்தான்.
குருடனும் செவிடனும் கூத்துப் பார்த்தது போல.
(பார்த்த கதை.)
குருடனை நோட்டம் பார்க்கச் சொன்னாற் போல. 8955

குருடனை ராஜவிழி விழிக்கச் சொன்னால் விழிப்பானா?
குருடா சுகமா என்றாற் போல.
குருடி தண்ணீருக்குப் போனால் எட்டாள் மெனக்கீடு.
(வினைக் கேடு.)
குருடி மை இட்டாலும் குருடு குருடே.
குருடி வயிற்றிலே குஞ்சரம் பிறந்தது போல். 8960

குருடு ஆனாலும் குதிரை சிமிட்டுகிறதில் தா ல்லை.
குருடு குருடு என்றால் செவிடு செவிடு என்கிறாய.
(குடுகுடு என்கிறாய்.)

குருடும் செவிடும் கூத்துப் பார்த்தாற் போல்.
குருத் துரோகம் குல நாசம்.
குரு நின்ற நிலையில் நின்றால் சீடன் ஓடுகிற ஓட்டத்தில் இருக்கிறான். 8965

குரு நின்று கொண்டு பெய்தால் சிஷ்யன் ஓடிக் கொண்டு பெய்வான்.
குரு பார்வையால் கோடிப் பாவம் விலகும்.
குரு மொழிக்கு இரண்டு உண்டா?
குரு மொழிக்குச் குறுக்கே போகலாமா?
குரு மொழி கேளாதவனும் தாய் வார்த்தை கேளாதவனும் சண்டி. 8970

குரு மொழி மறந்தோன் திரு அழிந்து அழிவான்.
குரு வாய் மொழியே திருவாய் மொழி.
குருவி உட்காரப் பனம் பழம் விழ.
குருவிக்கு ஏற்ற ராகசுரம்.

(யாழ்ப்பாண வழக்கு. குருவி வாய்க்குள் வைக்கும் நாகசுரத்தின் உறுப்பு சக்கை என்பர்.)

குருவிக்குத் தகுந்த ராம சரம். 8975

(ராமேசுவரம்.)

குருவிக்குத் தகுந்த பாரம்.
குருவிக்குப் பல நாளைய வேலை; குரங்குக்கு ஒரு நாழிகை வேலை.
குருவிக் கூட்டைக் குலையக் கலைக்காதே.
குருவிக் கூட்டைக் கோலாலே கலைக்காதே.

(கலைக்கிறது.)

குருவி கழுத்தில் பனங்காயைக் கட்டித் தொங்கவிட்டது போல. 8980

(கட்டித் தூக்கலாமா?)

குருவி சிறுகச் சிறுகத் தனக்குக் கூட்டைக் கட்டுகிறது.
குருவி சொல்லும் மருவிக் கேள்.
குருவி தலையில் பனங்காயை வைத்தாற் போல.

(தேங்காயை.)

குருவி போலக் கூடு கட்டிக் குரங்கு போலப் பிய்த்தெறிவான்.
குருவி போல மூக்காலே சேர்த்தானாம். 8985

குருவுக்கு ஏற்ற சீடன்.
குருவுக்குத் துரோகம் செய்தாலும் குடலுக்குத் துரோகம் செய்யக் கூடாது.
குருவுக்கும் நாமம் குழைத்துப் போடுவான்.
குருவுக்கு நாமம் போட்டுக் கோபாலப் பெட்டியில் கைபோட்டது போல.
குருவுக்கு மிஞ்சின சிஷ்யன். 8990

குருவும் தாரமும் கொண்டவன் தவம்.
குரு வேஷம் கொண்டவன் எல்லாம் குரு ஆவானா?
குரைக்காத நாய் குதிகாலைக் கடிக்கும்.
குரைக்காத நாயையும் அசையாத நீரையும் நம்பாதே.
குரைக்கிற நாய் ஆனாலும் பட்டியைக் காக்கட்டும். 8995

குரைக்கிற நாய்க்கு எல்லாம் கொழுக்கட்டை போட முடியுமா?
குரைக்கிற நாய்க்கு எலும்பைப் போட்டாற் போல.
(எலும்புத் துண்டைப் போடு.)
குரைக்கிற நாய்க்கு ஒரு துண்டுக் கருப்பட்டி.
குரைக்கிற நாய்க்குக் குத்துச் சோறும், சிலைக்கிற புண்ணுக்குப் பொட்டு எண்ணெயும் தேவை.
குரைக்கிற நாய்க்குக் கொழுக்கட்டை போட்டாற் போல. 9000

குரைக்கிற நாய்க்குப் பிண்டம் போடு; தானே ஓடிப் போகும்.
குரைக்கிற நாய் கடிக்காது.
(கடிக்கிறது அரிது.)
குரைக்கிற நாய் கடிக்காது; இடிக்கிற மேகம் பெய்யாது.
குரைக்கிற நாய் குதி காலைக் கடிக்கும்.
குரைக்கிற நாய் வேட்டைக்கு உதவாது. 9005
(ஆகாது, வேட்டை பிடிக்குமா?)

குரைக்கிற நாயின் வாயிலே கோலைக் கொடுத்தால் ஊர் எங்கும் கொண்டோடிக் குரைக்கும்.
குரைக்கிற நாயை அடித்தால் இன்னம் கொஞ்சம்கூடக் குரைக்கும்.
குரைக்கிற நாயைக் கண்டு பயப்படாதே.
குரை குரை என்றால் குரைக்காதாம் கொல்லக்குடி நாய்;
தானாகக் குரைக்குமாம் தச்சக்குடி நாய்.
குரைத்தால் நாய்; இல்லாவிட்டால் பேய். 9010

குல்லாய்க்கார நவாபு, செல்லாது உன் ஜவாபு.
குல்லாய்க்குத் தலையா? தலைக்குக் குல்லாயா?
குல்லாய் போடப் பார்க்கிறான்.
குல்லாயை எடு என்றால் முல்லாவை அழைத்த கதை.
குலத்தளவே ஆகும் குணம். 9015

குலத்திலே குரங்கைக் கொள்.
குலத்திலே முளைத்த கொடி என்ன கொடி? கற்பிலே மலர்ந்த பெண் கொடி.
குலத்துக்கு ஈனம் கோடாரிக் காம்பு.
குலத்துக்கு ஏற்ற குணம்.
குலத்துக்கு ஏற்ற பெண்; நிலத்துக்கு ஏற்ற நெல். 9020

குலத்துக்கு ஏற்ற பேச்சு.
குலத்தைக் கெடுக்கவந்த கோடாரி.
குலத்தைக் கெடுக்குமாம் குரங்கு.
குலம் எப்படியோ, குணமும் அப்படியே.
குலம் குப்பையிலே; பணம் பந்தியிலே. 9025

குலம் குலத்தோடு; வெள்ளம் ஆற்றோடு.
குலம் குலத்தோடே; வெள்ளாடு தன்னோடே.
குலம் புகுந்தும் குறை தீரவில்லை.
(குறையா?)
குலமகட்கு அழகு கொழுநனைப் பேணுதல்.
குலமகன் குலத்துக்கு அழுவான்; மூக்கறையன் மூக்குக்கு அழுவான். 9030

குலமும் ஒன்று; குறியும் ஒன்று.
குல விச்சை கல்லாமற் பாகம் படும்.
(பழமொழி நானூறு.)
குல வித்தை கற்றுப் பாதி; கல்லாமற் பாதி.
குலஸ்திரீ தன் பர்த்தாவையும் பரஸ்திரீ தன் மேனியையும் பேணுவாள்.
(தன் கணவனையும்.)
குலாசாரத்தைக் குழிக்கறி ஆக்கி மதாசாரத்தின் வாயில் மண் அடிக்க வேண்டும். 9035
(மண் அடிக்கிறது.)

குலாம் காதருக்கும் கோகுலாஷ்டமிக்கும் என்ன சம்பந்தம்?
குலை நடுங்கப் பேசினால் அலமலந்து போகும்.
குழக்கட்டைக்குத் தலை பார்த்துக் கடிப்பதுண்டா?
குழக்கட்டைக்குத் தலையும் இல்லை; குறவனுக்குக் குறையும் இல்லை.
(கூத்தாடிக்கு.)
குழக்கட்டை தின்ற நாய்க்குக் குறுணி மோர் குருதட்சிணையா? 9040

குழக்கட்டை தின்ற பூனைக்குக் குடுவை மோர் வரதட்சிணை.
குழந்தாய் குழியில் அமிழ்ந்தாதே.
குழந்தை இல்லாத வீடு சுடுகாடு.
குழந்தை உள்ள வீடு கோவில்.
குழந்தைக் காய்ச்சலும் குண்டன் காய்ச்சலும் பொல்லா. 9045

குழந்தைக்காரன் குழந்தைக்கு அழுதால் பணிச்சவன் காசுக்கு அழுதானாம்.
குழந்தைக்கும் நாய்க்கும் குடிபோகச் சந்தோஷம்.
குழந்தை காய்ச்சலும் குள்ளன் காய்ச்சலும் பொல்லாதவை.
(குண்டன் காய்ச்சலும்.)
குழந்தை தூங்குகிறது எல்லாம் அம்மையாருக்கு லாபம்.
குழந்தை நோய்க்கு வஞ்சகம் இல்லை. 9050

குழந்தைப் பசி கொள்ளித் தேள்.
(கொள்ளி போலே.)
குழந்தைப் பசியோ? கோவில் பசியோ?
குழந்தைப் பட்டினியும் கோயில் பட்டினியும் இல்லை.
குழந்தைப் பாலை வெடிப்பிலே வார்க்கிறதா?
குழந்தைப் பிடியோ? குரங்குப் பிடியோ? 9055

குழந்தை பிறக்குமுன் பேர் இடுகிறதா?
குழந்தை மலத்துக்குக் குட்டி நாய் வந்தது போல.
குழந்தையின் காதிலே திருமந்திரம் உபதேசித்தாற் போல்.
குழந்தையின் தேகம் போல.
குழந்தையின் முகமும் வாடக் கூடாது; குலுக்கையின் நெல்லும் குறையக் கூடாது. 9060

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்.
(இடத்திலேதான் மகிழ்ச்சி.)
குழந்தையும் தெய்வமும் கொண்டு அணைக்கிற பக்கம்.
குழந்தையைப் பறிகொடுத்துத் தவிக்கிற போது, கிடக்கிறது கிடக்கட்டும், கிழவனை மணையில் வை என்றது போல.
குழந்தையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுதல்.
குழந்தை வளர்ப்பது ஒரு கோயில் கட்டுவதற்குச் சமம். 9065

குழந்தை வாக்குத் தெய்வ வாக்கு.
குழந்தை வாயை முத்தம் இட்டது போல
குழம்புப் பால் குடிக்கவும் குமர கண்ட வலிப்பா?
குழவணப்பிள்ளை போல் பெருத்திருக்கிறான்.
குழறிக் குழறிக் குமரனைப் பாடு. 9070

குழிக் கண்ணும் கோடுவாய் வழிச்சலும்.
குழிப்பிள்ளை மடிப்பிள்ளை.
குழிப்பிள்ளையை எடுத்து இழவு கொண்டாடுகிறது போல.
(கொண்டாடாதே.)
குழிப் பிள்ளையைத் தோண்டி ஒப்பாரி வைப்பது போல.
குழிப் பிள்ளையை நரி சுற்றுவது போல. 9075

குழியிற் பயிரைக் கூரைமேல் ஏற விடுகிறது.
(ஏற்றினாற் போல.)
குளக் குளிர நீராடினால் குளிர் போகும்.
குள்ள நரி தின்ற கோழி. கூவப் போகிறதோ?
(கூப்பிடப் போகிறதோ?)
குள்ளப் பார்ப்பான் பள்ளத்தில் விழுந்தான்; தண்டு எடு, தடி எடு.
குள்ளன் குடி கெடுப்பான்; குள்ளன் பெண்சாதி ஊரைக் கெடுப்பாள். 9080

குள்ளன் குழியில் விழுந்தால், தண்டெடு தடி எடு.
குள்ளனைக் கொண்டு கடலாழம் பார்க்கலாமா?
(பார்க்கிறான்.)
குளத்தில் போட்டுக் கிணற்றில் தேடலாமா?
(நதியில் தேடுவதா?)
குளத்திலே கால் கழுவா விட்டால் குளத்துக்கு என்ன குறை?
குளத்தின் மேலே கோபம் வந்தால் தண்ணீர் குடிக்காமல் போகிறதா? 9085

குளத்தினிடம் கோபித்துக் கொண்டு கால் கழுவாமல் போனானாம்.
குளத்துக்கு மழை குந்தாணி போற் பெய்யுமோ?
(கோவிந்த சதகம்.)
குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரை இட்டது போல.
(இரை கொடுக்கவோ?)
குளத்தை வெட்டி விட்டுத் தவளையைக் கூப்பிட வேண்டுமா?
குளப்படி கண்டு கடல் ஏங்குமா? 9090

குளப்படி தண்ணீர் சமுத்திரம் ஆனால், குடம் தண்ணீர் எவ்வளவு ஆக வேண்டும்?
குளப்படி தண்ணீரைச் சமுத்திரத்தில் இறைப்பானேன்?
குளப்படி நீரை இறைத்தால் கடற்பள்ளம் நிரம்புமா?
குளம் இருக்கிறது; நான் இருக்கிறேன்.
குளம் எத்தனை குண்டியைக் கண்டதோ? குண்டி எத்தனை குளத்தைக் கண்டதோ? 9095

குளம் காக்கிறவன் தண்ணீரைக் குடியானோ?
குளம் தோண்டித் தவளையைக் கூப்பிட வேண்டுமா?
குளம் பெருத்தது அடைச்சாணி; கோயில் பெருத்தது சேரமா தேவி.
குளம் வற்றினால் முறை வீதம் உண்டா?
(வற்றியும், குளம் உடையும் போது.)
குளம் வெட்டப் பூதம் புறப்பட்டது போல. 9100

குளம் வெட்டு முன்னே முதலை குடி இருக்குமா?
குளவி ஊதி ஊதிப் புழுவைத் தன் நிறம் ஆக்கியது போல.
குளவிக்குப் பச்சைப் புழு பிள்ளை.
குளவிக் கூட்டிலே கல்லை விட்டு எறியாதே.
(எறிகிறதா?)
குளவிக் கூட்டைக் கோலால் கலைக்காதே. 9105
(கலைத்தாற் போல.)

குளவி கூடு கட்டினால் பிறப்பு; நாய் பள்ளம் தோண்டினால் இறப்பு.
குளவி புழுவைத் தன் நிறம் ஆக்குவது போல.
குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொண்டது போல.
குளிசம் கட்டிக் குட்டி இரட்டித்தது.
(கட்டியும்).
குளித்தால் குளிர் போகும்; நசித்தால் நாணம் போகும். 9110

குளித்துப் பேணினவனுக்கு இரு வேலை.

குளித்து முப்பது நாள் ஆகவில்லை; குனிந்து உப்பு எடுக்க முடியவில்லை.

குளிர்ந்த கொள்ளியாய் இருந்து குடியைக் கெடுக்கலாமா?

குளிர்ந்த நிழலும் கூத்தியார் வீடும் உள்ளபோது மயிரான உத்தியோகம் இருந்தால் என்ன? போனால் என்ன?

(இந்த வருமானம் வந்தால் என்ன? போனால் என்ன?)

குளிர் விட்டுப் போயிற்று. 9115

குளிராத உள்ளும் கூத்தியாரும் உண்டானால் மயிரான சம்பளம் வந்தால் என்ன? போனால் என்ன?

குளிராத வீடும் கூத்தியாரும் உண்டானால் மயிரான வேளாண்மை விளைந்தால் என்ன? விளையாமற் போனால் என்ன?

குளுகுளு என்பார் தீப் பாய்வார்களா?

(குலுகுலு என்பார்.)

குற்றத் தண்டனையிலும் சுற்றத் தண்டனை நல்லது.

குற்றத்தைத் தள்ளிக் குணத்தைப் பாராட்டு. 9120

(எடுத்துக் கொள்.)

குற்றம் அடைந்த கீர்த்தி குணம் கொள்வது அரிது.

(கொள்ளல் ஆகாது.)

குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறு என்னும்; குறும்பி உள்ள காது தினவு கொள்ளும்.

(குறுகுறுக்கும். தினவு எடுக்கும்.)

குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை.

(சுற்றம் ஏது?)

குற்றம் போலச் செய்து குணம் செய்கிறது.

குற்றம் மறைப்பதில் மற்றொரு குற்றம் நேரும். 9125

குற்ற மனச்சாட்சி கூடி வாழச் சத்துரு.

(வாழும் சத்துரு.)

குற்றவாளி பலவீனன்.

குற்றாலத்தில் குளித்தவனும் குடை வரையில் தூங்கினவனும்.

குற்றாலத்துக் குரங்கே, மரத்தை விட்டு இறங்கே.

குற்றால நாதருக்கு நித்தம் தலைவலி. 9130

குற்றால நாதருக்கு வற்றாக் குடி நீரும் மாறாத் தலையிடியும்.

(குறுமுனி அமுக்கியதால் தலைவலி, அதற்குத் தலைமுழுக்கு.)

குறட்டுக் கழுதி ஆண் பிள்ளையை விடாது; கொழுந்துக்கூடை
பெண் பிள்ளையை விடாது.
குறத்தி பிள்ளை பெறக் குறவன் பத்தியம் தின்ன.
(மருந்து. காயம்.)
குறத்தி பிள்ளை பெறக் குறவன் பெருங்காயம் தின்பான்.
(காயம்.)
குறத்தி பிள்ளை பெறக் குறவன் மருத்துவம் பண்ண. 9135

குற வழக்குக்குச் சக்கிலி வழக்கு இலேசு.
(வழக்கும்.)
குற வழக்கும் இடை வழக்கும் கொஞ்சத்தில் தீரா.
குறவன் குச்சுக் கட்டினாற் போல.
குறவன் விழிப்பது போல விழிக்கிறான்.
குறிக்குத் தகுந்த ராமசரம். 9140

குறிஞ்சி அழிந்து நெருஞ்சி ஆயிற்று.
குறிப்பு அறிந்து கொடுக்கும் கொடையே கொடை.
குறுக்குச் சால் ஓட்டுகிறான்.
குறுக்கே வந்து குட்டை குழப்பாதே.
(பேசி.)
குறுகு குறுகு குற்றாலம். 9145
(அகத்தியர் கூற்று.)

குறுகு நாதா குற்றால நாதா.
குறுங்கைக்கும் கயிலைக்கும் கூப்பிடு தூரம்.
(குறுங்கை-திருக்குறுங்குடி.)
குறுணிக்காரனுக்கு வாழ்க்கைப் பட்டுப் பதக்குப் பதக்கு என்று
அடித்துக் கொண்டால் வருமா?
குறுணி கொடுத்து நாழி வாங்குகிறதா?
குறுணிப் பால் கறந்த போதிலும் கூரை பிடுங்கப்
பார்த்திருக்கலாமா? 9150

குறுணி போட்டால் பதக்கு வருமா?
குறுணி மைதான் இட்டாலும் குருட்டுக் கண் தெரியுமா?
(குருடு குருடே.)
குறுணி மைதான் இட்டாலும் குறிவடிவம் கண் ஆகாது.
குறும்பாடு போல.
குறும்பைத் தவிர்க்கும் குடி தாங்கு. 9155

குறும்பை பூத்தாலும் குணம் போமா நெருப்புக்கு?
(குறுமை.)
குறை அறக் கற்றவன் கோடியில் ஒருவன்.
குறை உள்ளார்க்கு உண்டு குறுகுதல்; கறை உள்ளார்க்கு
உண்டு கரவு.
குறைக் கேழ்வரகு அரைக்கவா?
குறை குடம் கூத்தாடும். 9160

குறை குடம் தளும்பும்; நிறை குடம் தளும்பாது.
குறைந்த கருமான், நீண்ட தச்சன்.
குறைந்த வயிற்றுக்குக் கொள்ளும் பலாக் காயும்; நிறைந்த
வயிற்றுக்கு நீர்மோரும் பானகமும்.
(ததியோதனமும்.)
குறையச் சொல்லி நிறைய அள.
(நிறையக்கொடு.)
குறையை நினைத்துக் கோயிலுக்குப் போகக் குறை வந்து
கொண்டையிலே ஏறிற்றாம். 9165

குறை வித்தையைக் குருவுக்குக் காட்டுகிறதா?
குறைவு அறக் கற்றவன் கோடியில் ஒருவன்.
குறை வேலையை அம்பலத்தில் கொண்டு வரலாமா?
குறை வேலையைக் குருக்களுக்குக் காட்டாதே.
(குருக்களுக்கும் காட்டலாகாது.)
குறை வேலையை முடியாமல் அம்பலத்துக்கு வரலாமா? 9170

குன்றக்குடித் தேவடியாளுக்கு நின்றாற் போலப் பயணம் வரும்.
குன்றி மணி இல்லாத் தட்டான் குசுவுக்குச் சமானம்.
(குசுக் கூடப் பெறமாட்டான்.)
குன்றி மணிக்குக் குறுக்கே கறுப்பு.
குன்றி மணிக்கும் பின்புறத்தில் கறுப்பு.
குன்றி மணித் தங்கம் இல்லாவிட்டால் கொஞ்சங்கூடத் தட்டான்
பிழைக்கமாட்டான். 9175

குன்றி மணி குப்பையில் கிடந்தாலும் குன்றுமா நிறம்?
குன்றி மணிப் பொன் பூட்டிக் கொள்ளக் கோடி தவம்
செய்ய வேணும்.
(பொன் கிடைக்க.)

குன்றில் ஏறி ஆனைப்போர் பார்த்தாற் போல.
குன்றின்மேல் இட்ட விளக்குப் போல.
குன்றினால் பாலா? குழைந்தால் சாதமா? 918

குன்று முட்டிய குருவி போல,
குனிந்தவனுக்குக் கூட ஒரு குட்டு.
குனிந்து ஒரு துரும்பு கிள்ளிப் போடச் சீவன் இல்லாமல் போனாலு
பெயர் என்னவோ பனைபிடுங்கி.
குஷ்டம் பிடித்த நாய் மாதிரி.

கூ என்றவன் பேரில் கொல்லச் சினம். 9185

கூகைக்குப் பகலில் கண் தெரியாது.
கூகை விழித்தாற்போல் விழிக்கிறான்.
கூச் கூச் என்றால் நாய் மூஞ்சியை நக்குமாம்.
கூட்டத்தில் கட்டுச் சோறு அவிழ்த்தாற் போல.
கூட்டம் பெருத்தால் குசுப் பெருக்கும். 9190

கூட்டு வியாபாரம் குடுமிப் பிடி.
கூட்டோடு கயிலாயம் சேர்ந்தாள் காரைக்கால் அம்மை.
கூட்டோடு போச்சுது குளிரும் காய்ச்சலும்.
கூட இருந்து கொண்டு கொள்ளியைச் செருகலாமா?
கூட இருந்து பார்; கூட்டுப் பயிர் இட்டுப் பார். 9195

கூடக் குடியிருந்து கொண்டு கொள்ளி சொருகலாமா?
கூடத்தைக் கொடுத்தாலும் மாடத்தைக் கொடுத்தல் ஆகாது.
(கெடுத்தல்.)
கூடப் பிறந்தவனைக் கோள் சொல்லிக் கொல்லுகிறதா?
கூடம் ஒன்று போடும் முன்னே சுத்தி இரண்டு போடும்.
கூடம் இடிந்தால் மாடம். 9200

கூடி இருந்து குலாவுவார் வீட்டில் ஒடி உண்ணும் கூழும் இனிது.
கூடி இருந்து பார்; கூட்டுப் பயிர் இட்டுப் பார்.
கூடி எல்லோரும் தூக்கி விடுங்கள்; பிணக்காடாய் வெட்டிக் குவித்துப் போடுகிறேன் என்றான்.
கூடி வருகிற காலத்தில் குடுமி நட்டமா நிற்குமாம்.
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. 9205
(வாழ்வது.)

கூடு இருக்கக் குருவி போன மாயம் என்ன?
கூடு புருவம் குடியைக் கெடுக்கும்.
கூடும் காலம் வந்தால் தேடும் பொருள் நடு மடியிலே.
கூடு முடி குடியைக கெடுக்கும்.
கூடைக் கல்லும் பிள்ளையாரானால் எந்தக் கல்லைக் கும்பிடுகிறது? 9210

கூடை கூடையாகக் கொடுத்தாலும் குறை நீங்காது.
கூடை நகையும் குச்சிலிப் பொட்டும்.
கூடையைச் சுட்டுக் கரியாகுமா? கூந்தலைச் சுட்டுக் கரியாகுமா?
(மயிரை.)
கூண்டில் அகப்பட்ட புலிபோல்.
கூண்டிலே குறுணி நெல் இருந்தால் மூலையிலே முக்குறுணித் தெய்வம் கூத்தாடும். 9215

கூண்டோடு கைலாசம்.
கூண்டோடு போயின குளிரும் காய்ச்சலும்.
கூத்தரிசி குத்துகிற வீட்டில் வாய்க்கரிசிக்காரிக்கு வழி இல்லை.
(கூத்தரிசிக்காரி. வழி ஏது? வழி இல்லை.)
கூத்தன் என்றும் கோழி என்றும் சொல்கிறார்களா?
கூத்தாட்டுச் சிலம்பம் படை வெட்டுக்கு ஆகுமா? 9220
(கூத்தாடி சிலம்பம்.)

கூத்தாடிக் கணவன் வயிற்றைக் கெடுத்தான்; வாய்ப்பட்டி மாமியார் வாயைக் கெடுத்தாள்.
கூத்தாடிக்கு ஒரு குரங்கு கிடைத்தாற் போல.
கூத்தாடிக்குக் கீழே கண்; கூலிக்காரனுக்கு மேலே கண்.
கூத்தாடிக்கு மீசை எதற்கு?
கூத்தாடிக்கு முறை இல்லை; கொழுக் கட்டைக்குத் தலை இல்லை. 9225

கூத்தாடிக் குரங்கு ஆகாமலும் சூதாடித் தோற்காமலும்.
கூத்தாடிகளில் பெரியவர்; கூட்டத்தில் சிறியவர்.
கூத்தாடி கிழக்கே பார்த்தான்; கூலிக்காரன் மேற்கே பார்த்தான்.
கூத்தாடி குண்டாகரணம் போட்டாலும் பிண்டச் சோற்றுக்கு மன்றாட்டம்.
கூத்தாடி சிநேகம் குடியைக் கெடுக்கும். 9230

கூத்தாடி சிலம்பப்படை வெட்டுமா?
கூத்தாடிப் பெண்ணுக்குச் சூதாடிக் கணவன்.
கூத்தாடுவதும் குண்டி நெளிவதும் ஆற்றாதவன் செயல்.
(யாழ்ப்பாண வழக்கு.)
கூத்திக் கள்ளன் பெண்டாட்டியை நம்பமாட்டான்.
கூத்திக் கள்ளனுக்குக் குணம் ஏது? 9235

கூத்திக்கு இட்டுக் குரங்கானான்; வேசிக்கு இட்டு விறகானான்.
(கொடுத்து.)
கூத்திக்குத் தக்க பந்தம்; காற்றுக்குத் தக்க படல்.
கூத்தியார் ஆத்தாள் செத்தால் கொட்டும் முழக்கும்; கூத்தியார் செத்தால் ஒன்றும் இல்லை.
கூத்தியார் செத்தால் குறுங்கட்டில் வெறுங்கட்டில் ஆகுமா?
கூத்தியார் செத்தால் பிணம்: அவள் ஆத்தாள் செத்தால் மணம். 9240
(தாய்.)

கூத்தியார் பிள்ளைக்குத் தகப்பன் யார்?
கூத்தியார் போனால் குறுங்கட்டில் வெறுங்கட்டில்.
கூத்தியார் வீட்டுக்கு நாய் போல் அலைகிறான்.
கூத்தியாருக்கு வழி அற்றவன்.
கூத்திலே கோணங்கி வந்தாற் போல. 9245

கூத்துக்கு ஏற்ற கொட்டுக் கொட்டுகிறது.
கூத்துக்கு ஏற்ற கோமாளி போல.
கூத்துக்குத் தக்க பந்தம்; காற்றுக்குத் தக்க படல்.
கூத்துக்குப் பந்தம் பிடித்தாற் போல.
கூத்துக்குப் பீத்துக் கட்டினாற் போல. 9250

கூத்துக்குப் புகுந்தவன் கொட்டுக்கு அஞ்சித் தீருமா?
கூத்துக்கு மீசை சிரைக்கவா?
கூத்து நெல்லுக் குத்துகிற வீட்டில் வாய்க்கரிசிக்கு வழி இல்லை.
கூத்துக்குப் போனஇடத்தில் தேள் கொட்டினது போல.
கூத்துக்குப் போன இடத்தில் பேய் பிடித்தது போல. 9255

கூந்தல் அழகி, கூப்பிட்டாள் பந்தலிலே.
கூந்தலும் குடலும் கொண்டது கொள்கை.

கூப்பாடு போட்டால் சாப்பாடு வருமா?
(கூப்பிட்டால் சாப்பாடு ஆகுமா?)
கூப்பிடப் போன தாதி மாப்பிள்ளையைக் கைக்கொண்டாள்.
(மாப்பிள்ளை கூடப் போன கதை.)
கூர்ச்சம் போல நிற்கிறான். 9260

கூர்ந்து கவனித்தால் குதிரையும் கழுதையாகத் தெரியும்.
கூர்மத்தை நம்பிக் குடிகெட்டுப் போனேன்.
(கூர்மம்-கூர்மபுராணம்.)
கூர்மையாளனே நேர்மையாளன்.
கூரிய சொல்லான் ஆரினும் வல்லான்.
கூரியன் ஆயினும் வீரியம் பேசேல். 9265

கூருக்கு எதிர் உதைத்தால் ஆர் எழ வருத்தும்?
(சூர் எழ.)
கூரை இட்ட நாள் முதல் தாள் முதல் தாரையிட்டு அழுதாள்.
(கூறை.)
கூரை இல்லா வீடு வீடு ஆகுமா?
கூரை ஏறிக் கோழி பிடிக்காதவனா வானம் ஏறி வைகுந்தம் காட்டுவான்?
(கோபுரம் ஏறி வைகுந்தம் போகப் போகிறான். கோழி பிடிக்காத குருக்களா?)
கூரைக் காய் வைத்தியம் குணத்துக்கு ஏற்குமா? 9270

கூரை மீது ஓடும் குரங்கைப் பார்த்துக் கூட்டில் இருந்த குரங்கு விசாரித்ததாம்.
கூரைமேல் ஏறிக் குருவி பிடிக்காத குரு கைலாசத்துக்கு வழிகாட்டப் போனானாம்.
(வைகுந்தத்துக்கு. வானத்தைக் கீறி வழிகாட்டிப் போகிறாரோ?)
கூரைமேல் ஏறிக் கோணல் சுரைக்காய் அறுக்கத் தெரியாதவன் வானத்தைக் கிழித்து வைகுண்டம் காட்டப் போகிறானாம்.
கூரை மேலே சோறு போட்டால் ஆயிரம் காகம் வரும்.
கூரையைப் பிரிக்கக் குரங்குக்குப் பிடி கடலை. 9275

கூலிக்காரன் பெண் சாதி குளி குளிக்கப் போகிறாளா? குப்பையிலே ஆமணக்கு முளைக்கப் போகிறதா?
(முளைக்காமல்.)
கூலிகு அறுத்தாலும் குறுணிக்கு அறுக்கலாம்; வீணனுக்கு

அறுத்து வெளியிலே நிற்கிறேன்.
(வீணுக்கு.)
கூலிக்கு உழைக்கிறவனுக்கு ஆனைத் தாலியா?
கூலிக்குக் கழு ஏறுவார்களா?
(ஏற்பார்களா?)
கூலிக்குக் குத்துகிறவளைக் கேளிக்கை ஆடச் சொல்வது போல். 9280

கூலிக்குக் குத்துவாள் பிள்ளைக் குத்தவிடு பஞ்சமா?
கூலிக்கு தாலி அறுப்பாரும் இல்லை; மேலைக்கு இருப்பாரும் இல்லை.
கூலிக்கு நாற்று நட வந்தவனுக்கு எல்லைக்கு வழக்கோ?
கூலிக்கு நெல் குத்தலாமாம்; கைமூலம் தெரியக் கூடாதாம்.
கூலிக்குப் பாவம் குறுக்கே. 9285
(வந்தது. பாவி குறுக்கே வந்தான்.)

கூலிக்குப் போனாலும் குறுணி நெல் கிடைக்கும்.
கூலிக்கு மார் அடிப்பது.
கூலிக்கே குத்துவதானாலும் கமுக்கட்டு மயிர் தெரியாமல் இருக்குமா?
கூலி குறைத்தாயோ? குறை மரக்கால் இட்டாயோ?
கூலி குறைத்தால் வேலை கெடும். 9290

கூலிப் படை குத்துமா? கூவத்தைக் கண்டு கடல் ஒத்துமா?
கூலிப் படைவெட்டுமா?
கூலியும் கொடுத்து எதிர் மூச்சும் போட்டாளாம்.
(போடுகிறது.)
கூலியைக் குறைக்காதே; வேலையைக் கெடுக்காதே.
கூவுகிற கோழிக்கும் குந்திக் கொண்டு இருக்கிற அம்மையாருக்கும் என்ன வேலை? 9295

கூழ் ஆனாலும் குப்பை ஆனாலும் குடித்துக் கொண்டவன் பிழைப்பான்.
கூழ் ஆனாலும் குளித்துக் குடி; கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.
கூழ் என்றாலும் குடிக்கிறவன் பிழைப்பான்.
கூழ் என்றாலும் வாழ்வுக்குத் தக்கதாகக் குடிக்கத்தான் வேண்டும்.
(வாழ்வுக்குத் தக்கதென்றால்.)
கூழ் குடிக்காத பொட்டை, கேழ்வரகு ஏண்டா நட்டாய்? 9300

கூழ் குடிக்கிறாயா அப்பா? குறுணி குடிப்பேன் குப்பா.
கூழ் குடித்த குழந்தை குந்தாணி.
கூழ் குடித்தவன் ஆனான்; குந்தித் தின்றவன் குடியால் மடிந்தான்.
கூழ் குடித்தால் குந்தாணி; கஞ்சி குடித்தால் கழுக்காணி.
கூழ் குடித்தாலும் குட்டாய்க் குடிக்க வேண்டும். 9305
(குட்டு-இரகசியம்.)

கூழ் குடித்தாலும் கூட்டு ஆகாது.
கூழ் சுடுகிறது, கீரைக்குக் கேடு.
கூழ் சுடுகிறதென்று ஊதிக் குடிக்கிற வேளை.
கூழ்ப் பதனிப் பானையில் கைவிட்டவன் விரலைச் சப்பாமல் வேட்டியிலா துடைப்பான்?
கூழ் புளித்தது, பால் கூடப் புளித்ததென்று விட்டு விடாதே. 9310

கூழ் புளித்ததென்றும் மாங்காய் புளித்ததென்றும் உணராமல் சொல்லலாமா?
கூழாய் இருந்தாலும் மூடிக் குடி.
கூழிலே விழுந்த ஈ குழம்புகிறது போல.
கூழுக்கு உப்பு இல்லை என்பார்க்கும் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பார்க்கும் ஒரே அழுகை.
(விதனம் ஒன்றே.)
கூழுக்குக் குட்டிச் சுவரோடு போனவனே! 9315

கூழுக்குக் குறடு மாங்காய்.
(மிளகாய்.)
கூழுக்குப் பாடிக் குடியைக் கெடுத்தான்.
கூழுக்கும் ஆசை; மாவுக்கும் ஆசை.
கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை.
கூழுக்கும் கொழுக்கட்டைக்கும் ஒன்றே குறி. 9320

கூழுக்கு மாங்காய் கொண்டாட்டம்; குரங்குக்குத் தேங்காய் கொண்டாட்டம்.
கூழுக்கு மாங்காய் தோற்குமா?
கூழும் பஞ்சமோடி? கொடுமை மாமியாரே!
கூழைக் குடிக்கிறாயா அப்பா? குறுணி குடிப் அப்பா!
கூழைக் குடித்தாலும் குப்பையைச் சுமந்தாலும் குப்பைக் காட்டுப் பெண் ருக்குமிணி; பாலைக் குடித்தாலும் பட்டுக்

கட்டினாலும் பட்டணத்துப் பெண் பறக்கை. 9325
(பட்டணத்துப் பெண் தட்டுவாணி.)

கூழைக் கும்பிடு.
கூழை குடியைக் கெடுக்கும்; குட்டைக் கலப்பை காட்டைக் கெடுக்கும்.
கூறி விற்காதே; தேடி வாங்காதே.
கூறு கெட்ட மாட்டுக்கு ஆறு கட்டுப் புல்லா?
கூறையும் தாலியும்.
கூனனைக் கொண்டு குழப்படி மகளே, காணிக்குப் பேரப்பிள்ளை. 9330
(குழப்படி மாமி காணிக்குப் பிள்ளை பெற.)

கூனி ஆனாலும் கூடை சுமந்துதான் கூலி பெற வேண்டும்.
கூனியூர் சென்றால் இங்கிருந்தே கூனிக் கொண்டா போக வேண்டும்?
கூனி வாயால் கெட்டது போல.

கெஞ்சினால் மிஞ்சுவது, மிஞ்சினால் கெஞ்சுவது.
கெஞ்சும் புத்தி கேவலம் கொடுக்கும். 9335

கெஞ்சு மணியம் பண்ணுகிறது.
(கெஞ்சி பண்ணுகிறதா?)
கெட்ட இடையனுக்கு எட்டு ஆடு போதும்.
கெட்ட ஊருக்கு எட்டு வார்த்தை.
கெட்ட கழுதைக்குத் துஷ்ட புத்தி.
கெட்ட கழுதைக்குப் பட்டது கண்டது. 9340

கெட்ட காலத்துக்கு நாரை கெளிற்று மீனை எடுத்து விழுங்கினது போல.
கெட்ட காலத்துக்கு விபரீத புத்தி.
(விநோத புத்தி.)
கெட்ட குடிக்கு ஒரு கேட்டை பிறந்தது.
கெட்ட குடிக்கு ஒரு துஷ்டப் பிள்ளை.
கெட்ட குடி கட்டி வருமா? 9345

கெட்ட குடி கெட்டது; பூராவாய்க் குடி அப்பா!
கெட்ட குடி கெட்டாலும் வட்டி நஷ்டம் இல்லாமல் வாங்கிவிடு.
(கெட்ட குடி கெட்டது.)
கெட்ட குடியே கெடும்; பட்ட காலிலே படும்.
கெட்ட கேட்டுக்குக் கொட்டு ஒன்று, முழக்கு ஒன்றா?
கெட்ட கேட்டுக்குக் கெண்டை போட்ட முண்டாசு குறைச்சலா? 9350
(கொண்டை போட்ட.)

கெட்ட கேட்டுக்கு நெட்டை ஆள் கூலியா?
(இரட்டையாள்.)
கெட்ட கேட்டுக்குப் பட்டுப் பீதாம்பரம்!
கெட்ட கேட்டுக்குப் பிச்சைக் குடுவை இரண்டாம்.

கெட்ட கேட்டுக்கு வட்டம் காற்பணம்.
கெட்டது கிழவன் குடித்தனம். 9355

கெட்டது கெட்டாய் மகளே, கிட்ட வந்து படுத்துக் கொள்.
கெட்டது பட்டது கிருஷ்ணாங்குளம்; அதிலும் கெட்டது அத்திப்பட்டான் குளம்.
(கிருஷ்ணாம்பேட்டை, ஆனைக்குளம்.)
கெட்டதும் கிழிந்ததும் பெற்றான் கோனான் நாட்டிலே.
கெட்டதும் பட்டதும் கீரைக்கு இறைத்ததும் போதும்.
கெட்டதைக் கேனத்தில் தேடு. 9360
(கேனம்-கேனோப நிஷத்.)

கெட்ட நாய்க்குப் பட்டது அரிது.
(பட்டது உறுதி.)
கெட்ட நாய்க்குப் பட்டது பிரீதி.
(பட்டது லாபம்.)
கெட்ட நாய்க்குப் பட்டதே சரி.
கெட்ட பயலுக்கு ஏற்ற துஷ்டச் சிறுக்கி.
கெட்ட பால் நல்ல பால் ஆகுமா? 9365

கெட்ட பெயர் ஒரு போதும் மறையாது.
கெட்ட பேருக்கு எட்டு வார்த்தை.
கெட்ட மாடு தேடுவாரும் இல்லை; மேய்த்த கூலி கொடுப்பாரும் இல்லை.
(தேடுகிறதும், கொடுக்கிறதும்.)
கெட்ட மாட்டைத் தேடும் முன்னம் எட்டு மாடு கட்டலாம்.
(தேடலாம்; சம்பாதிக்கலாம்.)
கெட்ட மார்க்கத்தில் இருக்கும் ஒருவன் மற்றவர்களையும் இழுத்துக் கொள்வான். 9370

கெட்டவள் கெட்டாள் மகளே, கிட்ட வா.
கெட்டவள் கங்கை ஆடினால் பாவம் தீருமா?
(போகுமா?)
கெட்டவள் பட்டணம் சேர்வாள்.
கெட்டவன் வாழ்ந்தால் கிளை கிளையாய்த் தளிர்ப்பான்; வாழ்ந்தவன் கெட்டால் வறையோட்டுக்கும் ஆகான்.
கெட்டவனுக்கு எத்தனை படிப்பித்தாலும் துஷ்டத்தனம் விடான். 9375

கெட்டவனுக்குக் கெட்டதுதான் கிடைக்கும்; நல்லவனுக்கு நன்மையே கிடைக்கும்.
கெட்டவனைக் கண்டால் கிளையிலும் சேரார்.
கெட்டாயே கீரைத் தண்டே, தலையை விரித்துக் கொண்டோடக் கண்டேன்.
கெட்டார்க்கு உற்றார் கிளையினும் இல்லை.
கெட்டார்க்கு நட்டார் இல்லை. 9380
(குறள், 1293.)

கெட்டார் வாழ்ந்தால் களப்பொறை தாமரை; வாழ்ந்தார் கெட்டால் வறையோட்டுக்கும் உதவார்.
(கிளம்புகிற தாமரை.)
கெட்டார் வாழ்ந்தால் கிளைப்புரை தலைமுறை.
கெட்டார்க்கு உற்றார்க்குக் கிளையிலும் இல்லை.
(வாழ்ந்தாருக்கு உறவு வழியிலும் உண்டு.)
கெட்டால் தெரியும் கோமுட்டிக்கு.
கெட்டால் பெரிய வெட்டரிவாள். 9385

கெட்டாலும் குலாசார முறையோடு கெட்டான்.
கெட்டாலும் கெடுகிறது, கிட்ட வந்து படுத்துக் கொள்.
கெட்டாலும் செட்டி; கிழிந்தாலும் பட்டு.
(கெட்டாலும் வேட்டியே. கெட்டாலும் செட்டியே.)
கெட்டாலும் பட்டணம் சேர்.
கெட்டான் பயல் பொட்டலிலே; விழுந்தான் பயல் சறுக்கலிலே. 9390

கெட்டான் வாழ்ந்தால் கிளை கிளையாய்த் தளிர்ப்பான்; வாழ்ந்தான் கெட்டால் வறையோட்டுக்கும் ஆகான்.
கெட்டிக்கார முட்டாள்.
கெட்டிக்காரன் கொல்லையிலே கழுதை மேய்கிறது.
கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளிலே தெரியும்.
(+ அசடன் புளுகு அப்போதே தெரியும்.)
கெட்டிக்காரன் பொட்டு எட்டு நாள் அளவும். 9395

கெட்டிக்காரனுக்குப் பயம் இல்லை; மட்டித்தனத்துக்கு நயம் இல்லை.
கெட்டித் தங்கம் ஆனால் கலீர் என்று ஒலிக்குமா?
கெட்டு ஓடினாலும் நட்டு ஓடு.
கெட்டு கிழக்கே போ.
(வடஆர்காடு வழக்கு)

கெட்டுக் கெட்டுக் குடி ஆகிறதா? 9400

கெட்டுப் போகிற காலம் வந்தால் சொட்டுப் புத்தி தேடுவானாம்.
(நாள் வந்தால். சொட்டுப் புத்தி தோன்றும். தேறாது.)
கெட்டுப் போன பார்ப்பானுக்குச் செத்துப் பீயான பசுவைத் தானம் செய்தானாம்.
கெட்டும் பட்டணம் சேர்.
கெடுக்க நினைக்கின் அடுக்கக் கேடுறும்.
கெடுக்கினும் கல்வி கேடு படாது. 9405
(கொடுக்கினும்.)

கெடுங் காலத்துக்குக் கெட்டார் புத்தியைக் கேட்டார்.
கெடுங்குடி சொற் கேளாது.
கெடுத்தவருக்கும் கேடு நினையாதே.
கெடுப்பதும் வாய்; படிப்பதும் வாய்.
(வாயால்.)
கெடுப்பாரைத் தெய்வம் கெடுக்கும். 9410

கெடுமதிக்குப் படுகுழியை வெட்டு.
கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது.
கெடுவது செய்தால் படுவது கருமம்.
கெடுவாய், கேடு நினையாதே.
கெடுவார்க்குக் கெடுமதி பிடரியில். 9415
(கெடுப்பார்க்கு.)

கெடுவான் கேடு நினைப்பான்.
கெண்டை பட்டாலும் பட்டது; கிடாரம் பட்டாலும் பட்டது.
கெண்டையைப் போட்டு வராலை இழுக்கிறதா?
(இழுக்கிறது.)
கெதம் போனது கிருஷ்ணப்ரீதி.
கெருடி கற்றவன் இடறி விழுந்தால் அதுவும் ஒரு வித்தை என்பான். 9420
(பல்டி என்பான்.)

கெலிப்பும் தோற்பும் ஒருவர் பங்கு அல்ல.
கெலியன் பாற்சோறு கண்டது போல.
(கலியன்.)

கேசம் உள்ள பெண் எப்படியும் கொண்டை கட்டுவாள்.
கேட்காமல் கொடுப்பது உத்தமம்; கேட்டுக் கொடுப்பது மத்திமம்; கேட்டும் கொடாமல் இருப்பது அதமம்.
கேட்டதை எல்லாம் நம்பாதே; நம்பினதை எல்லாம் சொல்லாதே. 9425

கேட்ட நாயைச் செருப்பால் அடி; சொன்ன நாயைச் சோட்டால் அடி.
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
கேட்டு ஊற்றுகிற கஞ்சியும் எடுத்து வைக்கிற பேனும் உரைக்கு வராது.
கேட்டுக்கு மூட்டை; கேடு காலத்துக்குச் சீலைப் பேன்.
கேட்டை நட்சத்திரம் ஏட்டனுக்கு ஆகாது. 9430
(ஏட்டன்-மூத்தவன்.)

கேட்டை நாலும் ஈட்டி போல.
கேட்டை, மூட்டை, செவ்வாய்க் கிழமை.
கேட்டையிலே பிறந்தால் கோட்டை கட்டி ஆள்வான்.
கேட்பார் சொல்லைக் கேட்டுக் கெடாதே.
கேட்பார் பேச்சைக் கேட்டு நாட்டான் வாய்க்கால் சாலையோடு போனானாம். 9435
(-கும்பகோணத்துக்கும் காரைக்காலுக்கும் இடையில் உள்ள வாய்க்கால் வளைந்து வளைந்து செல்கிறது.)

கேட்பாரும் இல்லை; மேய்ப்பாரும் இல்லை.
கேடகத்தையும் பெருமாளையும் கீழாறு கொண்டு போகச்சே கூட வந்த அநுமாருக்குத் தெப்பத் திருநாளாம்.
கேடது இல்லான் பாடது இல்லான்.
(கேடு, பாடு.)
கேடு காலத்தில் ஓடு கப்பரை.
கேடு கெட்ட நாயே, வீடு விட்டுப் போயேன். 9440

கேடு வரும் பின்னே; மதி கெட்டு வரும் முன்னே.
கேடு வரும்போது மதி கெட்டு வரும்.
கேதம் கேட்க வந்தவள் தாலி அறுப்பாளா?
(செட்டி நாட்டு வழக்கு.)
கேதுவைப் போல் கெடுத்தவனும் இல்லை; ராகுவைப் போல் கொடுத்தவனும் இல்லை.
கேரளம் வானராசாரம்; கூகூ சப்தம் நிரந்தரம். 9445

கேழ்வரகில் நெய் ஒழுகுகிறது என்றால் கேட்போருக்கு மதி எங்கே போச்சு?
(நெய் ஓடுகிறது என்றால்.)
கேழ்வரகு மாவில் நெய் ஒழுகுகிறது என்று சொல்கிறவர் சொன்னாலும் கேட்கிறவர்களுக்கு மதி இல்லையா?
கேள் அற்றவருக்கு வேள்.
கேள்வி உடைமை, கீர்த்தியே கல்வி.
கேள்வி கேளாமல் தலையை வெட்டுகிறதா? 9450

கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்.
கேள்விப் பேச்சில் பாதிதான் நிற்கும்.
கேள்விப் பேச்சு ஊரைச் சுடும்.
கேள்வி முயல்.
கேளாச் செவிக்கு மூளா நெருப்பு. 9455

கேளாத கடன் பாழ்.
கேளாமல் கெட்டது கடன்; நடவாமல் கெட்டது உறவு.
கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை.

கை அழுத்தமானவன் கரையேற மாட்டான்.
(காசைச் செலவிடான்.)
கை இல்லாதவன் கரணம் போடலாமா? கால் இல்லாதவன் ஓடலாமா? 9460

கை ஈரம் காயாமல் காட்ட வருகிறது.
கை உண்டாவது கற்றவர்க்கு ஆமே.
கை ஊன்றி அல்லவோ கரணம் போட வேண்டும்?
கைக் காசு இல்லாமல் கடைப் பக்கம் போகாதே.
கைக்கு எட்டியது வாய்க்கு எட்ட வில்லை. 9465

கைக்குக் கண்ணாடியா?
(கண்ணாடி போல.)
கைக் காடையைக் காட்டிக் காட்டுக் காடையைப் பிடிக்க வேண்டும்.
(காடையை விட்டு.)
கைக்கு அடங்காத விளக்குமாறும் வாய்க்கு அடங்காத மருமகளும்.
கைக்குக் கை நெய் வார்த்தாலும் கணக்குத் தப்பாது.
கைக் குருவியைக் கொண்டுதான் காட்டுக் குருவியைப் பிடிக்க வேணும். 9470

கைக்கு வாய் உபசாரமா?
கைக் கொள்ளாத சத்தியத்தைக் கற்காதிருத்தல் நலம்.
கைக்கோளனுக்குக் கால் புண்ணும் நாய்க்குத் தலைப் புண்ணும் ஆறா.
கை கண்ட பலன்.
கை கண்ட மாத்திரை, வைகுண்ட யாத்திரை. 9475

கை கண்ட வேசிக்குக் கண்ணீர் குறைச்சலா?
கை கண்ணைக் குத்தினால் கையை வெட்டி விடுகிறதா?
கை கருணைக் கிழங்கு; வாய் வேப்பங்காய்.

கை காய்த்தால் கமுகு காய்க்கும்.
(பாக்கு மரம்.)
கை கைக்குமா நெய் வார்க்க வரும்? 9480

கை கொடுத்துக் கொண்டே கடையாணி பிடுங்குகிறான்.
கைத்தது மானானாலும் கை ஏல்வை.
கைத் தாலி கழுத்தில் ஏறட்டும்.
கை தப்பிக் கண்ணில் பட்டால் கையைக் கண்டிப்பது உண்டா?
கைத் துப்பைக் கொண்டு காரியம் இல்லை; வாய்த் துப்பைக் கொண்டு வாழ வந்தேன் மாமியாரே. 9485

கை நிறைந்த பணத்தை விடக் கண் நிறைந்த புருஷன்தான் வேண்டும்.
(பொன்னிலும் விட. கணவன்தான். புருஷன்தான் மேல்.)
கைப்பண்டம் கருணைக் கிழங்கு.
கைப் பழத்தைக் கொடுத்துத் துறட்டுப் பழத்துக்கு அண்ணாந்து நிற்பானேன்?
(பழத்தை விட்டு விட்டு, துறட்டுப் பழத்துக்கு ஆசைப்பட்டானாம்.)
கைப் பழத்தை நம்பி வாய்ப் பழத்தை வழியில் விட்டான்.
கைப் பறவையைப் பறக்க விட்டுக் காட்டுப் பறவைக்குக் கண்ணி வைக்கலாமா? 9490

கைப் பிள்ளைக்கு முன் கயிற்றுப் பிள்ளை.
(வயிற்றுப் பிள்ளை.)
கைப் புண்ணுக்குக் கண்ணாடியா?
கைப் பூணுக்குக் கண்ணாடி வேண்டுமா?
கைப் பொருள் அற்றவனைக் கட்டின பெண்டாட்டியும் எட்டிப் பாரான்.
(கட்டின பெண்ணும்.)
கைப் பொருள் அற்றால் கட்டுக் கழுத்தியும் பாரான்.
(கட்டினவளும்.)
9495

கைப் பொருள் இல்லாதவனைக் கள்வன் என்ன செய்வான்?
கைப் பொருள் இல்லா வழிப்போக்கனுக்குக் கள்வர் முன் படலாம்.
கைப் பொருள்தன்னிலும் மெய்ப் பொருள் கல்வி.
கைப் பொருள் போனால் கால் காசுக்கும் மதிக்கமாட்டார்கள்.
கைப் பொருள் போனாலும் கல்விப் பொருள் போகாது. 9500

கைப் பொன்னுக்குக் கண்ணாடியா?
கை பட்டால் கண்ணாடி.

கைபிடித்து இழுத்தும் அறியாதவன் சைகை அறிவானா?
கை போடாத புருஷன் இல்லை; விரல் போடாத பெண் இல்லை.
கைம்பெண்டாட்டி எருமையிலே கறவை பழகினாற் போல. 9505

கைம்பெண்டாட்டிக்கு ஒருத்தன் ஆனால் கட்டுக் கழுத்திக்கு எட்டுப் பேர்.
கைம்பெண்டாடிக்கும் காளவாய்க்கும் எங்கே என்று காத்திருக்கும்.
கைம்பெண்டாட்டி தாலியைக் கூழைக் கையன் அறுத்தானாம்.
கைம்பெண்டாட்டி பெற்ற பிள்ளை ஆனாலும் செய்யும் சடங்கு சீராய்ச் செய்ய வேண்டும்.
(பெண் ஆனாலும்.)
கைம்பெண்டாட்டி வளர்த்த கழுக்காணி. 9510

கைம்பெண் பிள்ளை ஆனாலும் செய்கிற சடங்கு செய்.
கைம்பெண் வளர்த்த கழிசடை.
(கழி சிறை.)
கைம் மேல் கண்ட பலன்.
கையது சிந்தினால் அள்ளலாம்;வாயது சிந்தினால் அள்ளமுடியாது.
கையால் ஆகாத சுப்பி, திருவாரூர்த் திப்பி. 9515

கையால் ஆகாத சிறுக்கி வர்ணப் புடைவைக்கு ஆசைப்பட்டாளாம்.
கையால் ஆகாததற்கு வாய் பெரிது.
கையால் ஆகாதவனுக்குக் கரம்பிலே பங்கு; உழாதவனுக்கு ஊரிலே பங்கு.
கையால் கிழிக்கும் பனங் கிழங்குக்கு ஆப்பும் வல்லீட்டுக் குற்றியும் ஏன்?
கையால் கிள்ளி எறியும் வேலைக்குக் கனத்த கோடரி வேண்டுமோ? 9520

கையால் பிடிக்கப் பொய்யாய்ப் போச்சுது.
கையாலே தொட்டது கரி.
கையாளாத ஆயுதம் துருப் பிடிக்கும்.
கையாளுகிற இரும்பு பளபளக்கும்.
கையானைக் கொண்டு காட்டானையை பிடிக்க வேண்டும். 9525

கையில் அகப்பட்ட துட்டுக் கணக்குப் பேசுகிறது.
(பேசும்.)
கையில் அகப்பட்ட பொருளுக்கும் கணக்கு.
கையில் அரிசியும் கமண்டலத்தில் தண்ணீரும்.

கையில் அரைக் காசுக்கும் வழி இல்லாத அஷ்ட தரித்திரம்.
கையில் இருக்க நெய்யிலே கைவிடுவானேன்? 9530

கையில் இருக்கிற கனியை எறிந்து மரத்தில் இருக்கிற கனியைத் தாவுகிறது போல.
(கனியை விட்டு விட்டு.)

கையில் இருக்கிற குருவியை விட்டு விட்டுப் பறக்கிறதற்கு ஆசைப்பட்டாற் போல்.

கையில் இருக்கிற சோற்றைப் போட்டு விட்டு எச்சிற் சோற்றுக்குக் கை ஏந்தினது போல.

கையில் இருக்கிற பறவையை விட்டு விட்டுக் காட்டுப் பறவைக்குக் கண்ணி வைக்கலாமா?

கையில் இருந்தால் கடை கொள்ளலாம். 9535
(செல்லலாம்.)

கையில் இருந்தால் கர்ணன்.
கையில் இருந்தால் பாக்கு; கையை விட்டால் தோப்பு.
கையில் இருப்பது செபமாலை; கட்கத்தில் இருப்பது கன்னக் கோல்.

கையில் இல்லாதவன் கள்ளன்.
(இல்லா விட்டால்.)

கையில் இல்லா விட்டால் கண்டாரும் பேச மாட்டார்; கேட்டாரும் மதிக்க மாட்டார். 9540
(கண்டாரும் மதிக்க மாட்டார்கள்.)

கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம் பேர்.
கையில் உள்ள களாப்பழம் மரத்தில் உள்ள பலாப்பழத்துக்கு மேல்.
கையில் எடுக்குமுன் கோழி மோசம் என்று அறியாது.
கையில் எடுப்பது ஜபமாலை; கட்கத்தில் வைப்பது கன்னக் கோல்.

கையில் ஒரு காசும் இல்லை; கடன் கொடுப்பார் ஆரும் இல்லை. 9545
(+ தேவடியாள் வீட்டைக் கண்டால் துக்கம் துக்கமாய் வருகிறது.)

கையில் காசு இருக்கக் கறிக்கு அலைவானேன்?
கையில் காசு இருந்தால் அசப்பில் ஒரு வார்த்தை வரும்.

கையில் காசும் இல்லை; முகத்தில் பொலிவும் இல்லை.
கையில் காசு, வாயில் தோசை.
கையில் கிடைத்த அமுதைக் சமரில் ஊற்றலாமா? 9550

கையில் குடையும் காலில் சோடும் வேண்டும்.
கையில் கெளுத்தி மீனை வைத்துக்கொண்டு ஆணத்திற்குக் கத்தரிக்காயைத் தேடி அலைந்தாளாம்.

கையில் சாவு, வாயில் கோல்.
கையில் தாழ்வடம், மனசிலே கரவடம்.
கையில் பணம் இருக்கிறதா என்றால், பணம் இருந்த கை இருக்கிறது என்றானாம். 9555

கையில் பறவையை விட்டுக் காட்டுப் பறவைக்குக் கண்ணி வைக்கலாமா?
கையில் பிடிப்பது துளசி மாலை; கட்கத்தில் இடுக்குவது கன்னக்கோல்.

(ஜபமாலை.)

கையில் பிள்ளையோடு கடலில் விழுந்தாள்.
கையில் மஞ்சள் ஆனால் காரியம் மஞ்சூர்தான்.
கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அழுவானேன்? 9560

கையில் ஜபமணி கொண்டு மிரட்ட வருகிறாயே!
கையில் ஜபமாலை; கட்கத்தில் கன்னக் கோல்.
கையிலே காசு; வாயிலே தோசை.
கையும் இல்லை; காலும் இல்லை; திம் தடாக்கா.
கையும் கணக்கும் சரி. 9565

கையும் களவுமாய்க் கண்டு பிடிக்கிறது.
கையெழுத்துப் போடத் தெரிந்தால் கடனுக்குத்தான் வழி.
கையை அறுத்து விட்டாலும் அகப்பையைக் கட்டிக் கொண்டு திருடுவான்.

கையை உடைத்து விட்டவன் தலையை உடைத்தாலும் உடைப்பான்.

கையை ஊன்றித்தான் கரணம் போட வேண்டும். 9570

கையைக் காட்டி அவலட்சணமா?
கையைச் செட்டியார் குறைத்தால் காலைக் கைக்கோளன் குறைப்பான்.
(குறைத்தான்.)
கையைப் பார்த்து முகத்தைப் பார்.
கையைப் பார், முகத்தைப் பார் என்று இருந்தால் காரியம் ஆகுமா?
(நடக்குமா?)
கையைப் பிடித்தால் காலபலன். 9575

கையைப் பிடித்து இழுத்து வராதவள் கண்ணைக் காட்டி அழைத்தால் வருவாளா?
கையைப் பிடித்துக் கண்ணைப் பார்த்து மயிரைப் பிடித்துக் காசு வாங்குவதா?
கையைப் பிடித்துக் கள்ளை வார்த்து மயிரைப் பிடித்துக் காசு வாங்குகிறது.
கையைப் பிடித்துத் தூக்கிவிடு; பிணக் காடாயக் குவிக்கிறேன் என்றானாம்.
கையை மூடிக் கொண்டிருந்தால் கமுக்கம்; விரலைத் திறந்தால் வெட்டவெளி. 9580
(விரலைத் திறந்து விட்டால் ஒன்றும் இல்லை.)

கையை விட்டுத் தப்பினால் காடை காட்டிலே.
கைவரிசை இருந்தாலும் மெய்வரிசை வேண்டும்.
கை விதைப்பை விடக் கலந்த நடவை நல்லது.
கைவிரல் கண்ணிலே பட்டால் கையை என்ன பண்ணலாம்?
கை வைத்தால் கை இற்றுப் போம். 9585

கொக்கரித்த பேர் எல்லாம் கூடத் தீப் பாய்வார்களா?
கொக்கரிப்பார்க்குச் சொர்க்கமோ? நெருப்பில் குதிப்பார்க்குச் சொர்க்கமோ?
(தீயில்.)
கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்து அது உருகிக் கண்ணில் வழியும் போது பிடித்துக் கொள்வேன் என்றானாம்.
கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிப்பது போல.
(பிடித்தல்.)
கொக்கு இளங்குஞ்சும் கோணாத தெங்கும் கண்டது இல்லை. 9590

கொக்கு என்கிறது அத்தை, குத்த வருகிறது அத்தை, அத்தைத் துரத்திப் பார்த்தேன் அத்தை; பறந்து போச்சு அத்தை.
கொக்கு என்று நினைத்தாயோ கொங்கணவா?
(இருந்தீரோ? எண்ணினையோ? கொங்கணரே.)
கொக்குக்கு உண்டா வீரசைவம்?
கொக்குக்கு ஒன்றே மதி.
கொக்குக்கு ஒன்றே மதி; கொழுக்கட்டைக்கு ஒன்றே குறி. 9595

கொக்குக்குத் தெரியுமா கோழிக் குஞ்சைக் கொண்டு போக?
கொக்குக் கூட்டத்தில் ராஜாளி விழுந்தாற் போல.
கொக்கு குருவிபோலக் கொத்திக் கொத்திச் சேர்க்கிறது.
கொக்குத் தின்னப் பெருச்சாளி பாய்ந்தாற் போல்.
கொக்குப் பிக்கலாட்டம். 9600

கொக்கு மேடை ஏறினால் மழை பெய்யும்.
கொக்கோகம் பார்த்தவன் அக்காளை ஏறுவான்.
கொக்கோடு இளங்குஞ்சு தெரிந்தார் இல்லை.
கொங்கனுக்குக் குலம் இல்லை; கொழுக்கட்டைக்குத் தலை இல்லை.
கொங்கிலே குறுணி விற்கிறது; இங்கு என்ன லாபம்? 9605

கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்.
கொங்கு வெறுத்தால் எங்கும் வெறுக்கும்.
கொச்சிக்குப் போனவன் செய்தியைப் பார், தன் குருவை விற்றவன் செய்தியைப் பார்.
கொச்சி மஞ்சளும் கூறை நாட்டுப் புடைவையும்.
கொச்சியிலே குறுணி மிளகு என்றால் இங்கு என்ன? 9610

கொசு இழந்த இறக்கைக்கும் ஆனை இழந்த காலுக்கும் சமம்.
கொசுக் கண்ணியைக் கூடக் குமரியிலே பார்க்க வேண்டும்.
கொசு கருடன் கூடப் பறந்தாற் போல்.
கொசு முதுகிலே பிளவை வந்தது போல.
கொசு மூத்திரம் குறுணி. 9615

கொசு மொய்த்த கண்ணியைக் குமரியில் பார்.
(கண்ணை.)
கொசு வனத்தில் கொள்ளி வைத்துக் கொண்டது போல்.
கொசுவிலே குறுணிப் பால் கறக்கலாமா?
கொசுவிலே பிளவை; அதிலே நீரிழிவு; அறுக்கிறது எங்கே?
(அண்டை விடுகிறது எங்கே?)
கொசுவின் முதுகிலே பிளவை வந்தாற் போல. 9620

கொசுவின் மேல் கருடன் நிற்குமா?
கொசுவுக்கு அஞ்சிக் குடிபெயர்ந்து போகிறதா?
(பயந்து போகிறானாம்.)
கொசுவுக்குப் பயந்து கோட்டையை விட்டு ஓடியது போல.
கொசுவுக்குப் பிளவை; அதிலே நீரிழிவு; அட்டை விடுவது எங்கே? அறுப்பது எங்கே?
கொசுவுக்குப் பிளவை புறப்பட்டால் அறுப்பது எங்கே? தீய்ப்பது எங்கே? 9625

கொசுவே, கொசுவே தலை முழுகு; நான் மாட்டேன், சனிக்கிழமை.
கொசுவை அடிக்கக் குண்டாந்தடியா?
கொசுவை அடித்தால் கொசுவும் கிடையாது.
கொசுவைப் பொருட்டாய் எண்ணிக் கருடன் எதிர்த்தாற் போல்.
கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறதா? 9630

கொசுவை வடிப்பார் அசிகைப் படுவார்.
கொஞ்சத்தில் இருக்கிறதா, குரங்கு மிளகு நீர் குடிக்கிறது?

கொஞ்சத்தில் உண்மை இல்லாதவன் கோடியிலும் இருக்க மாட்டான்.

கொஞ்ச நஞ்சம் இருந்தது குருக்களை அடைந்தது; கோவிலை வௌவால் அடைந்தது.

கொஞ்சப் பொருளை மந்திரம் பண்ணுகிறது போல் கை காட்டுகிறான். 9635

கொஞ்சம் இடம் கொடுத்தால் மிஞ்ச இடம் தேடிக் கொள்வான்.

கொஞ்சம் கொஞ்சமாய்த் தின்றால் பனையையும் தின்று விடலாம்.

கொஞ்சம் தழை போட்டுச் சேடை உழுதால் கெட்டிச் சம்பா நெல் விளையும்.

கொஞ்சம் பட்டால் துக்கம்; அதிகம் பட்டால் புன்சிரிப்பு.

கொஞ்சிக் கூத்தாடி நடந்தாலும் குதிரை ஆகுமா கழுதை? 9640

கொட்டகை சுருட்டும் நாய்க்குப் பட்டா மணியம் ஏன்?

கொட்டை பெருக்குகிற கட்டைத் துடைப்பத்துக்குப் பட்டா மணியம் பகலிலே வந்தாற் போல.

கொட்டடா, கொட்டடா என்றால், பறையன் கொட்ட மாட்டானாம்; கொட்டாதே, கொட்டாதே என்றால் டிவிண் டிவிண் என்று கொட்டுவானாம்.

கொட்டாங்கச்சித் தண்ணீரிலே குபுக்கென்று பாய்ந்தாற் போல.

கொட்டினால் விதைக்கும் கம்பு கடகத்தில் வாரிக் கொட்டுகிறது. 9645

(கொட்டானால்.)

கொட்டிக் கிழங்கு பறிக்கப் போனால் கோபித்துக் கொள்வார் பண்டாரம்; அவித்து அவித்து முன்னே வைத்தால் அமுது கொள்வார் பண்டாரம்.

(அவித்து உரித்து.)

கொட்டிக் கிழங்கும் ஒரு முட்டுக்கு உதவும்.

கொட்டிக் கிழங்கும் வெட்டைக்கு உதவும்.

கொட்டிக் கிழங்கு வெட்டுகிறவளுக்குக் கோவிலிலே வந்து ஆடத் தெரியுமா?

கொட்டிக் கொட்டி அளந்தாலும் குறுணி பதக்காகுமா? 9650

கொட்டிக் கொட்டிக் குளவி புழுவைத் தன் நிறத்துக்கு ஆக்கி
விடும்.
கொட்டிய பாலின் முன் கூவி அழுது ஆவதுண்டா?
கொட்டினால் தேள்; கொட்டா விட்டால் பிள்ளைப்பூச்சி.
கொட்டும் பறை தட்டம் அறியாது.
கொட்டை நூற்கிற அம்மாளுக்குப் பட்டணம்
விசாரிப்பது ஏன்? 9655
(பட்டணத்து விசாரணை.)

கொட்டை நூற்கும் கூனற் கிழவி.
கொட்டை நூற்றுச் சம்பாதித்துக் கெட்டுப் போயிற்றா?
கொட்டோடே முழக்கோடே வந்தவன் எட்டோடே இழவோடே
அல்லவா போவான்?
(எட்டாம் நாள் படைக்கும் நாள். சோழநாட்டு வேளாளரிடையே
வழங்குவது.)
கொடாக் கண்டன், விடாக் கண்டன்.
கொடாக் கண்டனும் விடா கண்டனும் கூடினாற் போலே. 9660

கொடாத இடையன் சினை ஆட்டைக் காட்டினது போல.
கொடாதவன் எருமைப் பாலும் கொடான்.
கொடாதவனுக்குக் கூத்துப் பறி; இடமாட்டாதவனுக்கு எச்சில்.
கொடிக் கம்பத்தைப் பயற்றங்காயாய்த் தின்பவருக்குக் கோபுரம்
கொழுக்கட்டை.
கொடிக் காலில் மின்னினால் விடிகாலை மழை. 9665

கொடிக்குக் காய் கனமா?
(பாரமா?)
கொடிக்குக் கும்மட்டிக் காய் கனத்திருக்குமா?
கொடிக்குச் சுரைக்காய் கனமா?
(கனக்காது.)
கொடிகள் அருகான மரத்திலே படரும்.
(அருகிலுள்ள மரத்திலே தாவும்.)
கொடி சுற்றிப் பிறந்த பிள்ளை குலத்திற்கு ஆகாது. 9670
(பெண் பிறந்தால்.)

கொடிசுற்றிப் பிறந்தால் கோத்திரத்துக்கு ஆகாது.
கொடியும் பெண்டிரும் கொண்டதை விடார்.
கொடிறும் பேதையும் கொண்டது விடா.

கொடுக்க மாட்டாத இடையன் சினையாட்டைக் காண்பித்தாற் போல.

கொடுக்க மாட்டாதவன் கூத்தைப் பழித்தான்; இட மாட்டாதவன், எச்சில் என்று சொன்னான். 9675

கொடுக்கிற கைக்கு என்றும் குறைவு இருக்காது.

கொடுக்கிற சாமி என்றால் குண்டியைக் கிழித்துக்கொண்டு கொடுக்கும்.

கொடுக்கிறது உழக்குப் பால்; உதைக்கிறது பல்லுப் போக.

கொடுக்கிறதும் கொடுத்துக் குஷ்ட ரோகி காலில் விழுகிறதா?

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிரித்துக் கொண்டு வந்து கொடுக்கும், 9680

(பிய்த்துக் கொண்டு. கிளப்பிக் கொடுக்கும்.)

கொடுக்கிற தெய்வம் மூஞ்சியிலே அடித்துக் கொடுக்கும்.

(முகத்திலே அறைந்து.)

கொடுக்கிற தெய்வம் ஆனால் கூரையைப் பிரித்துப் போட்டுக் கொடுக்காதோ?

கொடுக்கிறவன் எப்போதும் கொடுப்பான்.

கொடுக்கிறவன் கை என்றும் மேல்தான்; வாங்குகிறவன் கை என்றும் கீழ்தான்.

கொடுக்கிறவன் வாழைத் தாறாகினும் கொடுப்பான். 9685

கொடுக்கிறதைக் கொடுத்தால் குடம் கொண்டு தண்ணீருக்குப் போவாள்.

கொடுக்கிறதையும் கொடுத்துக் குருட்டுத் தேவடியாளிடம் போனானாம்.

கொடுக்கிறதையும் கொடுத்துக் குஷ்டரோகியின் காலில் விழுவானேன்?

கொடுக்கிறவன் கன்னத்தில் அடித்துக் கொடுப்பான்.

கொடுக்கிறவன் கை என்றும் மேலேதான்; வாங்குகிறவன் கை என்றும் கீழேதான். 9690

கொடுக்கிறவனைக் கண்டால் பேய் குளைத்துக் குளைத்து ஆடும்.

(குழைந்து குழைந்து.)

கொடுக்கிறான் பழனியாண்டி; தின்கிறான் சுப்பனாண்டி.

கொடுக்கிறேன் என்றால் ஆசை; அடிக்கிறேன் என்றால் பயம்.
கொடுக்கினும் கல்வி கேடு படாது.
கொடுங்கோல் அரசு நெடுநாள் நில்லாது. 9695

கொடுங்கோல் கீழ்க் குடியிருத்தல் ஆகாது.
கொடுங்கோல் மன்னன் நாட்டிலும் கடும்புலி வாழும் காடு நன்று.
கொடுத்த கடன் கேட்டால் குமரகண்ட வலிப்பு வலிக்கிறதாம்.
கொடுத்தது கேட்டால் அடுத்தது பகை.
கொடுத்ததுபோல வாங்கிக் கொள்ளும். 9700

கொடுத்ததைக் கொடுக்கும் குறளிப் பிசாசு.
(குட்டிச்சாத்தான்.)
கொடுத்த பணம் செல்லா விட்டால் கூத்தரிசிக்காரி என்ன செய்வாள்?
கொடுத்தவருக்கு எல்லாம் உண்டு; கொடாதவருக்கு ஒன்றும் இல்லை.
கொடுத்தவரைப் புகழ்வார்; கொடாதவரை இகழ்வார்.
கொடுத்தவன் அப்பன்; கொடாதவன் சுப்பன். 9705

கொடுத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு.
கொடுத்தால் ஒரு பேச்சு; கொடாமற் போனால் ஒரு பேச்சு.
கொடுத்தால் ஒன்று; கொடுக்கா விட்டால் ஒன்று.
கொடுத்தால் குறை வராது.
(வருமா?)
கொடுத்தால்தான் சாமி; கொண்டு வந்தால்தான் மாமி. 9710

கொடுத்தாலும் ஒன்று; கொடா விட்டாலும் ஒன்று.
கொடுத்தாற் போல் கொடுத்து வாங்கிக் கொள்ளுகிறது.
கொடுத்து உறவு கொள்; கோளன் என்று இரேல்.
கொடுத்து ஏழை ஆயினார் இல்லை.
(பழமொழி நானூறு.)
கொடுத்துக் கெட்டார் ஆரும் இல்லை. 9715

கொடுத்துக் கொடுத்து இரு கையும் கூழையாய்ப் போயின.
(கூழாய்.)
கொடுத்துக் கொடுத்துக் கையும் காய்ப்பு ஏறிப் போயிற்று.
கொடுத்து நிஷ்டூரப் படுவதைவிடக் கொடுக்காமல் நிஷ்டூரப் படுவதே மேல்.

கொடுத்துப் பொல்லாப்பு ஆகிறதை விடக் கொடுக்காமல் இருக்கிறது நலம்.

கொடுத்தும் அறியான்; கொடுப்பவர்களைக் கண்டும் அறியான். 9720

கொடுத்தும் கொல்லை வழியாய்ப் போகிறதா?

கொடுத்து வாங்கினாயோ? கொன்று வாங்கினாயோ?

கொடுத்து வைத்தது போலக் கிடைக்கும்.

கொடுப்பது உழக்குப் பால்; உதைப்பது பல்லுப் போக.

கொடுப்பதைக் கெடுப்பாரைத் தெய்வமே கெடுக்கும். 9725

கொடுப்பதைத் தடுப்பவன் உடுப்பதும் இழப்பான்.

கொடுப்பதையும் கொடுத்துக் குஷ்டரோகி காலில் விழுந்தானாம்.

கொடுப்பார் பிச்சையைக் கெடுப்பார் கெடுக்கிறது.
(கெடுவார் கெடுப்பார்.)

கொடுப்பாரைத் தடுக்காதே.

கொடும்பாவி ஆனாலும் கொண்ட மாமியார் வேண்டும். 9730

கொடும்பாவி சாகாளா? கோடை மழை பெய்யாதா?

கொடுமை அற்றவன் கடுமை அற்றவன்.

கொடுமை, கொடுமை என்று கோயிலுக்குப் போனேன்; அங்கே இரண்டு கொடுமை ஆடிக்கொண்டு வந்தது.

கொடுமை சுடப்பட்ட செல்வம் பசுங்கலத்தில் பால் கவிழ்ந்தது.
(கலந்தது.)

கொடுமையான அரசன்கீழ் இருப்பதைக் காட்டிலும் கடுமையான புலியின் கீழ் இருப்பது நன்று. 9735

கொடைக்குக் கர்ணன்; படைக்குத் துரியோதனன்.

கொடைக்குக் குமணன்; சத்தியத்துக்கு அரிச்சந்திரன்.

கொடையிலும் ஒருத்தன்; படையிலும் ஒருத்தன்.
(கொடைக்கும், படைக்கும்.)

கொண்ட இடத்திலே கொடுத்தாலும் கண்ட இடத்திலே கொடுக்காதே.

கொண்ட கடையிலா விற்கிறது? 9740

கொண்ட கணவனிடத்திலே இரண்டகமா?

கொண்ட கொண்ட கோலம் எல்லாம் குந்தி பெற்ற மக்களுக்கு.

கொண்டதா, கொடுத்ததா, கோமுட்டி வீட்டுப் பெருச்சாளி?
கொண்டதுக்கு இரட்டி கண்டது வாணிகம்.
கொண்டது கொள்முதல் ஆனால் கோணி விலையும்
காணாது. 9745

கொண்டதைக் கொண்டபடி விற்றால் கோணி லாபம்.
கொண்டபடி விற்றால் கோடி லாபம்.
கொண்ட பிறகு குலம் பேசுவது போல.
கொண்ட பெண்சாதியே கூரரிவாளாய் இருந்தாள்.
கொண்ட பெண்சாதியை விட்டாலும் கொள்ளுக் கடகாலை
விடாதே. 9750
(கொள்ளுக் கடலையை.)

கொண்டவள் குறிப்பு அறிவாள்; குதிரை இருப்பு அறியும்.
கொண்டவள் அடிக்கக் கொழுந்தன்மேல் விழுந்தாளாம்.
கொண்டவன் இருக்கக் கண்டவனோடு போவதா?
கொண்டவன் உறவு உண்டானால் மண்டலம் எல்லாம் ஆளலாம்.
கொண்டவன் உறுதியாக இருந்தால் கோபுரம் ஏறிச் சண்டை
போடலாம். 9755

கொண்டவன் காய்ந்தால் கூரை ஓலையும் காயும்.
கொண்டவன் குட்டிச்சாத்தான் என்பது போல.
கொண்டவன் குரங்கு; கண்டவன் கரும்பு.
கொண்டவன் கோபி ஆனால் கண்டவனுக்கு இளக்காரம்.
கொண்டவன் சீறினால் கண்டவனுக்கு எல்லாம் இளக்காரம். 9760

கொண்டவன் செத்த பிறகா கொண்டையும் வெண்டயமும்?
கொண்டவன் தூற்றினால் கூரையும் தூற்றும்.
கொண்டவன் நாயே என்றால் கண்டவனும் கழுதை என்பான்.
கொண்டவன் பலம் இருந்தால் கூரை ஏறிச் சண்டை போடுவாள்.
(அறிந்தால்.)
கொண்டவன் பலம் இருந்தால் குப்பைமேடு ஏறிச் சண்டை
செய்யலாம். 9765

கொண்டவன் வலுவாளி; கொடுத்தவன் ஏழை.
கொண்டவனுக்கு இல்லாத வெட்கம் கண்டவனுக்கு உண்டா?
கொண்டவனுக்கு இல்லை; கண்டவனுக்கு என்ன கேடு?

கொண்டவனும் கொடுத்தவனும் ஒன்றாய்ப் போய்விடுவார்கள்; கொட்டு மேளக்காரனுக்குத்தான் கோணக் கோணா இழுக்கும்.

கொண்டவனும் கொடுத்தவனும் ஒன்று; கொட்ட வந்த பறையன் தூரத் தூர. 9770

கொண்டவனே தொண்டையைப் பிடித்தால் பெண்டு என்ன செய்வாள்?

கொண்டவனை அடித்துக் கோழுட்டிக்குக் கொடுப்பாய்.

கொண்டவனை விட்டுக் கண்டவனிடம் போய்க் கொண்டவனும் இல்லை; கண்டவனும் இல்லை.

கொண்டவனை விட்டுக் கண்டவனிடம் போனால் கண்டவன் பெண்டாட்டிக்குக் கால்பிடிக்க வேண்டும்.

கொண்டா குட்டிச்சாத்தா என்பது போல். 9775

கொண்டாட்டம் போய்த் திண்டாட்டம் ஆச்சுது.

கொண்டாடுவார் இல்லாவிட்டால் திண்டாடி நிற்கும்.

கொண்டார் முனியில் கண்டார் கடிவர்.

(கொண்டார் கடிந்தால் கண்டார் முனிவர்.)

கொண்டாலும் பெண்; கொடுத்தாலும் பெண்.

கொண்டான் காயின் கண்டான் காயும். 9780

(குறள், 1196, மணக்குடவர் உரை.)

கொண்டான் குறிப்பு அறிவாள் பெண்டாட்டி.

கொண்டானும் கொடுத்தானும் ஒன்று; கல்யாணம் கட்டி வைத்தோன் வாயில் மண்.

கொண்டானும் கொடுத்தானும் கூடக் கூட; பெற்றாரும் பிறந்தாரும் வேறு வேறு.

(யாழ்ப்பாண வழக்கு. கொண்டாரும்.)

கொண்டானும் கொண்டானும் ஒன்றாய்ப் போனால் கொட்ட வந்த பறையன் ஒத்திப் போக வேணுமாம்.

கொண்டானும் கொண்டானும் சம்பந்தி; கொட்ட வந்தவன் அம்பலம். 9785

கொண்டிருந்து குலம் பேசி, மொண்டிருந்து முகம் கழுவி.

கொண்டு குலம் பேசுறதா?

(பேசாதே.)

கொண்டு கொடுத்துக் குலம் பேசுவது போல,

கொண்டும் கொடுத்தும் உண்டு வாழ்.
கொண்டு வந்த அகமுடையான் குளித்து வருவதற்குள்ளே
நடுக்கிழித்து மூட்டினாளாம் முழுச்சமர்த்தி. 9790

கொண்டு வந்த அகமுடையான் குனிந்து வருவதற்கு முன்
கண்டு வந்த மாப்பிள்ளை கொண்டோடிப் போனான்.
கொண்டு வாரம் கொடுத்தவனும் உழுது வாரம் கொடுத்தவனும்
கடைத்தேற மாட்டார்கள்.
கொண்டை அழகி போனால் பின்னல் அழகி வருவாள்.
கொண்ட அழகே அன்றிக் குடித்தனத்துக்கு லாயக்கு அல்ல.
கொண்டைக்காரி ஒழிந்தாள்; பின்னற்காரி வரப்போகிறாள்.
(போனால் வருவாள்.)
கொண்டைக்குத் தக்க பூ. 9795

கொண்டைக்குப் பூச் சூடிச் சண்டைக்கு நிற்கிறது.
கொண்டைக்குப் பூச் சூடுகிறதா? தாடிக்குப் பூச்சூடுகிறதா?
கொண்டை கட்டி மச்சானுக்குக் கொண்டாடி பூமாலை என்றாளாம்.
கொண்டையம் பேட்டை, குரங்குப் பேட்டை.
கொண்டையிலே காற்று அடித்தாற் போல. 9800

கொண்டோர் எல்லாம் பெண்டிர் அல்ல.
கொத்தடிமைக்குக் குடியடிமையா?
கொத்தன் ஆனாலும் பெற்றவள் பிள்ளை.
கொத்திக் கண்ட கோழியும் நக்கிக் கண்ட நாயும் நில்லா.
கொத்தித் தின்கிற கோழியை மூக்கு அறுந்தது போல. 9805

கொத்துதடி கோழி; வித்தையடி மாமி.
கொத்துமல்லிச் சட்டினியும் கத்தரிக்காய்க் கொத்ஸூம் இட்டலி
தோசைக்கு உபசாதகம்.
கொத்து வாழ்வுக்கு ஒரு பலகை பிடிக்கிறது.
கொதிக்கிற எண்ணெயில் தண்ணீர் தெறித்தது போல்.
(தெளித்தது.)
கொதிக்கிற கூழுக்கு இருக்கிற சிற்றப்பா. 9810

கொப்பத்தில் வீழ்ந்த ஆனையும் வலையிற் சிக்கிய மானும்
போல.
கொம்பனோ?
(கொம்பு முளைத்தவனோ?)

கொம்பாட் உழுது கொண்டியால் பரம்படி.
கொம்பில் ஒரு நெல் விளைந்தாலும் சம்பாவுக்கு இணை ஆகாது.
(ஈடு.)
கொம்பு முளைக்காத ஆனைக்குத் தும்புக் கயிறு
தொண்ணூறு. 9815

கொய்யா வனத்துக்குக் குரங்கைக் காவல் வைத்தானாம்.
கொய்யாது குவியாது பசியாது.
கொல்லத்தில் குறுணி விற்றாலும் இல்லத்துக்குச் சுகம் வருமோ?
கொல்லத்துக்காரன் மேற்கே பார்ப்பான்; கூத்துக்காரன்
கிழக்கே பார்ப்பான்.
கொல்லத் தெருவில் ஊசி விற்றாற் போல. 9820
(விற்பதா?)

கொல்ல வரும் ஆனை முன்னே கல்லை விட்டெறியாதே.
(யானையை.)
கொல்லன் உலையில் கொசுவுக்கு என்ன வேலை?
(அலுவல்.)
கொல்லன் எளிமை கண்டு குரங்கு தன் காலுக்குப் பூண் கட்டச்
சொன்னதாம்.
கொல்லன் களத்திலே ஈக்கு என்ன வேலை?
கொல்லன் கைக் குறடுபோல. 9825

கொல்லன் பிணம் விறைத்தாற் போல.
கொல்லனைக் கண்ட குரங்கும் பணி செய்யும்.
கொல்லனைக் கண்டால் குரங்கும் மல்லுக் கட்டச்
சொல்லும்.
கொல்லுக் கொலைக்கு அஞ்சாத கொடும்பாவி.
(அஞ்சாத நெஞ்சு.)
கொல்லுவதும் சோறு; பிழைப்பிக்கிறதும் சோறு. 9830

கொல்லைக் காட்டில் நரியைக் குடிவைத்துக் கொண்டது போல.
கொல்லைக் காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?
கொல்லைக் காட்டு நரி பல்லைக் காட்டினது போல.
கொல்லைக் கீரை மருந்துக்கு ஆகாது.
கொல்லைக்குப் பல்லி; குடிக்குச் சனி. 9835

கொல்லை காய்ந்தாலும் குருவிக்கு மேய்ச்சல் உண்டு.
கொல்லை குறுணியாகிலும் சொன்ன குறுணி போமா?
கொல்லைத் தலைமாட்டில் இருப்பது போல.
கொல்லைப் பச்சிலை மருந்துக்கு உதவுமா?
கொல்லை பாழாய்ப் போனாலும் குருவிக்கு மேய்ச்சல் போச்சா? 9840
(இரை பஞ்சமா? பாழானாலும்.)

கொல்லையில் குற்றியை அடைந்த புல் உழவன் உழுபடைக்குக் கெடுமா?
கொல்லொணாப் படை எவர்க்கும் வெல்லொணாது.
(திருவாலவாய்ப் புராணம், 36:20)
கொலைக்கு அஞ்சாதவன் பழிக்கு அஞ்சுவானா?
கொலையாளியை நம்பினாலும் மலையாளியை நம்பாதே.
(மலேயா வழக்கு.)
கொழுக்கட்டைக்குத் தலை பார்த்துக் கடிப்பார்களா? 9845

கொழுக்கட்டைக்குத் தலையும் இல்லை; குடியனுக்கு முறையும் இல்லை.
(குறவனுக்கு.)
கொழுக்கட்டை தின்ற நாய்க்குக் குருதட்சிணை வேறா?
கொழுக்கட்டை தின்ற நாய்க்குக் குறுணி மோர் குருதட்சிணை.
(தின்ற பிள்ளையாருக்கு.)
கொழுக்கட்டை தின்ற பூனைக்குக் குடுவை மோர் வரதட்சிணை.
கொழுக் கட்டையை எடுத்து நாயை எறிந்தது போல. 9850

கொழுக் குத்தக் கூட இடம் கொடுக்க மாட்டான்.
கொழு கொம்பு இல்லாத கொடிபோல.
(+ ஆனேன்.)
கொழுத்த ஆடு குட்டி போட்டாலும் உழுக்கட்டை வழுக்கட்டைதான்.
கொழுத்த ஆடு பார்த்துப் பிடிக்கிறதா?
(கொழுத்தாடை.)
கொழுத்த பிணத்தை இழுத்து எறி. 9855

கொழுத்த மீன் தின்கிறவன் குருவிக் கறிக்கு அசிங்கப்படுவானா?
கொழுத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு.
கொழுத்தவனுக்குக் கொள்ளும் இளைத்தவனுக்கு எள்ளும்.

கொழுத்துச் செத்தால் இழுத்து எறி.
கொழுநன் நட்பு இல்லாத பெண்ணும் உழவு நட்பு இல்லாத பயிரும் பிரயோசனம் இல்லை. 9860

கொழுமீதிற் குடிகொண்ட குடிச் செல்வம் செல்வம்.
கொள் என்றால் வாயைத் திறக்கும்; கடிவாளம் என்றால் வாயை மூடும்.
(குதிரை.)
கொள்வார் அற்ற குயக்கலம் போல.
கொள்வாரும் இல்லை; கொடுப்பாரும் இல்லை.
கொள்ளப் போய்க் குருடியைக் கொண்டானாம். 9865

கொள்ளி இல்லாத சொத்து, பிள்ளை இல்லாத சம்பாத்தியம்.
(கொள்ள.)
கொள்ளிக் கட்டையால் சுட்டால் கொப்பளிக்குமென்று வாழைப்பழம் கொண்டு வடுவடுவாய்ச் சுடுகிறான்.
(வைக்கிறான்.)
கொள்ளிக் கட்டையால் தலையைச் சொறிந்தது போல.
(கொள்ளிக் கட்டை கொண்டு சொறிவதா?)
கொள்ளிக்கு எதிர் போனாலும் வெள்ளிக்கு எதிர் போகலாகாது.
கொள்ளித் தேளுக்கு மணியம் கொடுத்தது போல. 9870

கொள்ளித் தேளை மடியில் வைத்துக் கட்டிக் கொண்டது போல.
கொள்ளி பட்ட குதிரை லாயம் பாழ்.
கொள்ளியால் தலை சொறிகிறதா?
கொள்ளியும் தீயும் உனக்கு; பிள்ளையும் தள்ளையும் எனக்கு.
(நாஞ்சில் நாட்டில் கண்ணேறு கழித்தல். தள்ளை-தாய்.)
கொள்ளியை ஆனைக்குத் தானம் செய்த மாதிரி. 9875

கொள்ளியை எடுத்துப் போட்டால் கொதிக்கிறது அடங்கி விடும்.
(கொள்ளியை வாங்கினால், இழுத்து விட்டால்.)
கொள்ளி வைத்த இடத்தில் அள்ளி எடுக்கிறதா?
கொள்ளுக் குத்தின உலக்கை போல.
கொள்ளுக்கு வாயைத் திறந்து கடிவாளத்துக்கு வாயை மூடுவது.
கொள்ளுக் கொடி பந்தல் ஏறாது. 9880

கொள்ளுத் தின்று கொள்ளையிலே போவான்.
கொள்ளும் வரையில் கொண்டாட்டம்; கொண்ட பிறகு திண்டாட்டம்.

கொள்ளு வாசனை கண்ட குதிரை போல.
கொள்ளு வெள்ளாமை கொள்ளை வெள்ளாமை.
கொள்ளை அடித்துத் தின்கிறவனுக்குக் கொண்டு தின்னத் தாங்குமா? 9885

கொள்ளை இடப் போகிறவனுக்குக் குருடன் துணை ஆகுமா?
கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது.
கொள்ளைக்கும் ஊழிக்கும் தப்பு.
கொள்ளைக்கு முந்து; கோபத்துக்குப் பிந்து.
கொள்ளைக் கூட்டத்துக்குத் தலை இல்லை; கூத்தாடிக்கு முறை இல்லை. 9890

கொள்ளைப் பறிக்கிறது; கொடுக்கப் பறக்கிறது; கொண்டவனைக் கண்டால் குடலைப் புரட்டுகிறது.
கொளிஞ்சி மிதித்தால் களஞ்சியம் நிறையும்.
கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி.
(அறியான்.)
கொற்றவன் தன்னிலும் கற்றவன் மிக்கோன்.
(சிறந்தவன்.)
கொன்றவனை விடக் கற்றவன் பெரியவன். 9895

கொன்ற பாவம் தின்றதில் போச்சு.
கொன்றாரைக் கொல்லும் அல்லால் கொலை விடாது.
கொன்றால் பாவம் தின்றால் போச்சு.
(தீரும்.)

கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் என்ன சம்பந்தம்?
கோட்டாறு சேவியர் கேட்டவரம் தருவார். 9900
கோட்டானை மடியிற் கட்டிக் கொண்டது போல.
(கட்டிக் கொண்டு சகுனம் பார்த்தது போல.)

கோட்டி என்றால் கோபம் சண்டாளம்.
கோட்டுச் சம்பா ஆக்கிவைத்தால் போட்டுச் சாப்பிட வருவார்கள்.
கோட்டைக்குள் எலியை வைத்துக் கட்டியது போல.
கோட்டைக்குள்ளே குத்தும் வெட்டுமா? 9905

கோட்டைக்குள்ளே படை வெட்டிக் கொள்கிறதா?
கோட்டையில் குண்டு போடுவான், கோயிலில் குண்டு போடுவானா?
கோட்டையில் பெண் பிறந்தாலும் போட்ட எழுத்துப் போகுமா?
(போட்ட சுழி;போட்ட புள்ளி.)
கோடாலிக் காம்பினால் குலத்திற்குக் கேடு வரும்.
கோடாலிக் காம்பு குடித்தனத்துக்கு ஆகாது. 9910
(குலத்துக்கு ஈனம்.)

கோடாலிக்காரனுக்குப் பிளவை புறப்பட்டது போல.
கோடானுகோடி வினை வரினும் மனம் கோணாமல் இருப்பதே கோடி பெறும்.
கோடி ஒரு வெள்ளை; குமரி ஒரு பிள்ளை.
கோடிக்கும் வேதைக்கும் காதம்; வேதைக்கும் கள்ளிக்கும் காதம்; கள்ளிக்கும் பூண்டிக்கும் காதம்; பூண்டிக்கும் நாகைக்கும் காதம்; நாகைக்கும் காரைக்கும் காதம்.
(கோடி- கோடிக்கரை; வேதை- வேதாரண்யம்; கள்ளி-கள்ளி மேடு. பூண்டி-திருப்பூண்டி. இப்படியே காசிவரைக்கும் உண்டு என்பர்.)
கோடி கப்பல் நஷ்டம் கொட்டை நூற்றா விடியும்? 9915
(கப்பல் ஓடிய வீடு.)

கோடி கொடுத்தாலும் குழந்தை கிடைக்குமா?
கோடி கொடுத்தாலும் கோபுரம் தாழாது.
கோடிச் சீமான் துணிய வேண்டும்; அல்லது கோவணாண்டி துணிய வேண்டும்.
கோடிச் சீமானும் கோவணாண்டியும் சரியா?
கோடித் துக்கம் குழந்தை முகத்தில் மறையும். 9920
(ஆறும்.)

கோடி தனம் இருந்தாலும் குணமில்லா மங்கையை மணம் முடித்தல் ஆகாது.
(மங்கையுடன் கூடாதே.)
கோடி நேசம் கேடு படுத்தும்.
கோடிப் புடைவையைக் கட்டிக் கொண்ட தைரியத்தில் குச்சைக் கொளுத்திக் கொண்டாளாம்.
(குடிசையை.)
கோடி போனாலும் ஐயோ! கோவணம் போனாலும் ஐயோ!
கோடி முண்டர் ஏறி மிதித்தாலும் கூழாங்கல் சாந்துக்கு வருமா? 9925

கோடி வித்தையும் கூழுக்குத்தான்.
கோடீசுவரன் ஆக வேண்டுமா? லட்சாதிபதி ஆக வேண்டுமா?
கோடீசுவரனைக் கெடுக்க ஒரு கோவணாண்டி போதும்.
கோடு அடுத்தவன் ஏடு எடுப்பான்.
(எடுத்தவன். கோடு-Court போனவன்.)
கோடு ஏறினார் மேடு ஏறினார். 9930
(கோடு-Court.)

கோடு கண்டாயோ? ஓடு கண்டாயோ.
(ஷ)
கோடை இடி இடித்துக் கொட்டும் மழைபோல.
கோடை இடி இடித்துப் பெய்யும்; மாரி மின்னிப் பெய்யும்.
கோடை இடி குமுறி இடித்தாற் போல.
கோடை இடித்துப் பெய்யும்; மாரி மின்னிப் பெய்யும். 9935
கோடை இடி விழுந்தாற் போல்.

கோடையால் காய்கிற பயிர் வாடையால் தளிர்க்கும்.
(கோடையில் பயிர்) வாடையில் பயிர்.)
கோடையிலே தண்ணீர் ஓடை கண்டமான் போல்.
கோணக் கோணக் கோவித்தா!

கோணல் கொம்பு ஏறி என்ன? குதிரை மீது ஏறி என்ன? வீணர்க்கும் கீர்த்திக்கும் வெகு தூரம். 9940

கோணல் வாயன் கொட்டாவி விட்டாற்போல.

கோணா மாணாப் பெண்டாட்டி மாணிக்கம் போலப் பிள்ளை பெற்றாள்.

கோணிக் கோணிக் கோடி கொடுப்பதிலும் கோணாமல் காணி கொடுப்பது மேல்.

(நல்லது.)

கோணி கொண்டது; எருது சுமந்தது.

கோத்திர ஈனன் சாத்திரம் பார்ப்பான். 9945

கோத்திரத்திலே குரங்கு ஆனாலும் கொள்.

(கோத்திரத்திலே கிடைத்தால்.)

கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு; பாத்திரம் அறிந்து பிச்சை இடு.

கோப்பாயில் நாய் குட்டிச் சுவரில் ஏறியது போல.

(கோப்பாய்-இலங்கையில் ஓர் ஊர்.)

கோப்புத் தப்பினால் குப்பையும் பயிராகாது.

கோபத்தில் அறுத்த மூக்குச் சந்தோஷத்தில் வருமா? 9950

கோபம் ஆறினால் குரோதம் ஆறும்.

கோபம் இல்லாத துரைக்குச் சம்பளம் இல்லாத சேவகன்.

கோபம் இல்லாத துரையும் சம்பளம் இல்லாத சேவகனும்.

கோபம் இல்லாத புருஷனும் புருஷன் அல்ல; கொதித்து வராத சோறும் சோறு அல்ல.

கோபம் இல்லாத ராசாவும், சம்பளம் இல்லாத மந்திரியும். 9955

கோபம் இல்லாதவனைக் குரு காப்பார்.

கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு.

(இருக்கும்.)

கோபம் உள்ள இடத்தில்தான் சந்தோஷம் இருக்கும்.

கோபம் எல்லாம் கொடுமைக்கு லட்சணம்.

கோபம் குடிகெடுக்கும். 9960

(எடுக்கும்.)

கோபம் சண்டாளம்.

(கோபம் பாபம் சண்டாளம்.)

கோபம் பாபம்; நித்திரை சத்துரு.

கோபம் பெரும் பாவம்.
கோபம் வந்து கிணற்றில் விழுந்தால் சந்தோஷம் வந்தால் எழுந் திருக்கலாமா?
கோபமும் தாபமும் கூடிக் கெடுக்கும். 9965

கோபமும் நெருப்பும் உடனே கெடு.
கோபிக்காத புருஷன் புருஷன் அல்ல; கொதிக்காத சோறு சோறு அல்ல.
கோபி குதிரைமேல் கடிவாளம் இல்லான்.
கோபுரத்தில் ஏறிப் பொன்தகடு திருடு என்ற கதை.
கோபுரத்தில் ஏறி விழுந்தவனுக்கு எங்கே கண்டு இழை இடுகிறது? 9970
கோபுரத்தில் கட்டிய கொடி போல.

கோபுரத்தில் விளக்கை வைத்துக் கொட்டுக் கூடையால் மூடுவா னேன்.
(பொட்டுக் கூடையால்.)
கோபுரத்தின் மேல் ஏறிக் கும்பத்தைக் கழற்றுகிறவன் அகத்திக் கீரைக் கொல்லையைப் பார்த்துக் கொள்ளை கொள்ளை என்றானாம்.
கோபுரத்தின்மேல் குரங்கு உட்கார்ந்தாற் போல.
கோபுரத்தைப் பொம்மையா தாங்குகிறது? 9975

கோபுர தரிசனம் பாப விமோசனம்.
கோபுரம் ஏறிக் குதித்தாற் போல.
கோபுரம் தாங்கிபோல நடக்கிறான்.
கோபுரம் தாங்கிய பூதம் போல் சுமக்கிறான்.
கோபுரம் தாங்கிய பொம்மை போல். 9980

கோபுரம் தாண்டுகிற குரங்குக்குக் குட்டிச்சுவர் என்ன பிரமாதம்?
கோபுரமும் எட்டும்; குபேரனுக்கும் கை சளைக்கும்.
கோபுர வஸ்து.
கோபுர விளக்கைக் கூடையால் மூடுவானேன்?
கோம்பை நாயைப் போல் கோபிக்காதே. 9985

கோமாளி இல்லாத கூத்துச் சிறக்குமா?
கோமாளிக் கூத்து.
கோமுக வியாக்கிரம் போல.
(வியாக்கிரம் - புலி.)

கோமுட்டி சாட்சி.
கோமுட்டிப் பிசாசு பிடித்தால் விடாது. 9991

கோமுட்டிப் பிள்ளை வீணுக்கா நெய்ப்பல்லாயைப் போட்டு உடைக்கும்?
கோமுட்டி புத்திக்கு மோசம் இல்லை.
கோமுட்டி புத்திக்கு மோசம் லேது; மோசம் வந்தால் செப்ப லேது.
(லேது - இல்லை; தெலுங்கு.)
கோமுட்டியைச் சாட்சிக்குக் கூப்பிட்டது போல.
கோமுட்டி வீட்டுப் பெருச்சாளிக்குக் கொண்டதென்ன? கொடுத்ததென்ன? 9995
(கொண்டது கொடுத்தது தெரியாது.)

கோயில் அருகே குடி இருந்தும் கெட்டேன்.
கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்.
கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, செங்கழுநீர் ஓடை ஐந்து வேலி.
(திருவாரூரில்.)
கோயில் சாந்து ஒன்பது குளிக்கு மாறாது.
(சீரங்கத்தில்.)
கோயில் பூனைக்குப் பயம் ஏது? 10000

கோயில் மணியம் என்று கூப்பிட்டால் போதும்.
கோயிலையும் குளத்தையும் அடுத்திருக்க வேண்டும்.
கோர்ட்டுக்கு முன்னால் போகாதே; கழுதைக்குப் பின்னால் போகாதே.
கோரக்கல் வைத்தியம் குணத்துக்கு ஏற்குமா?
கோரைக் கொல்லை பிடித்தவனும் மலடி ஸ்திரீயை மணந்தவனும் பயன் அடைய மாட்டார்கள். 10005

கோரை குடியைக் கெடுக்கும்.
கோரை முடி குடியைக் கெடுக்கும்.
கோல் ஆடக் குரங்கு ஆடும்; அதுபோல மனம் ஆடும்.
கோல் இழந்த குருடன் போல.
கோல் உயரக் கோன் உயர்வான். 10010

கோல் எடுக்கக் குரங்கு ஆடும்.
(கோல் ஆட.)
கோல் எடுத்த பிள்ளை குருட்டுப் பிள்ளை.
(கொடுத்த பிள்ளை. பிள்ளை தன் கண்ணைத் தானே குத்திக்கொள்ளும்.)

கோல் பிடித்த பிள்ளை குரங்கு.
கோல் பிடித்தவன் கோமான்; தண்டம் பிடித்தவன் தண்டல்காரன்.
கோலச் சமத்தி, கோலச் சமத்தி என்றாளாம்; அவசரக் கோலம்
அள்ளித் தெளித்தாளாம். 10015

கோவணத்தில் இடி விழுந்தது என்றாளாம்.
கோவணத்தில் ஒரு பணம் இருந்தால் கோழி கூப்பிடும் வேளையில்
ஒரு பாட்டு வரும்:
(ஒரு காசு கோழி கூப்பிடும் போதே.)
கோவணத்தில் முக்கால் துட்டு இருந்தால் கோழி கூப்பிடப்
பாட்டு வரும்.
(காசு இருந்தால்.)
கோவணத்துக்கு மிஞ்சின தரித்திரம் இல்லை.
கோவணத்தை அவிழ்த்து மேற்கட்டுக் கட்டுகிறது. 10020

கோவணம் கட்டாத ஊரில் கோவணம் கட்டியவன்
பைத்தியக்காரன்.
கோவணம் பீயைத் தாங்குமா?
கோவணாண்டிக்குக் குடித்தனம் பெருத்ததுபோல.
(யாழ்ப்பாண வழக்கு.)
கோவணாண்டி துணிவிலும் கோடிச் சீமான் துணிவா.
(துணிவு.)
கோவிந்தா என்றால் கோடி ஸ்நானம் என்று குளிக்காமல் முழுகா
மல் இருக்கலாமா? 10025

கோவில் ஆனை கல் ஆனை.
கோவில் இடிக்கத் துணிந்தவனா குளம் வெட்டப் போகிறான்?
(குளம் கட்ட.)
கோவில் உண்டைச் சோறு குமட்டின தேவடியாள் குத்துமித்
தவிட்டுக்குக் கூத்தாடுகிறாள்,
கோவில் கட்டி அல்லவா விளக்குப் போடவேண்டும்?
கோவில் கட்டிக் குச்சு நாயைக் காவல்; மாடி வீட்டைக் கட்டி
மரநாயைக் காவல். 10030

கோவில் கல்லைப் பிடுங்கப் போகிறான்.
கோவில் காளை போலத் திரிகிறான்.
கோவில் குளம் போகாத கோபி சாஸ்திரி; கன்னி குளம்
போகாத கன்யா சாஸ்திரி.

கோவில் கொள்ளைக்காரன் குருக்களுக்குத் தட்சிணை கொடுப்பானா?
கோவில் சோற்றுக்குக் குமட்டின தேவடியாள் காடிச் சோற்றுக்குக் கரணம் போடுகின்றாள். 10035

கோவில் தாசிக்குச் சதிர் ஆடக் கற்றுக் கொடுத்தது போல.
கோவில் பட்டியை விட்ட குதிரை கோபால சமுத்திரம் போனவுடன் துள்ளிக் குதித்ததாம்.
கோவில் பூனைக்குப் பயம் ஏன்?
கோவில் பூனை தேவர்க்கு அஞ்சாது.
கோவில் மணி போனால் நம்பியானுக்கு என்ன? 10040

கோவில் மணியம் என்று கூப்பிட்டால் போதும்.
கோவில் மணியம் என்று பேர் இருந்தால் போதும்.
கோவில் மணியம் போனால் நம்பியான் சுழலும் போச்சுதா?
கோவில் மதில்மேலே தேள் கொட்டிற்றாம்; குருக்களகத்து ஞானாம்பாளுக்கு நெறி கட்டிற்றாம்.
கோவில் விளக்குக் கோடி புண்ணியம். 10045

கோவில் விளங்கக் குடி விளங்கும்.
கோவிலில் கொட்டு முழக்கு; கடையில் பாக்கு வெற்றிலை.
கோவிலில் வைத்துக் கும்பிட வேண்டும்.
கோவிலிலே பூஜித்துக் குளத்திலே கை அலம்பிக் கோபுர வாசலிலே உறங்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களைப் போலே.
கோவிலுக்கும் முட்டும்; குபேரனுக்கும் கை சளைக்கும். 10050

கோவிலை அடைத்துக் கொள்ளை அடிப்பவனா குருக்களுக்குத் தட்சிணை கொடுப்பான்?
கோவிலைக் கட்டி நாயைக் காவல் வைத்தாற் போல.
கோவிலை நம்பிக் குயவன் பிழைக்கிறது போல.
கோவிலைப் பார்த்துக் கும்பிடுகிறதா? கொட்டைப் பார்த்துக் கும்பிடுகிறதா?
கோவிலையும் குளத்தையும் அடுத்து இருக்க வேண்டும். 10055

கோவுக்கு அழகு செங்கோல் முறைமை.
கோவூரான் அவிசாரி போகக் குன்றத்தூரான் தண்டம் கொடுக்க.
(ஊர்மேல் போக.)
கோவூருக்கு வழி எது என்றால் கன்று என்னுடையது என்றானாம்.
கோழி அடிக்கிறதற்குக் குறுந்தடி வேண்டுமா?
(அடிக்க.)
கோழி அடை வைக்குமுன்னே குஞ்சுகளை எண்ணலாமா? 10060

கோழி ஓட்டத் தெரியாதவன் கொக்கு வாரியா?
கோழி ஓட்டினாலும் கும்பினிக்கு ஓட்டு.
(கும்பினி-East India Company.)
கோழிக் கறி என்றதும் கொண்டாடிக் கொண்டதும் கீரைத் தண்டாணம் அடாசப்பா; கீரைத் தண்டாணம் அடாசு.
(அடா.)
கோழிக் கறி கொடுத்துக் குயில் கறி வாங்கினாற் போல.
கோழிக் காய்ச்சல், வேசைக் காய்ச்சல். 10065

கோழிக் காய்ச்சலும் குண்டன் காய்ச்சலும் விடா.
கோழிக்குக் கொண்டை அழகு; குருவிக்கு மூக்கு அழகு.
கோழிக் குஞ்சுக்குப் பால் கொடுத்ததுபோல.
கோழி களவு போனால் ஆடு வெட்டிப் பலி இடுகிறதா?
(பொங்கல் இடுகிறதா?)
கோழி கவிழ்க்கும் போதே கூடக் கவிழ்த்து கொள்ளுகிறாயே. 10070

கோழி கறுப்பு ஆனால் அதன் முட்டையும் கறுப்பா?
கோழி குஞ்சிலும், அவரைக்காய் பிஞ்சிலும்.
கோழி குஞ்சுக்குப் பால் கொடுக்குமா?
கோழி குருடு ஆனாலும் சாறு மணக்காது போகுமா?
கோழி கூப்பிட்டு விடிகிறதா? நாய் குரைத்து விடிகிறதா? 10075
(விடியுமா?)

கோழி கூவாவிட்டால் விடியாதா?
கோழி கூவிப் பொழுது புலர்ந்தது.
(பொழுது விடியுமா?)
கோழி கூவுகிறதற்கு நாழிகை தெரிகிறது போல.
கோழி கொடுத்துக் குரலும் அழுகிறதா?
(அழிகிறது.)
கோழி கொடுத்துக் குரலும் பறிகொடுத்தது போல. 10080

கோழி கொரிப்பது போல் சாப்பிடுகின்றான்.
கோழி கொழுத்தால் முட்டை இடாது.
கோழி சிறகால் குஞ்சுகளைக் காப்பது போல.
கோழித் திருடியும் கூடி அழுகிறாள்.
கோழி தட்டிக் கூவுமா? 10085

கோழி திருடிக் கூடக் குலாவுகிறான்.
கோழி திருடிய கள்ளனும் கூட நின்று குலாவுகிறான்.

கோழி திருடியவன் தலையில் கொண்டை மயிர்.
கோழி தின்ற கள்ளனும் கூட நின்று குலாவுகிறான்.
கோழி போனது அல்லாமல் குரலும் போயிற்று. 10090

கோழி மிதித்துக் குஞ்சு சாவது இல்லை.
கோழி மிதித்துக் குஞ்சு முடம் ஆகுமா?
(குஞ்சுக்குக் கேடு ஆகுமா?)
கோழி முட்டைக்குச் சுருக்கு வைத்து, வாத்து முட்டைக்கு வரிச்சல் போடுவான்.
கோழி முட்டைக்குத் தலையும் இல்லை; கோவில் ஆண்டிக்கு முறையும் இல்லை.
கோழி முட்டைக்கு மயிர் பிடுங்குகிறான். 10095

கோழி முடத்துக்குக் கடாவெட்டிக் காவு கொடுக்கிறதா?
(கடா வெட்டிப் பலி இட்டது போல.)
கோழி மேய்த்தாலும் கும்பினியான் கோழி மேய்க்க வேணும்.
(கோறண்மேந்திலே. Government.)
கோழியின் காலில் கச்சையைக் கட்டினாலும் குப்பையைத்தான் சீக்கும்
(கிளறும்.)
கோழியும் கொடுத்துக் குலையும் இழந்தாளாம்.
(கூக்குரலும் படுகிறதா?)
கோழியும் யாருடையதோ? புழுங்கலும் யாருடையதோ? 10100
(யாழ்ப்பாண வழக்கு.)

கோழியை அடிப்பதற்குக் குறுந்தடி ஏன்?
கோழியைக் கேட்டா ஆணம் காய்ச்சுகிறது?
கோழியைக் கேட்டுத்தான் மிளகாய் அரைப்பார்களா?
கோழியைப் பருந்து அடிக்கும்; பருந்தைப் பைரி அடிக்கும்.
(பைரி-ராஜாளி.)
கோழியையும் கொடுத்துக் குரலையும் இழந்தாளாம். 10105

கோழியை வளர்க்கப் பிடித்தாலும் கேர் கேர் என்னும்; கழுத்தை அறுக்கப் பிடித்தாலும் கேர் கேர் என்னும்.
கோழை நாய்க்குப் பட்டது அரிது.
கோழையில் மொய்த்துக் குழம்பும் ஈயைப் போல்.
கோழையும் ஏழையும் கூடின காரியம் பாழிலே பாழ்.
கோள் சொல்பவனைக் கொடுந்தேள் என்று நினை. 10110

கோள் சொல்லிக் குடும்பத்தைக் கெடுத்தாலும் குடிவரி உயர்த்திக் கொள்ளை அடிக்காதே.

கோள் சொல்லிக் குண்டுணி.
(குண்டுப் பெருமாள்.)

கோள் சொல்லும் வாய் காற்றுடன் நெருப்பு.

கோளாற்றக் கொள்ளாக் கொள்ளாக் குளத்தின் கீழ்ப் பைங்கூழ்.

கோளாறு இல்லாத செட்டி கோவணத்தை அவிழ்ப்பானா? 10115

கோளுக்கு முந்தேன்; கூழுக்குப் பிந்தேன்.
(உணவுக்கு.)

கோளும் குறளையும் குலத்துக்கு ஈனம்.

கோளும் சொல்லிக் கும்பிடுவானேன்?

கோனான் கோல் எடுக்க நூறு ஆடும் ஆறு ஆடு ஆயின.

கோஷ்டியூர் காணாதவர் குரங்காய்ப் பிறப்பார். 10120

கௌ

கௌசிகத்துக்கு ஒளியில் எவர்க்கும் ஒளியும்.
(ஒளிரும்.)
கௌபீனத்துக்கு இச்சைப்பட்ட சாமியார் கல்யாணத்துக்குப் பெண் தேடிக் கொண்டாராம்.
கௌபீன ஸம்ரக்ஷணார்த்தம் அயம் படாடோப:
கௌவை உடையார் காலைத் தொடு.
கௌவை கருதேல். 10125

கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.
கௌவைப் பட்டால் காயத்தில் ஒருமுழம் நீளுமா?
கௌவையது இல்லான் திவ்விய சொல்வான்.
கௌளி ஊருக்கெல்லாம் பலன் சொல்லும்; தான் மாத்திரம் கழு நீர்ப் பானையில் விழும்.

ங

ஙப்பன் பிறந்தது வெள்ளிமலை; ஙாய்பிறந்தது பொன்மலை.
ஙப்போல் வளை. 10130
(ஆத்திசூடி.)

சக்களத்தி அறுத்தால் தானும் அறுப்பாள்.
சக்களத்திக்கு ஆண்பிள்ளை பெற்றால் பொறாமை, மலடிக்கு எவள் பிள்ளை பெற்றாலும் பொறாமை.
சக்களத்தி பிள்ளை தலைமாட்டுக் கொள்ளி.
சக்களத்தி மாமியார்.
சக்கிலித் தெரு நாய் சமயத்துக்கு உதவாது. 10135

சக்கிலிப் பெண் நெற்றியிலே குஜ்ஜிலிப் பொட்டைப் பார்.
சக்கிலிப் பெண்ணும் சாமைக் கதிரும் பக்குவத்திலே பார்த்தால் அழகு.
சக்கிலியன் சாமிக்குச் செருப்படிதான் பூஜை.
சக்கிலியன் சாமியைச் செருப்பால் அடித்துக் கும்பிடுவானா?
சக்கு சக்கு என்று பாக்குத் தின்பான், சபை மெச்ச வீட்டிலே வந்து கடைவாய் நக்குவான். 10140
(பெண்டுகள் மெச்ச.)

சக்கை போடு போடுகிறான்.
சக்தி இருந்தால் செய்; சக்தி இல்லாவிட்டால் சிவனே என்று இரு.
சக்தி இல்லா விட்டால் சிவனே என்று கிட.
சத்தியம் பயந்து சங்கீதம்.
சகசண்டி மாட்டுக்கு இரண்டொரு சூடு: நம் சைவப் பிள்ளைக்கு மேலெல்லாம் சூடு. 10145

சகத்தைக் கெடுத்துச் சுகத்தை வாங்குகிறார்.
சகத்தைக் கொடுத்தும் சுகம் வாங்கிக் கொள்.
(தேடிக் கொள்.)
சகதியில் கல்லை விட்டு எறிந்தால் தன் துணி என்றும் பிறர் துணி என்றும் பாராது.
சகதியில் கல்லை விட்டு எறிந்தால் மேலே தெறிக்கும்.
(சேறு முகத்தில் தெறிக்கும்.)
சகல தீர்த்தங்களுக்கும் சமுத்திரமே ஆதரவு. 10150
(நதிகளுக்கும் காரணம்.)

சகல நட்சத்திரமும் ஒன்றாய்க் கூடினாலும் சந்திரனுக்கு இணை ஆகுமா?
சகலமும் கற்றவன்தன்னைச் சார்ந்து இரு.
சகலன் உறவில் சாண கொடி பஞ்சமா?
(சாண் கயிறு.)
சகுனம் சொன்ன பல்லி கழுநீர்ப் பானையில் விழும்.
சகுனம் நன்றாக இருக்கிறது என்று பொழுது விடிகிற வரைக்கும் கன்னம் வைக்கலாமா? 10155

சகுனம் பார்க்கப் போகும்போது மடியில் பூனையைக் கட்டிக் கொண்ட மாதிரி.
சகுனம் பார்க்காதவன் காத வழியில் மாண்டான்.
சகோதரன் உள்ளவன் படைக்கு அஞ்சான்.
சங்கஞ் செடி ஓணானைக் கண்டு சாகிற கிழவியைக் குத்தின கதை.
சங்கட சனியனே, சடுதியில் விட்டுத் தொலை. 10160
(சகதியில்.)

சங்கடமான பிள்ளையைப் பெற்று வேங்கடராமன் எனப் பெயர் வைப்பார்.
சங்கட வேதனைக்கெல்லாம் தலையிட்டுக் கொள்கிறதா?
சங்கடப் பாட்டா, தங்கப் பாட்டா?
சங்கரா சங்கரா என்றால் சாதம் வாயில் விழுமா?
சங்கனும் புங்கனும் சந்நியாசிக்கு உதவியா? 10165

சங்கிலே வார்த்தால் தீர்த்தம்; செம்பிலே வார்த்தால் தண்ணீர்.
(சட்டியிலே வார்த்தால்.)
சங்கீதம் தெரியாவிட்டாலும் இங்கிதம் தெரியும்.
சங்கு ஆயிரத்தோடு காசி போனாலும் தன் பாவம் தன்னோடே.
(ஆயிரம் கொண்டு.)
சங்கு ஆயிரம் கொண்டு வங்காளம் போனால் பொன்பாளம் வந்தாலும் வந்தது; மண் பாளம் வந்தாலும் வந்தது.
சங்கு உடைந்தது; மண் கரைந்தது. 10170

சங்கு ஊதாமல் தாலி கட்டுவது உண்டா?
சங்கு ஊதிப் பொழுது விடியுமா?
சங்கு சுட்டாலும் தன் வெண்மை குன்றாது.
சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.
சங்கு குத்து ஆகிறது; ஆண்டி வாய் ஆகிறது. 10175
(சங்கு குத்தும் ஆண்டி வாயும்.)

சங்கூதிப் பண்டாரம், அங்கு ஊதி இங்கு வாராதே; இங்கு ஊதி அங்கே போ,
(பூஜை பண்ணும் பண்டாரத்தைப் பார்த்துச் சிவலிங்கம் சொன்னது.)
சங்கைச் சுட்டாலும் மங்குமா நிறம்?
சங்கோசம் விட்டால் சங்கையும் இல்லை.
(சங்கோசம் இல்லையென்றால்.)
சட்டி ஓட்டை ஆனாலும் கொழுக் கட்டை வெந்தால் சரி.
(வேக வேண்டும்.)
சட்டி சுட்டது; கை விட்டது. 10180

சட்டி திருடும் நாய்க்குப் பெட்டி பணம் எதற்கு?
சட்டி பாலுக்கு ஒரு சொட்டு மோர் பிரை.
சட்டி புழைக்கடையிலே; அகப்பை வாசலிலே.
சட்டியில் இருந்தால் அல்லவா அகப்பையில் வரும்?
சட்டியோடு அகப்பை தட்டாமல் போகுமா? 10185

சட்டியோடு தின்று பானையோடு கை அலம்புகிறது.
சட்டுவம் கறிச் சுவையை அறியுமா?
சட்டைக்காரன் நாயை எட்ட நின்று பார்.
சட்டைநாதபுரம் உழவு; சீகாழி இழவு; செம்மங்குடி வறட்டி.
(எப்போதும் இருக்கும். சீகாழிக்கு $1\frac{1}{2}$ மைலில் உள்ளது செம்மங்குடி.)
சடை கொண்ட இலுப்பையைத் தடிகொண்டு அடித்தாற் போல. 10190

சடை கொண்டு வெருட்டல் வேண்டா.
(திருவால. 16:26.)
சடைத் தம்பிரான் சோற்றுக்கு அழுகிறானாம்; லிங்கம் பஞ்சாமிர்தத்துக்கு அழுகிறதாம்.
(சாற்றுக்கு.)
சடைத் தம்பிரான் தவிட்டுக்கு அழுகிறான்; லிங்கம் பரமான்னத்துக்கு அழுகிறதாம்.
சடைத் தம்பிரானுக்குச் சாதம் இல்லாதபோது மொட்டைத் தம்பிரானுக்கு மோர் எங்கே கிடைக்கும்?
சடையைப் பிடித்தால் சந்நியாசி தன்னாலே வருவான். 10195
(பிடித்து இழுத்தால். கிட்டே வருவான். தம்பிரான் கூட வருவார்.)

சண்ட மாருதத்துக்குமுன் எதிர்ப்பட்ட சருகுபோல்.
சண்டிக்கு ஏற்ற மிண்டன்.
(முண்டன்.)
சண்டிக் குதிரைக்கு ஏற்ற மொண்டிச் சாரதி.
(நொண்டிச் சாரதி.)

சண்டி முறைத்தால் காடு கொள்ளாது.
(புரண்டால்; பிரண்டால்; வெறிச்சால்.)
சண்டியிலும் சண்டி சகசண்டி. 10200
(சண்டிக்கும் முண்டி படுசண்டி.)

சண்டைக்குச் சிங்காரம் இல்லை.
சண்டை செய்யும் இரண்டு கடாக்களில் நடுவில் நரி நின்று நசுங்கினது போல.
சண்டை நடந்ததற்குச் சாட்சி என் மகன் இருக்கிறான்.
சண்டை பிடிக்கிறவனுக்குக் கூடச் சனிக்கிழமை ஆகாது.
சண்டை முகத்திலே உறவா? 10205
(உறவு ஏது?)

சண்டை வந்தது பிராமணா, சோற்று மூட்டையை இறக்கு.
(சாத மூட்டையை.)
சண்டை வருகிறது மாமியாரே, சாதத்தை எடுத்து உள்ளே வையும்.
(பானையை எடுத்து.)
சண்ணி அண்ணாமலை என்று பெயர் இடுவான்.
சணப்பன் கையில் அகப்பட்ட சீலைப் பேனைக் கொல்லவும் மாட்டான்; விடவும் மாட்டான்.
(சணப்பன்-சமணன்.)
சணப்பன் வீட்டுக் கோழி தானாக வந்து மாட்டிக்கொள்ளும். 10210
(தானே விலங்கு பூட்டிக் கொண்டது போல.)

சணப்பன் வீட்டு நாய் சணல் கட்டிலின் மேல் ஏறினாற் போல்.
சத்தத்துக்கு அளப்பதற்குமுன் பொதிக்கு அள.
சத்தம் பிறந்த இடத்தே சகல கலையும் பிறக்கும்.
சத்த மேகங்களும் கூடி நெருப்பு மழை பெய்தாற் போல.
சத்தாவரணம் சேவித்தால் செத்தவுடனே வைகுண்டம். 10215
(ஸ்ரீவில்லிபுத்தூரில்.)

சத்தியத்தில் சிறந்தவன் அரிச்சந்திரன்.
சத்தியத்திலே சாமி சாட்சி என்கிற சத்தியம் பெரிது.
சத்தியத்துக்கு அரிச்சந்திரன்; சாந்தத்துக்குத் தருமராஜன்.
சத்தியத்துக்கு இல்லாத பிள்ளை துக்கப்பட்டு அழப்போகிறானா?
சத்திய நெறியே சன்மார்க்க நெறி. 10220

சத்தியம் இல்லாத வாய் போலே.
சத்தியம் சத்தி; தத்துவம் சுத்தி.
(சத்தியமே, சத்துவமே சித்தி.)
சத்தியம், தர்மம் நித்தியம்.
(சத்திய தர்மம்.)

சத்தியம் தலை காக்கும்.
சத்தியம் நண்ணலை, சாவைத் தினம் நினை. 10225

சத்தியம் வெல்லும், அசத்தியம் கொல்லும்.
சத்தியமே கொல்லும்; சத்தியமே வெல்லும்.
சத்தியமே ஜயம்.
சத்திய வாசகனி சமஸ்த சற்குணன்.
(நற்குணன்.)
சத்திரத்தில் இன்னும் நுழைய விடவில்லை; இலை கிழிசல் என்றானாம். 10230

சத்திரத்தில் சந்நியாசிக்குப் போஜனம்; மடத்தில் நித்திரை.
சத்திரத்தில் சாப்பாடு; சாவடியில் நித்திரை.
(மண்டபத்தில் படுக்கை.)
சத்திரத்தில் சாப்பாடு; மடத்தில் நித்திரை.
சத்திரத்தில் சோறு இல்லை என்றால் இலை பீற்றல் என்றானாம்.
சத்திரத்துக் கூழுக்கு நாயக்கர் அப்பணையோ? 10235
(அப்பணை - ஆணை.)

சத்திரத்துச் சாப்பாட்டுக்கு அப்பணையங்கார் சிபாரிசா?
சத்திரத்துச் சாப்பாட்டுக்குச் தாத்தையங்கார் அப்பணையா?
(ஊத்தரவா?)
சத்திரத்துச் சாப்பாட்டுக்கு நாயின் சிபாரிசா?
சத்திரத்துச் சோற்றுக்குத் தாத்தையங்கார் அப்பணையா?
(கூழுக்கு.)
சத்திரத்து நாயை அடித்தால் கேட்பார் யார்? 10240

சத்திரத்துப் பாட்டுக்குத் தெருப்பாட்டு மேலா?
(திருப்பாட்டு.)
சத்திரத்தைக் கட்டி நாயைக் காவல் வைத்தது போல.
சத்திரா போஜனம்; மடத்தில் நித்திரை.
சத்துக்களோடு சத்துக்கள் சேர்வர்; சந்தனத்தோடு கர்ப்பூரம் சேரும்.
சத்துருக்களையும் சித்தமாய் நேசி. 10245

சத்துரு பகை; மித்துரு வதை.
சத்துரு பொறுமை தனக்கே தண்டனை.
(சத்துரு பெருமை.)
சத்துருவைச் சார்ந்து கொல்ல வேண்டும்.
சத்ரா போஜனம், மடா நித்ரா.
சதகோடி சங்கத்திலே மொட்டைத் தாதனைக் கண்டாயோ என்கிறது போல. 10250

சத சுவோகீ ஏக பண்டித.
சதி செய்கிறவர்களுக்குச் சமர்த்தர் என்று பெயர்.
சதுரக் கள்ளியில் அகில் உண்டாகும்.
சதை இல்லாமல் கத்தி நாடுமா?
சதை உள்ள இடத்திலே கத்தி நாடும். 1021

சதை கண்டு கத்தி நாட வேண்டும்.
சந்தடி சாக்கிலே கந்தப் பொடி காற்பணம்.
(சந்தடியோ சந்தடி.)
சந்தம் இல்லாக் கவிக்கு அந்தம் இல்லை.
(அந்தம்-அழகு.)
சந்தனக் கட்டை தேய்ந்தது; சாதமும் வடித்தாச்சு.
சந்தனக் கட்டை தேய்ந்தால் கந்தம் குறையுமா? 1026
(குறைபடுமா?)

சந்தனக் கருடன் வந்த வழி போனால் கங்கையில் போட்டதும் தன் கைக் கூடும்.
சந்தனக் குறடு தேய்ந்தாலும் மணம் குறையாது.
சந்தனக் கோல் குறுகினாலும் பிரப்பங் கோல் ஆகாது.
சந்தனம் கொடுத்த சரஸ்வதி.
சந்தனம் தெளித்த கையாலே சாணி தெளிக்கலாச்சுது. 1026

சந்தனம் தேய்ப்பவன் அலைவது போலே.
சந்தனம் மிகுந்தால் பிட்டத்தில் பூசிக் கொள்கிறதா?
சந்தன மரம் போல் பிள்ளை; சம்பங்கிப்பூப் போல் பெண்.
சந்தன வாள் போல.
சந்தன விருட்சக் காட்டிலே சர்ப்பம் இருக்கிறது போல. 1027

சந்திக்குச் சந்தி நாய் அடிபடுவது போல,
சந்திக்கும் பொறையாற்றுக்குமாக அலையாதே.
(இருக்கிறான்.)
சந்தி சிரிக்கிறது.
சந்தியில் அடித்தால் சாட்சிக்கு ஆர் வருவார்.
சந்தியில் நிற்கிறது. 1027

சந்தியிலே அடித்ததற்குச் சாட்சியா?
சந்திர சூரியர் உள்ள வரைக்கும்.
சந்திர சூரியர் உள்ள வரைக்கும் வார்த்தை பிசகான்.
சந்திரன் இல்லாத வானம் போல.
சந்திரன் இல்லா வானமும் மந்திரி இல்லா அரசும் பாழ். 10280

சந்திரன் குளிர்ச்சியாய்க் காய்ந்தாலும் சூரியனையே உலகத்தார் நாடுவார்கள்.

சந்திரன் கோயிலிலும் விளக்கு எரிகிறது.

சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கிறான்.

சந்திரன் மறைந்த பின் நிலா நிற்குமா?

சந்திரனுக்கு உண்டோ சண்டாளன் வீடு? 10285

சந்திரனுக்குச் சரியாக முட்டை தட்டினாளாம்.

சந்திரனுக்கும் களங்கம் உண்டு.

சந்திரனைப் பார்த்த கண்ணுக்குச் சனியனைப் பார்த்தாற் போல.

சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தாற் போல.
(குரைத்து ஆவதென்ன?)

சந்தில் சிந்து பாடுகிறான். 10290

சந்திலே சமராராதனை செய்ய முடியுமா?

சந்துக்குச் சந்து சதிராட்டம்.

சந்து விட்டால் வந்து விட்டேன்.

சந்தை இரைச்சலில் குடியிருந்து கெட்டேனே!
(சந்தைக் கடையிலே.)

சந்தைக்குப் போகிறவன் வழித்துணை வாரான். 10295

சந்தைக்குப் போய் வந்த நாய் போல.

சந்தைக்கு வந்தவர்கள் வழிக்குத் துணையா?
(வழித்துணை ஆவாரா?)

சந்தைக் கூட்டம், பொம்மலாட்டம்.
(பொம்மை ஆட்டம்.)

சந்தைக் கோபாலம்; தந்தப் பல்லக்கா?
(கோபாலம்-பிச்சை.)

சந்தையில் அடித்ததற்குச் சாட்சி ஏன்? 10300

சந்தையில் அடிபட்டவனுக்குச் சாட்சி ஆர்?

சந்தையில் கும்பிட்டால் வாழ்த்துவாரும் இல்லை; வைவாரும் இல்லை.

சந்தோஷம் சாண் பலம்.
(சகல பலம்.)

சந்தோஷ வார்த்தை சமயத்தில் வந்தது.

சந்நியாசம் சகல நாசம். 10305

சந்நியாசிக்கு என்ன சம்சாரக் கவலை?
சந்நியாசிக்குச் சாப்பாட்டுக் கவலையா?
சந்நியாசிக்கும் பழைய குணம் போகாது.
சந்நியாசிக்கும் போகாது ஜாதி அபிமானம்.
சந்நியாசி கோவணத்துக்கு இச்சித்துச் சம்சாரம் மேலிட்டது போல. 10310

சந்நியாசி கோவணம் கட்டினது போல.
சந்நியாசி செய்த சத்திக்குள் அகப்பட்ட சடை.
(சடை.)
சந்நியாசி பயணம் திண்ணை விட்டுக் குதிப்பதுதான்.
சந்நியாசி பிரயாணம் திண்ணை விட்டு இறங்கினால் ஆச்சு.
சந்நியாசி பூனை வளர்த்தது போல. 10315

சந்நியாசியார் சந்தையிலே கண்டவனே என்று ஆட்டினார்; தவசிப் பிள்ளை சந்நியாசியால் கண்டவனே என்று ஆட்டினான்.
சந்நியாசியைக் கடித்த நாய்க்குப் பின்னாலே நரகமாம்; சந்நியாசிக்கு முன்னே மரணமாம்,
சந்நியாசியை நிந்தித்தவனுக்குப் பின்னாலே நரகமாம்.
சந்நியாசி வீடு திண்ணையிலே.
சப்தப் பிரம்மத்தில் அசப்தப் பிரம்மம் பிரகாசிக்கிறது. 10320

சப்தப் பிரம்மம் பரப்பிரம்மம், இரண்டையும் அறிய வேண்டியது.
சப்தம் பிறந்த இடத்திலே சகல கலைகளும் பிறக்கும்.
சப்த மேகங்களும் ஒன்று கூடி நெருப்பு மழை பெய்தாற்போல.
சப்பரத்துக்கு முன்னே வந்தாயா? பின்னே வந்தாயா?
சப்பாணிக்கு நொண்டி குடுகுடுப்பை. 10325

சப்பாணிக்கு நொண்டி சண்டப் பிரசண்டன்.
சப்பாணிக்கு விட்ட இடத்திலே கோபம்.
சப்பாணி மாப்பிள்ளைக்கு சந்து ஒடிந்த பெண்டாட்டி.
(பெண்சாதி.)
சப்பாணி வந்தால் நகர வேணும்; பல்லக்கு வந்தால் ஏறவேணும்.
சப்பை கட்டுகிறான். 10330

சபைக் கோழை ஆகாது.
சபையிலே நக்கீரன்; அரசிலே விற்சேரன்,
சம்சாரக் குட்டு, வியாதி ரெட்டு.
(ரெட்டிப்பு.)

சம்சாரக் குட்டு வெளியிட்டால் நஷ்டம்.
சம்சாரம் சாகரம் துக்கம். 10335

சம்சாரம் பெருத்துப்போச்சு என்று சாலுக்குக் குறுணி விதைத்தானாம்.
சம்சாரமோ சாகரமோ?
சம்சாரி அகத்திலே சாதத்துக்கு என்ன குறைவு?
சம்பத்தும் விபத்தும் கூடவே இருக்கின்றன.
சம்பந்தன் தன்னைப் பாடுவான்; அப்பன் என்னைப் பாடுவான்; சுந்தரன் பொன்னைப் பாடுவான். 10340

சம்பந்தி கிருகஸ்தன் வந்தான்; தவலையை எடுத்து உள்ளே வை.
சம்பந்தியும் சம்பந்தியும் ஒன்று; கொட்டு மேளக்காரன் தனி.
சம்பந்தியும் சம்பந்தியும் ஒன்று; கொட்டு மேளக்காரனுக்குக் கோணக் கோண இழுக்கும்.
சம்பந்தியும் சம்பந்தியும் சத்திரத்துக்குப் போனால் ஏச்சும் இல்லை; பேச்சும் இல்லை.
(சத்திரத்தில் உண்டால்.)
சம்பந்தி வாய்க்கும் மாப்பிள்ளை குணத்துக்கும் இன்னும் ஒரு பெண்ணை இழுத்து விட்டாளாம். 10345

சம்பளம் அரைப்பணம் ஆனாலும் சலுகை இருக்க வேண்டும்.
(சலுகை.)
சம்பளம் இல்லாத சேவகனும் கோபம் இல்லாத எசமானும்.
சம்பளம் இல்லாத மந்திரி; கோபம் இல்லாத ராஜா.
சம்பளம் இல்லாமல் ஆஜர்.
சம்பளம் குறைந்தாலும் சலுகை இருக்க வேண்டும். 10350

சம்பளம் சனிக்கிழமை; பெண்டாட்டி பேர் புதன் கிழமை.
சம்பள வீதத்திலேயா குண்டு படுகிறது?
சம்பா விளைந்து காய்ந்து கிடக்கிறது; உண்பார் இல்லாமல் ஊர்க் குருவி மேய்கிறது.
(அழிக்கிறது.)
சம்மன் இல்லாமல் ஆஜர்.
சமண சந்நியாசிக்கும் வண்ணானுக்கும் சம்பந்தம் என்ன? 10355

சமண சந்நியாசி கையில் அகப்பட்ட சீலைப்பேன் போல.
(சமணன் கைச் சிலைப்பேன் போல.)
சமய சஞ்சீவி.
சமயத்திலே காலைப்பிடி, தீர்ந்து போனதும் தலையைப் பிடி.

சமயம் வாய்த்தால் களவு செய்வான்.
சமயம் வாய்த்தால் நமனையும் பலகாரம் செய்வான். 10360

சமயம் வாய்த்தால் நமனையும் வெல்லலாம்.
சமர்த்தன் சந்தைக்குப் போனால் கொள்ளவும் மாட்டான்,
கொடுக்கவும் மாட்டான்.
(வாங்கவும் மாட்டான்.)
சமர்த்தன் பெண்சாதியும் சோரம் போவாள்.
சமர்த்தனுக்கு ஏதும் பெரிது அல்ல.
சமர்த்தி என்ன பெற்றாள்? சட்டிச் சோறு தின்னப்
பெற்றாள். 10365

சமர்த்தி என்ன பெற்றாள்? தலைச்சன் பெண் பெற்றாள்.
சமர்த்தில் குண்டு பாயுமா?
சமர்த்தில் வாழ்ந்தவர்களும் இல்லை; அசட்டில் கெட்டவரும்
இல்லை.
சமர்த்து உள்ள சேவகனுக்குப் புல்லும் ஆயுதம்.
சமர்த்துக்கிட்டே பேசி ஜயிக்கலாம்; அசட்டுக்கிட்டே சண்டை
போட்டாலும் முடியாது. 10370

சமர்த்துச் சனியன்.
(சமர்த்துக்குச் சனியன்.)
சமர்த்து சந்தியில் நிற்கிறது.
சமாசாரம் தெரியாமல் அமாவாசைக்குப் போகிறான்.
சமிக்ஞை அறியாதவன் சதுரன் அல்ல.
சமிக்ஞை காட்டிச் சண்டைக்கு அழைக்கிறான் 10375

சமுத்திர அலைகள் ஓயப் போகிறதும் இல்லை; தம்பி தலை
முழுகித் தர்ப்பணம் பண்ணப் போகிறதும் இல்லை.
சமுத்திரத்தில் ஏற்றம் போட்டது போல் இருக்கிறது.
சமுத்திரத்தில் ஏற்றம் போட்டுத் தண்ணீர் இறைத்தாற்போல.
சமுத்திரத்திலே பாய்கிற நதி வயலிலே பாயட்டுமே என்றாற் போல.
சமுத்திரத்திலே பெருங்காயம் கரைத்தது போல. 10380

சமுத்திரத்துக்கும் சாண் துண்டுக்கும் எம்மாத்திரம்?
(குண்டுக்கும்.)
சமுத்திரத்து ஜலத்தை முட்டை கொண்டு அளந்தாளாம்.
சமுத்திரம் பொங்கினால் கிணறு கொள்ளுமா?
சமுத்திரமும் சாக்கடையும் சரியா?
சமுத்திர வன்கணன் சண்டாளன். 10385

சமுத்திர ஜலம் தாகத்துக்கு உதவாது.
சமைக்கப் படைக்கத் தெரியாமல் போனாலும் உடைக்கக் கவிழ்க்கத் தெரியும்.
சமையல் தெரிந்தவனுக்கு உமையவள் உள்ளங்கையில்.
சமையல் பாகம் தெரிந்தவனுக்கு உமையவள் பாகன் உள்ளங் கையில்.
சமையல் வீட்டிலே நாய் நுழைந்தாற் போல. 10390

சமையல் வீட்டிலே முயல் தானே வந்தது போல.
சர்க்கரை என்றால் தித்திக்குமா?
சர்க்கரை என்று எழுதி நக்கினால் தித்திக்குமா ?
(என்று எழுதினால் நாக்கு ருசிக்குமா?)
சர்க்கரை தின்று பித்தம் போனால் கசப்பு மருந்து ஏன் தின்ன வேண்டும்?
சர்க்கரை தின்னக் கூலியா? 10395

சர்க்கரை தொண்டை மட்டும்; சவ்வாது கண்ட மட்டும்.
சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பெய்தது போல.
சர்க்கரைப் பாகுத் தோண்டியிலே தாழ மொண்டாலும் தித்திப்பு; மேலே மொண்டாலும் தித்திப்பு.
சர்க்கரைப் பொங்கலுக்கு ஒரு சத்தியமா?
சர்க்கரைப் பொங்கலுக்குப் பத்தியம் இல்லை; சாண்வயிறு நிரம்பி விட்டால் வைத்தியம் இல்லை. 10400

சர்க்கரைப் பொம்மையில் எந்தப் பக்கம் தித்திப்பு?
சர்க்கரை முத்துக்குட்டி சாதம் குழைந்து போச்சு; எடுடா பல்லக்கை; பிறந்தகத்துக்குப் போகிறேன்.
(தூக்கடா பல்லக்கை.)
சர்க்கரையும் தேனும் சிற்றப்பா, ஏட்டில் எழுதி நக்கப்பா.
சர்க்கரையும் நெய்யும் சேர்ந்தால் கர்பளத்தையும் தின்னலாம்.
சர்க்கரையும் மணலும் சரி ஆகுமா? 10405

சர்க்காரான் பணத்தை வெட்டியான் சுமந்தானாம்.
(சுமந்த மாதிரி.)
சர்த்திக்கும் பிள்ளை வர்த்திக்கும்.
(சர்த்திக்கும்-வாந்தி எடுக்கும்.வர்த்திக்கும்-வளரும்.)
சர்ப்பத்தின் வாய்த் தவளை போல.
(தேரை போல.)
சர்வ வில்லங்க சித்தி.

சரக்குக் கண்ட இடத்தில் பிள்ளைக்கு அமிழ்தம் கொடுக்க நினைக்கிறது போல. 1041

(மருந்து கொடுக்கிறது போல.)

சரக்குக் கண்ட இடத்திலே பிள்ளை பெறுகிறது போல.

சரக்கு மலிந்தால் கடைக்கு வரும்.

(சந்தைக்கு வரும்.)

சரத்தைப் பார்த்து பரத்தைப் பார்.

சரசம் மிஞ்சி ரவிக்கையில் கை போடக் கூடாது.

(ரவிக்கை மேலே.)

சரடு ஏறுகிறது கந்தைக்கு லாபம். 1041

சரப்பளி சந்திரஹாரம் தாங்க முடியவில்லை.

சரம் பார்த்தவனைச் சருகாதே; பட்சி பார்த்தவனைப் பகைக்காதே

சரம் பார்ப்பான், பரம் பார்ப்பான்.

சரமாரியாய்ப் பொழிகிறான்.

சரி விற்கக் குழி மாறுகிறதா? 1042

சரீரப் பிரயாசை எதற்கு? சாண் வயிற்றுக்குத்தான்.

சருகு அரிக்க நேரம் இருந்ததன்றிக் குளிர் காய நேரம் இல்லை.

(தீக்காய.)

சருகு உதிர்ந்த மரம் போல.

சருகைக் கண்டு தழல் அஞ்சுமா?

சல்லடைக் கண் போலச் சில்லுச் சில்லாய்த் துளைக்கிறது. 1042

சல்லி கட்டின மாட்டுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமா?

சல்லி மோதக் கல்லி பறிக்கிறது.

சல்லிய சார்த்தியம்.

சல்லிவேர் அறக் கல்லி பறக்கிறது.

சலித்துக் கொடுத்த காரியம் சந்தோஷம் வந்தால் தீருமா? 1043

சலிப்போடு சம்பந்தி இழுத்தால் இலைப் பருக்கை.

(ஏழு இலை.)

சலுகை உள்ள மாடு படுகை எல்லாம் மேய்ந்ததாம்.

சவ்வாதில் மயிர் வாங்கினது போல.

சவத்துக்கு அழுவாரும் தம் துக்கம்.

சவலைப் பிள்ளை முலைக் குத்து அறியுமா? 10435

சவுடால் பொடி மட்டை; தட்டிப் பார்த்தால் வெறு மட்டை.
சவுண்டிக்குச் சாப்பிட்டவன் இருக்கச் செத்தது பொய்யா.
சளி பிடிக்காத மூக்கு இல்லை; சாராயம் குடிக்காத நாக்கு இல்லை.
சளி பிடித்ததோ, சனி பிடித்ததோ?
சளுக்கன் தனக்குச் சத்துரு; சவுரிக்காரனுக்கு மித்துரு. 10440

சற்குருவைப் பழித்தோர் சாய்ந்தே போவார்.
சற்சனர் உறவு சர்க்கரைப் பாகு.
சற்புத்திரன் இருக்கிற இடத்திலே தறிதலையும் இருக்கிறது.
சன்னதம் குலைந்தால் கும்பிடு எங்கே?
(எங்கே வரும்?)
சன்னம் சன்னம் பர்வதம். 10445

சனத்தோடு சனம் சேரும்; சந்தனத்தோடு கர்ப்பூரம் சேரும்.
சனப்பலம் இருந்தால் மனப் பலம் வரும்.
சனமருளோ, சாஸ்திர மருளோ?
சனி ஒழிந்தது; சங்கடம் தீர்ந்தது.
சனிக்கிழமையும் புதன் கிழமையும் தவறாமல் எண்ணெய் தேய்த்துக் குளிப்பான். 10450
(செட்டிநாட்டு வழக்கு; வேறு ஒன்றும் செய்வதில்லை என்பது கருத்து.)

சனி நீராடு.
சனிப்பயிர் சாத்திரத்துக்கு உதவும்.
சனிப் பிணம் தனிப் போகாது.
சனிப் பிணம் துணை தேடும்.
(துணை கூட்டும்.)
சனிப் பெருக்கு. 10455
(வேளாண்மைக்கு நல்லது.)

சனி பிடித்த நாரை கெளிற்றைப் பிடித்து விழுங்கினாற் போல.
சனியன் தொலைந்தது.
சனியன் பிடித்தவள் சந்தைக்குப் போனாலும் புருஷன் அகப்படமாட்டான்.
சனியன் பிடித்தவனுக்குச் சந்தையிலும் கந்தை அகப்படாது.
(பிடித்தவளுக்கு.)
சனியனை அடிமடியில் கட்டியது போல. 10460

சனியனை விலைக்கு வாங்கினது போல.
சனியும் புதனும் தங்கும் வழி போகக் கூடாது.
சனியும் புதனும் தன்னை விட்டுப் போகாது.
சனியைப் போலக் கொடுப்பவனும் இல்லை: சனியைப் போலக் கெடுப்பவனும் இல்லை.
சஜ்ஜனர் உறவு சர்க்கரைப் பாகுபோல. 10465

சாக்கடைக்குப் போக்கிடம் எங்கே?
சாக்கடைக் கும்பிக்குப் போக்கிடம் எங்கே?
சாக்கடைக்குப் போக்கிடம் இல்லை.
சாக்கடைச் சேறு என்றாலும், சக்களத்தி என்றாலும் சரி.
சாக்கடைப் புழு என்றாலும் சக்களத்தி என்றாலும் போதும். 10470

சாக்கடைப் புழு என்றாலும் சக்களத்தியை வெல்லப் போகாது.
சாக்கடைப் புழுவிற்குப் போக்கிடம் எங்கே?
சாக்கிரி செய்யப் போனாலும் போக்கிரித் தனம் குறையாது.
சாக்குப் போக்குச் சொல்லுதல்.
சாக்கும் போக்கும் ஏற்கா ஐயன்முன். 10475

சாக்கோ, நாக்கோ, அம்மையார் வாக்கோ?
சாகக் காசிக்குப் போ; சாப்பிடச் சூரத்துக்குப் போ.
சாகத் திரிகிறான் சண்டாளன்; சாப்பிட்டுத் திரிகிறான் பெண்டாளன்.
சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் ஆழம். (சமுத்திரம் நீச்சு மட்டும்.)
சாக நேரம் ஒழிய, வேக நேரம் இல்லை. 10480

சாகப் பயந்தவள் சுடுகாட்டை முறைக்க முறைக்கப் பார்த்தாளாம்.
சாகப் பிறந்தாயோ? பேசப் பிறந்தாயோ?
சாகப் போகிற நாய் கூரைமேல் ஏறின மாதிரி.
சாகப் போகிற நாளில் நாய் வீட்டின்மேல் ஏறினாற் போல.
சாகப் போது இருந்தாலும் வேகப் போது இல்லை. 10485

சாக மாட்டாத மாடு கொம்பைக் கொம்பை அலைத்தாற் போல.
சாக மாட்டாமல் சங்கடப்படுகிறது.
சாக வேண்டும் என்கிற சதுரையை விட்டு விட்டு வா; வாழ வேண்டும் என்கிற வந்தியை அழைத்து வா.

சாகாத் தலை, வேகாக் கால்.
சாகாப் பேருக்கு ஆகாரம் ஏன்? 10490

சாகாமல் கற்பதே கல்வி; பிறரிடத்தில் ஏகாமல் உண்பதே ஊண்.
சாகாய வாஸ்யாத், லவணாய வாஸ்யாத்.
சாகிற காலத்தில் சங்கரா, சங்கரா என்கிறது போல.
சாகிறது போல் இருந்து வியாதி தீருகிறதும் உண்டு.
சாகிற நாய் வீரத்தைக் காட்டினாற் போல. 10495
(வீட்டின் மேல் ஏறினாற் போல.)

சாகிற நாளைக்கு வாதம் பலித்ததாம்.
(சாகிற வயதில். வாதம்-ரஸவாதம்.)
சாகிற பேருக்குச் சமுத்திரம் கால்வாய்.
சாகிற வரைக்கும் சங்கடம் ஆனால் வாழ்கிறது எக்காலம்?
சாகிறவரைக்கும் சங்கடம் என்றால் சந்தோஷம் எக்காலம்?
சாகிற வரைக்கும் சஞ்சலம் போனால் போகிறது எக்காலம்? 10500

சாகிற வரைக்கும் பட்டினி இரு என்றால் ஒரு நாளாவது பட்டினி இருக்கும் நிலை வரும்.
சாகிற வரையில் கஷ்டம் ஆனால் சுகம் எப்போது?
சாகிற வரையில் மருந்து கொடுக்க வேண்டும்.
சாகிற வரையில் வைத்தியன் விடான்; செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்.
சாகிற வரையில் துன்பம் ஆனால் சுகம் எப்போது? 10505

சாகிறவன் சனியனுக்குப் பயப்படுவானா?
(அஞ்சுவானா?)
சாகிறவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்.
சாகிறவனைப்போல் இருப்பான் பிழைப்பான்; பிழைப்பானைப் போல் இருப்பான் சாவான்.
சாகிறேன், சாகிறேன் என்ற பெண்ணும், போகிறேன், போகிறேன் என்ற புருஷனும் போல் மிரட்டாதே.
சாகுந்தனையும் சங்கடம் ஆனால் வாழ்கிறது எப்போது? 10510

சாகும்போது வாணியனிடம் அகப்பட்டுக் கொண்டது போல.
சாகையிலே வந்தால் பாடையிலே பார்க்கலாம்.

சாட்சிக்காரன் காலில் விழுகிறதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்.
(கட்சிக்காரன் காலில் விழலாம்.)
சாட்டு இல்லாமல் சாவு இல்லை.
(சாக்கு.)
சாட்டை அடியும் சவுக்கடியும் பொறுக்கலாம்; மூட்டைப் பூச்சிக் கடியும் முணுமுணுப்பும் ஆகா. 10515

சாட்டை இல்லாப் பம்பரத்தை ஆட்ட வல்லார் உண்டோ?
சாட்டை இல்லாப் பம்பரம் ஆட்டி வைக்க வல்லவன்.
சாட்டை இல்லாமல் பம்பரம் ஆடுமா?
சாடிக்கு ஏற்ற மூடி.
சாடிக்கு மூடி வாய்த்தது போல. 10520

சாடி சட்டி சூளையிலே கோடை இடி விழுந்தாற் போலே.
சாடை தெரியாதவன் சண்டாளன்.
சாண்அடி இண்டியோ மூணடி கட்டடா.
(கட்றா.)
சாண் உழவு முழ எருவுக்குச் சமம்.
சாண் ஏற முழம் சறுக்குகிறது. 10525

சாண் கல் அலம்பினால் முழம் சோறு.
(கழுவினால்.-கோயிற் குருக்களுக்கு.)
சாண் காட்டிலே முழத்தடி வெட்டலாமா?
சாண் குருவிக்கு முழம் வாலாம்.
சாண் சடைக்கு முழக் கயிறா?
(முழத் துணியா?)
சாண் சடை; முழம் சோறு. 10530

சாண் செடியிலே முழத்தடி வெட்டலாமா?
சாண் தண்ணீரிலே முழப்பேய்.
சாண் தள்ளிப்படுத்தால் இந்த வினை இல்லை.
சாண் பண்டாரத்துக்கு முழத் தாடி.
(முழ விபூதி.)
சாண் பண்டாரத்துக்கு முழம் இலிங்கம். 10535

சாண் பறையனுக்கு முழத் தடி.
சாண் பாம்பு ஆனாலும் முழத் தடி வேண்டும்.

சாண் பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளை.
(+ இருக்க வேண்டும்.)
சாண் போனால் என்ன? கழுத்துமட்டும் போனால் என்ன?
சாண் முறியும் முழம் புரியும் பொத்தல் ஒன்று. 10540

சாண் வீட்டுக்கு முழத்தடி.
சாணான் உறவு சாக்கடை வரையில்.
சாணான் எச்சில் கருப்புக் கட்டி; சர்க்கரை வெல்லம் உழவன் எச்சில்.
(கருப்பட்டி.)
சாணான் புத்தி தட்டிக்குள்ளே, பெட்டிக்குள்ளே.
சாணான் புத்தி சாணுக்குள்ளே. 10545

சாணான் வந்தால் என்ன? சவரி முத்து வந்தால் என்ன?
சடகோபத்தை ஒழுங்காகச் சாதி.
சாணானுக்கு ஏறும்போது ஒரு புத்தி; இறங்கும்போது ஒரு புத்தி.
சாணானுக்குக் கிணை சட்டிக்குள்ளும் பெட்டிக்குள்ளும்.
சாணி ஒரு கூடை; சவ்வாது ஒரு பண எடை.
சாணிக் குழியையும் சமுத்திரத்தையும் சரியாய்
நினைக்கலாமா? 10550

சாணிச் சட்டியும் சருவச் சட்டியும் ஒன்றா?
(சரியாமா?)
சாணிச் சட்டி வைக்கிற இடத்தில் சாணிச் சட்டி வைக்க வேண்டும்;
சருவச் சட்டி வைக்கிற இடத்தில் சருவச் சட்டி வைக்க
வேண்டும்.
சாணி சுமக்கிற சிறுமிக்குச் சந்தனப் பூச்சு எதற்கு?
சாணிப் புழு.
சாணியும் சவ்வாதும் சரி ஆகுமா? 10555

சாணியைக் கொடுத்து மெழுகு என்றாளாம்.
சாணுக்கு ஒரு பாம்பு; முழத்துக்கு ஒரு பேய்.
சாணோ வயிறு? சரீரம் எல்லாம் வயிறோ?
சாத்தாணி குடுமிக்கும் சந்நியாசி பூணூலுக்கும்
முடி போடுகிறாற் போல.
சாத்திரத்துக்குத் திருமந்திரம்; தோத்திரத்துக்குத்
திருவாசகம். 10560

சாத்திரத்தைச் சுட்டுச் சதுர் மறையைப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு சுகம் பெறுவது எக்காலம்?

சாத்திரம் கற்றவன் தானே காசு?
சாத்திரம் படித்தாலும் ஆத்திரம் போகாது.
சாத்திரம் பார்த்தால் மூத்திரம் பெய்ய இடம் இல்லை.
சாத்திரம் பார்த்துப் பெண்ணைக் கொள்; கோத்திரம் பார்த்துப் பெண்ணைக் கொடு. 10565

சாத்திரம் பாராத வீடு சமுத்திரம்; பார்த்த வீடு தரித்திரம்.
சாதத்துக்கு இல்லாத வாழைக்காய் பந்தலிலே தொங்குகிறதா?
சாதத்துக்குப் புனுகும் சந்தனத்துக்குப் பெருங்காயமும் போடலாமா?
சாதி அந்த புத்தி; குலம் அந்த ஆசாரம்.
சாதிக்கு அடுத்த புத்தி; தீனிக்கு அடுத்த லத்தி. 10570

சாதி அபிமானமும் சமய அபிமானமும் சந்நியாசிக்கும் உண்டு. (போகா.)
சாதி ஒளிக்குமா? சதகுப்பை நாற்றம் போகுமா?
சாதிக் குணத்தைச் செருப்பால் அடித்தாலும் போகாது.
சாதிக்குத் தக்க புத்தி; குலத்துக்குத் தக்க ஆசாரம்.
சாதிக்குத் தகுந்த புத்தி; சாப்பாட்டுத் தகுந்த லத்தி. (தீனிக்கு.)
சாதி குணம் காட்டும்; சந்தனம் மணம் காட்டும். 10575

சாதி சாதியைக் கொள்ளும்; சதகுப்பை நாற்றத்தைக் கொள்ளும். (சாதி சனத்தைக் கொள்ளும், வழக்கத்தைக் கொள்ளும்.)
சாதித் தொழில் விடுமா? சர்க்கரை கசக்குமா?
சாதிப் பழக்கமும் சதகுப்பை நாற்றமும் போகா.
சாதி பேதம் சண்டாளர் வேதம்.
சாதியபிமானமும் சமயாபிமானமும் சந்நியாசிக்கும் உண்டு. 10580

சாதியில் கெட்டது கிள்ளை; சாமியில் கெட்டது மாரியம்மன்; காயில் கெட்டது கத்தரிக்காய்.
சாதி வாக்கு ஜங்கிட வாக்கு; இலுப்பைப்பூத் தொளை வாக்கு.
சாது சாது என்கிற சந்நியாசிக்குத் தடிபோல ஐந்து குழந்தைகளாம்.
(சாமியாருக்கு நாலு பிள்ளைக் குழந்தைகளாம். நாலு பிள்ளை.)
சாதுப் பசுவையும ஏழைப் பிராமணனையும் நம்பாதே.
சாதுப் பாம்பு சாகக் கடித்தது. 10585

சாதுப் பெண்ணுக்கு ஒரு சூதுப்பிள்ளை வந்தது போல,
சாது மிரண்டால் காடு கொள்ளாது.
(இடம் கொள்ளாது.)
சாதுரியப் பூனை தயிர் இருக்கச் சட்டியை நக்கியதாம்.
சாதுரியப் பூனை மீனை விட்டுப் புளியங்காயைத் தின்றதாம்.
சாந்துப் பெட்டி பாம்பு ஆயிற்று. 10590

சாப்பாட்டுக்கு நான்; மோதிரப் பணத்துக்கு முத்தண்ணா.
சாப்பிட்ட சோற்றுக்கு ஊறுகாய் தேடுவார்களா?
சாப்பிடுகிற அழகைப் பார். நாய் போல.
சாப்பிடும் கலம் பொன் ஆனாலும் ஊறுகாய் இல்லாமல் முடியுமா?
(ஊறுகாய் கேளாமல்.)
சாப்பிணி மருந்து ஏற்காது. 10595

சாப்பிள்ளை பெற்றவளுக்குச் சந்தோஷம் வருமா?
சாப்பிள்ளை பெற்றாலும் மருத்துவச்சி கூலி தப்பாது,
சாப்பிள்ளை பெற்றுத் தாலாட்டவா?
சாப்பிள்ளை பெறுவதிலும் தான் சாவது நலம்.
சாபம் இட்டார் உண்டோ? தலையின் திருவெழுத்தோ? வேகவிட்டார் உண்டோ? எழுத்தின்படிதானோ? 10600

சாம் அளவும் இருந்தால் கல்யாணம் செய்து வைக்கிறேன்.
சாம்பல் மேட்டு நாய்க்குத் தன் பூர்வஜன்ம ஞாபகம்.
சாம்பலில் பண்ணின ஆருதி போலே.
சாம்பலில் புரளும்போது நாய்க்குப் பூர்வஞானம் உதயமாகும்.
சாம்பலைக் கிளறிக் கோழி தானே விலங்கிட்டுக் கொண்டது போல். 10605
(சாம்பலைக் கிண்டி.)

சாம்பலைத் தின்று வெண்ணெயைப் பூசினது போல.
சாமத்து நாய் ஊளை தெருவுக்குக் கேடு,
சாமர்த்தியர் கோழி சாமம் போலக் கூவிற்றாம்.
சாமி இல்லை என்றால் சாணியைப் பார்; மருந்து இல்லை என்றால் பாணத்தைப் பார்; பேதி இல்லை என்றால் நேர்வாளத்தைப் பார்.
சாமி கை காட்டும்; எடுத்து ஊட்டுமா? 10610

சாமி சக்தி பூசாரிக்குத் தெரியாதா?
சாமி மலையேறிப் போச்சு.
சாமியார் நாய் சிஷ்யனுக்குப் பயப்படுமா?
சாமியாருக்குச் சாமியார் வேண்டும்.
சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடான். 10615
(இடம் கொடுக்கமாட்டான்.)

சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி குறுக்கே நிற்பது போல.
சாமைப் பயிரும் விளைந்தால் தெரியும்; சக்கிலியப் பெண்ணும்
சமைந்தால் தெரியும்.
சாமைப் பயிரைக் கதிரில் பார்.
சாய்ந்த பக்கம் சாய்வது.
சாய்ந்த மரத்தில் ஓடி ஏறலாம். 10620

சாய்ந்தாள் சமயபுரம்; சாதித்தாள் கண்ணபுரம்.
சாயந்தரத்தில் கல்யாணம்; பிடி தாம்பூலம்.
சார்வு இல்லாதவனுக்கு நிலை இல்லை.
சாரத்தை உட்கொண்டு சக்கையை உமிழ்ந்து விடுவது போல.
சாராயத்தைத் தினம் குடித்தால் காராளனும் கடைமகன்
ஆவான். 10625

சாராயத்தை வார்த்துப் பூராயத்தைக் கேள்.
(கேட்பான்.)
சாராயம் குடித்த நாய்போல.
சாரை கொழுத்தால் மாட்டுக்காரனிடம் போகும்.
சாரை தின்னும் காட்டுக்குப் போனால் நடுத்துண்டம் நமக்கு.
(ஊருக்குப் போனால் நடுக்கண்டம் நடுமுறி.)
சாரையும் சர்ப்பமும் இழைவது போல. 10630

சால்போல் வயிறும் சப்பரக் கட்டைக் காலும்.
சால்போல வயிறு; ஊசி போலத் தொண்டை.
சால் வயிறு நிறைந்தாலும் சவலை வயிறு நிறையாது.
சாலாய் வளைந்தால் என்ன? சட்டியாய் வளைந்தால் என்ன?
சாலாய் வைத்தாலும் சரி; சட்டியாய் வைத்தாலும் சரி. 10635

சாலை வழியே போகிற சனியனைச் சாயங்காலம் வீட்டுக்கு வா
என்றானாம்.
சாலோடு அகப்பை தட்டாமல் போகுமா?
சாலோடு தண்ணீர் சாய்த்துக் குடித்தாலும் தாய் வார்க்கும்
தண்ணீர் தாகம் தீர்க்கும்.
(தண்ணீரால் தாகம் தெளியும்.)

சாலோடு முழவைத் தட்டு.
சாவாமற் கற்பதே கல்வி; பிறர் ஏவாமல் உண்டதே ஊண். 10640
(பிறரிடத்தில் ஏகாமல் உண்பதே ஊண்.)

சாவாரைப் போலே வாழ்வார்; வாழ்வாரைப் போலே சாவார்.
சாவுக்குப் பிடித்தால் லங்கணத்துக்கு வரும்,
(சாவுக்குப் போட்டால்.)
சாவுக்கு வாடா என்றால் பாலுக்கு வருவான்.
(வந்தது போல.)
சாவுப் பானை விடியாது; சங்கடப் பானை விடியும்.
சாவேரியே ராகம்; காவேரியே தீரம். 10645

சாளக்கிராமம் சாமியாருக்குச் சோறு போடுமா?
சாற்றிலே பீ; இறுத்தாற் போல வாரு.
சாற்றிலே வேண்டாம்; தெளிவிலே வாரு.
(கீற்றிலே போடு.)
சாற்றுக்குப் புளியங்காய் நறுக்கினாற் போல.
சாறு மிஞ்சினால் பாறை; சாந்து மிஞ்சினால் குப்பை. 10650

சான்றோர் அவைப்படிற் சாவாதாம் பாம்பு.
(சாவாதாம்.)
சான்றோர் இல்லாத சபை குறவர் சேரி.
சான்றோர் கயவர்க்கு உரையார் மறை.
(மறை-இரகசியம். பழமொழி நானூறு.)
சாஸ்திர உறுதிக்குக் கிரகணம்; மந்திர உறுதிக்குப் பாம்பு.
சாஸ்திரத்துக்குச் சாஸ்திரம்; சுகத்துக்குச் சுகம். 10655

சாஸ்திரம் பார்த்துப் பெண்ணைக் கொள்; கோத்திரம் பார்த்துப் பெண்ணைக் கொடு.
சாஸ்திரம் பொய் என்றால் கிரகணத்தைப் பார்.
சாஸ்திராயச சுகாயச.

சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சங்காரம். 10660
சிங்க சொப்பனம் கண்ட ஆனைபோல.
சிங்கத்தின் கூட்டைச் சிறு நரி வளைத்தாற் போல.
சிங்கத்தின் செவியில் ஈப் புகுந்தது போல.
(ஒட்டிய ஈ.)
சிங்கத்துக்குத் தன் காடு பிறன் காடு இல்லை.
சிங்கத்துக்கு நாயா சிங்கார முடி சூட்டுகிறது? 10665

சிங்கத்துக்குப் பங்கம் இல்லை.
(பங்கமா?)
சிங்கத்துக்குப் பிறந்தது சிற்றெறும்பு ஆகுமா?
சிங்கத்தைச் சொப்பனத்தில் கண்ட ஆனை போல.
சிங்கத்தை நரி வளைத்த கதை.
சிங்கம் அரசு செய்யும் காட்டிலே நரி அம்பலம் செய்வது போல. 10670

சிங்கம் இருக்கக் குட்டி வசம் ஆமா?
சிங்கம் தன் பசிக்கு ஆனையையே தேடிக் கொல்லும்.
(கொள்ளும்.)
சிங்கம் பசித்தால் தேரையைப் பிடிக்குமா?
சிங்கார வல்லி அங்கயற் கண்ணிக்குத் தீட்டு மாறிய பின் திரட்டி சடங்கு.
(இருட்டுச் சடங்கு.)
சிங்காரித்து மூக்கு அறுத்தது போல. 10675

சிட்டாள் எட்டாளுக்குச் சமானம்; முட்டாள் எதற்கு ஆவான்?
சிட்டாளுக்கு ஒரு முட்டாள்; செருப்புத் தூக்கிக்கு ஓர் அடைப்பைக் காரனா?
சிட்டுக் குருவிக்குப் பட்டம் கட்டினால் சட்டி பானை எல்லாம் லொட லொட என்று தத்தும்.
சிட்டுக் குருவிக்குப் பிரம்மாஸ்திரமா?
சிட்டுக் குருவிக்கு மத்தியஸ்தம் போனாற் போல. 10680

சிட்டுக் குருவிக்கு ராமபாணமா?
(குருவிக்கு மேலே.)
சிட்டுக் குருவியா திருவணை அடைக்கப் போகிறது.
சிட்டுக்குருவியின்மேல் பிரம்மாஸ்திரம் தொடுக்கலாமா?
சிட்டுக் குருவியின் தலையில் பனங்காயைக் கட்டினது போல.
சிட்டுக் குருவியின் மேல் ராம பாணம் தொடுக்கிறதா? 10685
(நாராயணாஸ்திரம்.)

சிட்டுக் குருவியைத் நூக்குவானேன்? அது கொண்டையை ஆட்டிக் கொத்த வருவானேன்?
சிடுக்குத் தலையும் சொடுக்குப் பேனும்.
சிடுக்குப் பெருத்தால் கொண்டை பெருக்கும்; தாயார் செத்தால் வயிறு பெருக்கும்.
சிண்டு முடிந்து விடுகிறான்.
சிணுக்கு எல்லாம் பிணக்குக்கு இடம். 10690

சிணுங்குகிறது எல்லாம் பூசைக்கு அடையாளம்.
சித்தன் போக்குச் சிவன் போக்கு; ஆண்டி போக்கு அதே போக்கு.
சித்தன் போக்குச் சிவன் போக்கு; பித்தன் போக்குப் பெரும் போக்கு.
(சித்தம் போக்கு.)
சித்தி பெறாத மருந்தும் மருந்தோ? பெற்றுப் படையாத பிள்ளையும் பிள்ளையோ?
சித்திரச் செந்தாமரையை ஒத்திட முகம் மலர்ந்தது. 10695

சித்திரத்தில் எழுதிய செந்தாமரைப்பூப் போல.
சித்திரத்தில் வைத்து எழுதாத சோழியனைத் தொப்பூர்ச் சத்திரத்தில் ஏன் வைத்தாய், சண்டாளா?
சித்திரத்திலும் சோழியன் ஆகாது.
சித்திரத்துக் கொக்கே, ரத்தினத்தைக் கக்கே.
சித்திரத்தைக் குத்தி அப்புறத்தே வைப்பான். 10700
(சித்திரத்தைத் தோண்டி.)

சித்திரப் பதுமைபோல் பிரமிக்க.
சித்திரபுத்திரனுக்குத் தெரியாமல் சீட்டுக் கிழியுமா?
(சித்திரகுப்தனுக்கு.)
சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்.
சித்திர வேலைக்காரனுக்குக் கை உணர்த்தி; தெய்வப் புலவனுக்கு நா உணர்த்தி.
சித்திராங்கி பொம்மா, சின்ன வேங்கடம்மா. 10705

சித்திரை அப்பன் தெருவிலே.
சித்திரை எள்ளைச் சிதறி விதை.
சித்திரை என்று சிறுக்கிறதும் இல்லை; பங்குனி என்று பருக்கிறதும் இல்லை.
சித்திரை என்று சிறுக்கிறதும் இல்லை; வைகாசி என்று வளர்வதும் இல்லை.
(வாழ்வதும் இல்லை.)
சித்திரை ஐப்பசி சீர் ஒக்கும். 10710
(பகல் இரவு சமம்.)

சித்திரைக்குச் சிற்றப்பா, பெரியப்பா; வைகாசிக்கு வாங்காணும் போங்காணும்.
சித்திரைக் குழப்பம்.
சித்திரைக் கோடையில் உத்தரவு சாடை.
சித்திரைச் செந்தாமரையை ஒத்திட முகம் மலர்ந்தது.
(சித்திர.)
சித்திரைத் தேர் போல். 10715
(ஆகிருதி.)

சித்திரைப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்.
சித்திரை பத்தில் சிறந்த பெருங்காற்று, ஐப்பசி பத்தில் அறையில் அடைபடும்.
சித்திரை பத்தில் சிரித்தெழுந்தார் சோழகனார்.
(சோழகனார் - சோழகக் காற்று. யாழ்ப்பாண வழக்கு.)
சித்திரை பத்தில் சிலம்பன் பிறந்தால் அக்குடி நாசம்.
(புத்திரன் பிறந்தால். யாழ்ப்பாண வழக்கு.)
சித்திரை பத்துக்குமேல் சிறந்த பெருங்காற்று. 10720
(தென்காசிப் பக்க வழக்கு. சித்திரை பின் ஏழு; வைகாசி முன் ஏழு சிக்கலான அக்கினி நட்சத்திரம்.)

சித்திரை மழை சின்னப்படுத்தும்.
சித்திரை மழை சினை அழிக்கும்.
சித்திரை மழை செல்வ மழை.
சித்திரை மழை பெய்தால் பொன் ஏர் கட்டலாம்.
சித்திரை மாதத்தில் சிறந்துழுத புழுதியிலே கத்தரி நடாமல் கரும்பு நட்டு வீணானேன். 10725

சித்திரை மாதத்தில் சீராய் விதை விழுந்தால் பத்தரை மாற்றுப் பொன் விளையும்.

சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால் சீரும் சிறப்பும் கெடும்.
(ஆன குடிக்கு அனர்த்தம்.)
சித்திரை மாதத்தில் பிறந்த சீர்கேடனும் இல்லை; ஐப்பசி மாதத்தில் பிறந்த அதிர்ஷ்டவானும் இல்லை.
சித்திரை மாதத்து உழவு பத்தரை மாற்றுத் தங்கம்.
சித்திரை மாதப்புழுதி பத்தரை மாற்றுத் தங்கம். 10730

சித்திரை மாதம் கத்திரி வெயில்.
(கத்திரி-அக்கினி நட்சத்திரம்.)
சித்திரை மாதம் சிறந்த மழை பெய்யாமல் போனால் வில்லாததை விற்று வெள்ளாடு கொள்ளு.
சித்திரை மாதம் சீருடையோர் கல்யாணம்; வைகாசி மாதம் வரிசையுள்ள கல்யாணம்; ஆனி மாதம் அரைப் பொறுக்கி கல்யாணம்.
சித்திரை மாதம் செய்வது கல்யாணம்,
(செல்வது.)
சித்திரை மாதம் செல்வன் பிறந்தால் ஆன குடி அழியும்; 10735

சித்திரை மாதம் பிறந்த சீர்கேடனும் இல்லை; ஐப்பசி மாதம் பிறந்த அதிர்ஷ்டவானும் இல்லை.
சித்திரை மின்னல் ஆகாது; கடைக்கால மார்கழி இழக்கவும் ஆகாது.
சித்திரையில் சிறு மாரி.
(யாழ்ப்பாண வழக்கு.)
சித்திரையில் பெற்றாள்; மார்கழியில் மகிழ்ந்தாள்.
(-எட்டு மாதத்தில் குழந்தை நடக்கும்.)
சித்தூரிலே செல்லக் கூத்து. 10740

சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்ப்பது போல.
சிதம்பரத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவெம்பாவை கற்றுக் கொடுக்க வேண்டுமா?
சிதம்பரம் தீட்சிதர்; திருவகீந்திரபுரம் ராட்சதர்.
சிதம்பர ரகசியம்.
சிந்தச்சே போகிற மூக்கா? 10745

சிந்தாது இருந்தால் மங்காது இருக்கலாம்.
சிந்தி அறுந்து போகிற மூக்கு எந்த மட்டில் இருக்கும்?
சிந்திப்போன பாலைப் பற்றி அழுவதில் பயன் இல்லை.
சிந்திப் போன வீட்டிலே சேராது; மங்கின வீட்டிலே வாராது.
(சிந்தின.)
சிந்தின இடத்திலே சேரேன், மங்கின இடத்திலே வாரேன். 10750

சிந்தின பண்டம் திரட்டுப்பால்.
சிந்துக்குக் குந்தி பேசுகிறது.
சித்தை நொந்தவருக்குக் கந்தனே துணை.
சிநேகிதம் செய்தபின் சோதி; தெளிந்தபின் நம்பு.
சிநேகிதம் செய்யுமுன் ஆராய்ந்து செய்; செய்தபின்
ஐயப்படாதே. 10755

சிப்பாய் நாய் துப்பாக்கிக்குப் பயப்படுமா?
சிப்பியிலே விழுந்த மழைத்துளி முத்தாகும்; அதுபோல
நல்லார்க்குச் செய்த உதவி நிலை நிற்கும்.
சிம்பிலே விளையாதது கம்பிலே விளையப் போகிறதா?
சிரங்கு முற்றிப் பவித்திரம் ஆனாற் போல.
சிரசுக்கு மேலே ஆக்கினையும் உண்டோ? 10760
(ஆக்கினை இல்லை.)

சிரஞ்சீவி பெற்றவருக்கு யமபயம் ஏது?
சிரட்டைத் தண்ணீர் எறும்புக்குச் சமுத்திரம்.
சிரிக்கத் தெரியாதவன் பிழைக்கத் தெரியாதவன்.
சிரித்தாயோ? சீரைக் குலைத்தாயோ?
சிரித்தாயோ? சீலையை அவிழ்த்தாயோ? 10765

சிரித்தாளாம், சிரித்தாளாம் சீழ் வடிந்த கண்ணி; அவள்மேல் ஆசை
வைத்தானாம் தண்ணீர் வடிந்த உதடன்.
சிரித்துக் கழுத்தை அறுக்கிறது.
சிரித்துச் சிரித்துத் தின்ற தோசைக்குக் காசு இல்லையா?
சிரிப்பாணிக் கூத்து, சிரிப்பாய்ச் சிரித்துச் சீலைப்பேன் குத்துகிறது.
சிரிப்பாய்ச் சிரித்துத் தெருவிலே நிற்கிறது. 10770
(சிரிப்பார் சிரிக்க.)

சிரிப்பார் முன்னே இடறி விழுந்தாளாம்.
சிரிப்புக் குடியைக் கெடுக்கும்; சீதளம் உடம்பைக் கெடுக்கும்.
சிரைக்க வந்தால் அடைப்பமும் கிண்ணியும் சரியாயிருக்க
வேணும்.
சிரைத்ததைச் சிரைக்கிறது போல.
சிரைத்தால் கூலி; சேவித்தால் சம்பளம். 10775

சிரைத்தால் மொட்டை; வைத்தால் குடுமி.
சில்லறைக் கடன் சீர் அழிக்கும்.

சில்லறைப் பேர்வழி.
சில்லறை வைத்தியம்.
சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினோர். 10780

சில்வானக் கள்ளி செலவு அறிவாளா?
சிலு உண்டானால் சேவகம் உண்டு.
சிலுக்கச் சிலுக்கக் குத்துகிறது எல்லாம் சித்திரத்துக்கு அழகு.
சிலேட்டுமத்தில் அகப்பட்ட ஈயைப் போல.
சிவக்க முற்றின வாழைக்காய் புளியில்லாமல் இனிக்கிறது. 10785

சிவசிவா, திருப்பிப் போட்டு அடித்தால் சாகும் என்றான் சந்நியாசி.
சிவப்பு ஓர் அழகு; சூடு ஒரு மணம்.
(ருசி.)
சிவப்புப் பறையனையும் கறுப்புப் பிராமணனையும் நம்பல் ஆகாது.
சிவப்பே அழகு; சுடுகையே ருசி.
சிவபூஜை வேளையில் கரடியை விட்டாற் போல. 10790
(கரடியிருந்தது போல. கெருடி.)

சிவராத்திரியோடு பனி சிவா சிவா என்று போகும்.
சிவலிங்கத்தின்மேல் எலி போல.
சிவன் என்றால் சிவனுக்குக் கோபம்; ஹரி என்றால் ஹரிக்குக் கோபம்.
சிவன் சொத்துக் குலநாசம்.
சிவனுக்கு மிஞ்சின தெய்வம் இல்லை; சித்தியாருக்கு மிஞ்சின சாஸ்திரம் இல்லை. 10795

சிவனே என்று இருந்தாலும் தீவினை விடவில்லை.
சிவனை நினைந்து ஆர் கெட்டார்?
சிவாய நம என்பவருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை.
சிவியான் ராஜவட்டம் போனது போல.
சிவியானுக்கு அடிமைப்பட்டால் காவவும் வேண்டும்; சுமக்கவும் வேண்டும். 10800

சிற்றப்பன் வீட்டுக்குப் போய்ச் சிற்றாடை வாங்கி வரலாம் என்று போனாளாம்; சிற்றப்பன் பெண்சாதி ஈச்சம் பாயை இடுப்பில் கட்டிக் கொண்டு எதிரே வந்தாளாம்.
சிற்றப்பா சீராட்டிக் கண்ணிலே சுட்டானாம்.
சிற்றம்மை சீராட்டிக் கண்ணைச் சொருகினாளாம்.

சிற்றாத்தை பிள்ளையும் பிள்ளையோ? செத்தையிற் பல்லியும் பல்லியோ?
(செத்தபின்.)
சிற்றாள் எட்டாளுக்குச் சமானம். 10805
(சரி.)

சிற்றாற்றங்கரையிலே நான் சிறு பந்தடிக்கையிலே வாரி எடுத்தாரே, மடிமேல வச்சாரே, குப்பச்சி கையாலே குட்டுப்பட வைத்தாரே, நான் வரமாட்டேன்.
சிற்றாளைக் குட்டிக்குச் சிற்றெறும்பு சளைக்காது.
சிற்றாளைக் குட்டிக்குப் பட்டை நாமம் சாத்தியது போல்.
சிற்றின்பம் எண்ணார், மற்றின்பம் கண்டார்.
சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பார். 10810
சிற்றுளியால் கல்லும் தகரும்.
சிற்றூண் இனிது.
சிற்றூரிலே செல்லக் கூத்துக் கட்டின கதை.
சிற்றூரிலே பாரிக் கூத்தா?
(பாரக் கூத்தா?)
சிற்றெறும்புக்குக் கொட்டங்கச்சி நீர் சமுத்திரம். 10815

சிற்றெறும்பைச் சிற்றெறும்பும் கட்டெறும்பைக் கட்டெறும்பும் தேடும்.
சிறகிலும் மெல்லிசாய்ப் பொன் அடிப்பான்.
சிறகு இல்லாத பறவைபோல்.
(சிறகை இழந்து.)
சிறகு பறிகொடுத்த பறவை போல.
சிறகு முளைத்தார், பறத்தலும் கற்றார். 10820

சிறப்போடு பூனை இறப்பில் இருந்தால் புறப்படமாட்டாது எலி.
சிறிசுக்கு இடம் கொடேன்; சேம்புக்குப் புளி இடேன்.
சிறய கண்ணாடி பெரிய உருக்களைக் காட்டுமாப்போலே.
சிறிய பாம்பு ஆனாலும் பெரிய தடி கொண்டு அடி.
சிறியா நங்கை இல்லையேல் சிறிய பாம்பு பிடிப்பார் இல்லை. 10825

சிறியா நங்கை செல்வம் போல.
சிறியார் இட்ட வேளாண்மை அறுவடை ஆகாது; அறுத்தாலும் களம் சேராது.

சிறியர் எல்லாம் சிறியார் அல்லர்.
சிறியார் கைச் செம் பொன் போல.
(சிறியார் அங்கை.)
சிறியார் செய்த சிறு பிழை எல்லாம் பெரியார் ஆயின் பொறுப்பது கடமை. 10830

சிறியாருக்கு இனியதைக் காட்டாதே; சேம்புக்குப் புளியிட்டு மசியாதே.
(புளி விட்டு ஆக்காதே.)
சிறியாரோடு இணங்காதே; சேர்புக்குப் புளியிட்டுக் கடையாதே.
சிறுக்கி சின்னப் பணம்; சிறுக்கி கொண்டை மூன்று பணம்.
சிறுக்கி சேதி தெரியாமல் செடியைச் செடியைச் சுற்றுகிறது.
(அறியாமல்.)
சிறுக்கி மனம் தெரியாமல் செடி தூக்கி அலைந்தானாம். 10835
(மயல் தெரியாமல்.)

சிறுக்கி ஜிம் என்றாளாம்; பாவாடை பர்க் கென்றதாம்.
சிறுகக் கட்டிப் பெருக வாழ்.
சிறுகச் சிறுகத் தின்றால் மலையையும் தின்னலாம்.
சிறுகச் சிறுக வெட்டினால் பெரிய மரமும் வீழ்ந்துவிடும்.
சிறுக விதைத்தவன் சிறுக அறுப்பான். 10840
(பழமொழி நானூறு.)

சிறு குரங்கின் கையால் துழா.
சிறு குழந்தை இல்லாத வீடும் வீடு அல்ல; சீரகம் விட்டு ஆக்காத கறியும் கறி அல்ல.
சிறு குழிகள் கொஞ்சம் தண்ணீரால் நிரம்பும்.
சிறுத்து இருக்கையில் வளையாதது பருத்திருக்கையில் வளையுமா?
சிறு தீ பெரு நெருப்பு. 10845

சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.
சிறு துளி பெரு வெள்ளம்.
சிறு பாம்பையும் பெரிய தடியால் அடிக்க வேண்டும்.
சிறு பிள்ளை ஆனாலும் ஆடுவான் மூப்பு.
சிறு பிள்ளை இல்லாத வீடும், சீரகம் இட்டு ஆக்காத கறியும். 10850
(கறி அல்ல.)

சிறு பிள்ளை செய்த வேளாண்மை விளைந்தாலும் வீடு வந்து சேராது.
(இட்ட.)
சிறு பிள்ளை பயம் அறியாது.
சிறு பிள்ளை யோசனை.
சிறு பிள்ளை விளையாட்டு, அழிந்தது மாங்காடு.
சிறு பிள்ளை விளையாட்டு, சுண்டெலிக்கும் நாசம். 10855

சிறு பிள்ளை வீடு வீடு அல்ல.
சிறு பிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடு வந்து சேராது.
சிறு பெண் கட்டிய சிற்றாடையா?
சிறு பொறியே பெருந் தீ.
சிறு போது படியாத கல்வி அழுக்குச் சேலையில சாயம் ஏற்றினது போல. 10860

சிறு மீன் எல்லாம் பெரு மீனுக்கு இரை.
(ஆகாரம்.)
சிறு முள்ளுக் குத்திப் பெருமலை நோகுமா?
சிறுமைப் படுகிறதை விடச் செத்தால் உத்தமம்.
(சாவது நலம்.)
சிறுமையில் கல்வி சிலைமேல் எழுத்து.
சிறுமையும் பெருமையும் தான் தர வரும். 10865

சிறு ரூபத்தை உடையவரும் அரும் பொருளைச் செய்வார்.
(அறம் பொருளை.)
சிறு வயதில் கற்ற கல்வி சிலையில் எழுதிய எழுத்துப் போலாம்.
சிறு விதை ஆகிய ஆலமரம் பெரு நிழலைக் கொடுக்கும்.
சிறைக்குக் கீழ்ச் சிறை; அதன் கீழ் அம்பட்டன.
சிறைச்சாலைக்கும் அழகு இல்லை; தேவடியாளுக்கும் முறை இல்லை. 10870

சிறைப்பட்டாயோ? குறைப்பட்டாயோ?
சின்ன ஆத்தாள் வீட்டுக்குச் சீலை வாங்கிக் கட்டலாம் என்று போகச் சின்னாத்தா ஈச்சம்பாயைக் கட்டிக் கொண்டு எதிரே வந்தாளாம்.
சின்னக் கண்ணி அகமுடையான் செவ்வாய்க்கிழமை செத்தானாம்; வீடு வாசல் மெழுகி வைத்து வெள்ளிக்கிழமை அழுதாளாம்.
சின்னக் காசை அலட்சியம் செய்தால் பெரிய காசு சேராது.
சின்னக் குட்டி அகமுடையான் சித்திரை மாதம் அடித்தானாம்; அவள் அடி பொறுக்காமல் ஆடி மாதம் அழுதாளாம். 10875

சின்னச் சின்னப் பேச்சு, சிங்காரப் பேச்சு, வன்ன வன்னப் பேச்சு மெத்த வழக்கமான பேச்சு.
சின்னச் சின்னப் பேச்சும் சிரித்தாற் போல வார்த்தையும்.
சின்னச் சின்ன வார்த்தை, சிங்கார வார்த்தை.
சின்னச் சொல்லும் சிங்காரச் சொல்லும்,
சின்னதாகப் பண்ணினாலும் பண்ணுவான்; பெரிதாகப் பண்ணினாலும் பண்ணுவான். 10880

சின்னப் பாம்பு ஆனாலும் பெரிய தடி கொண்டு அடி.
(பெரிய கொம்பால்.)
சின்னப் பிணம் ஆனாலும் பெரிய பிணம் ஆனாலும் சங்கு ஊதிக்குக் கால் பணம்.
(முக்கால் பணம்.)
சின்னப் பிள்ளைக்கு வாழைப் பழத்தைக் கொடுத்து ஏமாற்றினாற்போல.
சின்ன மீன் பெரிய மீனுக்கு இரை.
சின்னவனுங்கு இனியது காட்டாதே; சேம்பில் புளியிட்டு ஆக்காதே. 10885

சின்ன வீட்டில் நடந்த சமாசாரம் சீமந்தத்தில் தெரியும்.
(வீட்டில் செய்தது தெரிந்து போயிற்று.)
சின்ன வீட்டுச் சேதி அம்பலத்திலே வரும்.
சின்ன வீடாம், சிறு கதவாம், அரக்கு முத்திரையாம், வையாபுரியான் கலகம் இட வைத்தது வைத்தாற் போல.
சின்னாரண்ணன் கோவிலிலே சிலை பண்ணி வைத்தாற்போல.
சினத்தால் அறுத்த மூக்குச் சிரித்தால் வருமா? 10890
(சினந்த போது; சிரித்தபோது.)

சினத்தாலும் இனத்தோடே.
சினத்தைப் பேணில் தவத்துக்கு அழகு.
(அழிவு.)
சினந்தவரை இனம் தழுவாது.
சினந்தாலும் சீர் அழியப் பேசாதே.
சினந்திருந்தார் வாசல் வழி சேரவேண்டாம். 10895

சினம் மீறினால் இனம் தெரியாது.
சிறுக்குச் சின்னம்மா, சிங்காரப் பொன்னம்மா,

சீ என்கிற வீட்டில் நாயும் நுழையாது.
(பேயும்.)
சீ என்ற காட்டிலே செந்நாய் சேருமா?
சீ என்றால் நாயும் திரும்பிப் பாராது. 10900

சீக்கிர புத்தி பலஹீனம்.
சீக்கிரம் பழுப்பது சீக்கிரம் உளுக்கும்.
சீக்கிரான் கறிவேப்பிலை; இழுத்துக்கொண்டு திரி பிள்ளை.
(கறிப்பிலை.)
சீ சீ, இந்தப் பழம் புளிக்கும் என்றதாம் நரி.
சீ சீ என்கிறதும் இந்த வாய்தான்; சிவ சிவா என்கிறதும் இந்த வாய்தான். 10905

சீ சீ நாயே என்றால் பிள்ளை பிள்ளைதானே?
சீ சீ நாயே வாலைச் சுருட்டு.
சீட்டாளுக்கு ஒரு மோட்டாள்; செருப்புத் தூக்கிக்கு ஓர் அடைப்பைக்காரனா?
சீதனக் கள்ளி விருந்து அறியாள்,
சீதனம் வேதனை. 10910

சீதேவி தன்னுடனே செல்வத் திருப்பாற் கடலில் மூதேவி ஏன் பிறந்தாள் முன்?
சீதேவியுடன் கூட மூதேவி பிறந்தாற் போல.
(பிறந்தாள்.)
சீதை அழகால் கெட்டாள்; திரோபதை சிரிப்பால் கெட்டாள்.
(திரோபதை வாயால்.)
சீதை பிறந்தது லங்கை அழிய.
(பிறக்கவும். அழியவும்.)
சீதை முகத்திலே சிரிப்பைக் கண்டேன். 10915

சீந்தி நகைத்துத் தெருவில் அலைய விட்டுப் பாந்தி நின்று வேடிக்கை பார்ப்பது போல.

சீப்பை ஒளித்து வைத்தால் கல்யாணம் நின்று விடுமா?
சீபுரத்துப் பள்ளி செத்தும் கெடுத்தான்; இருந்தும் கெடுத்தான்.
(சீவரத்து. சீயபுரத்து.)
சீமந்தத்தோடு சிடுக்கு விட்டது
(அறுந்தது.)
சீமந்தப் பந்தலில் புடைவையை நடுக்கிழித்து மூட்டினாளாம். 10920

சீமான் வயிற்றில் பிறந்தது உண்டு; தறித் துணிக்குத் தரித்திரப் பட்டது இல்லை.
(திரித்துணிக்கு.)
சீமான் வயிற்றிலே பிறந்தேன்; திரித்துணிக்குச் சங்கடப்பட்டது இல்லை; பாவி வீட்டுக்கு வந்தேன்; பட்டேன் திரித்துணிச் சங்கடத்தை.
(ஏழைப் பெண் செல்வர் வீட்டில் புகுந்து சொன்னது. கந்தையில்லா வீடு.)
சீமையிலே பாதி ஸ்ரீவத்ஸ கோத்திரம்.
சீர் அற்ற பானைக்குச் செம்பொன் ஏது?
சீர் அற்றார் கையில் செம்பொன் விலை பெறாது. 10925

சீர் உண்டானால் சிறப்பு உண்டு.
சீர்கேடனுக்கு வாழ்க்கைப்பட்டுத் திரைச்சீலைத் துணிக்கு வாதைப் படாமல் இருந்தேன்; சீராளனைப் பெற்ற பிறகு திரிசீலைத் துணிக்கு வருத்தம் ஆச்சுது.
சீர் கொண்டு வந்தால் சகோதரி
சீர்மை உண்டானால் நேர்மையும் உண்டு.
சீரக ரசத்துக்குச் சிற்றாட்கள் எட்டுப் பேர். 10930

சீரங்கத்தில் உண்டா சிவ தருமம்?
சீரங்கத்தில் உலக்கை பிடித்த மாதிரி.
(கொடுத்த.)
சீரங்கத்தில் பிறந்த பிள்ளைக்குத் திருவாய் மொழி கற்பிக்க வேண்டுமா?
சீரங்கத்துக் காகம் கோவிந்தம் போடுமா?
(காகமானாலும் பாடுமா?)
சீரங்கத்துக்குப் போகிறவன் ஓரியை மாராப்புப் போட்டது போல. 10935

சீரங்கத்துக்குப் போகிறவன் வழியிலே பாரியைப் பறி கொடுத்தது போல.
சீரங்கத்துக்குப் போயும் சொறிக்நாதன் காலில் விழுகிறதா?

சீரங்கத்து நடை அழகு; காஞ்சீபுரம் குடை அழகு.
சீரங்கம் நடை; பெருமாள் குடை; திருப்பதி வடை; திரு
நாராயணபுரம் முடி.
சீரணி கெட்டால் கோரணி. 10940

சீராளன் கல்யாணத்தில் மாரோடே மார் தள்ளுது.
(மூன்று பேர் பெண்கள்; மாரோடே மார் தள்ளுது.)
சீராளனைப் பெற்ற பிறகு திரிச்சீலைத் துணிக்கு வருத்தம் ஆச்சுது.
சீரிய தனம் உடையார் சேமித்து வாழுமாப் போலே.
சீரியர்க்கு அன்பு செய்.
சீரியர் கெட்டாலும் சீரியரே. 10945

சீரைத் தேடின் ஏரைத் தேடு.
(கொன்றை வேந்தன்.)
சீலம் குரு ஆகும்.
சீலை இல்லை என்று சிற்றாத்தாள் வீட்டுக்கு ஓடி வந்தாளாம்;
அவள் ஓலைப்பாயைக் கட்டிக் கொண்டு ஓடி வந்தாளாம்.
(ஈச்சம் பாயைக் கட்டிக் கொண்டு வந்தாளாம்- சின்னாயி.)
சீலைப் பாய் ஈழம் போய்ச் சீனிச் சர்க்கரை கட்டுமா?
(ஈயும் போம்.)
சீலைப் பேன் குத்துகிறான். 10950

சீலை மேல் சீலை கட்டித் தேவரம்பை ஆடினாலும் ஓலை மேல்
எழுத்தாணி ஊன்றும் பெண் ஆகாது.
சீலையை விற்றும் சீலாவைக் கொள்; ஓலையை விற்றும்
ஓராவைக் கொள்.
(யாழ்ப்பாணத்து வழக்கு.)
சீவரத்துக் கிராமணி இருந்தும் கெடுத்தான்; செத்தும் கெடுத்தான்.
(சீவரத்துப் பள்ளி. செங்கற்பட்டு மாவட்ட வழக்கு.)
சீவன் போனால் கீர்த்தியும் போகுமா?
(சீவனம். கீர்த்தியும்.)
சீவனம் செய்ய நாவினை விற்கேல். 10955

சீவனும் கெட்டது, வியாதியும் பொட்டென்று நின்றது.
(வியாதியும் கெட்டது.)
சீ விடு என்றாளாம் சிறு பருப்பில் நெய்யை.
சீறிய பாம்புக்குச் சிறியா நங்கை வேர்.
சீறி வரும் வடவாக்கினியைச் சிறு குட்டைத் தண்ணீர் அவிக்குமா?
சீறும் படையைக் கண்டு செடிக்குள் நுழைகிறது. 10960

சீனி இட்டுக் காய்ச்சிய பால் தித்திப்பு இல்லை என்பது போல்.
சீனி என்று எழுதி நக்கினால் இனிக்குமா?

சீனிக் கிழங்கு தின்ற பன்றி செல் அறுத்தால் நிற்காது.
(செவி அறுத்தாலும் போகாது.)

சீனி போட்டால் ஆனை தின்னுமா?
(இலங்கை வழக்கு.)

சீனி வெல்லம் போட்டு நாழிப்பால் வார்த்தாலும் நடுவே சொல்வார் அறிவுள்ளார். 10965

சீஸம்.
(பைத்தியம்.)

சுக்கான் செட்டி சோறு போடுவானா?
சுக்கிர தசை பிட்டத்திலே அடிக்கிறது.
சுக்கிர தசை வந்தால் சுமந்து வந்து கொடுக்கும்.
சுக்கிர பகவான் புறப்பட்ட கண்ணீரிலே இண்ட முள் குத்தினது போல. 10970

சுக்கிரன் அக்கிரமி.
சுக்கிரன் முளைக்கத் தாலி கட்டின கதை.
சுக்கிரன் முளைப்பு ஒருவருக்கும் தெரியாது.
சுக்கிரனைப் போலக் கொடுக்கிறவன் இல்லை; கேதுவைப் போலக் கெடுக்கிறவன் இல்லை.
சுக்கிரீவ ஆக்ஞை. 10975

சுக்கிரீவ ஆக்ஞை எங்கும் இல்லை.
சுக்கிரோதயத்தில் தாலி கட்டிச் சூரியோதயத்தில் தாலி அறுத்தாள்.
(சுக்கிரோதயத்திற்குள். சூரியோதயத்திற்குள்.)
சுக்கு அறியாத கஷாயம் உண்டா?
(இல்லாத.)
சுக்குக் கண்ட இடத்தில் பிள்ளை பெற்றாளாம்; செக்குக் கண்ட இடத்தில் தலை விரித்தாளாம்.
சுக்குக் கண்ட இடத்தில் பிள்ளை பெற்றுச் சூரிய நாராயணன் என்று பெயர் இடுவான். 10980

சுக்குக் கண்ட இடத்தில் பிள்ளை பெற்றுத் தொட்டில் கண்ட இடத்தில் தாலாட்டலாமா?
சுக்குக கண்ட இடத்தில் முக்கிப் பிள்ளை பெறுவாளா?
சுக்குக்குக்கு மிஞ்சின மருந்து இல்லை; சுப்பிரமணிய சுவாமிக்கு மிஞ்சின கடவுள் இல்லை.
சுக்குக்கு மிஞ்சின மருந்தும் இல்லை; சூரியனுக்கு மிஞ்சின தெய்வமும் இல்லை.
சுக்குக்கு மிஞ்சின மருந்தும் இல்லை; தாய்க்கு மிஞ்சின உறவும் இல்லை. 10985

சுக்குச் செத்தாலும் சுரணை போகாது.
சுக்குத் தின்று முக்கிப் பெற்ற பிள்ளையைப்போல் காப்பாற்றுகிறாள்.
சுக்குத் தின்று முக்கிப் பெற்றால் தெரியும் பிள்ளை அருமை.
சுக்கும் பாக்கும் வெட்டித் தருகிறேன்; சுள் சுள் என்று வெயில் எறி. (தலையில் ஏறு.)
சுக்லாம் பரதரம் குட்டிக் கொள்ளும் போதே கண்ணில் குட்டிக் கொண்டது போல. 10990

சுக சரீரம் கழுதைப் பிறப்பு.
சுகத்துக்குப் பின் துக்கம்; துக்கத்துக்குப் பின் சுகம்.
சுகத்தைத் தள்ளினாலும் துக்கத்தைத் தள்ளலாகாது.
சுகத்தைப் பெற்றதும் அல்ல; தவத்தைப் பெற்றதும் அல்ல. (அல்லி.)
சுகத்தையாவது பெறவேண்டும்; தவத்தையாவது பெற வேண்டும். 10995

சுகதுக்கம் சுழல் சக்கரம். (சுழல் காற்று.)
சுகந்தம் இல்லா மலர் போலே.
சுகம் கெட்டால் விரதம் தக்க வேண்டும்; விரதம் கெட்டால் சுகம் தக்க வேண்டும்.
சுகம் கெட்டால் விரதம் லாபம்; விரதம் கெட்டால் சுகம் லாபம்; இரண்டும் கெட்டால் என்ன லாபம்?
சுகம் தக்குகிறதும் இல்லை; விரதம் தக்குகிறதும் இல்லை. 11000

சுகம் மெத்தை அறியுமா?
சுகம் வந்தால் சந்தோஷப் பட்டுத் துன்பம் வந்தால் பின் வாங்குவானேன்?
சுகமும் கூழும் இறுகத் தடிக்கும்.
சுகமும் துக்கமும ஒருவர் பங்கு அல்ல.
சுகவாசி உடம்பு கழுதைப் பிறப்பு. 11005

சுகுண சுந்தரி இல்லாத வீடு சுடுகாடு.
சுங்கக்காரனிடம் சுக்துக்கம் சொல்லிக் கொள்வது போல
சுங்கம் மாறினால் சுண்ணாம்பு கிடையாது (சுண்ணாம்புக் கொடார்.)

சுங்கமும் கூழும் இறுகத் தடிக்கும்.
(இருக்க.)
சுங்கா, மூஞ்சி காட்டாதே; வந்த விருந்தாளியை ஓட்டாதே. 11010

சுட்ட களியை நாய் புரட்டுகிறது போல.
(சுடுகிற.)
சுட்ட சட்டி அறியுமா ஆப்பத்தின் சுவையை?
(அப்பத்தின், கறிச்சுவையை)
சுட்ட சட்டி சட்டுவம் கறிச் சுவை அறியுமா?
சுட்ட சட்டி சுவை அறியுமா?
சுட்ட சட்டி தொடாதவளா உடன்கட்டை ஏறப் போகிறாள்? 11015

சுட்ட நண்டுக்கு வேலி கட்டின சுடுக்காட்டுப் பள்ளி.
சுட்ட நரியை நாய் புரட்டுகிறது போல.
சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா?
(ஒட்டா.)
சுட்டவன் இருக்கக் குண்டை நோகிறதா?
சுட்டால் தெரியும் குயவனுக்கு. 11020

கட்டால் தெரியும் சூத்திரனுக்கு.
சுட்டால் தெரியும் நண்டுக்கு.
சுட்டாலும் தெரியாது; தொட்டாலும் தெரியாது.
சுட்டிக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் ஒரெழுத்து வராது.
சுடர் விளக்கு ஆனாலும் தூண்டு கோல் ஒன்று வேண்டும். 1125

சுடலை ஞானம் திரும்பி வரும் மட்டும்.
சுடு கஞ்சி குடித்த நாய் போல.
சுடுகாட்டில் வில்வமரம் முளைத்தது போல.
சுடுகாட்டுக்குப் போன பிணம் திரும்பி வருமா?
சுடுகாட்டுத் தத்துவம் வீடு வரை வராது. 11030

சுடுகாட்டுப் புகையைப் பார்க்கும் கொம்பேறி மூக்கன்.
சுடுகாட்டு வழி போனாலும் இடுகாட்டு வழி போகலாகாது.
சுடுகாடு போன பிணம் திரும்பாது.
சுடுகாடு போன பிணம் நடுவீடு வந்து சேருமா?
சுடுகிற தழலை மடியில் கட்டலாமா? 11035

சுடுகிறது, மடியில் பிடி.
சுடு கெண்டைக்காக ஏரியை உடைக்கலாமா?
(உடைக்கிறதா?)

சுடு தண்ணீரிலே விழுந்த பூனை பச்சைத் தண்ணீரைக் கண்டாலும் பயப்படுமாம்.

சுடு நெருப்பை மடியிலே முடியலாமா?

சுண்டன் வண்டி இழுக்குமா? 11040

சுண்டினால் சுண்டைப் பழமோ?

சுண்டினாலும் பாற் சுவை குறையுமா?

சுண்டெலிக்குப் பயந்தது மத்த கஜம்; சுக்குக்குப் பயந்தது வாத ரோகம்.

சுண்டெலி சிலம்பம் படித்து ஆனையை ஜயிக்க முடியுமா?

சுண்டைக்காய் அளவு சாப்பிடுகிறதில் சாப்பிடுகிறது பாதியா? வைக்கிறது பாதியா? 11045

சுண்டைக்காய் இல்லாமல் சோற்று இறக்கம் இல்லை.

சுண்டைக்காய் காற்பணம்; சுமை கூலி முக்காற்பணம்.

சுண்டைக்காயனும் மண்டைக்காரனும் சண்டை போட்டால் அண்டைக்காரனுக்கு என்ன?

சுண்டைக்காயில் இரண்டு கடியா?

சுண்டைக்காயில் கடிக்கிறது பாதி; வைக்கிறது பாதியா? 11050

சுண்டைக்காயே, சுண்டைக்காயே எனக்கு முந்தி வந்திருக்காயே.

சுண்ணாம்பில் இருக்கிறது சூக்ஷ்மம்; சூஷ்மத்தில் இருக்கிறது மோக்ஷம்.

சுண்ணாம்புக் கலயத்தைத் நாய் தூக்காது.

சுண்ணாம்பு கொடுத்துச் சுங்கம் தெரிந்து கொள்வார்களாம்.

சுண்ணாம்பு தந்த சூர்ப்பணகை. 11055

சுத்த சைவம்; மரக்கறி எல்லாம் தன்னுபடி.

சுத்தம் உள்ள இடத்திலே சுகம் உண்டு.

சுத்தம் சோறு இடும்; சுகம் தரும்.
(சோறு போடும்.)

சுத்தம் சோறு போடும்; எச்சில் இரக்க வைக்கும்.
(இரக்கச் செய்யும்.)

சுத்த விலங்கோடு சுத்த விலங்குதான் சேரும். 11060

சுத்த வீரனுக்கு உயிர் துரும்பு.

சுத்திக்காரனுக்கு மூன்று இடத்திலே மலம்.

சுதேசம் விட்டுப் பரதேசம் போகாதே.

சுந்தரன் பொன்னைப் பாடுவான்.
சுந்தரியும் வாழ்க்கைப்பட்டாள்; பந்தலிலே தீப்பட்டது. 11065
சுப்பனுக்கு விரப்பன் திடம்.

சுப்பா சாஸ்திரிக்குப் பெண்ணாய்ப் பிறந்து குப்பா சாஸ்திரிக்கு வாழ்க்கைப்பட்டு லவணம் என்றால் எருமைச் சாணி என்று தெரியாதா என்றாளாம்.
சுப்பா சுப்பா பிட்டத்தைக் கடி; அப்பா அப்பா, நான் மாட்டேன்.
சுப்பாளு பெண்ணுக்கு அப்பளம் பிடிக்கும்.
சுப்பிரமணிய சுவாமி மயில்மேல் இருப்பது போல. 11070

சுபஸ்ய சீக்ரம்.
சும்மா அறுக்கிறாய் என்ன, சொத்தைக் களாக்காய்?
சும்மா அறுப்பாளா சொத்தைக் களாக்காயை?
சும்மா ஆடுகிற சாமி கொட்டைக் கேட்டால் சும்மா இருக்குமா?
சும்மா ஆடுகிற பேய்க்குச் சாம்பிராணிப் புகை போட்டால் சொல்லவா வேண்டும்? 11075
(ஈழநாட்டு வழக்கு.)

சும்மா ஆடுமா, சோழியன் குடுமி?
சும்மா இரு என்றால் அம்மானை போலக் குதிக்கிறாயே!
சும்மா இருக்கிற சிட்டுக் குருவிக்குச் சோற்றை வைப்பானேன்? அது கொண்டையைக் கொண்டையை ஆட்டிக்கிட்டுக் கொத்த வருவானேன்?
சும்மா இருக்கிற தம்பிரானுக்கு இரண்டு பட்டை.
(சாமியாருக்கு.)
சும்மா இருக்கிற தாரையை ஊதிக் கெடுத்தான் தாதன். 11080

சும்மா இருக்கிற பெண்ணைத் தகப்பன் வந்து கெடுத்தானாம்.
சும்மா இருக்கிறபோது சோறு கொடுத்தவன் கேட்டால் குதிரையும் கொடுப்பான்.
சும்மா இருக்கிற மணியாரனைத் தூண்டி விடுவானேன்? போன வருஷ வாயிதாவைப் போட்டுக் கொள்வானேன்?
சும்மா இருக்கிறவன் பிட்டத்திலே சுப்பல் எடுத்துக் குத்துவானேன்?
சும்மா இருக்கிறவனைப் பிடிப்பானேன்? இராவெல்லாம் கிடந்து பிதற்றுவானேன்? 11085

சும்மா இருக்கிறாயா? சொரூபத்தைக் காட்டட்டுமா?
சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப் பணத்துத் தாலி போதாதா?
(பெண்ணுக்கு.)

சும்மா இருந்த உடம்பிலே சுண்ணாம்பைத் தடவிப் புண்ணாக்கு வானேன்?
சும்மா இருந்த நாய் சுருக்கில் போய்த் தொங்கியதாம்.
சும்மா இருந்தால் ஏதும் சாதிக்கலாம். 11090

சும்மா இருந்தால் சோறு ஆமா? வாடா, சித்தா கால் ஆட்ட.
சும்மாக லம்சுமக்க மாட்டாதவன்,நனைந்தால் முக்கலம் சுமப்பானா?
சும்மா கிடக்கிறதாம் சீவல்கட்டை; தூக்கிப் போட்டதாம் வெறும் கட்டை.
(கல அரிசி.)
சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி.
சும்மா கிடக்கிற தரையை ஊதிக் கெடுத்தான் தாதன். 11095
(அம்மான்.)

சும்மா கிடந்தால் ஆர் அறிவார்? வாடா் திம்மா, தாலாட்ட.
சும்மா கிடைக்குமா சோணாசலன் பாதம்?
(சொர்க்கலோகம்.)
சும்மா கிடைத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கிறதா?
சும்மா கிடைத்தால் எனக்கு ஒருத்தி; எங்கள் அப்பனுக்கு ஒருத்தி.
(எனக்கு ஒன்று; எங்கள் அண்ணனுக்கு ஒன்று.)
சும்மா கிடைத்தால் எனக்கு ஒரு வைப்பாட்டி;எங்கள் சிற்றப்பாவுக்கு ஒரு வைப்பாட்டி என்றானாம். 11100

சும்மாட்டுக்கும் சும்மா இருப்பவனுக்கும் என்ன தெரியும்?
சும்மா போகிறவனைப் பிடிப்பானேன்? ராத்திரி எல்லாம் கிடந்து பிதற்றுவானேன்?
சும்மா வந்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பாராதே.
(சும்மா விற்ற. பார்ப்பதா?)
சும்மா வந்தால் சிற்றப்பனுக்கு ஒன்று.
சுமந்த தலையும் சும்மாடுமாய்த் திரிகிறது. 11105
(திண்டாடுகிறது.)

சுமந்தவன் தலையிலே சும்மாடு.
சுமந்தவன் தலையிலே பத்துச் சுமை.
சுமப்பவன் அல்லவோ அறிவான் காவடிப் பாரம்?
சுமை இழந்தாருக்குச் சுங்கம் இல்லை.
சுமை கனத்தால் முன்னது பின்னதாகப் பேசுகிறதா? 11110

சுமை தாங்கி ஆயம் தீர்க்குமா?
சுமை தாங்கி சுங்கம் இறுப்பது இல்லை.
(ஆயம் தீர்க்காது.)
சுமை போட்டால் பந்தலிலே காரியம் என்ன?
(பந்தாலே.)
சுயகாரிய துரந்தரன், சுவாமி காரியம் வழவழ.
சுயகாரிய துரந்தரன், பரகாரிய பராமுகன். 11115

சுயகாரியப் புலி.
சுரை ஆழ அம்மி மிதக்க.
சுரைக்காய் ஆனால் கறிக்குப் பாதி விதைக்குப் பாதியா?
சுரைக் காய்க்கு உப்பு இல்லை என்று சொன்னானாம்.
சுரைக் காய்க்கு உப்பு இல்லை; பாகற் காய்க்குப் பருப்பு இல்லை. 11120

சுரைக் காய்க்கு உப்பு இல்லை; பீர்க்கங்காய்க்குப் புளிப்பு இல்லை;
சுரைக்காய் மிதக்கிறது; கல் அமிழ்கிறது.
(அம்மிக் கல்.)
சுரைப்பூ பறைப்பாட்டு.
சுரைப்பூவுக்கும் பறைப்பாட்டுக்கும் மணம் இல்லை.
சுலுமுச்கு ராம ராம. 11125

சுவர்க் கீரையை வழித்துப் போடடி, சுரணை கெட்ட வெள்ளாட்டி.
சுவரின் மறைவில் யாரடா? சுரக்காரன் பத்தியம் சாப்பிடுகிறேன்.
சுவரின்மேல் இருக்கும் பூனை இந்தப் பக்கம் குதித்தாலும் குதிக்கும்; அந்தப் பக்கம் குதித்தாலும் குதிக்கும்.
சுவருக்கும் காது உண்டு.
(காதுகள் இரண்டு.)
சுவருக்கு மண் இட்டுப் பார்; பெண்ணுக்குப் பொன் இட்டுப் பார். 11130

சுவரை வைத்துக் கொண்டல்லவோ சித்திரம் எழுத வேண்டும்?
சுவரோடாவது சொல்லி அழு.
(ஆறு.)
சுவாசம் போனாலும் வாசம் போகாது.
சுவாதியில் வில் போட்டால் சொன்னபடி மழை.
சுவான வைராக்கியம். 11135
(சுவானம் - நாய்.)

சுளாப்பு எல்லாம் பொல்லாப்பு.
சுள்ளைச் சுட்டுக் கொண்டு கள்ளைக் குடிக்கிறது.
(தொட்டுக் கொண்டு.)
சுற்றச் சுற்றத் தூசும் கிடைக்காது.
சுற்றத்தவரைப் பற்றி இரு.
சுற்றத்துக்கு அழகு சூழ இருத்தல். 11140

சுற்றத் துணியும் இல்லை; நக்கத் தவிடும் இல்லை.
சுற்றம் பார்க்கின் குற்றம் இல்லை.
சுற்றிச் சுற்றிச் சுங்கச் சாவடிக்கே வந்தது போல.
சுற்றிச் சுற்றி வந்தாலும் சுங்கக்காரனிடந்தான் வரவேண்டும்.

சூட்சத்திலே இருக்கிறது மோட்சம். 11145
(சூக்ஷமத்திலே.)
சூட்சாதி, சூட்சத் துல்லியன்.
சூட்சுமம் அறியாதவனுக்கு மோட்சம் இல்லை.
சூட்டோடு சூடு; நூற்றோடு நூறு.
சூடியும் உணர்ச்சி வராது சுரணை கெட்ட மாட்டுக்கு.
சூடு அடிக்கிற மாட்டை வாயைக் கட்டலாமா? 11150

சூடு அடித்த மாடு வைக்கோல் தின்னாமல் இருக்குமா?
சூடு ஒரு ருசி, சிவப்பு ஓர் அழகு.
சூடு கண்ட நாய் சாம்பல் குளிக்காது.
சூடு சுட்டுப் பொரி பொறுக்கினது போல.
சூடு சுரணை அற்றவனுக்கு நாடு நகரம் பெரிதா? 11155
(ஏது)?

சூடுண்ட பூனை அடுப்படியில் செல்லாது.
(அடுப்பங்கரையை நாடாது.)
சூடு பட்ட பூனை பால் குடிக்குமா?
சூத்திரப் பாவை போல் நடிக்கிறான்.
சூத்திரம் இல்லாமல் பொம்மை ஆடாது.
சூத்திர வேதன் சாத்திரம் பார்ப்பான். 11160

சூத்து இல்லாக் குடுவை சுழன்று சுழன்று ஆடுகிறது.
சூத்து ஒட்டினால் குதிரை வரகு வைக்கோலைத் தின்னும்.
சூத பலத்தைச் சக முகத்தினால் அறி.
சூதன் கொல்லையில் மாடு மேயும்.
சூதனுக்கு நீதி இல்லை. 11165

சூதாடி கெட்டான்; சுற்றி இருந்தவன் வாழ்ந்தான்.
சூதாடி கையும் கோள்காரன் வாயும் சும்மா இரா.
(சூதுக்காரன்.)

சூதானத்துக்கு அழிவு இல்லை.
சூதினால் வெல்வது எளிது.
(சூதில்.)
சூது ஆடித் தோற்றவனுக்குச் சுகம் கிட்டாது. 11170

சூது ஆடினவன் கெட்டான்; சுற்றியிருந்தவன் பிழைத்தான்.
சூதுக்காரன் கையை வெட்டிப் போட்டாலும் துடுப்பைக் கட்டிக் கொண்டு சூது ஆடுவான்.
சூதுக்காரன் பணம் சுற்றியிருக்கிற பேரைச் சாரும்.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
சூது விரும்பேல். 11175

சூரன் இல்லா விட்டால் சுப்பிரமணியன் வருவதற்கு இல்லை; வள்ளி இல்லா விட்டால் வடிவேலன் வருவதற்கு இல்லை.
சூரனுக்குத் துரை மக்கள் துரும்பு.
சூரிய விளக்கு இருக்கச் சுடர் விளக்கு எதற்கு?
சூரியன் எழுமுன் காரியம் ஆடு.
சூரியன் கீழ்த் தோன்றியது எல்லாம் மாயை. 11180

சூரியன் தந்த அக்கினியைக் கொண்டு சூரியனைப் பணிவது போல.
சூரியன் முன் சூழ்ந்த கருமேகம்.
சூரியன் முன்னே சந்திரன் தோன்றும்.
சூரியன் முன்னே சூழ்ந்த இருள் போல.
சூரியன் முன்னே தோன்றின சந்திரன் போல. 11185

சூரியன் முன்னே பனி நிற்காது.
சூரியன் வெளிச்சத்தில் சுடர் விளக்கு எதற்கு?
சூரியனுக்குக் குடை பிடிக்கலாமா?
சூரியனுக்கு முன் பனி போல.
சூரியனுக்கு முன் மின்னாம் பூச்சி போல. 11190
(மின்மினி.)

சூரியனைக் கண்ட இருள் போல.
சூரியனைக் கண்ட தாமரை போல.
சூரியனைக் கண்ட பனி போல.
சூரியனைக் கண்டு உலகம் விளங்கும்.
சூரியனைக் கண்டு பட்டி குரைத்தால் சூரியனுக்கு என்ன? 11195
(பட்டி-நாய்; நாஞ்சில் நாட்டு வழக்கு.)


சூரியனைக் கல்லால் அடித்தது போல.
சூரியனைக் கிரகணம் பிடித்தது போல் என்னைச் சனி பிடித்தது.
சூரியனைக் கையால் மறைத்தாற் போல.
(மறைக்க முடியுமா?)
சூரியனைப் பார்த்து நாய் குரைத்தது போல.
சூல் ஆடும் மீன்கள் ஒன்றை ஒன்றை மோந்து கொள்ளும். 11200

சூல் வித்தை காட்டுகிறேன்; பராக்கு இல்லாமல் பார்.
சூலிக்குச் சுக்குமேல் ஆசை.
சூலி சூலி என்று சோற்றைத் தின்று மலடி வாயில் மண்ணைப் போடுகிறதா?
சூலி மயக்கமும் சுடுகாட்டு ஞானமும் பாதி வழி மறையும் மட்டும்.
சூழ ஓடியும் வாசலாலே. 11205
(வெட்டியும்.)

சூறைக் காற்றில் அகப்பட்ட பூனைப் போல.
சூக்ஷ்மத்தில் இருக்கிறது மோட்சம்.

குறிப்பு

குறிப்பு



கி.வா.ஜ.

இவர் 11.4.1906–ம் ஆ
பிறந்தார். தந்தை வாசுதேவ
தாயார் பார்வதி அம்மாள்.
பள்ளியில் படிக்கும்போதே '
சிந்தாமணி' பாடல்
மனப்பாடம் செய்து, அ
அர்த்தம் சொல்லுவார்.
பருவத்திலேயே இவர் மேலு
தமிழ்ப் புத்தகங்களை
மனப்பாடம் செய்து விட்டு,
அதேபோல பாடல்களை
விடுவாராம். இந்த ஆற்
ரெயிலில் போய்வரும் போது
ரெயில் ஓட்டத்தின் குதியோ
ஏற்ப ஏதாவது பாடிக் கொ
இருப்பாராம். இவரது
முயற்சியில் உருவானது. 'பே
பந்து' என்னும் பதிகம்.
துரைசாமி ஐயங்கார் நடத்தி
'ஒற்றுமை' பத்திரிகையில்
வெளியானது. 1927–ல்
மகாவித்துவான் உ.வே. சுவா
ஐயரிடம் மாணாக்க
சேர்ந்தார். 1933–ல்
'வித்துவான்' பட்டம் பெ
1949–ல் காஞ்சி மஹா சுவா
இவருக்கு 'திருமுருகாற்று
அரசு' என்ற பட்டத்தையும், 1
'வாகீச கலாநிதி'
பட்டத்தையும் கொ
கௌரவித்தார். 1982–ம் அ
ராஜா சர் அண்ணாம
செட்டியார் நினைவுப்
இவருக்கு வழங்கப்ப
இலக்கியம் சமயம் ஆகிய
துறைகளிலும் உரையாற்று
வல்லவர். நூற்றுக் கண
தமிழ் நூல்களை எழுதிய
4.11.1988–ம் ஆண்டு தம் வா
நிறைவு செய்து கொண்டார்.